தமிழை வாழ வைப்போம்! தமிழரையே ஆள வைப்போம்!

## மாற்றம் என்பது சொல் அல்ல செயல்!

# நாம் தமிழர் ஆட்சி செயற்பாட்டு வரைவு

# 2016

Clarity Version download at www.makkalarasu.com

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு**

**– தமிழ்மறை (544)**

பெற்ற தாய் தன் பிள்ளைகளுக்கு எப்படிக் குறிப்பறிந்து சேவை செய்வாளோ அப்படித் தன் குடிகளுக்குச் சேவை செய்யும் அரசை உலகம் போற்றி நிற்கும்.

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



தமிழ்மறையோன்

# திருவள்ளுவப்பெருமகனார்

- உன்னை ஒருவனாலும் தோற்கடிக்க முடியாது உன் நம்பிக்கையில் நீ தோற்கிறவரை

– மாவீரன் சுபாஷ் சந்திரபோஸ்

Clarity Version download at www.makkalarasu.com




Clarity Version download at www.makkalarasu.com

- இந்தத் தூய தலைவனின்
பாதையில்
நாம் தமிழர் அரசு
உண்மையும் நேர்மையும்
எளிமையுமான
நிர்வாகம்

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com




அரசியல் என்பது முழுக்க முழுக்க மக்களுக்கான சேவைதான்

– பெருந்தலைவர் காமராசர்

- நாங்கள் நினைக்கப் பிறந்தவர்கள் அல்ல; நிரூபிக்கப் பிறந்தவர்கள்
- நாங்கள் எம் மக்களின் குறை கேட்க வந்தவர்கள் அல்ல, தீர்க்க வந்தவர்கள்

Clarity Version download at www.makkalarasu.com

# எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே!



Clarity Version download at www.makkalarasu.com

எங்கள் திருநாட்டில் எங்கள் நல் ஆட்சியே !
பொங்கிடுக வாய்மை பொலிந்திடுக என்றே நீ !
செங்கதிர் சீர்க்கையால் பொன்னள்ளிப் பூசிய
கங்குல் நிகர்த்த கருங்குயிலே கூவாயே !

\- பாவேந்தர் பாரதிதாசன்

- அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

Clarity Version download at www.makkalarasu.com




# தேசியத் தலைவர்

Clarity Version download at www.makkalarasu.com

- அரசியல் என்பது அனைத்து உயிர்களுக்குமான தேவையும்; அதை நிறைவு செய்யும் சேவையும் தான்!

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



- இங்கு வாழும் உரிமை எவருக்கும் உண்டு!
  ஆளும் உரிமை தமிழர் எமக்கே உண்டு!
  வந்தவரை எல்லாம் வாழவைப்போம்
- அது எமது இனத்தின் பெருமை! - இனி
  எம் சொந்தவரை மட்டுமே ஆளவைப்போம்!
  இது எமது இனத்தின் அடிப்படை அரசியல் உரிமை!

- செந்தமிழன் சீமான்

# இரட்டை மெழுகுவர்த்தி



## இது சின்னம் அல்ல
## மாற்றத்திற்கான எண்ணம்!

Clarity Version download at www.makkalarasu.com

# ஈகத்தின் அடையாளம் !

- இதுவரை
எங்கள் எண்ணத்தில்
எரிந்த நெருப்பு
இனி
எங்கள் சின்னத்தில்
எரியும் !

- எம் மக்களால்
பற்றவைக்கப்படும்
இந்த நெருப்பு
புரட்சிக்கான தீ !

- இது
தீயவற்றைத்
தின்னும் !
கொடியவற்றைக்
கொளுத்தும் !
பெருநெருப்பாய்ப்
பற்றிப் பரவும் !
இனத்தின்
விடுதலைக்காக !

- எந்த
ஒரு விளக்கும்
தன்னையே
வருத்திக்கொண்டு
வெளிச்சத்தைத்
தருவதில்லை !

- தன்னையே
அழித்துக் கொண்டு
உலகத்திற்கு
ஒளியைக் கொடுக்கும்
இந்த
மெழுகுவர்த்தி
ஈகத்தின்
அடையாளம் !

- அதைப்
போலவே !
அடிமைப்பட்டுக்
கிடக்கின்ற
அன்னைத்தமிழ்
இனத்தின்
உரிமைக்காக
எங்களையே
வருத்திக்கொண்டு
அரும்பாடாற்றுவோம் !

- நமது
ஒவ்வொரு
வாக்கும் !
நம்
இனம்
காக்கும் !


- மாற்று
அரசியலுக்கு
வாக்களிப்போம் !
மானத்தமிழ்
இனத்திற்கு
வாழ்வளிப்போம் !

- நாம்தமிழர்
கட்சிக்கு
வாக்களிப்போம் !
நாளைய
தலைமுறைக்கு
வாழ்வளிப்போம் !


- இரட்டை
மெழுகுவர்த்தி
இது
சின்னமல்ல !
மாற்றத்திற்கான
எண்ணம் !

- நாமே
மாற்று !
நாம் தமிழரே
மாற்று !

- நாம்
எடுக்கும் முடிவு !
நம்
இனத்தின் விடிவு !



Clarity Version download at www.makkalarasu.com



மாற்றம் என்பது
மானுடத் தத்துவம்
மாறாது என்ற
சொல்லைத் தவிர
மற்றவை அனைத்தும்
மாறி விடும்

- மாமேதை காரல் மார்க்ஸ்

Clarity Version download at www.makkalarasu.com

# அரசு முத்திரை

தமிழ் நாட்டு அரசு

Clarity Version download at www.makkalarasu.com




Clarity Version download at www.makkalarasu.com

# தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழ் எங்கள் இளமைக்கு பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!

- பாவேந்தர் **பாரதிதாசன்**

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# தமிழ்நாட்டுக் கொடி



# நாட்டுப்பண்

சேரசோழப் பாண்டியர் ஆண்டதமிழர் நாடு
செருக்கோடு வில்கயல் பாயும்புலி யோடு!
வீரமுடன் மானமே விளைக்கும்தமிழ் நாடு
வெற்றிக்குக் களம்புகும் குலவஞ்சிய ரோடு!
(வீரமுடன்)

பொன்முத்து மென்துகில் பொலிந்துமலி நாடு
பொதுவுரிமை போற்றிடும் புரட்சித்தமிழ் வீடு
மன்பதையே இனிதுற மறைவகுத்த நாடு
மாமறவர் புகழ்நிறை மாண்புயர்ந்த நாடு
(வீரமுடன்)

முன்னைப்பழம் குமரியே முதல்தமிழர் வீடு
மூழ்கியதால் எஞ்சிய ஈழம்தமிழ் நாடு!
தென்னைபனை தினைஎள் செந்நெல்வயற் காடு
தேனருவி காடுடன் ஆறுகடல் நாடு!
(வீரமுடன்)

அறத்தோடு நெறிபட தழைக்கும்தமிழ் நாடு
அயல்மொழிக்கும் வேராய் நிலைக்கும்தமிழ் ஏடு!
அறிவியலை மெய்யுற அளித்ததமிழ் நாடு
அனைத்துயிர்க்கும் அரசியல் நடத்தும்கனி வோடு!
(வீரமுடன்)

- தனித்தமிழ்வேங்கை **மறத்தமிழ்வேந்தன்**

Clarity Version download at www.makkalarasu.com

# உள்ளே

# மாற்றத்திற்கான வழி!


1. தலைநகரை மாற்றுவோம் தமிழகத்தையே மாற்றுவோம் 24
2. தன்னலமற்ற அன்பான சர்வாதிகாரம் 26
3. நீர்வளப் பெருக்கம் 30
4. தூய குடிநீர் இலவசம் 43
5. வேளாண்மை 46
6. சணல் நார்ச் செடி 68
7. மருத்துவம் அடிப்படை உரிமை 70
8. கல்விக் கொள்கை 82
9. மாற்று மின்பெருக்கம் 96
10. போக்குவரவுத்துறைக் கொள்கை 108
11. பத்தாண்டுப் பசுமைத் திட்டம் 120
12. தூய்மைப் பொறியாளர் 126
13. காவல் மக்களுக்கான சேவை 130
14. ஏழுவர் விடுதலை உறுதி 141
15. தொழில் வளர நாடு உயரும் 142
16. எங்கள் குலமாதர் 150
17. அன்புத் தளிர் 154
18. அன்புச்சோலை 158
19. பொருளாதாரக் கொள்கை 162
20. சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி 166
21. ஊழல் இலஞ்சம் ஒழிப்பு 170
22. வெளிப்படையான நிர்வாகம் 174
23. மது, புகையிலை ஒழிப்பு 180
24. இலவச ஒழிப்பு 184
25. உழவர் நலனைப் போற்றுவோம் 186



Clarity Version download at www.makkalarasu.com

26. மீனவர் நலன் 190
27. வணிகர் நலன் பாதுகாப்பு 200
28. இன்பச் சுற்றுலாக் கொள்கை 202
29. உடலினை உறுதி செய் 214
30. அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலன் 218
31. கட்டுமானத் தொழில் வளர்ச்சி 222
32. காட்டு வளம் 224
33. கனிம வளப் பாதுகாப்பு 228
34. ஈழத்தமிழ் உறவுகளுக்கான தீர்வு 232
35. ஈழம் எங்கள் இனத்தின் தேசம் 236
36. தமிழ்மொழி மீட்சி 248
37. கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி 252
38. தமிழர் மெய்யியல் 266
39. தொல் தமிழர் மீட்சி 272
40. தமிழின ஒருங்கிணைப்பு முன்னேற்றம் 276
41. நெகிழி, குழைமத்திற்கு நிரந்தரத் தடை 278
42. அயலகத் தமிழருக்கான அமைச்சகம் 280
43. தமிழர் இன வரலாறு 286
44. தமிழ்த் தேசிய இனம் எதிர் கொள்ளும் சிக்கல்களும் தீர்வும் 288
45. திரைக்கலை மேம்பாடு 298
46. தமிழ்த்தேசிய வைப்பகம் 303
47. அடிப்படை, அமைப்பு அரசியல் மாற்றம் 304
48. வானூர்தி 311
49. துறைமுகக் கொள்கை 312





Clarity Version download at www.makkalarasu.com


சென்னை



திருச்சி


கோவை


மதுரை


கன்னியாக்குமரி


# தலைநகரை மாற்றுவோம் தமிழகத்தையே மாற்றுவோம்




## நிர்வாக வசதிக்காவும் வளர்ச்சியைப் பரவலாக்குவதற்காகவும்

சென்னை தலைநகராக இருப்பதால் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து இருக்கிறது. இவை அனைத்தையும் தேடித்தான் மக்கள் கிராமங்களில் இருந்து நகரத்தை நோக்கி வருகிறார்கள். அதனால் சென்னை பிதுங்கி வழிகிறது. உயிரைச் சுமந்து செல்கிற அவசர ஊர்தி கூடச் சரியான நேரத்திற்குச் செல்லமுடியாத நிலை உள்ளது. நத்தையும், ஆமையும் மெதுவாகச் செல்லும் அளவிற்குப் போக்குவரவு நெருக்கடி உள்ளது. இந்த நிலை நீடித்தால் சென்னையின் நிலை மேலும் சிக்கலாகும். அதனால் நிர்வாக வசதிக்காக, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, வளர்ச்சி உட்பட அனைத்தும் பரவலாகச் சென்றடைய, **நாம் தமிழர் அரசு** தலைநகரை மாற்றி அமைக்கிறது.

Clarity Version download at www.makkalarasu.com




Clarity Version download at www.makkalarasu.com

## சென்னை

திரைக்கலை, துறைமுகம், கணினி தொழில் நுட்பத்திற்கான தலைநகராக விளங்கும்.

## திருச்சி

செயலாண்மை வசதிக்காகத் தமிழ்நாட்டின் தலைநகராக மாற்றப்படும்.

- அனைத்துக் கட்சிகளுமே திருச்சியில் மாநாடு நடத்துகிறார்கள். ஏனென்றால் மையப் பகுதியாக இருப்பதால்தான். இப்போது சென்னை சென்றுவர 2 நாள் ஆகிறது. திருச்சி என்றால் அது தமிழகத்தின் மைய நகரம். மாநிலத்தின் பல்வேறு இடங்களில் இருந்து ஒரே நாளில் சென்று திரும்பலாம்.
- ஒரு நாட்டின் மையப் பகுதியில் தான் தலைநகரம் இருக்க வேண்டும். உலக முழுவதும் அதற்கான உதாரணங்கள் இருக்கின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில், எந்தப் பெருநகரத்தையும் தலைநகராய் கொண்டிருக்கவில்லை. சீனா போன்ற நாடுகள் தன் நிர்வாக வசதிகளுக்காகப் பல்வேறு துணைத் தலைநகரை வைத்துள்ளது.

## கோவை

தொழில், வர்த்தகத்திற்கான தலைநகராக விளங்கும்.

## மதுரை

மொழி, கலை, பண்பாட்டிற்கான தலைநகராக விளங்கும்.

## கன்னியாக்குமரி

தமிழர் மெய்யியலுக்கான தலைநகராக விளங்கும்.



Clarity Version download at www.makkalarasu.com



பெருந்தலைவர் காமராசர் வைகை அணையைக் கட்ட 20 கிராமத்தைச் சேர்ந்த மக்களை வெளியேற்றுகிறார். அணையைக் திறந்து வைக்க முதல்வர் வரும்போது 300 பேர் கொண்ட மக்கள் ஒன்றுகூடி கருப்புக் கொடிப் போராட்டம் நடத்துகிறார்கள். அணைக்கு அருகே அங்கு 10000 பேர், 'காமராசர் வாழ்க' என்றனர். இந்தச் செயல்தான், 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி முறை'.





# தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை

உலகில் வளர்ந்த நாடுகள் அனைத்தும் தன் குடி மக்களை அன்பான சர்வாதிகார ஆட்சிமுறையின் கீழ்தான் வைத்திருக்கின்றன. நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்பாடற்ற ஆட்சி முறை தடையாகத்தான் இருக்கும். நாம் தமிழர் அரசு ஒவ்வொரு குடிமகனின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கவனத்தில் கொண்டே அன்பான சர்வாதிகார ஆட்சிமுறையைக் கடைபிடிக்கிறது.

## ஆட்சி முறை

- தன்னலம் சார்ந்த கொடுமையான ஆட்சி முறையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
- நமது ஆட்சிமுறை ‘தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை’

## குழந்தை

- ஒரு குழந்தை சாகக் கிடக்கிறது. அந்தக் குழந்தையைப் பிழைக்க வைக்கும் ஊசியும் மருந்தும் மருத்துவரிடத்தில் இருக்கிறது. ஊசியைப் போடும்போது குழந்தைக்கு வலிக்கும். போட்டால்தான் குழந்தை பிழைக்கும். வலியைப் பொருட்படுத்தாமல், ஊசியைப்போட்டுக் குழந்தையைக் காப்பாற்றும் செயல்தான் தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை.

## குழந்தைக்குப் பாடம்

- குழந்தையிடம், பாடத்தை ஏட்டில் மூன்று முறை எழுதிக்கொண்டு வா என்று ஆசிரியர் சொல்லும்போது, குழந்தையின் பார்வையில் ஆசிரியர் சர்வாதிகாரியாகத் தான் தெரிவார். ஆனால் நோக்கம், குழந்தை மனத்தில் பாடத்தை நன்றாக பதிய வைக்க வேண்டும் என்பதே. இந்தச் செயல்தான், ‘தன்னலமற்ற அன்பான சர்வாதிகார’ ஆட்சி முறை.

> “ஊசியைப் போடும்போது குழந்தைக்கு வலிக்கும். போட்டால்தான் குழந்தை பிழைக்கும்”

தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை



Clarity Version download at www.makkalarasu.com

> நாம் தமிழர் அரசு, மக்களின் கருத்துக்கானது அன்று. முழுக்க முழுக்க மக்களின் நலனுக்கானது

## பனை

- மட்டையைக் கழிக்காமல் பனைமரத்தை அப்படியே விட்டுவிட்டால் பதராகிவிடும். அதற்கு வலிக்குமே என்று பாராமல், வலியைப் பொருட்படுத்தாமல் கத்தியை வைத்து மட்டையைக் கழித்து விட்டால் தான் பனை பயன்தரும். அந்தப் பனையைச் செதுக்கிற முறைதான், 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார' ஆட்சி.

## பெருந்தலைவர் காமராசர்

- முன்னாள் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் வைகை அணையைக் கட்டும் போது 20 கிராமத்தைச் சேர்ந்த மக்களை வெளியேற்றுகிறார். அவர்களுக்கு மாற்று இடத்தைக் கொடுக்கிறார். 20 கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கும் அது பெரும் இழப்பாகத் தான் இருந்தது. பிறகு அணையைக் கட்டிமுடித்த பிறகு திறந்து வைக்க முதல்வர் போகிறார். அப்போது 300 பேர் கொண்ட மக்கள் ஒன்றுகூடி கருப்புக் கொடிப் போராட்டம் நடத்துகிறார்கள். ஐயா, திருப்பிப் போய் விடலாமா என்று பெருந்தலைவர் காமராசரிடம் கேட்கிறார்கள். வண்டியை விலக்கி ஓட்டு என்று சொல்கிறார். அணைக்கு அருகே அங்கு 10000 பேர், 'காமராசர் வாழ்க' என்றனர். இந்தச் செயல்தான், 'தன்னலமற்ற அன்பான சர்வதிகார' முறை.

## லீ குவான் யூ

- விடுதலைக்கு முன்பாக, 'ஆசியக் கண்டத்தின் தீண்டத்தகாத நகரம்' என்று இங்கிலாந்து சாம்ராஜ்யத்தால், மேலை நாடுகளால் கூறப்பட்ட சிங்கப்பூரைத், தான் பிரதமராகப் பதவியேற்றதும், ஆசியக் கண்டத்தின் மிகச் சிறந்த நகரமாக லீ குவான் யூ மாற்றியமைக்கக் காரணம் அவரது, 'தன்னலமற்ற அன்பான சர்வதிகார' ஆட்சி முறைதான்.

## செதுக்கி வளர்க்கும்

- வெளிநாட்டிற்குப் போகின்ற நமது மக்கள் அங்குள்ள சட்ட திட்டங்களை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள். இங்கே எச்சில் துப்பாதே, இங்கே சிறுநீர் கழிக்காதே, இந்தச் சாலையை மகிழுந்தில்(car) இத்தனைக் கிலோமீட்டர் வேகத்தில் கடந்து செல் என்ற அந்த விதிகளை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள். நமது நாட்டு வானூர்தி நிலையத்தில் வந்து இறங்கியவுடன் அதை அப்படியே மறந்து விடுகிறார்கள். காரணம் அந்த நாடு, 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார' முறையில் ஆட்சி செய்கிறது. இந்தச் சாலையை 60 கிலோமீட்டர் வேகத்தில் தான் கடந்து செல்லவேண்டும். இல்லை என்றால் ஓட்டுனர் உரிமம் திரும்ப பறிக்கப்படும் என்றிருப்பதால் பயப்படுகிறான். அப்போது அந்த முறைதான் வளர்கின்ற சமுதாயத்தைச் செதுக்கி வளர்க்கும்.

## மக்கள் நலன்

- நாம் தமிழர் அரசு, மக்களின் கருத்துக்கானது அன்று. முழுக்க முழுக்க மக்களின் நலனுக்கானது.

## அதிகாரம்

- அதிகாரம் வலிமையானது, எமது அதிகாரம் எம் மக்களுக்கானது.



Clarity Version download at www.makkalarasu.com

## மக்களை அணி திரட்டி அரசியல்படுத்தாமல் புரட்சியை முன்னெடுக்க முடியாது.

– புலவர் கலியபெருமாள்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
# வானின்றி அமையாது ஒழுக்கு

- தமிழ்மறை (20)




## தமிழகம் முழுதும் பல இடங்களில் தனியாருக்குத் தண்ணீரைத் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறார்கள்

# நீர்வளப் பெருக்கம்

## நீர் மேலாண்மை

பல்வேறு பெருமைகளைத் தன்னகத்தே கொண்டதுடன் நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்ட இனமாகவும் தமிழ்த்தேசிய இனம் விளங்குகிறது. ஓடுகின்ற நீரைத் தேக்கி வைத்து அதைப் பாசனத்திற்கும், பயிர் வேளாண்மைக்கும் பயன்படுத்த முடியும் என உலகத்திற்கு உரைத்தவன் எம் பாட்டன் கரிகால் பெருவளத்தான். 2000 ஆண்டுகளுக்கு முன்பாக மணற்பாங்கான ஆற்றின் குறுக்கே, ஓடிக்கொண்டிருக்கும் பெருவெள்ளத்தைத் தடுத்துக் கல்லணை கட்டி நீர் மேலாண்மையை நிலை நாட்டியது தமிழினம். எகிப்தின் நைல் நதியின் குறுக்கே தடுப்பணை கட்டும் முயற்சி நடந்து தோல்வியில் முடிந்ததாக வரலாறு அறிவிக்கிற காலத்தில் தமிழன் வெள்ளப்பெருக்கெடுத்தோடி வரும் காவிரி நீரைத் தடுத்து உலகத்திற்கே உதாரணமாக நின்றான்.

## பண்டைய தமிழகத்தின் நீர் ஆதாரங்கள்

- தமிழனின் தாய்த்தொழில் வேளாண்மை. வேளாண்மை செழிக்கக் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி என முப்பத்திரெண்டு ஆறுகள் வற்றாத உயிராறுகளாகத் தமிழர் நிலத்தில் நிறைந்து ஓடிப் பண்டைய தமிழகத்தை வளம் கொழிக்கச் செய்தன.

  ***“காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்***
  ***கண்டதொரு வையை பொருநைநதி என***
  ***மேவிய ஆறு பல ஓடத்***
  ***திருமேனி செழித்த தமிழ்நாடு”***

  என்று பாடி உவகை கொண்டான் நம் பாட்டன் பாரதி.

- வடகிழக்குப் பருவமழை, தென்மேற்குப் பருவ மழை என வான்மழை தந்த அமுதங்களாய் இரு பருவ மழைக்காலங்கள் பருவம் தவறாமல் பொழிந்து தமிழ்மண்ணைச் செழிக்க வைத்தன. வான்மழை நீரையும், மலையில் இருந்து உருவாகி நிலம் நோக்கி ஓடி வரும் ஆற்று நீரையும் சேகரிக்க ஏரி, கண்மாய், கரணை, தாங்கல், தருவை, ஏந்தல், ஊருணி, குளம், குட்டை எனப் பல்வகையான நீர்நிலைகளை உருவாக்கி வைத்துத் தமிழ்நிலத்தைச் செழிக்க வைத்தார்கள் தமிழர்கள். 1970 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படித் தமிழர் நிலத்தில் தோராயமாக 39 ஆயிரம் நீர்நிலைகள் இருந்தன.

- **1960 ஆம் ஆண்டுவாக்கில் தோராயமாக 50 இலட்சம் ஏக்கர் இருபோக விளைச்சலைத் தரக் கூடிய நன்செய் நிலங்கள் இருந்தன.** இன்றைய அளவில் அவை 35 இலட்சம் ஏக்கர் நிலங்களாகக் குறைந்திருக்கிறது என்று கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

நீர்வளப் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## ஓர் ஆண்டில் பெய்யும் சராசரி மழைநீர் அளவு

| கர்நாடகாவில் | ஆந்திராவில் |
|---|---|
| 722 | 908 |

**தமிழகத்தில்**

**950** மி.மீ.

ஆந்திர மாநிலத்தை விடவும், கர்நாடகத்தை விடவும் தமிழகத்தில்தான் மழைநீரின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனாலும் நம்மைவிடக் குறைந்த அளவு நீர் பெறும் மாநிலங்களிடம் தண்ணீர் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.





கெடிலம் ஆறு



கூவம் ஆறு



நொய்யலாறு



பாலாறு

## தமிழகத்தில் மழைநீர்

- தமிழகத்தில் ஓராண்டிற்குக் கிடைக்கும் மழைநீர் **4,000** டி.எம்.சி.
- அதில் நாம் பயன்படுத்தும் நீரின் அளவு **1,500** டி.எம்.சி.
- வீணாகக் கடலில் கலக்கும் நீரின் அளவு **2,500** டி.எம்.சி.
- இதில் ஆற்று நீரில் இருந்து கிடைக்கும் நீர் **850** டி.எம்.சி
- கிணறுகள் மூலம் கிடைக்கும் நீரின் அளவு **450** டி.எம்.சி.
- கர்நாடகம் ஆந்திராவில் இருந்து கிடைக்கும் நீர் **400** டி.எம்.சி.

இவ்வாறு நமக்கு இயற்கையாகக் கிடைக்கிற நீர் வளம் சரியாகச் சேகரிக்கப்படாமல், பாதுகாக்கப்படாமல், பயன்படுத்தப்படாமல் கடந்த 50 ஆண்டுக்காலத் திராவிடக் கட்சிகளின் தன்னலம் சார்ந்த, ஊழல், இலஞ்சம் நிறைந்த ஆட்சி முறைகளால் நீர்வளத்தில் தன்னிறைவு அடையாமல் பற்றாக்குறையால் தமிழகம் தவித்து வருகிறது.

## வீணாய்ப் போன நீர் ஆதாரங்களும், தொலைந்துபோன நீர் நிலைகளும்

- சென்னையின் கூவம் நதி சாக்கடைக் கால்வாயாக ஓடிக்கொண்டிருக்கிறது.
- கெடிலம் ஆறு கழிவு நீர் கலந்து சீரழிந்துபோனது.
- நொய்யலாறு சாயக்கழிவு கலந்து கொடிய நச்சு கலந்த நீராகி நாசமானது.
- குண்டாறு, வேம்பாறு, பச்சையாறு எனப் பல ஆறுகள் ஆக்கிரமிப்புகளால் அழிந்து போயின.
- பாலாற்றில் நீர்வரத்தே நின்று போனது.
- ஏரி, குளங்களின் நீர்ப் பரப்பினில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.
- இயற்கையாக உருவான நீர்வழிப்பாதைகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்புகளால் மறிக்கப்பட்டிருக்கிறது.
- அளவற்ற ஆற்று மணற் கொள்ளையால் ஊற்றுநீர் வளமும் வற்றிப்போய்விட்டது.
- ஏரி, குளங்கள், கரணைகள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.
- நீரின்று அமையாது உலகு என்று போதிக்கிறது தமிழ்மறை. எனவே நீர்நிலைகளைக் காத்திட, நீர் ஆதாரங்களைப் பெருக்கிட, ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர்வழித் தடங்களைப் புதுப்பித்திடப் பல்வேறு செயல்திட்டங்களை அமையவிருக்கும் நாம் தமிழர் அரசு உடனடியாக நிறைவேற்றும் என உறுதியளிக்கிறது.'

> “50 ஆண்டுக்கால திராவிடக் கட்சிகளின் ஆட்சிகளில் தன்னலம் சார்ந்த, ஊழல் நிறைந்த ஆட்சி முறைகளால் நீர்வளத்தில் தன்னிறைவு அடையாமல் தமிழகம் தவித்து வருகிறது”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


பசுமை ஏரி


சீர்கெட்ட
மூக்கனேரி


சீரமைத்த
மூக்கனேரி


செம்மையுற்ற
மூக்கனேரி


உக்கடம் ஏரியில் மக்கள்
சீரமைப்புப் பணி


செம்மையுற்ற
உக்கடம் ஏரி


தூக்கணங்
குருவிக் கூடு

# நாம் தமிழர் அரசு செயல்படுத்தும் நீர்மேலாண்மை முதன்மைப் பணிகள்

- ஆறுகளில், நீர்நிலைகளில் கலக்கும் கழிவுநீர் முற்றிலுமாகத் தடுக்கப்படும்.
- ஆறுகளுக்கான நீர்வழிப் பாதைகளை ஒழுங்கமைத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர் வழித் தடங்கள் சீர்படுத்தப்படும்.
- நீர் நிலைகளின் கரையோரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு,நீர் நிலைகளின் இயற்கைப் பரப்பு மீட்டெடுக்கப்படும். .
- ஏரி,குளங்கள், ஆறுகள் போன்ற நீர் நிலைகள் தூர்வாரப்பட்டு அதன் கரைகள் வலுப்படுத்தப்படும்.

# நீர்நிலைகளைச் சுற்றி மரங்கள்

- ஆறு, ஏரி, கண்மாய், கரணை, ஏந்தல், குளம், குட்டை கரைகளைச் சுற்றி வேப்பமரம், புங்கைமரம், பனிக்கொன்றைமரம், நாவல்மரம், கனிக்கொன்றைமரம், ஆலமரம், பூவரசுமரம், மருதமரம், அரசமரம், தேக்குமரம், கோங்குமரம் மற்றும் பனைமரங்கள் நட்டு வளர்க்கப்பட்டு உயிர்ச்சூழல், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஏற்றாற் போல் நீர் நிலைகள் மாற்றப்பட்டுப் பாதுகாக்கப்படும்.
- நீர் நிலைகளின் கரைகளைச் சுற்றி நடப்படும் பனைமரங்கள் நிலத்தடிக்குக் கீழே ஆயிரம் அடிவரை சென்று நீரைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும். அது வேளாண்மைக்குப் (விவசாயத்திற்குப்) பயன்படும். தவிரப் பனைமரத்தில் வௌவால்கள் சென்று அடைந்து தங்கும். அந்தப் பகுதி விவசாய நிலங்களில் உள்ள பூச்சிகளை உண்டு வாழும். வேளாண் தொழிலுக்கு நண்பனாக இருக்கும். அதனால் நீர்நிலைகளைக் காத்து உழவுக்கு உதவியாக நிற்கும் பனை மரங்கள் வளர்க்கப்படும்.
- அனைத்து நீர்நிலைகளும் முள்வேலி அமைக்கப்பட்டு,மின் விளக்குகள் பொருத்தப்பட்டுச் சிறப்புக் காவல்படையினரைக் கொண்டு பாதுகாக்கப்படும்.
- ஏரி, குளங்களுக்கான நீர்வரவுத் தடங்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுச் சீரமைக்கப்படும்.
- நீர்த் தேவை அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் புதிய நீர்வரவுத் தாரைகள் உருவாக்கப்படும்.
- ஆழ்துளைக் குழாய்களின் மூலம் நீரை எடுப்பது படிப்படியாகக் குறைக்கப்படும். ஏரி கண்மாய், குளம் குட்டைகளில் நீரைச் சேமித்தால் ஆழ்துளைக் குழாய் நீர் தேவையிருக்காது. இதனால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.

**“நீர் நிலைகளின் கரைகளைச் சுற்றி நடப்படும் பனைமரங்கள் நிலத்தடிக்குக் கீழே ஆயிரம் அடிவரை சென்று நீரைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும். பனைமரத்தில் வௌவால்கள் சென்று அடைந்து தங்கும். அந்தப் பகுதி உழவு நிலங்களில் உள்ள பூச்சிகளை உண்டு வாழும் வேளாண் தொழிலுக்கு நண்பனாக இருக்கும்”**

நீர்வளப் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


பம்பா அச்சன்
கோவில் வைப்பாறு

## பம்பா அச்சன் கோவில் வைப்பாறு இணைப்புத் திட்டம்





அத்திக் கடவு
அவினாசி

## அத்திக் கடவு அவினாசி நீர்வளத் திட்டம்




நல்லாறு - ஆழியாறு

## நல்லாறு - ஆழியாறு பாசன விரிவாக்கத் திட்டம்



## புதிய ஏரிகளுக்குப் பெரும்பாட்டன்களின் பெயர்கள்

- கரிகால் சோழன்
- இராசராச சோழன்
- இராசேந்திரச் சோழன்
- பராந்தகச் சோழன்
- ஆதித்த கரிகாலச் சோழன்
- குந்தவை நாச்சியார்
- இயற்கை வேளாண் பேரறிஞர் நம்மாழ்வார்

போன்ற நமது பெரும்பாட்டன்களின் பெயர்களில் 500 மற்றும் 1000 ஏக்கர் பரப்பளவில் புதிய ஏரிகள், கண்மாய்கள் உருவாக்கப்படும். அவற்றுக்கான நீர்வரத்துக் கால்வாய்கள் வெட்டப்படும். அவற்றின் கரையோரங்களில் பல்வேறு பெரு மரங்கள் நடப்படும். அந்த நீர் நிலைகளைப் பாதுகாத்திடச் சிறப்புக் காவல் மையங்கள் உருவாக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட சூழலியல் மையங்களாக மாற்றப்படும்.

- ஒவ்வொரு நூறு குறுக்கம் நிலங்களுக்கும் 25 குறுக்கம் அளவில் புதிய குளங்கள் வெட்டப்பட்டு மழைநீரைத் தேக்கி வைத்து வேளாண்மைத் தொழில் வளப்படுத்தப்படும். இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அரசு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.
- நீரை உறிஞ்சி நீர்க் கொள்ளையடிக்கும் தனியார் நிறுவனங்கள் தடை செய்யப்படும். அவர்களுடனான ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படும்

## பாண்டியாறு, பொன்னம்புழா நீர்த்தேக்கத் திட்டம்

- 1955ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பாண்டியாறு பொன்னம்புழா நீர்த்தேக்கத் திட்டத்திற்குக், கூடலூரில் இருந்து 5.கிலோ மீட்டர் தொலைவில் அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு பொய்ப் பிரச்சாரங்களைக் கொண்டு கேரள அரசு கொடுத்த தொடர் அழுத்தத்தால் 72ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள பல ஆயிரம் ஏக்கர் வேளாண் நிலங்கள் பலனடைந்திருக்கும். கூடலூர் உள்ளிட்ட பகுதிகள் சிறந்த சுற்றுலாத்தலமாகியிருக்கும். 40 மெகாவாட் நீர்மின் உற்பத்தியைச் செய்வதோடு, அந்த நீரைப் பெரிய குழாய்கள் மூலம் மாயர் ஆற்றில் இணைத்துப் பவானி ஆற்றோடு கலக்கச் செய்திருந்தால் அந்த பகுதியின் வேளாண் தொழிலையும் பெருக்கியிருக்க முடியும். இதுவரையிலும் ஆட்சியில் இருந்த திராவிடக் கட்சிகள் இதை நடைமுறைப்படுத்தவேயில்லை. நாம் தமிழரின் அரசு இதை முதன்மையாகச் செயல்படுத்தும். அதைப்போலவே

- அத்திக்கடவு, அவினாசி நீர்வளத் திட்டம்,
- நல்லாறு, ஆழியாறு பாசன விரிவாக்கத் திட்டம்,
- பம்பா, அச்சன்கோவில், வைப்பாறு இணைப்புத் திட்டம்,
- மதுரை மாவட்டம் அழகர் அணைத் திட்டம்

என நீண்ட காலமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் **நாம் தமிழர் அரசு பதவியேற்ற இரண்டாண்டுகளுக்குள் முழுமையாக நிறைவேற்றும்.**

- தாமிரபரணி, நம்பியாறு, கருமேனியாறு வெள்ளநீர்க் கால்வாய்த் திட்டம் ஓராண்டுக்குள் நிறைவேற்றப்படும்.
- குமரி மாவட்டத்தின் தாமிரபரணி ஆற்றுநீர் முழுவதும் பாசனத்திற்குப்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



ஆற்று மணல் கொள்ளை



அகத்தியர் அருவி




சீமைக் கருவேல மரம் அழிப்பு



வீராணம் ஏரி



யூக்கலிப்டஸ் (கற்பூரத் தைல மரம்) தடை செய்யப்படும்

பயன்படுத்தப்படும் வகையில் புதிய திட்டம் நிறைவேற்றப்படும்.

- பத்தாண்டுக் காலமாக மறுக்கப்பட்டு வரும் நெய்யாற்றின் இடதுபுறக் கால்வாய்ப் பாசன உரிமை மீட்கப்படும்.
- வீராணம் ஏரி தூர் வாரப்பட்டுக் கரைகள் வலுப்படுத்தப்பட்டு நீர்க்கொள்ளளவைக் கூடுதலாக்கிப் பாசனப்பரப்பு விரிவு படுத்தப்படும்.
- தென்பெண்ணை, பாலாறு, காவிரி, வைகை உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து ஆறுகளிலும் 15 கிலோ மீட்டருக்கு ஒரு நீர்த் தடுப்பணை கட்டிப் புதிய வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்படுவதுடன் மக்களின் குடிநீர்த் தேவையும் நிறைவு செய்யப்படும்.
- தாமிரபரணி ஆற்றில் ஒவ்வொரு ஐந்து கிலோ மீட்டருக்கும் ஒன்றெனப் புதிய அணைகள் கட்டப்படும்.

## மரங்களின் பேய்

- நிலத்தடியில் நாற்பதடிச் சுற்றளவுக்கும், ஆழத்திற்கும் நீர் வளத்தைச் சுத்தமாக உறிஞ்சிச் சுற்றி இருக்கும் காற்றில் உள்ள நீர்ச் சத்தையும் உறிஞ்சி மண் வளத்தை நீர்த்துப்போகச் செய்யும் மரங்களின் பேயான சீமைக்கருவேல மரங்கள் முற்று முழுதுமாக அழிக்கப்படும். இதற்கென்றே தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.
- தமிழகம் முழுதும் சுற்றுப்புறச் சூழலுக்குக் கொடும் பாதிப்பை ஏற்படுத்தும் சீமைக்கருவேல மரத்தை முற்றாக அழிக்கும் பணி விரைவாக முடிக்கப்படும். இதனால் நீர்வளம் பாதுகாக்கப்படும்.

## சமூக நலக்கேடுகள்

- சமூக நலக் காடுகள் என்று மலைப்பிரதேசம் எங்கும் யூக்கலிப்டஸ் மரங்களை நட்டு வைத்தார்கள். கருவேல மரங்களைப் போன்றே பூமிக்கடியில் நீர்வளத்தை சிதைத்துக் காற்றில் உள்ள ஈரப்பத்தையும் சிதைத்து, மேகங்களையும் கலைத்துவிடும் தன்மை கொண்ட இந்த மரங்கள் முற்று முழுதுமாக அழித்தொழிக்கப்படும். சமூக நலக்காடுகள் என்ற பெயரில் சமூக நலக் கேடுகளைச் செய்து கொண்டிருக்கும் இந்த மரங்கள் போர்க்கால அடிப்படையில் அகற்றப்படும். அதற்கு மாற்றாகத் தேக்கு, சவுக்கு, புளி, வேம்பு, நாவல், மூங்கில் போன்ற மர வகைகள் நடப்படும்.

## தனியார் மணல் கொள்ளை

- தமிழக நீர் நிலைகளில், தனியாரால் நிகழ்த்தப்பட்டு வரும் ஆற்று மணற் கொள்ளை அடியோடு ஒழிக்கப்படும். அரை அங்குலம் ஆற்று மணல் உருவாவதற்கு நூறு ஆண்டுகள் ஆகும். ஆனால் ஒரு நாளைக்கே முப்பதடி ஆழத்திற்கும் மேலாக ஆற்றுமணலைச் சுரண்டி, ‘மணல் கொள்ளை’ நடந்திக்கொண்டிருக்கிறார்கள். அதை இந்தக் கொள்கை அற்ற அரசே நடத்திக்கொண்டு இருக்கிறது.
- மணற்கொள்ளையால் ஆற்றுப்படுகையில் உள்ள தென்னை பனை மரங்கள்கூடப் பட்டுப்போய்ப் பட்டமரமாய் நிற்கின்றன. மூன்றுபோகம் விளைந்த ஆற்றுப்படுகை வறண்ட நிலமாகியிருக்கிறது. அதனால் நாம் தமிழர் அரசு மணற்கொள்ளையைத் தனிப்படைகளை அமைத்து முழுதுமாகத் தடுக்கும்.

> “தாமிரபரணி ஆற்றில் ஒவ்வொரு ஐந்து கிலோ மீட்டருக்கும் ஒன்றெனப் புதிய அணைகள் கட்டப்படும்”

நீர்வளப் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


தாமிரபரணி ஆறு

# குளிர்பானம் உற்பத்திக்கு 803 கோடி லிட்டர் தண்ணீர் செலவாகிறது




சாயமேற்றுதல்


கோழிப்பண்ணை


கார் ஏற்றுமதி

# மறை நீர்க் கொள்கை

## குளிர்பானத் தொழிற்சாலைகளுக்குத் தடை

- தாமிரபரணி ஆற்றில் ஒரு தனியார் குளிர்பான நிறுவனம் நாள் ஒன்றுக்கு ஒன்பது லட்சம் லிட்டரும், மற்றொரு நிறுவனம் 13 லட்சம் லிட்டரும் தண்ணீர் எடுத்துக்கொள்ள 99 வருடக் குத்தகைக்கு விற்றிருக்கிறார்கள். தினசரி 22 இலட்சம் லிட்டர் தண்ணீர். ஆண்டிற்கு 803 கோடி லிட்டர் தண்ணீர் செலவாகிறது. தமிழகம் முழுதும் பல இடங்களில் இப்படித் தனியாருக்குத் தண்ணீரைத் தாரைவார்த்துக்கொண்டிருக்கிறார்கள்..

- **கங்கைகொண்டான், திருச்சி உறையூர், திருமழிசை, மதுரை வைகை ஆறு, சிவகங்கை, பெருந்துறை, திருவள்ளூர் அரண்வாயல், செங்கல்பட்டு, தண்டலம் கூட்டுச்சாலை, படப்பை உள்ளிட்ட பல இடங்களில் இருக்கும் தனியார் குளிர்பானம் மற்றும் மதுபான நிறுவனங்கள் அனைத்தும் தடை செய்யப்படும். அரசு அவர்களோடு போட்டுக்கொண்ட ஒப்பந்தங்கள் நீக்கப்படும். இதன் மூலம் மண்ணின் நீர்வளம் காக்கப்படும்.**

- இந்த மண்ணை, இயற்கையை, வளத்தை, நீர் வளத்தை அடுத்த தலைமுறைக்கு அப்படியே பாதுகாத்து வழங்கிட வேண்டியது நம் கடமை. நமது நீர்வளத்தைச் சேமித்துப் பாதுகாக்கும் பொருட்டுத் தமிழகத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் நீர் வளத்தினைப் பாதுகாக்கப் புதிய கொள்கை மறை நீர்ப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படும்.

## கோழி வளர்ப்பில் நீர்க் கொள்ளை

- ஒரு கோழி முட்டை ஒருவாகி விற்பனைக்குச் செல்ல 196 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இந்தியாவின் மொத்த முட்டைத் தேவையில் 90 விழுக்காடு முட்டைகள் தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் இருந்து மட்டுமே நிறைவேற்றப்படுகிறது.

- ஆண்டிற்கு 2000 கோடி முட்டைகள் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதியாகிறது. **ஒரு முட்டைக்கு 196 லிட்டர் தண்ணீர் என்றால் 2000 கோடி முட்டைக்கு நான்கு இலட்சம் கோடி லிட்டர் தண்ணீர் செலவாகிறது. அதாவது 133 டி.எம்.சி. தண்ணீர் செலவாகிக் கொண்டிருக்கிறது.** இது தமிழகத்தின் நீர்ப் பொருளாதாரத்தை, நீர் ஆதாரத்தைக் கொள்ளையடிக்கும் போக்காகும்.

- ஒரு கிலோ இறைச்சிக் கோழிக்கு 4325 லிட்டர் தண்ணீர் செலவாகிறது. தமிழ்நாட்டில் இருந்து ஆண்டிற்கு சுமார் **2000 கோடி கிலோ கறிக்கோழி ஏற்றுமதியாகிறது. இதற்கான தண்ணீர்ச் செலவு 86,50,000 லிட்டர் ஆகும்.**

## கார் உற்பத்தியில் கொள்ளைபோகும் நிலத்தடி நீர்

- தமிழ் நாட்டில் உள்ள தனியார் நிறுவனத்தில் ஒரு டன் எடையுள்ள கார் உற்பத்தியாகி வெளியே வருவதற்கு 4,50,000 லிட்டர் தண்ணீர் செலவாகிறது. இந்தத் தனியார் நிறுவனம் ஆண்டிற்கு சுமார் 50 இலட்சம் கார்களை ஏற்றுமதி செய்து வருகிறது. **ஆக சுமார் 25 இலட்சம் கோடி லிட்டர் தண்ணீர் இங்கே கொள்ளை போய்க்கொண்டிருக்கிறது.** அதாவது ஆண்டிற்கு சுமார் 83 டி.எம்.சி. தண்ணீர் விலையேதும் இல்லாமல் கொள்ளை போய்க்கொண்டிருக்கிறது.

- **அமெரிக்க சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் முட்டை மற்றும் இறைச்சிகளைச் சொந்த நாட்டில் உற்பத்தி செய்வதில்லை. மூன்றாம் உலக நாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய்து கொள்கிறார்கள்.** காரணம் நீராதாரம் செலவாகிறது. இறைச்சி

நீர்வளப் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com










முட்டைகளை இறக்குமதி செய்வதற்காகும் தொகைகளைவிடத் தூய தண்ணீருக்கான செலவு பல ஆயிரம் கோடி அதிகம் என்பதால்தான், தன் நாட்டில் உள்ள தண்ணீரைப் பாதுகாத்துக்கொண்டு இறைச்சி முட்டைகளை இறக்குமதி செய்துகொள்கிறார்கள். சொந்த நாட்டின் நீராதாரத்தைத் தேவையின்றி அழிக்கக்கூடாது என்ற பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது.

- ஆடு மாடுகளின் **ஒரு கிலோ தோலைப் பதனிட்டு அதனைச் செருப்பாகவோ, தோல் பொருளாகவோ தயாரிக்க 17,000 லிட்டர் தண்ணீரும், ஒரு ஜீன்ஸ் பேண்ட் தயாரிக்க 19,000 லிட்டர் தண்ணீரும் செலவாகிக் கொண்டிருக்கிறது** என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அதிர்ச்சி அளிக்கக்கூடியதாகவே இருக்கிறது.

## புதிய நீர்த்தேக்கத் திட்டங்கள்

- சிறுவாணி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் முழுதும் தமிழகத்தைச் சேர்ந்தது. ஆனால் சிறுவாணி அணை கேரளாவில் இருப்பதால் நொய்யல் ஆற்றில் வருகின்ற நீர்வரத்து கோவை குடிநீரைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாததாக இருக்கிறது. அதனால் சிறுவாணி அணைக்கருகில் தமிழக எல்லையில் புதிய அணை கட்டப்படும். சிறுவாணியில் இருக்கும் உபரிநீர் ஆனைக்கட்டி வழியாகக் கோட்டத்துறை ஆற்றில் கலந்து கேரளா மாநிலம் செல்வதைத் தடுக்க ஆனைக்கட்டியில் நீர்த்தேக்கம் கட்டிக் கணுவாய் சங்கனூர்ப் பள்ளம் வழியாக நொய்யல் ஆற்றில் கலக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆண்டு முழுவதும் மழைபெய்யக்கூடிய வால்பாறை மலைப் பகுதியில் பெய்யும் மழைநீர் சோலையாறு வழியாகக் கேரளாவில் நுழைந்து கடலில் கலந்துகொண்டிருக்கிறது. எனவே வால்பாறையில் புதிய அணையைக் கட்டி அமராவதி ஆற்றுக்கு நீரைக் கொண்டுவரும் புதிய திட்டத்தைச் செயல்படுத்துவோம்.
- பழனிமலை மற்றும் கொடைக்கானல் மலையில் பொழியும் மழைநீரைத் தேக்கப் புதிய அணையைக் கட்டி அந்த நீரைச் சண்முகா ஆற்றில் கலக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவோம்.
- கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள புளியஞ்சோலை, கொல்லிமலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை ஆகிய பகுதிகளில் பொழியும் மழைநீரைத் தேக்கப் புதிய நீர்த்தேக்க அணை கட்டப்படும்.
- மக்களின் வாழ்வியலுக்கான இப்பணிகள் அனைத்தும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் செய்து முடிக்கப்படும் எனத் தமிழக மக்களாகிய எம் தாய்த்தமிழ் உறவுகளுக்கு நாம் தமிழர் அரசு உறுதி அளிக்கிறது.

**தண்ணீரின் தேவையில் தன்னிறைவு அடைவோம்!**

Clarity Version download at www.makkalarasu.com

# தூய குடிநீர் இலவசம்

இன்னும் கால் நூற்றாண்டு கழித்து உலகின் பணக்காரர்கள் பட்டியலை எடுத்துப் பார்த்தால் தங்கம் விற்றவரோ, பெட்ரோல், டீசல் விற்றவரோ இருக்க மாட்டார்கள். குடிநீர் விற்றவர்தான் முதன்மைப் பணக்காரராக இருப்பார். தங்கம்,பெட்ரோல், டீசல் இல்லாமல் மனிதன் வாழ முடியும். தண்ணீர் இல்லாமல் எந்த ஓர் உயிரினமும் உயிர் வாழ முடியாது.

தவித்த வாய்க்குத் தண்ணீரைக்கூட தன் நாட்டு மக்களுக்குக் கொடுக்க முடியாத அரசு எதற்கு? எனவேதான் நாம்தமிழர் அரசு தன் நாட்டு மக்களுக்குத் தூய குடிநீரை இலவசமாகக் கொடுக்கும் திட்டத்தை முன்வைக்கிறது.

## முதல் துரோகம்

- நீர் சூழ்ந்த உலகில் வாழும் 715 கோடி மக்களுக்கும், 2 விழுக்காடு குடிநீர்தான் இருக்கிறது. இந்த 2 விழுக்காடு குடிநீரை 20 விழுக்காடாக மாற்றுவது எப்படி என்று யோசிக்காமல், குடிநீரை விற்றால் நிறையச் சம்பாதிக்கலாம் என்று நினைத்ததுதான் உயிரினத்திற்குச் செய்த மிகப்பெரிய துரோகம்.
- கல்வி, மருத்துவம் தண்ணீரை விற்பனைப் பொருளாக சந்தைப்படுத்தும் தேசம் உருப்படாது. தண்ணீரை விற்பனை செய்வது மானுட சமூகத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிரினத்திற்கும் செய்த மிகப்பெரிய பச்சைத் துரோகம். என்று நாம் தமிழர் அரசு கருதுகிறது.

## கணினி இலவசம் சரி, தண்ணீர்?

- ஒரு மனிதன் குளிக்காமல் ஒரு வாரம் இருக்க முடியும். ஆனால் தண்ணீரைக் குடிக்காமல் ஒரு நாளும் இருக்க முடியாது, எனவேதான் தண்ணீரை உயிர் ஆகாரமாகக் கருதுகிறோம்.
- எல்லாவற்றையும் இலவசமாகக் கொடுக்கின்ற அரசு தண்ணீரை மட்டும் விற்பனைப் பொருளாக வைத்திருக்கிறது. 30 ஆயிரம் மதிப்புள்ள கணினியை இலவசமாகக் கொடுக்கின்ற அரசு தண்ணீரை 10 ரூபாய்க்கு விற்பனை செய்கிறது என்றால் தண்ணீர் உயர்ந்த சந்தைப் பொருளாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது.

> “தண்ணீரை விற்பனை செய்வது மானுட சமூகத்திற்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த உயிரினத்திற்கும் செய்த மிகப்பெரிய பச்சைத் துரோகம் என்று நாம் தமிழர் அரசு கருதுகிறது.”

தூய குடிநீர் இலவசம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# தண்ணீர் இல்லாமல் எந்த ஓர் உயிரினமும் உயிர் வாழ முடியாது. தவித்த வாய்க்குத் தண்ணீரைக்கூட தன் நாட்டு மக்களுக்குக் கொடுக்க முடியாத அரசு எதற்கு?

















## கடல்நீர் குடிநீரா?

- சுற்றுச் சூழலைப் பாதிக்கும் கடல் நீரைக் சுத்திகரித்துக் குடிநீராகப் பயன்படுத்தும் திட்டத்தை நாம் தமிழர் அரசு எதிர்க்கிறது. அதற்கென ஒதுக்கப்படும் 50 ஆயிரம் கோடி ரூபாயை வீண் என்று கருதுகின்றோம். நாம் தமிழர் அரசு அத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தாது. அந்தத் தொகையில் நீர் நிலைகளை ஆழப்படுத்தினாலே மழைநீரைத் தேக்கி, நீர்வளத்தைப் பெருக்கி அதன்மூலம் அனைவருக்கும் தூய குடிநீரைத் தடையின்றிக் கொடுக்க முடியும்.

## மற்ற உயிரினங்களுக்கும் தண்ணீர்

- உயிர் ஆகாரமாக இருக்கின்ற தண்ணீர் தனியார் முதலாளிகளிடம் விற்பனைக்குப் போய்விட்டது. நிலத்தடி நீரை ஊறிஞ்சி பல கோடிக் கணக்கான லிட்டர் விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தையும் தாண்டி வெளி மாநிலம், வெளிநாடுகள் என்று தண்ணீர் குடுவைகளில் (போத்தல்களில்) ஏற்றுமதியாகிறது, அதனால் நிலத்தடி நீர் கொள்ளை போகிறது.
- மனிதன் தன் தேவைக்குக் கடையில் சென்று பணம் கொடுத்துத் தண்ணீரை வாங்கிக் குடிக்க முடியும். ஆனால் கோழி, கொக்கு, குருவி, காக்கை, சிங்கம், கரடி, புலி, ஆடு, மாடு போன்ற அனைத்து உயிரினங்களும் எந்தக் கடைக்குச் சென்று தண்ணீரை வாங்கிக் குடிக்கும்? மனிதன் தான் வாழ்வதற்கு மற்ற உயிரினங்களை அழிப்பது மிகவும் கொடுமையானது, அதை நாம் தமிழர் அரசு மாற்றும்.

## அப்பா நம்மாழ்வார் பாதையில்

- வேளாண் பெருங்குடியோன் அப்பா நம்மாழ்வார் சொல்வது போன்று தேக்கி வைக்கும் நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்திவிட்டு, நிலத்தடியில் இருந்து எடுக்கப்படும் நீரைக் குடிநீராகப் பயன்படுத்துவோம். அதற்கு ஏற்ப ஏரி, குளம், கண்மாய்களில் நீர்த்தேக்கும் திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்துவோம். அனைவருக்கும் தூய குடிநீரை இலவசமாகத் தருவோம்.
- அனைத்து உயிர்களுக்குமான நீர்த்தேவையை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.


தூய குடிநீர் இலவசம்



Clarity Version download at www.makkalarasu.com

## உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
## தொழுதுண்டு பின்செல் பவர்

- தமிழ்மறை (1033)




# வேளாண் தொழிலைத் தேசியத் தொழிலாக அறிவித்து; அரசுப் பணியாக மாற்றுகிறது
# நாம் தமிழர் அரசு

Clarity Version download at www.makkalarasu.com

# வேளாண்மை

*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்*

- பெரும்புலவர் பாரதி

ஒரு நாட்டில் ஓர் உழவன் ஏழையாக இருக்கிறான் என்றால் அந்த நாடே ஏழை நாடாகத்தான் கணக்கில் எடுக்கப்படும்.

- *வேளாண்மையைக் கைவிட்ட எல்லா நாடுகளும் பிச்சை எடுக்கின்றன*

- **இன்று ஒரு உழவர் தற்கொலை செய்துகொண்டு சாகின்றான் என்றால் அது செய்தி. நாளை நாம் உணவில்லாமல் சாகப்போகின்றோம் என்பதற்கான முன் அறிவிப்பு.**

- *எந்தத் தொழிற்சாலையும் அரிசியையும், பருப்பையும், காய்கறியையும் உற்பத்தி செய்வதில்லை. அவை நிலத்தில்தான் விளைந்தாக வேண்டும்.*

- **விளைநிலங்களில் எல்லாம் தொழிற்சாலைகளைத் தொடங்கிவிட்டால், தொழிற்சாலை வேலை தரும், சம்பளம் தரும், சாப்பாட்டைத் தருவது யார்?**

- *கடைசி மீனும் பிடிபட்ட பிறகு<br>கடைசி மரமும் வெட்டப்பட்ட பிறகு<br>கடைசி நதியும் நஞ்சான பிறகுதான் தெரியும்<br>இவர்களுக்குப் பணத்தைச் சாப்பிட முடியாது என்று.*

- **பசி வந்தால் மானம், குடிப்பிறப்பு, கல்வி, ஈகை, அறிவுடைமை, தானம், தவம், உயர்வு, தொழில் முயற்சி, காமம் என்ற பத்து உயர் குணங்களும் பறந்துபோகும் என்றார் எங்கள் ஔவைப் பெரும்பாட்டி.**





Clarity Version download at www.makkalarasu.com



வேளாண்மை நடக்கும் மொத்த நிலப்பரப்பு சுமார் 6,032,718 எக்டேர்





நாற்பது விழுக்காடுதான் நெல், கரும்பு விளையும் நஞ்சை நிலம்



ஆற்றுமணல் கொள்ளையால் நிலத்தடி நீர் வற்றிப்போனது



இசாயனம் (எண்டோசல்பன்) பயன்படுத்தினால் நரம்பு தொடர்பான பாதிப்புகளை பெருமளவில் ஏற்படுத்தும். அதனால் அது தடை விதிக்கப்படும்




இரசாயன உரங்களாலும் மருந்துகளாலும் நம் மண்வளம் அழிந்துபோனது

Clarity Version download at www.makkalarasu.com

# நஞ்சைக் கொண்டு வந்த பசுமைப் புரட்சி

- உணவுப் பஞ்சம் என்ற காரணத்தைக்கூறி நவீன வேளாண்மை என்று ‘பசுமைப் புரட்சித்’ திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்திய நச்சுத் தன்மை கொண்ட வெடிமருந்துகளின் (நாப்தா) மூலக்கூறுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட பூச்சி மருந்துகளையும் உரங்களையும் கொண்டு வந்தார்கள்.
- செயற்கை இரசாயன உரங்களால் நம் மண்வளம் அழிந்துபோனது. தமிழகத்தின் விளைநிலங்கள் வளமிழந்திருக்கிறது என்பதை மாநில மத்திய அரசுகளின் அறிக்கைகளே உறுதிப்படுத்திக் கூறியிருக்கின்றன.
- எந்த நாடுகள் நமக்குப் பூச்சிக்கொல்லி மருந்துகளையும், உரங்களையும் அனுப்புகின்றனவோ, அந்த நாடுகளே இங்கு விளையும் உணவுப் பொருட்களை வாங்குவதில்லை.
- இதனால் வேளாண்குடி மக்கள் உற்பத்தி செய்த பொருட்களுக்குச் சர்வதேச விலை இல்லை. அங்கீகாரம் இல்லை. இரசாயன உரங்கள் பயன்படுத்தியதால் புதிய புதிய நோய்களும் தோன்றியபடி இருக்கின்றன.
- கேரள மாநிலத்தில் எண்டோசல்பன் என்ற இசாயனத்தைப் பயிர்களுக்கு அதிகம் பயன்படுத்தியதால் நரம்பியல் தொடர்பான நோய்கள் பெருமளவில் தோன்றிப் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இப்படிப் பல சான்றுகளைக் கூறலாம்.

# தற்போதுள்ள வேளாண் நிலம்

- தமிழகத்தில் தற்போது மொத்த வேளாண் நிலப்பரப்பு **75,20,687** எக்டேர். மொத்த நிலப்பரப்பில் இது **57.7** விழுக்காடு
- வேளாண்மை செய்ய இடம் இருந்தும் நிலையாகக் கடந்த பல ஆண்டுகளாகப் பயிர்செய்ய முடியாத நிலையில் இருக்கும் நிலப்பரப்பு **26,45,509** எக்டேர் ஆகும்.
- வேளாண்மை நடக்கும் மொத்த நிலப்பரப்பு சுமார் **6,032,718** எக்டேர். இதில் நாற்பது விழுக்காடுதான் நெல், கரும்பு விளையும் நஞ்சை நிலம். மீதம் அறுபது விழுக்காடு மானாவாரி நிலம். தற்போது உணவுப் பயிரைவிடப் பணப்பயிர்தான் அதிகம் பயிரிடப்படுகிறது. இது உணவுத் தட்டுப்பாட்டிற்கு வழி வகுக்கும்.
- இதுவரையிலும் இருந்த ஆட்சியாளர்கள் வேளாண்குடிகளின் மண்வளத்தைப் பற்றி அக்கறைப் படவில்லை, அதை மீட்பதற்கானத் தீர்வையும் முன்வைக்கவில்லை.
- ஆற்றுமணல் கொள்ளையால் ஆற்றுநீர் வற்றிப்போனது. ஏரி, கண்மாய் ஆக்கிரமிப்புகளால் அந்த நீராதாரமும் அழிந்துபோனது. இருக்கின்ற நீர் நிலைகளுக்கான புதிய நீர்வரத்துப் பாதைகளை அமைக்காததால் நீர்க் கொள்ளளவும் குறைந்துபோனது. இதனால், வேளாண் தொழில் கைவிடப்பட்ட தொழிலாக மாறிக்கொண்டிருக்கிறது.

> “செயற்கை இரசாயன உரங்களால் நம் மண்வளம் அழிந்துபோனது; தமிழகத்தின் விளைநிலங்கள் வளமிழந்திருக்கிறது என்பதை மாநில மத்திய அரசுகளின் அறிக்கைகளே உறுதிப்படுத்திக் கூறியிருக்கின்றன”


வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# பல்லுயிர்ப் பெருக்கம் உயிர்ச் சூழல்!




இயற்கை வேளாண்மை அறிஞர்
**திரு. நம்மாழ்வார்** அவர்கள்

## தமிழ்த் தேசிய நெல் வகைகள்



பூம்புகார் நெல், மாப்பிள்ளைச் சம்பா, கருடன் சம்பா, சிவப்புக் கவுனி, பனங்காட்டுக் குடவாழை, கருத்தக்கார், சண்டிகார், கருங்குறுவை, குறுவைக்களஞ் சியம், தூயமல்லி, தங்கச்சம்பா, நீலச்சம்பா, செம்புளிச்சம்பா, கிச்சடிச்சம்பா, இலுப்பைப்பூச் சம்பா, அறுபதாம் குறுவை, சீரகச்சம்பா, காட்டுயானம், சொர்ணமுசிறி, சிவப்புக் குருவிக்கார், கருப்புக்கவுனி, மிளகி, சம்பா மோசனம், மேலும் பல.



மேட்டுப்பாத்தி முறையில் வேளாண்மை

Clarity Version download at www.makkalarasu.com

# இயற்கை வேளாண்மை

## இரசாயன உரங்கள் இல்லாமல்

- இரசாயன வேளாண்மையை முற்றிலுமாகத் தடை செய்து, இயற்கை வேளாண்மையை மீட்டெடுப்பதே நமது அரசின் முதல் கடமை.
- தமிழகத்தில் நம் பரம்பரை நெல் வகைகள் ஒரு இலட்சம் வரை இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பத்தாயிரம் ஆண்டுகளாக நாம் அரிசி உணவுகளை உட்கொண்டு வந்திருக்கின்றோம். அவை அனைத்துமே நமக்கு நோய் தீர்க்கும் நோய் வராமல் தடுக்கும் நெல் வகைகளாகவே இருந்தது.
- ‘பசுமைப் புரட்சி’ என்ற சுரண்டல் திட்டம் கடந்த அறுபதாண்டுகளில் நம் பரம்பரை நெல் வகைகளையும் வேளாண் முறையையும் சிறிது சிறிதாக விழுங்கிவிட்டது. பூச்சி மருந்துகளின் உதவியோடு விளையக்கூடிய ஒட்டு வகை, ஐ.ஆர். நெல்வகைகள் உட்படப் பல விதைகளையும் கொடுத்துப் பரம்பரை விதைகளை அழித்து விட்டார்கள்.
- நமது நெல் வகைகள் எல்லாம் குறைந்தது மூன்றடிக்கு மேல்தான் இருந்தது. ’அடி காட்டிற்கு, நடு மாட்டிற்கு, நுனி வீட்டிற்கு’ என்ற பழமொழியே உண்டு. கதிர்கள் எல்லாம் வீட்டிற்கும், நடுவில் உள்ள பகுதி மாட்டிற்கு வைக்கோலாகவும், அடியில் உள்ள பகுதி கழனிக்கே உரமாகவும் இருந்து வந்தது. இந்தப் பயிர்கள் வெள்ளத்தையும் வறட்சியையும் தாங்கிக்கொள்ளும் வகைகளாக இருந்தன.
- பசுமைப் புரட்சி என்று கொண்டு வந்த நவீன குட்டை வகை நெற்பயிற்களுக்கெல்லாம் நிறைய தண்ணீர் தேவைப்பட்டது. வறட்சியையும் வெள்ளத்தையும் எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. தவிர மாட்டுக்குத் தேவையான வைக்கோல் தீவனத்தையும் அளிக்க முடியாமல் போனது. அதனால் மாட்டு இனமும் அழியத்தொடங்கியது.
- ஒவ்வொரு விளைச்சலிலும் இருந்தே நாம் விதைகளை எடுத்து வந்தோம்.அடுத்தடுத்த பருவத்திற்குப் பயன்படுத்தினோம். ஆனால் பசுமைப் புரட்சி செய்த மோசடியால் நாம் விதைகளைக் கைவிட்டோம். ஒவ்வொரு முறையும் பன்னாட்டு நிறுவனங்கள் திணித்த புதிய விதைகளை விலைகொடுத்து வாங்கி வருகிறோம்.பரம்பரை விதைப் பாதுகாப்புகளைக் கைவிட்டோம்.
- ஐயா வேளாண் பெருங்குடியோன் நம்மாழ்வார் அவர்களின் முயற்சியோடு பல தன்னார்வ உழவர்கள் காணாமல்போன நம் பரம்பரை நெல்வகைகளில் ஏறத்தாழ 126 நெல் வகைகளை மீட்டெடுத்திருக்கிறார்கள்.
- கைவிரச்சம்பா உள்ளிட்ட 126 நெல் வகைகளும் நமது தமிழ்த்தேசிய நெல் வகைகளாக அறிவிக்கப்படும். மேலும் மறைக்கப்பட்ட பரம்பரை நெல் வகைகளை மீட்பதற்கான முழுமுயற்சி எடுக்கப்படும்.
- பரம்பரை நெல் விதை வகைகளைப் பயிரிடுவோர்க்கு அரசுத் தரப்பில் அனைத்துச் சலுகைகளும் வழங்கி அவர்களுக்கான உதவித் தொகையும் கொடுக்கும். தேசிய நெல் வகைகள் அனைத்தும் இயற்கை வேளாண் முறையிலேயே விளைவிப்பதற்கான அனைத்து உதவிநடவடிக்கைகளையும் செயல்படுத்துவோம்.
- ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் முற்றுமாகத் தடைசெய்யப்படும். இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக இயற்கை வழியிலான பூச்சிகளை விரட்டும் மருந்துகளையும், இயற்கை உரங்களையும் உருவாக்கி வேளாண்குடிகளுக்கு வழங்கப்படும்.
- வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கை வெளியிடப்படும்.

வேளாண்மை



## முன் மாதிரி



ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் கால்நடைப் பண்ணைகள் அமைக்கப்படும்



கார்பார்க்கர்



சிந்தி



கீர்



மாவட்டந்தோறும் நூறு ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் ஆட்டுப் பண்ணைகள் அமைக்கப்படும்



பால்பொருள் இனிப்பு வகைகள் உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்



ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாகக் நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படும்



கால்நடைகளை வளர்த்தல், பேணிக்காத்தல், கண்காணித்தல் உள்ளிட்ட வேலைகள் வழங்கப்படும்



நம் தேவைக்குப் போக மீதமுள்ளவை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்

Clarity Version download at www.makkalarasu.com

# நிலமும், வளமும் சார்ந்த தொழிற்சாலை

## வேலை வாய்ப்பு – வளர்ச்சி

வேளாண்மை

### ஆடு மாடுகளை வளர்த்தல் அவமானமில்லை; வருமானம், வெகுமானம் அரசுப் பணி

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தகுந்த இடம் அரசால் தேர்வு செய்யப்பட்டு, அங்கே புதிதாகக் கால்நடை மேம்பாட்டுப் பண்ணைகள் அமைக்கப்படும். அதில் நமது பரம்பரை நாட்டு ஆடு, மாடுகள் மட்டும் வளர்க்கப்படும். வெளிநாட்டு ஜெர்சி வகை மாடுகள் அனைத்தும் தடை செய்யப்படும்.
- காங்கேயம்,
- கார்பார்க்கர்,
- சிவப்புப்பசகி,
- சாக்கிவால்,
- உம்பளச்சேரி,
- புளியங்குளம் பட்டிமாடு,
- தேனி மலைமாடு,
- பர்கூர் மலைமாடு,
- சிந்தி,
- கீர்,
- ஓங்கோல் மேலும் பல.

**மாடுகளை மட்டும் வைத்து முன்னேறிய நாடு**

டென்மார்க், பிரேசில், நியூசிலாந்து போன்ற தேசங்கள் மாடுகளை மட்டுமே வைத்துக்கொண்டு வளர்ச்சியடைந்த நாடாக மாறியிருக்கிறது. அதைவிடப் பல வளங்களைக் கொண்ட நமது தமிழகம் வளர்ச்சியடையாமல் முடங்கியே இருக்கிறது.. எல்லா வளமும் பெற்ற தமிழகத்தில் வேளாண் தொழிலுக்குத் துணையாக இருக்கும் பரம்பரை மாடுகளை மேலும் பெருக்க நடவடிக்கை எடுப்போம்.

- நமது பரம்பரை மாடுகளைக் கொண்டு உருவாக்கப்படும் பண்ணையில் இருந்து பால்(A2), பால்கோவா, தயிர், வெண்ணெய், மோர், பால்பொருள் இனிப்பு வகைகள் ஆகியவை உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும். அவற்றில் நம் தேவைக்குப் போக மீதமுள்ளவை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.
- இதன் மூலமாக ஏறக்குறைய 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படித்த, படிக்காத இளைய தலைமுறைக்கு அரசு வேலைகள் வழங்கப்படும். படித்தவர்களுக்குப் பண்ணை மேலாண்மை, நிர்வாகம், கணினி மயப்படுத்துவது மற்றும் வெளிமாநில, வெளிநாட்டு விற்பனைப் பிரதிநிதி வேலைகள் வழங்கப்படும். படிக்காதவர்களுக்குக் கால்நடைகளை வளர்த்தல், பேணிக்காத்தல், கண்காணித்தல் உள்ளிட்ட வேலைகள் வழங்கப்படும்.
- ‘கால்நடை மேலாண்மைப் பண்ணைகளுக்கு அருகில் ஆட்டுப்புழுக்கை மாட்டுச் சாணம், சிறுநீர்க் கழிவுகளில் இருந்து பஞ்சகவ்வியம், அமிர்தக்கரைசல், மண்புழு உரங்கள், அரக்கு உள்ளிட்ட ஏராளமான ‘இயற்கை உரங்கள் தயாரிக்கும்’ தொழிற்சாலைகள் தொடங்கப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com







உரம் தயாரித்தல்



மண்புழு வளர்த்தல்




ஜெர்சி வகை மாடுகளின் பால் (A-1) முழுதாகத் தடை செய்யப்படும்




நாட்டுப் பசும் பாலுக்கு வரவேற்பு





ஜெர்சி வகை மாடுகள் முழுதாகத் தடை செய்யப்படும்




அமெரிக்காவில் 6 நாட்டுக்கோழி முட்டை 402 ரூபாய்



5000 ஏக்கரில் தக்காளி உழவுப் பண்ணைகள் வைக்கப்படும்



தக்காளிச்சாற்றுத் தொழிற்சாலை

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

வேளாண்மை

## இயற்கை உரங்கள்

- அரக்கு என்பது நாட்டுமாட்டுச் சிறுநீரைக் கொதிக்க வைத்து, நீராவியாக்கிக் குளிரூட்டிப் பெறப்படும் அருமருந்தாகும். புற்றுநோய் உள்ளிட்ட நானூறுக்கும் மேற்பட்ட பல நோய்களைக் குணமாக்கும். மேலும் இதிலிருந்து பற்பசை, சாம்பு (சீய்நெய்), சோப்பு(வழலை), நறுமணப் பொருட்கள் உருவாக்கப்படும். இவற்றில் தனிக்கவனம் செலுத்தி ஏற்றுமதி செய்யப்படும்.
- இந்தத் தொழிற் சாலைகளில் தயாரிக்கப்படும் இயற்கை உரங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேளாண் நிலங்களுக்கு உழவர் கூட்டுறவுச் சங்கங்கள் நியாயவிலைக் கடைகளின் வழியாகச் சிற்றூர்கள் வரை அனுப்பி வைக்கப்படும்.
- தூய இயற்கை முறையில் வளர்க்கப்படும் கால்நடைகளின் கறிகளை உள்நாட்டு விற்பனைக்குப் போக மீதம் வெளிமாநிலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.
- ஆடுமாடு வளர்த்தல், அது சார்ந்த பண்ணை வேலைகள், இயற்கை உரங்கள் உருவாக்கும் நடுவம், அனைத்திலும் வேலை பார்ப்பவர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்படுவார்கள். அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கு வழங்கப்படும்.

## ஜெர்சி மாடுகளுக்கும் பாலுக்கும் தடை

- பால் வகைகளின் பேய் (Devil in the Milk) என்றிருக்கும் ஜெர்சிவகை மாடுகளின் பால் (A1) முழுதாகத் தடைசெய்யப்படும். மரபணு மாற்றம் செய்து உருவாக்கப்பட்ட மாடுகளில் இருந்து பெறப்படும் இந்தப் பால் மனித குலத்திற்கு எதிரானது. ஒவ்வாமை, சர்க்கரைநோய், பெண்கள் சிறு வயதில் பூப்பெய்தல். ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுதல் உள்ளிட்ட நோய்களை எளிதாக உண்டாக்கி வருகிறது. பல்வேறு புதிய வகை நோய்களை உருவாக்கக்கூடியது. அமெரிக்கா சர்க்கரை நோய்க்கான ஊசி மருந்தை மட்டுமே விற்று 375 லட்சம் கோடியை வருமானம் ஈட்டுகிறது
- அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் ஜெர்சி வகை மாட்டுப்பாலைப் பயன்படுத்துவதைக் குறைத்துக்கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளில் A2 என்ற நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும், எளிதில் செரிக்கக்கூடிய பாலைக் கொடுக்கும் பரம்பரை மாட்டின் விந்தணுக்களை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறார்கள். எனவேதான் ஜெர்சி வகை மாடுகளுக்கு முற்றாகத் தடை விதிக்கின்றோம். மாற்றாக நமது பரம்பரை மாடுகளைத் திட்டமிட்டுப் பெருக்குவோம்.

## காய்கனிகளுக்கான பண்ணை வேலைகள்

- எடுத்துக்காட்டாக 5000 ஏக்கரில் தக்காளிப் பண்ணைகள் வைக்கப்படும்.
- பண்ணையில் விளையும் தக்காளி இரசாயனக் கலப்பற்ற நாட்டு வகையாக இருக்கும். விற்பனை ஏற்றுமதிக்குப் போக மீதம் இருப்பது பழக்கூழ் மற்றும் ஊறுகாய் உள்ளிட்ட பொருட்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும். அதற்கான தொழிற்சாலை பண்ணைகளுக்கு அருகில் அரை கிலோமீட்டர் தூரத்தில் அமைக்கப்படும்.
- இதே வகையில் மிளகாய், மற்ற காய்கறிகளுக்காக என்று மாவட்டம் தோறும் பண்ணைகள் உருவாக்கப்படும். முழுதும் இயற்கை முறையில் வளர்க்கப்படும் காய்கனிகள் அந்தப் பகுதித் தேவைகளுக்குப் போக மீதம் மற்ற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.




எள் விளைச்சல்


நல்லெண்ணை எடுத்தல்


வேர்க்கடலை ஆய்தல்


எள்ளுருண்டை தயாரித்தல்


கடலெண்ணை எடுத்தல்


மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை


மாங்காய் ஊறுகாய்


மண் பாண்டங்கள் தயாரித்தல்


காய்கறிப் பண்ணையில் வேலை

Clarity Version download at www.makkalarasu.com

## எள், கடலை எண்ணெய்த் தொழிற்சாலை

- மானாவாரி நிலங்களில் அரசு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு 5000 ஏக்கர் பரப்பளவில் எள் பண்ணைகள் அமைக்கப்படும். அதே போன்று வேர்க்கடலைப் பண்ணைகளும் ஏற்படுத்தப்படும். அதற்கு அருகிலேயே தூய நல்லெண்ணைய், கடலை எண்ணெய் பிழியும் ஆலைகள் அமைக்கப்படும்.
- எள் வகைளில் இருந்து சத்துமிக்க எள்ளுருண்டை, எள்ளினிப்புக் கட்டி, எள் வெட்டப்பம், கடலை வெட்டப்பம் (Cake) போன்ற வணிகப் பொருட்களும் தயாரிக்கப்படும். எள், கடலைப் பிண்ணாக்கில் இருந்து இயற்கை உரம், மாடுகளுக்கான தீவனம் ஆகியவை உருவாக்கப்படும். அந்தந்த மாவட்டத் தேவைகளுக்குப் போக மீதம் வெளிநாடு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இது சார்ந்த தொழிலும் அரசு வேலையாக அறிவிக்கப்படும்.
- இளநீர், நுங்கு பதநீர், கம்பு, கேழ்வரகுக் கூழ், இயற்கை நெல், சிறுதானியங்கள், மூலிகைப் பொருட்கள், பாரம்பரிய உணவு முறைகள், மண்பாத்திரங்களின் அவசியம், எது நோயற்ற வாழ்வு என்பதை அறிந்துகொள்ள, ஒவ்வொரு ஆண்டும், “தமிழ்த்தேசிய உணவுத் திருவிழா” நடத்தப்படும். குறிப்பாகத் தமிழர் திருவிழாவான பொங்கல் திருவிழாவின்போது, இந்த உணவுத் திருவிழா நடத்தப்படும். அப்போது பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள், இளநீர் குடிக்கும் போட்டி, பதநீர் குடிக்கும்போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடத்துவதன் மூலம் நம் மண்ணின் பாரம்பரிய உணவுத் தானியங்கள் பற்றிய விழிப்புணர்வு வளர்த்தெடுக்கப்படும்.

## பழச்சாற்றுத் தொழிற்சாலை

- முழுதும் இயற்கை வேளாண் முறையில் வளர்க்கப்படும் தக்காளி, மாம்பழம், பப்பாளி, பலா உள்ளிட்ட அனைத்துப் பழ வகைகளும் தமிழகப் பயன்பாட்டிற்குப் போக மீதம் பழக்கூழாக, ஊறுகாயாக மாற்றப்படும். இதற்கானத் தொழிற்சாலைகள் அந்தந்தப் பண்ணைகளுக்கு அருகிலேயே அமைக்கப்படும். ஊறுகாய் மற்றும் பழச்சாறு வகைகள் மற்ற மாநிலங்களுக்கும், நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.
- படிக்காத அனைவருக்கும் கால்நடைப் பண்ணை மற்றும் இயற்கை உரங்கள் தயாரிப்பு, காய்கறிப் பண்ணைகளில் அரசு வேலை வழங்கப்படும்.

## இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

- அந்தந்தப் பகுதியில் நன்கு படித்த இளைஞர்கள் விற்பனைப் பொறுப்பாளர்கள் வேலைகளில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் வெளிமாநிலம், வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தில் விளையும் காய்கறிகள் அனைத்தும் எப்படி இயற்கை முறையில் உருவாக்கப்படுகிறது என்பதை ஒளிப்படக் காணொளிக் காட்சிகள் மூலம் விளக்கி விற்பனையைப் பெருக்கப் பணிக்கப்படுவார்கள்.

> “அரசு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சுமார் 5000 ஏக்கர் பரப்பளவில் எள், வேர்க்கடலைப் பண்ணைகள் அமைக்கப்படும். அதற்கு அருகிலேயே தூய நல்லெண்ணைய், கடலை எண்ணெய் பிழியும் ஆலைகள் அமைக்கப்படும்”

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## முன் மாதிரி


பனை மரம் வளர்ப்பு


பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு, தென்னைவெல்லம், தென்னங்கற்கண்டு


பனைப் பொருள் தயாரிப்பு


பனம் பால்


இளநீர்

## அமெரிக்காவில்...







| நாடுகளும் | தேசிய மது பானங்களும் |
|---|---|
| பிரேசில் | கெய்பிரின்கா. |
| கனடா | கெய்சர் விஸ்கி |
| ரஷியா | வோட்கா |
| ஜெர்மனி | ஷேம்பெயின். |
| ஜப்பான் | சாக்கி |
| கியூபா | மொஜிடோ |
| கொரியா | (சோஜஜ்) கோசு. |
| ஸ்பெயின் | சாங்ரியா. |
| பிஜி | காவா |

## பலகோடிப் பனைத் திட்டம்

- பனை தமிழகத்தின் தேசிய மரமாக அறிவிக்கப்படும். ஒரு பனைமரம் ஒரு வருடத்திற்கு 180 லிட்டர் பதநீர் கொடுக்கிறது. 25 கிலோ பனைவெல்லம் கொடுக்கிறது. 16 கிலோ தும்பு, 25 கிலோ ஈக்கு, 10 கிலோ விறகு, பத்துக் கிலோ ஓலை, 20 கிலோ நார் ஆகியவற்றை வாரி வழங்கிக்கொண்டிருக்கிறது.
- அதனால் இருக்கும் பனைமரங்களைப் பாதுகாப்பது, புதிய பனைமரங்களை வளர்த்தெடுப்பது என்ற திட்டம் வகுக்கப்படும். ஊர் தோறும் இருக்கும் நீர் நிலைகளைச் சுற்றிப் பனை மரங்களை ஏராளமாக நட்டு வளர்க்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம்.

## தமிழ்த் தேசியக் குடிபானம்

- இளநீர், பதநீர், நுங்கு, ஆகியவை தேசிய இயற்கை குடிபானமாக அறிவிக்கப்படும். அதிகளவிலான நுங்கு பதநீர் இளநீர் ஆகியவை புதிய முறையில் தகரக் குவளைகளில் அடைக்கப்பட்டு வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதற்கான தொழிற்சாலை அமைக்கப்படும். பன்னாட்டுக் குளிர்பானங்கள் அனைத்தும் தடைசெய்யப்படும்.

## தமிழ்த் தேசிய மதுபானம்

- பனங்கள் மற்றும் தென்னங்கள் ஆகியவவை பனம்பால் தென்னம்பால் என்ற பெயரில் தமிழ்த் தேசிய மதுபானமாக அறிவிக்கப்படும். இதனால் உடலுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. என்றாலும் ஊருக்கு வெளியே மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் பனம்பால், தென்னம்பால் கடைகள் வைக்கப்படும். நீர்வளத்தைக் கொள்ளையடிக்கும், மனித குலத்திற்குக் கேட்டை ஏற்படுத்தும் செயற்கையான சீமை மதுபான வகைகள் அனைத்தும் தடை செய்யப்படும்.

## பனைப்பொருள் உற்பத்தி சார்ந்த வேலைவாய்ப்பு

- பனங்கிழங்கில் இருந்து அல்வா, மிட்டாய் போன்ற இனிப்பு வகைகளையும் தயாரிக்கலாம். முக்கியமாகப் பனம்பழ நாரிலிருந்து உரங்களைத் தயாரிப்போம். பூரி, சப்பாத்தி மாவுகளை உற்பத்தி செய்வோம். இந்த மாவு பக்கவிளைவை ஏற்படுத்தாது. பல வெளிநாடுகளில் முக்கிய உயர் வகை உணவாக இருக்கிறது. இதன் உற்பத்தியைப் பெருக்குவோம். வெளிமாநிலங்களிலும், நாடுகளிலும் அதிகம் எதிர்பார்க்கப்படும் இந்த மாவு உணவை ஏற்றுமதி செய்வோம்.
- பனைநாரில் இருந்தும் மட்டையில் இருந்தும் நார்க் கயிறு, கட்டில், நார்க்கொட்டான், விசிறி, ஓலைப் பாய், வீட்டிற்குக் கூரை, அழகுப் பொருட்கள் உட்பல அனைத்தும் உற்பத்தி செய்து அரசு விற்பனைக்கூடங்களில் வைக்கப்படும். ஏற்றுமதியும் செய்யப்படும்.
- பனைவெல்லம், பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு உள்ளிட்ட அனைத்தும் தயாரிக்கப்படும். சர்க்கரைக்கு மாற்றாக, நோயற்ற வாழ்வுக்காக மக்கள் இதைப் பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- பனைப்பொருள் சார்ந்த தொழிற்சாலைகள் மாவட்டம் தோறும் நிறுவப்பட்டு, அதன் மூலம் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்படும்.

> “பனங்கிழங்கில் இருந்து அல்வா, மிட்டாய் போன்ற இனிப்பு வகைகளையும் செய்யலாம்”

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# பயன் தரும் தென்னை

- தென்னை மரத்தில் இருந்து எடுக்கப்படும் பதநீர், இளநீர் ஆகியவை உயர் வகைக் சுவைநீராகப் பயன்படுத்தப்படும். இரசாயன உரங்கள் பூச்சிக்கொல்லி மருந்து பயன்படுத்தாத முற்றிலும் இயற்கை வேளாண் முறையில் தென்னை வளர்க்கப்படும். விலை உயர்ந்த தென்னஞ் சர்க்கரை தயாரிக்கப்படும். தமிழகத்தின் பயன்பாட்டிற்குப் போக எஞ்சியவை வெளிமாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும். அயல் நாட்டின் குளிர்பானங்கள் அனைத்தும் தடை செய்யப்படும். இதற்கான வணிகத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.
- தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் மட்டைகள், நார், ஆகியவற்றில் இருந்து கயிறு வகைகள், அழகுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் தயாரிக்கும் 'சிற்றூர்ப் பரம்பரைத் தொழிற்கூடத்தை' அந்தந்தப் பகுதியிலேயே தொடங்கி அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதை, வேலை வாய்ப்பை உருவாக்குவதைச் செயல்படுத்துவோம்.


தென்னத் துடைப்பம்
தென்னை நார்த் துடைப்பம்


தேங்காய் ஓட்டில்
அலங்கார விளக்கு


தேங்காய் ஓட்டில்
அழகுப் பொருட்கள்


தேங்காய் - பனை
நாார்ப் பொருட்கள்



தேங்காய்
நார்ப் கயிறு



தேங்காய்
எண்ணெய்


தென்னை ஓலையில்
மேற்கூரை

# மூங்கில் வளர்ப்பும் விற்பனையும்

- மூங்கில் காடுகளை உருவாக்குவதில் புதிய திட்டங்கள் உருவாக்கப்படும். சாத்தியப்படும் மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளில் அதிகம் விளைவிக்க ஏற்பாடு செய்யப்படும். நாற்காலி, மெத்தை இருக்கைகள், நீள் இருக்கைகள் என வீடுகளில் பயன்படுத்தப்படும் நெகிழிப்பொருட்களுக்குப் பதிலாக மூங்கில் மூலமாக செய்யக்கூடிய நாற்காலி, ஊஞ்சல், அழகுப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்தும் செய்வதற்கானத் தொழிற்கூடங்கள், விற்பனை நிலையங்கள் ஆகியவை அரசு நிறுவனமாகவே இயங்கும். கைவினைத் தொழில் செய்வோர் அதில் ஊழியர்களாக நியமிக்கப்படுவார்கள்.


மூங்கிலில் குடிநீர்க் கோப்பை


மூங்கிலில் மேற்கூரை


மூங்கிலில் வீடு


மூங்கிலில் வரவேற்பு நாற்காலி


மூங்கிலில் உணவுத் தட்டு

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


மாப்பிள்ளைச் சம்பா


கம்பு


கேழ்வரகு


நவீன நெல் அறுவடை


நாற்று நடும் இயந்திரம்


சிறிய வகை அறுவடை இயந்திரம்


சூரிய ஒளி மின்சாரத்தில்...

# உணவே மருந்தாக மாற்றுவோம்

- நமது மக்களை அதிகம் பாதிக்கின்ற சர்க்கரை நோயின் விழுக்காடு இப்போது பத்துப் பேருக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் இருக்கிறது. ஏறத்தாழ 40,00,000 பேர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 30,00,000 பேர் ஆரம்பக்கட்டச் சர்க்கரை நோயில் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நமது பரம்பரை நெல்வகை, தானிய உணவுகளை இழந்துவிட்டு நிற்பதுதான்.
- சர்க்கரை நோய், இதயநோய் உள்ளிட்ட பல முக்கிய நோய்களைக் குணப்படுத்தக்கூடிய நமது பரம்பரை நெல்வகை உற்பத்தியை மீண்டும் வேளாண்மைக்குக் கொண்டு வருவதன் மூலம் மக்களுக்கு நோயற்ற வாழ்வுக்கு உறுதியளிப்போம்.

# தமிழ்த் தேசியப் பயிரினங்கள்

- கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு, குதிரை, வாலி, சோளம் உள்ளிட்ட சிறுதானிய வகைகள் தமிழ் தேசிய பயிரினங்களாக அறிவிக்கப்படும். இதற்கு நாம் தமிழர் அரசு உதவித்தொகை முழுதுமாக வழங்கி வேளாண்குடி மக்களை ஊக்கப்படுத்தும்.
- சிறுதானிய உற்பத்தி வளர்ச்சிக்கென்று வேளாண் துறையில் தனிப் பிரிவு ஒன்றை மாவட்டங்கள் தோறும் அமைப்போம். அந்தத் தனிப்பிரிவு சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவது மற்றும் அதை நியாய விலைக் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் மூலம் மக்களுக்கு வழங்குவது உற்பத்தியாளர்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் கவனித்துக்கொள்வது ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.
- மாவட்டம் தோறும் கீரை, மற்றும் காய்கறிகள், மா, பலா, வாழை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தி சுமார் ஐந்நூறு ஏக்கரில் தனித் தனிப் பண்ணையாக அமைத்து இயற்கை உரங்களின் மூலம் விளைவிக்கப்படும். இதன் அருகிலேயே பழச்சாறு, குளிர் பானங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும். சொந்த நாட்டுத் தயாரிப்பு, தூய இரசாயனக் கலப்பில்லாமல் மக்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் மக்களுக்கான நோயற்ற வாழ்வைக் கொடுக்க உறுதி அளிக்கின்றோம்.

# மக்களிடமிருந்து நிலம் குத்தகை

- அரசு நிலங்கள் இல்லாத மாவட்டங்களில் தனியார்களிடம் முப்பதாண்டுக் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் நிலங்கள் பெறப்படும். அரசு கட்டாயப்படுத்தாது. விரும்பினால் கொடுக்கலாம். அதோடு அவர்கள் விரும்பினால் நிலத்தில் வேலை செய்யலாம். அதற்குண்டான ஊதியமும் வழங்கப்படும். வேலை செய்ய விருப்பம் இல்லை என்றாலும் விலகிக்கொள்ளலாம். 30 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் குத்தகை புதுப்பிக்கப்படும்.
- தமிழகத்தில் மஞ்சள், கரும்பு, வாழை உள்ளிட்ட பணப்பயிர் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. உணவுப்பயிர் விளைச்சல் குறைவாக இருக்கிறது. இது உணவுப் பற்றாக்குறை மற்றும் உணவுச் சுழற்சி முறையில் பாதிப்பை ஏற்படுத்தும். தவிர வேளாண்மை குடிமக்களும் இன்று இழப்படைந்தபடிதான் இருக்கிறார்கள். எனவே படிப்படியாகத் தேவைக்கேற்பப் பணப்பயிர் விளைச்சலைக் குறைத்து உணவுப்பயிர் உற்பத்தியைப் பெருக்கி, இழப்படையாத சீரமைப்பைச் செய்வோம்.
- தமிழக வேளாண் பல்கலைக் கழகங்களில் இயற்கை வழிப் பரம்பரை வேளாண் கல்வி முறைக்கும் ஆய்வுகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- இயற்கைவழி பரம்பரை வேளாண் முறையில் ஈடுபடும் தன்னார்வலர்களின் செயல்பாட்டிற்கு அரசு ஆதரவு கொடுக்கப்படும்.

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

# உடனடியான மீட்புத் திட்டங்கள்

- வேளாண் தொழிலில் ஈடுபடுவோர்க்குப் போதிய நிலையான வருவாய் இருப்பதில்லை. அதனால்தான் மாற்று வேலைதேடிச் செல்கிறார்கள். இந்த நிலையை மாற்றி வேளாண் தொழிலில் நிலையான வருவாயை ஈட்டுவதற்கான திட்டங்களை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும். அதன் மூலம் வேளாண் தொழிலை விட்டு வெளியேறிய அனைவரும் மீண்டும் அந்தத் தொழிலுக்கே திரும்பும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவோம்.
- வேளாண் பொருட்கள் அதிக உற்பத்தியாகும் காலகட்டத்தில் விலைச் சரிவு ஏற்படுகிறது. இதனால் உழவர்கள் உருவாக்கச் செலவைவிடக் குறைந்த விலைக்கே பொருட்களை விற்க வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. அவர்களுக்கான முழு உற்பத்திச் செலவையும் ஈடுகட்டும் விதமான விலையை நிர்ணயிக்கும் அல்லது அந்தத் தொகையை அரசே உழவர்களுக்கு வழங்கும்.

# மாவட்டம் தோறும் தானியக் கிடங்கு

- தக்காளி, பூ, வெங்காயம், காய் கனிகள் போன்ற எளிதில் அழுகி விடக்கூடிய பொருட்களால் வேளாண்குடி மக்கள் பெரிதும் இழப்படைந்து வருகிறார்கள். இதைத் தவிர்க்கும் பொருட்டு மாவட்டம் தோறும் தேவைக்கேற்ற குளிரூட்டி நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். கூடவே தானியக் கிடங்குகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதனால் வேளாண்குடி மக்கள் இழப்படையாத நிலையை உருவாக்குவோம்.
- தற்போது தமிழகத்தில் ஆண்டிற்கு 1,70,000 டன் பூச்சிக்கொல்லி, உர மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தூவப்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகள் உரம் போன்ற சுமார் 85 இலட்சம் டன் எடை கொண்ட இரசாயனங்கள் கொட்டப்பட்டு நம் மண்வளத்தைச் சீரழித்துவிட்டார்கள். இதிலிருந்து மண்ணையும் வேளாண் குடிமக்களையும் மீட்க அதற்கு ஈடான இயற்கை உரங்களைத் தயாரிக்கும் பண்ணைகள் அமைக்கப்படும். மண்வளமும் மக்கள் நலமும் காக்கப்படும்.

**முன் மாதிரி**


நவீன பழக்கிடங்கு


காய்கறி குளிரூட்டிக் கிடங்கு


அரிசிக்கிடங்கு


நவீன குளிரூட்டிக் கிடங்கு



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

வேளாண்மை



மதுப் புட்டிகளைப் பாதுகாக்கும் அரசு


நெல் மூட்டைகளை பாழடிக்கும் அரசு

## நிவாரணத் தொகை உயர்த்தப்படும்


- வேளாண் விளைபொருட்கள் புயல், மழை வெள்ளம் போன்ற இயற்கைச் சீரழிவில்' சிக்கிப் பாதிப்படையும்போது அரசு தோராயமாக ஒரு தொகை நிவாரணத்தை வழங்கி வருகிறது. நாம் தமிழர் அரசு அந்த உழவர்களுக்கு முந்தைய ஆண்டு என்ன வருவாயை ஈட்டினார்களோ அதே அளவிலான தொகையை நிவாரண நிதியாக அளிக்கும்.
- பண்ணைத் தொழில் மற்றும் கால்நடை வளர்த்தல் உள்ளிட்ட அனைத்து வேளாண் பணிகளும் கணினிக் கட்டுப்பாட்டுடன் மேம்படுத்தப்படும்.
- வேளாண் தொழிலைச் சார்ந்த அனைவரும் வருடத்தில் சில மாதங்கள் வேலையற்று இருக்கும் நிலை ஏற்படுகிறது. அந்தக் காலகட்டங்களில் அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

## வேளாண் பெருங்குடி மக்களே விலையை உறுதிப்படுத்தலாம்

- ஒரு மனிதனுக்கு மது, புகையிலை அத்தியாவசியம் இல்லை. அவை இல்லாது மனிதன் உயிர்வாழ முடியும். ஆனால் உணவு மக்களுக்கு அத்தியாவசியமானது. உணவில்லாது மனிதன் உயிர் வாழவே முடியாது.
- மது புகையிலையை உற்பத்தி செய்பவர்கள் எல்லாம் இங்கு வசதியாகச் செல்வச் செழிப்போடு வாழ்கிறார்கள். ஆனால் உணவை உற்பத்தி செய்கின்ற வேளாண் பெருங்குடி மக்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் உழலுகிறார்கள்.
- இதற்குக் காரணம் குண்டுசி முதல் ஏவுகணை வரை எல்லாவற்றையும் உற்பத்தி செய்பவர்களே விலையை நிர்ணயம் செய்ய முடிகிறது. ஆனால் வேளாண் பெருங்குடி மக்கள் மட்டும் விளைவிக்கின்ற பொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்ய முடிவதில்லை. அந்த நிலையை மாற்றி உழவர்களே உணவுப் பொருட்களுக்கான விலையைத் தீர்மானிக்கின்ற உரிமையை நாம் தமிழர் அரசு அளிக்கும்.



# ஒருங்கிணைந்த பண்ணைகள்




Clarity Version download at www.makkalarasu.com

# உயர்ந்த மருத்துவச் சேவை

- வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அனைத்து வகை மருத்துவங்களும் கட்டணமில்லாமல் வழங்கும் முறையில் காப்பீட்டுத் திட்டங்களை வழங்கும். ஆண்டு தோறும் தவறாமல் முழு உடல் பரிசோதனை முறையைக் கொண்டு வரும்.
- மாநில வேளாண்மை வருவாய் ஆணையத்தை அமர்த்தி உழவர்களுக்கான குறைந்தபட்ச வருவாய்யை உறுதி படுத்தத் தக்க முறை செயல்படுத்தப்படும்.

***சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை*** - **தமிழ்மறை 1031**

ஆயிரம் தொழில்களின் பின் அலைந்து திரிந்தாலும் கடைசியில் உலகம் ஏர் - கலப்பையின் பின்னால்தான் போகும். என்னதான் துயரம் வந்தாலும் உழவுத் தொழில்தான் உயர்ந்ததாக இருக்கும் என்று உழவின் பெருமையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிச்சென்றார் திருவள்ளுவர். அத்தகு உழவுத் தொழிலை விட்டு இன்று நாம் பலரும் வெளியேறிக்கொண்டிருக்கின்றோம்.

# ஒருங்கிணைந்த பண்ணைகள்

- மாட்டுத் தீவனப் புல். தேனீப் பண்ணை, மாட்டுப் பண்ணை, சாண எரிகாற்று, காய்கறிப் பண்ணை, வாழைத் தோப்பு இவையெல்லாம் ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணைகள் உருவாக்கப்படும். இந்த ஒரு பண்ணையில் இருந்தும் அனைத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடிய வேளாண் முறை உருவாக்கப்படும்.

# புங்கை எண்ணெய்

- புங்கை மர விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் உழவு இயந்திரங்களில் எரி எண்ணெய்க்கு(டீசல்) மாற்றாகப் பயன்படுத்தப்படும். புங்கை எண்ணெய் தயாரிப்பதற்கான ஆலைகள் மாவட்டந்தோறும் அமைக்கப்படும்.

# கருப்பட்டி

- பதநீரிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு கிலோ கருப்பட்டி 180 ரூபாய். ஆனால் பனங்கள்ளிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு கிலோ கருப்பட்டி 400 ரூபாய். எனவே மருத்துவ குணம் கொண்ட 'பனங்கள் கருப்பட்டி' தயாரிக்க ஆலைகள் அமைக்கப்படும்

# வேளாண் பல்கலைக்கழகம்

- இளங்கலை இயற்கை வேளாண், முதுகலை இயற்கை வேளாண், ஆராய்ச்சி மேற்படிப்பு உள்ளிட்ட அனைத்து வேளாண் கல்வியியலும் பயிற்றுவிக்க வேளாண் பெருங்குடியோன் அப்பா கோ. நம்மாழ்வார் பெயரில் பல்கலைக்கழகம் தஞ்சாவூரில் தொடங்கப்படும்.

# கடன் தள்ளுபடி

- இதுவரை வேளாண் பெருங்குடி மக்கள் பெற்ற அனைத்துக் கடன்களும் முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும். ●

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


சணல் செடி



சணல் எரிபொருள்


சணல் செங்கலில் கட்டிய வீடு


சணல் குழைமத்தில் செய்யப்பட்ட கார்


சணல் நார்த் துணி



சணல் விதை உணவுப் பொருட்கள்


சணல் எண்ணெய் புற்று நோய் மருந்து


சணல் விதை எண்ணெய்



சணல் வழலை


சணல் அழகூட்டிப் பொருட்கள்


சணல் காலணி


சணல் தாள் புத்தகங்கள்

# சணல் நார்ச் செடி


## (INDUSTRIAL HEMP)

**சணல் நார்செடியின்**

**50,000**

**பயன்பாட்டில் சில**

- வாகனங்களின் உதிரிப் பாகங்கள்
- மகிழுந்துகளின் பாகங்கள்
- நெகிழிப் பொருட்களுக்கு மாற்றான அனைத்துப் பொருட்கள்.
- குடிநீர்ப் போத்தல்கள் முதல் மிகப்பெரும் கொள்கலன்கள் வரையிலும் தயாரிக்கலாம்.
- உயர்வகை ஆயத்த ஆடைகளைத் தயாரிக்கலாம்.
- செடியின் விதைகள் புரதச்சத்து மிகுதியானது.
- பல வெளிநாடுகளில் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவாகத் தயாரிக்கப்படுகிறது



- வழலை(சோப்பு), சீய்நெய்(ம்பு) சமையல் எண்யெய், வண்ணப்பூச்சு, உணவு இன்சுவை கட்டிகள், உள்ளிட்ட பொருட்களைத் தயாரிக்கலாம்.
- முழுதுமான ஒரு வீட்டைச் சணல் நார் செடிகள் மூலம் தயாரிக்கப்படும் கலவையில் கட்டிக்கொள்ளலாம்.

**விதைகளின் எண்ணெய், புற்றுநோய் உட்பட**

**400**

**மேற்பட்ட நோய்களைக் குணப் படுத்துகிறது**

**சணல்**

**04**

**மாதங்களிலேயே வெட்டிவிடலாம்**



**மரம்**

**20**

**வருடங்களில்தான் வெட்ட முடியும்**

1) பெட்ரோல். டீசலுக்கு மாற்றான எரிபொருளைத் தயாரிக்கலாம்.
2) சணல் நார்ச் செடிகளைக் கொண்டே காகிதங்களைத் தயாரிக்கலாம்.
3) இதன் மூலம் காடுகளைப் பாதுகாக்கலாம்.

வேளாண்மை



Clarity Version download at www.makkalarasu.com

## நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
## வாய்நாடி வாய்ப்பச் செயல்

- தமிழ்மறை (1033)




# தமிழில் மருத்துவக் கல்வி கற்றவர்கள்தான் உலகம் முழுதும் பரவிச்சென்று புகழ்பெற்ற மருத்துவர்களாக இருக்கிறார்கள்



Clarity Version download at www.makkalarasu.com

# மருத்துவம் அடிப்படை உரிமை

## வழங்குவது அரசின் கடமை

உணவே மருந்து மருந்தே உணவு என்று நம் முன்னோர்களின் வாழ்க்கை முறையைக் கொண்டு வருவது நாம் தமிழர் அரசின் முக்கிய நோக்கமாகும்.

## மருத்துவக் கொள்கையில் மாற்றம்

- “மருத்துவம் ஒரு மகத்தான சேவை அது எம் மக்களுக்குத் தேவை”
- உடல் நலம் என்பது காசு கொடுத்து வாங்கும் பொருள் அன்று. அது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை வழங்குவதுதான் நாம் தமிழர் அரசின் கடமை.
- தரமான சரியான சமமான கட்டணமில்லா மருத்துவம் அனைவருக்கும் பொதுவாக வழங்குவதுதான் நமது அரசின் கடமை.
- ஆரோக்கியம் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்தி மருந்தில்லா மருத்துவ முறையைக் கொண்டுவருவோம்

## மருத்துவப் படிப்பு அனைத்தும் தூய தமிழ் மொழியில்

- அமெரிக்காவைச் சேர்ந்த பாதிரியார், மருத்துவர் சாமுவேல் பிஷ்க்கிறீன். சென்னை வந்து பிறகு இலங்கை யாழ்ப்பாணம் சென்றார். அங்கு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியரானார். தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து, தமிழ் மொழியிலேயே மருத்துவக் கல்விப் பாடத்தை நடத்தினார். அதனை ஏற்று 5 மாணவர்கள் தமிழ் மொழியிலேயே மருத்துவப் பாடத்தைக் கற்றனர். அதில் ஒருவர் சிங்கள மாணவர். பின்னாளில் எதிர்ப்பின்றித் தமிழ்வழி மருத்துவப் படிப்பே கற்பிக்கப்பட்டது.
- இவரிடம் தமிழில் மருத்துவக் கல்வி கற்றவர்கள்தான் பின்னாளில் உலகம் முழுதும் பரவிச்சென்று புகழ்பெற்ற மருத்துவர்களாக இருந்தார்கள். இவர் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். உடற்கூறியியல் என்று மொழிபெயர்த்த நூல் சித்த மருத்துவர்களின் பாடப்புத்தகத்தில் உள்ளது.
- மரணத்திற்குப் பிறகு அவரது சமாதியில் ‘தமிழர்களுக்கான மருத்துவ ஊழியன்’ என்று எழுதச் சொன்னவர். அப்படியானவரின் நினைவைப் போற்றும் வகையில் அவரது பெயரில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும்.
- இரஷ்யா, ஜெர்மன், பிரான்ஸ், சீனா உள்ளிட்ட பல நாடுகளும் அவர்கள் தாய்மொழியில்தான் மருத்துவக் கல்லூரிகளையும் பாடங்களையும் நடத்தி வருகிறார்கள். எனவே உலகின் தொன்மை வாய்ந்த தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டு. அதனால் ஆங்கில மருத்துவம் அனைத்தும் தமிழ் வழியில் நடத்தப்படும்.

மருத்துவம் அடிப்படை உரிமை



Clarity Version download at www.makkalarasu.com













Clarity Version download at www.makkalarasu.com

# ஆரம்ப சுகாதார நிலையம்

- தற்போது 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ‘ஆரம்ப சுகாதார நிலையம்’ இருக்கின்றது. அதை 10,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றுவோம். இங்கு பூச்சிக்கடி முறிவு மருந்து, நாய்க்கடிக்கான ஊசிமருந்து, ஆரம்ப இரத்தப் பரிசோதனை மையம், காந்த அதிர்வலைக் கருவி(எம்.ஆர்.ஐ.ஸ்கேன்.) இதயநோயைக் கண்டறியும் கருவி (ஈ.சி.ஜி,) புற்றுநோயைக் கண்டறியும் கருவி ஆகியவை கட்டாயம் இருக்க ஏற்பாடு செய்யப்படும். இரண்டு மருத்துவர்கள், மூன்று செவிலியர்கள் சுழற்சி முறையில் பணிபுரிவார்கள்.
- இதன்மூலம் பெரிய நோய்களைக் கீழ்மட்டத்திலேயே கண்டறிந்து தொடக்கத்திலேயே தடுத்துவிட முடியும்.

# சிறப்பு மருத்துவமனை

- அடுத்து, கிராமங்களில் இருந்து இருபது கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளாக ஒரு சிறப்பு மருத்துவமனை உருவாக்கப்படும். ஏற்கனவே மருத்துவமனை இருந்தால் அது சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்படும். இங்குச் சிறியவகை அறுவைசிகிச்சை, மாரடைப்பு தடுப்புச் சிகிச்சை கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், தோல் மருத்துவம், எலும்பு முறிவுக் கட்டு ஆகியவற்றுக்கான மருத்துவம் பார்க்கப்படும. 50 படுக்கை வசதிகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவு செயல்படுத்தப்படும். நான்கு மருத்துவர்கள் ஐந்து செவிலியர்கள் சுழற்சி முறைப்பணியில் இருப்பார்கள்.

# முக்கிய அறுவை சிகிச்சைகள்

- மாவட்டத் தலைமை இடத்தில் இருக்கும் மருத்துவமனைகளில் எல்லா வகையான அறுவை சிகிச்சைகளும் செய்யப்படும். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் அனைத்துவிதப் பரிசோதனைக் கூடங்களும் உள்ளடக்கியதாக இருக்கும். நூறு படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவு செயல்படும். இப்படிச் செயல்படுவதால் அனைத்துவித மருத்துவங்களையும் மாவட்ட அளவிலேயே பெற்றுக்கொள்வார்கள்.

# உயர் சிறப்பு மருத்துவமனைகள்

- ஒவ்வொரு நூற்று ஐம்பது கிலோ மீட்டருக்கும் ஒரு சிறப்புச் சிகிச்சை மருத்துவமனை செயல்படுத்தப்படும். இங்கு இதய அறுவை சிகிச்சை, மூளை, சிறுநீரகம், கல்லீரல் போன்ற அனைத்துவித உயர் அறுவை சிகிச்சைகளும் வழங்கப்படும். ஒவ்வொரு உயர் சிகிச்சைக்கும் சென்னையை நாடவேண்டிய அவசியம் இருக்கக்கூடாது.

# 24 மணி நேரமும் வெளி நோயாளிகள் பிரிவு

- ஆரம்ப சுகாதார நிலையம் முதல் உயர் சிறப்பு மருத்துவமனை வரையிலும் வெளி நோயாளிகள் பிரிவு 24 மணி நேரமும் இயங்கும். அதற்கேற்ப மருத்துவர்களும் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படுவார்கள். ஏழை மற்றும் நடுத்தரவர்க்க மக்கள் தங்களின் ஒருநாள் வேலை ஊதியத்தை இழக்க வேண்டியிருக்காது. வேலைக்குச் சென்று வீடு திரும்புவர்களுக்கு இது வசதியாக இருக்கும். அதிகத் தொகையைச் செலவு செய்து தனியார் மருத்துவமனைகளை நாடிப்போவது குறையும்.

# தடைகளைத் தகர்த்தெறிவோம்

- சித்த, ஆயுர்வேத புதிய மருந்துகள் கண்டுபிடிப்பிற்கு உரிய அனுமதியை வழங்குவதில்லை என மத்திய அரசு தடை விதித்துள்ளது. நாம் தமிழர் அரசு உரிய வகையில் தடைகளை உடைக்கும். புதிய சித்த மருந்துகள் கொண்டு வரப்படும்.

மருத்துவம் அடிப்படை உரிமை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

முன் மாதிரி



தற்போது தமிழ்நாட்டு அரசு மருத்துவமனை



நாம் தமிழர் அரசில்

# இப்போது இருப்பது

தற்போது தமிழ்நாட்டு அரசு மருத்துவமனைகளில் உள்ள நிலவரம்

| | | | |
|---|---|---|---|
| 16,338 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் | 1,000 நோயாளிகளுக்கு 3 செவிலியர்கள் | 5293 உள் நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வசதி | 1,00,000 நோயாளிகளுக்கு ஒரு பல் மருத்துவர் |

# நாம் தமிழர் அரசில்

| | | | |
|---|---|---|---|
| 1000 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் | 1,000 நோயாளிகளுக்கு 8 செவிலியர்கள் | 1000 உள் நோயாளிகளுக்கு ஆறு படுக்கை வசதி | 1,000 நோயாளிகளுக்கு ஒரு பல் மருத்துவர் |

இதன்மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் கூடுதல் எண்ணிக்கையில் பணியமர்த்தப்படுவார்கள். மக்களுக்கும் குறைவற்ற சேவை கிடைக்கும்.

## சமத்துவ மருத்துவ முறை

- ஆங்கில மருத்துவ முறையைத் தலையாய மருத்துவமாகவும், தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் உட்பட பிற மருத்துவ முறைகள் அனைத்தும் மாற்று மருத்துவ முறைகள் என்பதை மாற்றி அனைத்து முறைகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படும்.

## அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவற்பணியாளர்கள், (ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்) முதல் கீழ்மட்ட அரசு ஊழியர்கள் வரை அனைவரும் கட்டாயம் அரசு மருத்துவ மனைகளில்தான் மருத்துவம் செய்துகொள்ள வேண்டும் என்று சட்டம் இயற்றப்படும். அதற்கேற்பத் தனியார் மருத்துவமனைகளில் உள்ள அனைத்து வசதிகளும் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும். முதன்மை அமைச்சர்கள், அமைச்சர்கள், அரசு அதிகாரிகள் ஊழியர்கள் அரசு மருத்துவமனைகளைப் பயன்படுத்தும்போதுதான் அதன் தரம் மேலும் உயரும். சாதாரண மக்களும் இந்தக் கட்டமைப்பின் மீது நம்பிக்கை வைப்பார்கள். நாம் தமிழர் அரசு அதற்கேற்ற மாற்றத்தைக் கொண்டுவரும்

## அடிப்படைக் குறைபாடுகள் நீக்கம்

- தமிழ்நாட்டில் உள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப இப்போது 16,338 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என்று இருக்கின்றார். இதை ஐரோப்பிய நாடுகளில் இருப்பதை போல் 1000 நோயாளிகளுக்கு ஒரு மருத்துவர் என்று மாற்றுவோம். அதற்கேற்ற அரசு மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.
- அரசு மருத்துவமனைகளில் 5293 உள் நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வசதி என்றிருக்கிறது. இது 1000 நோயாளிகளுக்கு ஒரு படுக்கை வசதி என்று மாற்றப்படும்.
- மருத்துவச் செவிலியர்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது 1000 நோயாளிகளுக்கு 3 செவிலியர்கள் என்றிருக்கிறார்கள். இதை 500 நோயாளிகளுக்கு மூன்று செவிலியர் என்று மாற்றுவோம்.
- இதன் மூலம் மருத்துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் கூடுதல் எண்ணிக்கையில் பணியமர்த்தப்படுவார்கள். மக்களுக்கும் குறைவற்ற சேவை கிடைக்கும்.

## குறைகளை ஒழிக்க மாற்று

- அரசு மருத்துவ மனைகளில் உயர் சிகிச்சைகள் அனைத்தும் உடனடியாக கிடைக்கக்கூடிய வகையில் கட்டமைக்கப்படும். ஊழியர்களின் குறைபாடுகள் அனைத்தும் களையப்படும். மருத்துவமனைகள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட்டு வெளிப்படைத் தன்மையோடு இயங்கும். மக்களுக்கான மருத்துவம் என்பது அரசின் கட்டாயச் சேவை.

## குறைகளும் குற்றங்களும் தடுப்பது

- நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லாதது, ஊழியர்களின் புறம்பான வார்த்தைகள் மற்றும் நடத்தைகள், எங்கும் நிறைந்த கையூட்டு, அளவுகடந்த காலதாமதம், மருந்துகள் பற்றாக்குறை இருப்பது, உள்கட்டமைப்பு இல்லாதது, நவீன கருவிகள் இல்லாதது போதுமான மருத்துவர்கள் ஊழியர்கள் இல்லாமல் இருப்பது, என்ற பலகுறைகள் மருத்துவத் துறையில் பெருகியிருக்கிறது. நாம் தமிழர் அரசு இவற்றை முற்றாக ஒழித்துவிடும்.

மருத்துவம் அடிப்படை உரிமை



Clarity Version download at www.makkalarasu.com









Clarity Version download at www.makkalarasu.com

## கணினிச் சுகாதார அட்டை

- குழந்தை பிறக்கும் மருத்துவ மனைகளிலேயே அந்த குழந்தையின் உடல்நலம் பற்றிய குறிப்புகளோடு கணினிச் சுகாதார அட்டைகள் வழங்கப்படும். ஆண்டிற்கு ஒரு முறை பொது உடல் பரிசோதனை செய்து, அந்த முடிவுகள் கணினியில் சேர்க்கப்பட வேண்டும். அதற்கேற்ப மருத்துவமனைகள் அனைத்தும் கணினி மயப்படுத்தப்பட்டிருக்கும். நோயாளிகள் அல்லது சாதாரண நபர்கள் மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவர் அந்தக் கணினி அட்டையை வாங்கிப் பொருத்திப் பார்த்து அவருக்கு என்ன பிரச்சனை, என்ன மருத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வார்.

## முதியோர்களுக்கான நடமாடும் மருத்துவ நடுவம்

- அறுபது வயதிற்கு மேல், உடல்நிலை பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் அவதியுறும் முதியோர்களின் நலனில் எமது அரசு அக்கறை எடுத்துக்கொள்கிறது. எனவே ஒவ்வொரு மருத்துவமனையிலும் முதியோர்களுக்கு எனத் தனியாக ஒரு குழு 24 மணி நேரமும் இயங்கும். நடக்க முடியாத முதியோர்கள் தொலைப்பேசி மூலம் தகவல் கூறினால் வீடுதேடி மருத்துவர்கள் செல்வார்கள். தேவையான மருந்து மாத்திரை ஊசிகளைக் கொடுத்து அறிவுரைகளை வழங்கி வருவார்கள். தொடர்ந்து மேல் சிகிச்சை தேவை என்றால் அவரது பரிந்துரையின் பேரில் அரசு மருத்துவமனைக்கு உயிர்காக்கும் ஊர்தி மூலம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

## குழந்தைகளுக்கான மருத்துவம்

- ஒவ்வொரு குழந்தையின் மருத்துவ நலனில் அக்கறை எடுத்துக்கொள்ளப்படும். பள்ளியில் சேர்க்கும்போது அந்தக் குழந்தையின் உடல்நலம் குறித்த ஆய்வு அறிக்கையும் சேர்த்தே பதிவு செய்யப்படும். இதனால் குழந்தைக்கு உடல்நலக்கேடு ஏற்பட்டால் உடனே கண்டறிந்து குணப்படுத்த வழிசெய்யப்படும்.

## மருந்து உபகரணங்களை வாங்கும் முறை

- மருந்து மாத்திரைகள், மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்வது அனைத்தும் வெளிப்படைத் தன்மையோடு செயல்படும். இந்தப் பிரிவு முதல்வரின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும்.
- மருந்து மாத்திரைகள், ஊசி மருந்துகள் என வாங்கும் போது தரத்தைப் பரிசோதிக்கச் சில ஆயிரம் மாத்திரை அட்டைகளுக்கு ஒரு அட்டையைப் பரிசோதிப்பது, பல ஆயிரம் ஊசி மருந்துகளுக்கு ஒரு ஊசிமருந்தைச் சோதிப்பது என்று ஏதும் இருக்காது.
- ஆயிரம் மருந்து அட்டைகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ‘சரியானதுதானா?’ என்ற ஆய்வு நடத்தப்படும். தேவைப்பட்டால் நூறு மருந்து மாத்திரை அட்டைகளுக்கு ஒன்றைப் பரிசோதிக்கும் முடிவையும் அரசு எடுக்கும். மக்களின் சுகாதார நலனில் தயாரிக்கப்படும் மருந்து மாத்திரைகள் தரமற்றதாக இருந்து விடக்கூடாது என்பதில் நாம் தமிழர் அரசு கவனமாக இருக்கும்.

> “இந்திய ஆட்சிப் பணியாளர்கள் முதல் கீழ்மட்ட அரசு ஊழியர்கள் வரை அனைவரும் கட்டாயம் அரசு மருத்துவமனைகளில்தான் மருத்துவம் செய்துகொள்ள வேண்டும்”

மருத்துவம் அடிப்படை உரிமை



Clarity Version download at www.makkalarasu.com





அரசுப் பல்மருத்துக் கல்லூரி ஒன்று மட்டுமே இருக்கிறது. அதனால் தமிழகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்பப் பல்மருத்துவர்களை உருவாக்க வேண்டி புதிய பல் மருத்துவக் கல்லூரிகள் மாவட்டந் தோறும் தொடங்கப்படும்



Clarity Version download at www.makkalarasu.com

## கணினி மருத்துவ ஆலோசனை

- கிராம மருத்துவமனைகள் அனைத்தும் மாவட்ட மருத்துவமனைகளோடு கணினித் தொடர்பில் இருக்கும். ஒரு நோயாளிக்குச் சிக்கலான பிரச்சனை என்றால் உடனே கிராமத்தில் இருக்கும் மருத்துவர், மாவட்ட மாநிலத் தலைமையிடத்தில் இருக்கும் துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களோடு காணொளி மூலம் தொடர்புகொண்டு ஆலோசனைகளையும் மருத்துவ உதவியையும் பெற்றுக்கொள்ளலாம். நிர்வாக முறையும் கணினி மயப்படுத்தப்படும். மருத்துவமனைப் பகுதிகளும் கணினிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

## உயிர் காக்கும் ஊர்திகள் (AMBULANCE)

- ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஒரு உயிர் காக்கும் ஊர்தி (ஆம்புலன்ஸ்) இருக்கும் அல்லது பத்தாயிரம் பேர் இருக்கக்கூடிய இடத்திற்கு ஒரு வாகனம் இருக்கும். இதன் மூலம் உயிர்ப் பலியை வெகுவாகக் குறைக்க முடியும். அப்படிக் கொண்டு வரப்படும் நோயாளிகளுக்கு எந்த நிமிடத்தில் இருந்து மருத்துவம் பார்க்கப்பட்டது என்பது உள்ளிட்ட அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்படும். அனைத்திலும் வெளிப்படைத் தன்மை இருக்கும்.

## பல் மருத்துவம்

- இதய சம்பந்தப்பட்ட நோய்கள் உட்படப் பலநோய்களுக்குப் பல் சுத்தமில்லாததும், பல்நோயும் ஒரு காரணம் என்கிறார்கள். அந்தளவிற்குப் பற்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும். அப்படியான பல் மருத்துவத்திற்குத் தமிழகத்தில் ஒரு அரசு மருத்துக் கல்லூரி மட்டுமே இருக்கிறது.
- உலக சுகாதார நிறுவனம் கூறும் புள்ளிவிவரப்படி பார்த்தால் இந்தியாவில் பத்தாயிரம் பேருக்கு ஒரு பல் மருத்துவர் என்று இருக்கிறார்கள்.
- தமிழகத்திலோ ஒரு இலட்சம் பேருக்கு ஒரு பல் மருத்துவர் என்ற கணக்கில் இருக்கிறார்கள். தனியார் பல்மருத்துவக் கல்லூரிகள் அதிகம் இருக்கிறதே ஒழிய அரசுப் பல் மருத்துவக் கல்லூரி ஒன்று மட்டுமே இருக்கிறது. அதனால் தமிழகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்பப் பல் மருத்துவர்களை உருவாக்க வேண்டிப் புதிய பல் மருத்துவக் கல்லூரிகள் மாவட்டந்தோறும் தொடங்கப்படும்.

## ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி

- தற்போது தமிழகத்தைச் சுகாதார அடிப்படையில் 42 மாவட்டங்களாக (HUD) பிரித்துக்கொண்டு மருத்துவத்தை வழங்கி வருகிறார்கள். அதற்கேற்பப் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும். அதன் மூலம் மேலும் மக்களுக்கான மருத்துவச் சேவையை நாம் தமிழர் அரசு வழங்கும்.


## குருத்தணு சிகிச்சை முறை (ஸ்டெம்செல்–STEMCELL)


- குருத்தணு முறை சிகிச்சை (ஸ்டெம்செல்) ஆய்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். காது இல்லாவர்களுக்குக் காது, இதயம் இல்லாதவர்களுக்கு இதயம் என்று உடலின் எந்த உறுப்பையும் புதிதாக வளர்த்தெடுத்துக்கொள்ள பயன்படும் 'குருத்தணு ஆய்வு மையங்கள்' தொடங்கப்படும். வியாபார நோக்கில் முறையற்ற ஆய்வு மையங்கள் வளர்வது தடுக்கப்படும்.

> “தமிழகத்தில் ஒரு இலட்சம் பேருக்கு ஒரு பல் மருத்துவர் என்ற கணக்கில் இருக்கிறார்கள்”



Clarity Version download at www.makkalarasu.com











Clarity Version download at www.makkalarasu.com

## இடமாற்றச் சிக்கலுக்கான தீர்வு

- மருத்துவத் துறையில் இருப்பவர்களுக்கு மன உளைச்சலைத் தரும் இடமாற்றம் இருக்காது. அவர்கள் அருகில் உள்ள மருத்துவ மனைகளிலேயே பணியமர்த்தப்படுவார்கள். பழிவாங்கும் நோக்குடன் நடத்தப்பட்டு வந்த இடமாற்றங்கள் முற்றாக ஒழிக்கப்படும். கணவர் ஓர் ஊரிலும், மனைவி ஓர் ஊரிலும் பணியாற்றும் முறை தடுக்கப்படும். இவரும் ஒரே ஊரில் பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இடமாற்றத்திற்குக் கையூட்டுப் பெறுவது தடை செய்யப்படும்.

## மரபு சார்ந்த மருத்துவத்திற்கு முன்னுரிமை

- ஆங்கில மருத்துவத்திற்கு என்னென்ன வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகிறதோ அதற்கு இணையாக, சமமான வசதிகள் நம் மரபு சார்ந்த தமிழ்வழி மருத்துவம் (சித்தா) ஓகம், ஆயுர்வேதம், அக்குபஞ்சர் மருத்துவத்திற்கும் வழங்கப்படும்.
- ஆரம்ப சுகாதார மருத்துவ மையத்தில் இருந்து மாநிலத்தின் தலைமை மருத்துவமனைகள் வரையிலும் சித்தா, ஆயுர்வேதம் அக்குபஞ்சர் மருத்துவக் கிளைகள் அமைக்கப்படும். ஆங்கில மருத்துவர்களுக்கு இணையாக, ஊழியர்களுக்கு இணையாக, மருத்துவமனைகளுக்கு இணையாக இது அமைக்கப்படும்.
- 50 விழுக்காடு ஆங்கில மருத்துவம் என்றால் 50 விழுக்காடு தமிழ்வழி மரபு மருத்துவத்திற்கு அளிக்கப்படும். மக்களுக்கு எந்த மருத்துவத்தில் விருப்பமோ அதில் மருத்துவம் செய்துகொள்ளலாம்.

## இயற்கை மருத்துவம்

- சுற்றுலா சார்ந்து எங்கெல்லாம் நீர்நிலைகள், அருவிகள் மலைப்பிரதேச இடங்கள் இருக்கிறதோ அங்கெல்லாம் மரபுவழி மருத்துவத்திற்கான மையம் ஏற்படுத்தப்படும். அந்தப் பகுதியில் பெரிய அளவில் மூலிகைப் பண்ணைகளும், அழகுக் குடில்களும் அமைக்கப்படும். பாரம்பரிய உணவு முறையோடு, எண்ணெய்க் குளியல், இயற்கை மருத்துவம் என்ற 'இயற்கை மருத்துவப் பண்ணை' அமைக்கப்படும். சுற்றுலாப் பயணிகளும், இயற்கை மருத்துவம் வேண்டுவோரும் இதன் மூலம் பயனடைவார்கள்.

## மரபு வழி மருத்துவ ஆராய்ச்சி மையம்

- தமிழகத்தில் முதன்மையான நான்கு இடங்களைத் தேர்வு செய்து அங்கு மரபுவழி மருத்துவமான சித்தா, ஆயுர்வேதம், ஓகம், அக்குபஞ்சர் ஆகிய மருத்துவத்திற்கான கல்லூரிகள் தொடங்கப்படும். மேலும் இங்கு மரபுவழி மருத்துவப் பல்கலைக் கழகம் உருவாக்கப்படும்.

## கட்டாயக் கிராமச் சேவை

- மருத்துவர்கள் முதல் ஊழியர்கள் வரை பணியில் சேர்ந்த நாள் முதலே அவர்களுக்கான பணிமூப்பு, பதவி உயர்வு, ஊதிய உயர்வு விதிமுறைகள் முடிவு செய்து அறிவிக்கப்படும். அதன்படித் தங்குதடையின்றி அவர்களுக்கான பதவி உயர்வுப் பயன்கள் கிடைத்தபடி இருக்கும். வெளிப்படைத் தன்மை, கணினிமய நிர்வாக முறை என்பதால் அவர்கள் மீது வீண் குற்றச்சாட்டுகளுக்கு வாய்ப்பிருக்காது. தவறு நடக்கவும் வாய்ப்பிருக்காது. அதனால் அவர்களின் பணிநலன் பாதுகாப்பாக இருக்கும். ஒரு மருத்துவரை உருவாக்க 27 இலட்சம் மக்களின் வரிப்பணம் செலவிடப்படுகிறது. எனவே படிப்பை முடிக்கும் மருத்துவர்கள் ஓர் ஆண்டு கிராமங்களில் கட்டாயமாகப் பணி செய்ய வேண்டும். அதற்கான பயிற்சி ஊதியமும் வழங்கப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

## கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
## மாடல்ல மற்றை யவை

- தமிழ்மறை (400)




# ஒரு தேசத்தின் எதிர்காலம், அந்த நாட்டின் வகுப்பறைகளில்தான் தீர்மானிக்கப்படுகிறது

Clarity Version download at www.makkalarasu.com

# கல்விக் கொள்கை

அனைவருக்கும் சரியான சமமான, தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை இலவசம். நல்லத் தொடக்கம் பாதி வெற்றிக்குச் சமம். எனவே தொடக்கக் கல்வி, தொடக்க சுகாதாரத்தில் **நாம் தமிழர் அரசு** அதிக அக்கரை செலுத்தும். உயிரும் அறிவும் விற்பனைக்கு வந்துவிட்ட தேசம் உருப்படாது. எனவே மருத்துவத்தையும் கல்வியையும் நமது அரசு பொதுமைப்படுத்தும்.

- ஒரு தேசத்தின் எதிர்காலம், அந்த நாட்டின் வகுப்பறைகளில்தான் தீர்மானிக்கப்படுகிறது.
- கல்வி சுமை அன்று சுவை.
- கல்வி விற்பனைப் பண்டமன்று, கல்வி குழந்தைகளின் உரிமை.
- கல்வி சமூகத்தைக் கட்டமைக்கும் கருவி. ஒடுக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் வழிமுறை.
- ஏற்றத்தாழ்வுகளற்ற, பாகுபாடுகளற்ற உண்மையான மக்களாட்சியை உருவாக்குவதே கல்வியின் நோக்கம்.
- குழந்தைகள் உயிர் வாழ்வதற்கான, முன்னேறுவதற்கான சமவாய்ப்புகளை ஒழித்துக் கட்டிய கல்வி அமைப்பு; மக்களாட்சி நெறிகளுக்கு எதிரானது.
- கல்வியைத் தனியார் முதலாளிகளின் வணிகப் பொருளாக மாற்றியது குழைந்தைகளுக்கு இழைக்கப்பட்ட துரோகம்.
- கல்விக்கென்று வரி வசூலித்துக் கொண்டு கல்வியை, விலைகொடுத்துப் பெற வைப்பது மாபெரும் சமூகக்குற்றம்.

## அண்ணல் காந்தி

- "ஒருவருக்குத் தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ, அதைப்போல் தாய்மொழிக் கல்வி முக்கியம். அதைக் கொடுக்காதது தேசத்துரோகக் குற்றம்" என்று கூறினார் அண்ணல் காந்தி.
- "அயல்நாட்டு மொழியைப் பயிற்சி மொழியாக நம் இளைஞர்கள் மேல் திணித்திருப்பது நம்மையே அழிக்கவல்லது. அதுவே மிகப்பெரிய கொடுமை என்பதை வருங்கால வரலாறு சொல்லும்" என்று 1928 ஜுலை 5ஆம் தேதி அன்று எழுதி எச்சரித்திருந்தார்.
- அயல்நாட்டுக் கல்விமொழி நம் ஆற்றலைப் பலவீனப்படுத்தும். ஆயுளைக் குறைத்துவிடும். மாணவர்களைப் பொதுமக்களிடம் இருந்து பிரித்துவிடும்.இந்தக் கல்வி முறையை நாம் பிடிவாதமாகக் கடைப்பிடித்தால் நம் நாட்டின் உயிர் நாடியை அழித்துவிடுமென்று கவலைப்பட்டார். அதனால் தாய்மொழிக் கல்வியே சிறந்தது என்று நாம் நடைமுறைப் படுத்துவோம்.

> "கல்வி விற்பனைப் பண்டமன்று, கல்வி குழந்தைகளின் உரிமை"

கல்விக் கொள்கை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



சுவரில்லாப் பள்ளி
வகுப்பறை



வாழ்வியல் கல்வி
மீன் பிடித்தல்

**உலகில் கல்வியில் முதலிடம் வகிக்கும் தென்கொரிய நாடு, தனது தாய்மொழியில் தான் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது. இங்கு எட்டு வயதில்தான் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள்**



வாழ்வியல் கல்வி
பால் கறவை



வாழ்வியல் கல்வி
நாற்று நடுதல்



வாழ்வியல் கல்வி
சூரியஒளித் தகடு
பொருத்துதல்



பள்ளியில்
கிளித்தட்டு
விளையாட்டு

Clarity Version download at www.makkalarasu.com

## உலக நாடுகள்

- ஒருவருக்குக் கனவு எந்த மொழியில் வருகிறதோ, அந்த மொழிதான் அவருக்கு கல்வி மொழியாக இருக்க வேண்டும்.
- சப்பான்
- செர்மன்
- சீனா, பிரான்ஸ்
- போன்ற உலக நாடுகள் பலவும் முன்னேறிய நாடுகளாகவே இருக்கின்றன. காரணம் அவர்கள் தாய்மொழியில் கல்வியைக் கற்றுத் தருகிறார்கள். சொந்த மொழியில் கற்று சிந்திக்கும்போதுதான் அறிவு வளர்ச்சிபெறும் என்பது அறிவார்ந்த மக்களின் கருத்தாக இருக்கிறது. அதனால் தாய்மொழிக் கல்வியை முதன்மையாக்குவோம்.
- உலகில் கல்வியில் முதலிடம் வகிக்கும் தென்கொரிய நாடு தனது தாய்மொழியில் தான் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது. இங்கு அப்பிள்ளைகளை எட்டு வயதில்தான் ஒன்றாம் வகுப்பில் படிக்கச் செய்கிறார்கள்.
- இரண்டாம் இடம் வகிக்கும் சப்பான், மூன்றாம் இடத்தில் இருக்கும் சிங்கப்பூர், அடுத்தடுத்து இருக்கும் ஹாங்காங், பின்லாந்து ஆகிய நாடுகள் எல்லாம் தங்கள் தாய்மொழியில்தான் கல்வியைக் கற்றுத் தருகின்றன. இங்கெல்லாம் ஆறு வயதில்தான் ஒன்றாம் வகுப்பில் படிக்கச் செல்கிறார்கள்.

## மேதைகள்

- அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் தாமஸ் ஆல்வா எடிசன், ஆ.ப.செ. அப்துல்கலாம், மயில்சாமி அண்ணாதுரை உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் பி.சதாசிவம், கணிதமேதை சர் சி.வி. இராமன், புகழ்பெற்ற இசையமைப்பாளர் இளையராசா போன்ற பலரும் தாய்மொழியில் படித்தவர்கள்தான். தமிழ்மொழியில் கல்வி கற்றால் மட்டுமே அறிவு வளர்ச்சி மேம்படும். அது நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படும் என்று நாம் தமிழர் அரசு முன்வைக்கிறது.

# அறிவுச் சோலை

## அரும்பு – மொட்டு – மலர்

- மூன்று வயதில் அரும்பு என்ற வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அடுத்து மொட்டு மலர் என அடுத்தடுத்த வகுப்பில் பயிற்றுவிக்கப்படுவார்கள்.
- இந்த வகுப்புகளில் விளையாட்டு, ஓவியம் வரைதல், நீதிக்கதைகள், இசையைக் கேட்டல், பாட்டுப் பாடுதல், அறிவியல் கதைகள் ஆகியவை எளிய முறையில் பயிற்றுவிக்கப்படும். விளையாட்டுப் பூங்கா, சுற்றுலாத் தலங்களுக்கு அழைத்து சென்று ஒவ்வொன்றையும் விளக்கிப் பயிற்றுவிப்பார்கள். அரும்பு-மொட்டு-மலர் வகுப்புகளுக்குப் பெண் ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்.

## தனித்திறன்

- அரும்பு - மொட்டு - மலர் கல்விமுறையின் போது பிள்ளைகள் படிக்க மாட்டார்கள். பெற்றோர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து பிள்ளைகளைப் படித்து அவர்களின் தனித்திறமையை அறிந்துகொள்வார்கள்.



Clarity Version download at www.makkalarasu.com


கலை நிகழ்ச்சி
கற்றல்


ஓவியம்
தீட்டுதல்


விளையாட்டுப்
பூங்கா


கல்விச்
சுற்றுலா



உசேன் போல்ட் -
தனித்திறன்



சச்சின் தெண்டுக்கர் -
தனித்திறன்


இரகுமான் -
தனித்திறன்

- ஆறு வயதில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கும்போது சிறுவர்சிறுமிகளின் தனித்திறமை என்ன என்பதைப் பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டறிந்து, அதுவே முதன்மைப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படும். மற்றவை எல்லாம் துணைப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படும்.

- ஓவியத்தில் ஆர்வமா, அதுவே முதன்மைப் பாடம். விளையாட்டில் ஆர்வமா அதுவே முதன்மைக் கல்வி. சமூகச் சேவை, மனித மேம்பாட்டில், கணினியில், அறிவியலில், கணிதத்தில் என்று எதில் ஆர்வமாக இருக்கிறார்களோ, அதுவே அவர்களுக்கு முதன்மைப் பாடமாக பயிற்றுவிக்கப்படும். துறைசார்ந்த ஆற்றல் மிக்க மேதைகளை உருவாக்குகின்ற கல்வியாக இருக்கும்.

## தேர்வில்லாத் தேர்ச்சி சுவர் இல்லாக் கல்வி

- "மதிப்பெண்களை வைத்து மனித அறிவை அளவிட முடியாது". எனவே, ஒன்றாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயிற்சி முறை கல்வி பயிற்றுவிக்கப்படும். ஒவ்வொரு இடத்திற்கும் நேரில் அழைத்துச் சென்று காட்டிப் பயிற்சி முறைக் கல்வி அளிக்கப்படும். தேர்வில்லாத் தேர்ச்சி முறையாகப் பயிற்றுவிக்கப்படும்.

- பத்தாம் வகுப்பில் அரசுத் தேர்வு நடத்தப்படுவதால், அதற்குப் பயிற்சியாக ஒன்பதாம் வகுப்பில் தேர்வுமுறைப் பாடம் நடத்தப்படும்.

## முதன்மை

- சச்சின் டெண்டுல்கர் உலகப்புகழும், பெரும் பணமும் சம்பாதிக்கக் காரணம் அவரது தனித்திறமைதான். கிரிக்கெட்டை மட்டுமே முதன்மையாக எடுத்துக்கொண்டார். 'சமைக்கா என்ற தேசத்தை இந்த உலகிற்குப் பரவலாக அடையாளம் காட்டிய உசேன்போல்டு என்ற ஓட்டப்பந்தய வீரர் உலகப் புகழ் பெறக் காரணம் அவர் விளையாட்டில் மட்டுமே தனித்திறமை கொண்டவராக இருந்ததுதான்.

- தேசத்தின் பல விருதுகளைப் பெற்றுப் புகழின் உச்சியில் நின்ற இளையராஜா, ஆஸ்கர் விருது பெற்ற ஏ.ஆர். ரகுமான் ஆகியோரெல்லாம் இசையில் மட்டுமே தனித்திறமை காட்டிப் புகழிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்தார்கள்.

- அப்படித் தலைசிறந்த வல்லுநர்கள் பலரும் பல துறைகளில் தனித்திறமை பெற்றவர்களாக வளர்த்தெடுக்கப்படுவார்கள். எதிர்காலத்தில் இந்தியாவிலேயே பல திறமையாளர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாகத் தலைநிமிர்ந்து நிற்பார்கள். அதற்கான கல்விமுறையை **நாம் தமிழர் அரசு** வழங்கும்.

## தாய்மொழிக் கல்வி

- தாய் மொழியில் படித்தவன் படைக்கின்றான். படிக்காதவன் பயன்படுத்துகிறான்.

- ஆரம்பப் பள்ளி முதல் உயர் படிப்பான மருத்துவம், சட்டம், பொறியியல் வரையிலுமான அனைத்துப் பாடங்களும் தமிழ் மொழியிலேயே மொழிபெயர்க்கப்பட்டுக் கற்றுத் தரப்படும். தமிழ்வழிக் கல்வியே சட்டமாக்கப்படும்.

## மொழிக்கொள்கை

- தமிழ் - பயிற்று மொழி.

- ஆங்கிலம் - கட்டாயப் பாட மொழி

- விருப்ப மொழி - இந்தி உள்பட உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளும் விருப்ப பாட மொழி.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



பசுஞ்சோலைக்குள் பள்ளி



பள்ளிக்கட்டிடங்களில் சூரியஒளி மின் உற்பத்தி



பள்ளிக் கட்டடங்களுக்குள் மரங்கள்



எண்ம (டிஜிட்டல்) நூலகம்

## தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா? சோறு கிடைக்குமா? என்று பேசுவது அவமானம்



உடற்பயிற்சியினூடாகக் கல்வி



கணினிக் கல்விப் பயிற்சி

- தமிழர்கள் தங்கள் தாய் மொழியில் ஆழமான புலமை பெற்றிருப்பார்கள். ஆங்கிலத்தில் ஆங்கிலேயர்களுக்கு இணையாக எழுதப்பேசத் திறமையைக் கொண்டிருப்பார்கள். மேலும் உலகின் பல்வேறு மொழிகளிலும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள். அப்படிப்பட்ட தலைமுறையை நாம் தமிழர் அரசு உருவாக்கும்.
- தனித்திறன் - ஆங்கிலப் புலமைக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தி பயிற்றுவிக்கப்படுவார்கள்.

***“எம்மொழியும் கற்போம் நாங்கள் வாழ்வதற்கு***
***எம் மொழி தமிழ் கற்போம் என் இனம் வாழ்வதற்கு”*** இதுதான் நமது அரசின் கொள்கை.

## பசுஞ்சோலைப் பள்ளிகள்

- அரசுப் பள்ளிகள் அனைத்தும் பரம்பரைக் கட்டடக் கலைநுட்பத்துடன் கட்டப்படும். சுற்றிலும், தரமான விளையாட்டுத் திடல், சிறந்த அடிப்படை வசதிகள், உள்ளேயும் நிழல் தரும் மரங்களை நடுவதோடு, மருத்துவத்திற்கான மூலிகைச் செடிப் பண்ணைகளும் அமைக்கப்படும். பசுஞ்சோலைக்குள் பள்ளிகள் இருக்கும்.
- கட்டடத்தின் மேல் தளத்தில் 'சூரிய ஒளிக்கற்றை' முறை மின் தயாரிப்புக் கட்டமைப்பு உருவாக்கப்படும். அதிலிருந்து கிடைக்கும் மின்சாரம் பள்ளிகளுக்கும் அருகில் உள்ள வீடுகளுக்கும் அளிக்கப்படும்.
- தூய குடிநீர், நவீன கழிப்பறைகள், விளையாட்டுத்திடல், நூலகம் கட்டாயம் அளிக்கப்படும்.

## தமிழ் படித்தால் அரசு வேலை

- தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா? சோறு கிடைக்குமா? என்று பேசுவது அவமானகரமானது. ஆங்கிலம் படித்தால் அந்நிய நாட்டில் வேலை. இந்தி படித்தால் வட இந்தியாவில் வேலை. **தமிழில் படித்தால் தான் தமிழ்நாட்டில் வேலை என்ற நிலையை நாம் தமிழர் அரசு கட்டாயமாக்கும்**.
- தனியார் ஆங்கில வழிக் கல்விக்கு எதிரான நடவடிக்கைகள் இருக்காது. ஆனால் அரசுப் பள்ளிகள் அனைத்தும் உயர்ந்த தரத்திற்கு உயர்த்தப்படும்.
- அரசுப் பள்ளிகளில் தாய்மொழியில் படித்தவர்களுக்கு அரசு வேலைகள் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும்.

## சமூக நீதி வாழ்வியல்

- தொடக்கப் பள்ளிகள் முதலே சமூகநீதி, நல்லொழுக்கம், வாழ்வியல் தொன்மம், குறித்துத் தெரிந்துகொள்ளவும், நூலகங்களில் சென்று படிப்பதற்கும் தனியாக ஒரு வகுப்பு, வாரத்தில் இரண்டு முறை நடத்தப்படும்.
- மாணவர்களுக்குப் புத்தகச் சுமை இருக்காது. அவர்கள் புத்தகங்களை வைத்துக்கொள்ள வகுப்பறைகளிலேயே தனிப் பெட்டகம் அமைத்துக் கொடுக்கப்படும். வீட்டுப் பாடங்கள் இருக்கும் புத்தகங்களை மட்டும் மாணவர்கள் எடுத்துச் சென்றால் போதுமானது

## தொடக்கக் கல்வி

- ஒவ்வொரு கிராமத்திலும். அவரவர்களின் வாழ்விடங்களுக்கு அருகிலேயே தொடக்கப்பள்ளிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

## ஆரோக்கிய கல்வி


- ஒவ்வொரு பள்ளியிலும் பத்தாம் வகுப்பிற்கு மேல் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு என்று நவீன உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

கல்விக் கொள்கை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



“ முதலமைச்சர் தொடங்கிக் கடைசி மட்ட அரசு ஊழியர்கள் வரை அனைவரின் பிள்ளைகளும் கட்டாயம் அரசுப் பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் ”

## ஆசிரியப் பெருமக்களின் நலன்

- **ஒரு குழந்தை, தாயின் கருவரையில் பத்து மாதம்தான் இருக்கிறது. அது உயிர்க் கருவறை. அந்த பிள்ளை பள்ளி, கல்லூரியிலும் பல ஆண்டுகள் இருக்கிறது. அது அறிவுக் கருவறை. ஒரு தாய் தன் குழந்தைக்கு உலகத்தைக் காட்டுகிறாள். ஆசிரியர் பெருமக்கள்தான் அந்த பிள்ளையை உலகத்திற்கே காட்டுகிறார்கள்.** எனவே ஆசிரியப் பெருமக்கள் தான் பெற்ற தாய்க்கு இணையாகப் போற்றப்பட வேண்டியவர்கள். அதை உணர்ந்த **நாம் தமிழர் அரசு**, ஆசிரியர் பெருமக்களின் நலனில் அதிக அக்கரை கொண்டு மேன்மைப் படுத்தும்.

### தனிப்பயிற்சி

- தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு இரண்டாண்டுப் பயிற்சிகளோடு தாய்மொழித் திறனில் (தமிழில்) தனிப்பபயிற்சியும் அளிக்கப்படும்.

### ஊதிய உயர்வு

- ஆசிரியர்களுக்கான ஊதிய உயர்வு என்பது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வுக்குட்படுத்தப்படும். மத்திய அரசுக் கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும்.

### கூடுதல் வேலைகள்

- ஆசியர்களை மற்ற புள்ளிவிபரக் கணக்கெடுப்பது, தேர்தலுக்கான விபரக் கணக்கெடுப்புப் பணிகள் உள்ளிட்ட எந்த வேலைகளிலும் ஈடுபடச் சொல்லிக் கட்டாயப்படுத்தாது.

### இடமாற்றங்கள்

- அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் பள்ளிகளுக்கு அருகிலேயே இருக்க வகை செய்யப்படும். கணவன் மனைவிக்கு வெவ்வேறு ஊர்களில் பணிமாற்றம் இருக்காது. ஒரே இடத்தில் அல்லது ஊரில் பணியமர்த்தப்படுவார்கள்.

## பொதுமை

- முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களின் பிள்ளைகள் அனைவரும் கட்டாயம் அரசுப் பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்படும். கல்வியின் தரம் மேம்படுத்தப்படும்.
- மறுப்பவர்களுக்கு அரசு வேலை உள்ளிட்ட அரசுச் சலுகை, உரிமைகள் அனைத்தும் மறுக்கப்படும்.
- அரசு ஊழியர்களின் பிள்ளைகள் அதிகம் படிக்கும் போதுதான் அரசுப் பள்ளிகள் இயங்கும். அரசுப் பள்ளிகள் இயங்கினால்தான் ஆசிரியர்களின் தேவைக்கேற்பப் பணியிடங்களை நிரப்பமுடியும்.

## பள்ளிகளின் ஒருங்கிணைப்பு

- மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் 2 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும், நடுநிலைப் பள்ளிகள் 5 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும், உயர்நிலைப் பள்ளிகள் 7 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும், மேல்நிலைப் பள்ளிகள் 10 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும் இருக்கும்படியான திட்டம் கொண்டுவரப்படும்.
- ஒவ்வொரு பள்ளியிலும் அந்த 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் இருக்கும் பிள்ளைகளைதான் சேர்த்துக்கொள்ள வேண்டும். தனியார் பள்ளிகளுக்கும் இந்த விதிமுறைகள் பொருந்தும்.

## தனியார் பள்ளிகளுக்கான கட்டுப்பாடு

- தனியார் பள்ளிகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படாது.
- தற்போது இருக்கும் தனியார் பள்ளிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். அவர்களின் சமூக பங்களிப்பின் தன்மைக்கு ஏற்ப அங்கீகாரம் நீட்டிக்கப்படும்.
- எக்காரணம் கொண்டும் கல்வி வணிகமாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. கட்டண நிர்ணயக் கட்டுப்பாடுகள் அனைத்தும் அரசிடம் மட்டுமே இருக்கச் சட்டமியற்றப்படும்.
- தனியார் பள்ளிகளின் நிர்வாகமும் அரசும் சேர்ந்து நிலையான ஒரு கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கும். அதை ஏற்று ஒத்துழைக்க வேண்டும். நட்டமேற்படுகிறது, தொடர்ந்து நடத்த முடியாது என்பவர்கள், பள்ளியை அரசிடம் ஒப்படைத்துவிட்டு அதற்கு உரிய தொகையினைப் பெற்றுக்கொள்ளலாம்.
- ஏரி, கண்மாய், குளங்கள் போன்ற நீர்நிலைகளைத் தத்தெடுத்துக்கொள்வது, சாலை வசதிகளின் மேம்பாட்டில் பங்கெடுப்பது, அரசு அமைக்கும் ஆதரவற்ற சிறுவர் முதியோர் இல்லங்கள் பராமரிப்பில் பங்கெடுப்பது உள்ளிட்ட சமூக நலனில் பங்கெடுத்துக்கொள்ளும் தனியார் பள்ளிகளுக்கு அரசின் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

## மாநில அரசின் உரிமை

- மத்திய அரசின் பட்டியலில் உள்ள உயர் கல்வியை மாநில அரசின் பட்டியலுக்கு மாற்றும் உரிமையைக் கோருவோம். மற்ற மாநில முதல்வர்களுடன் சேர்ந்து மாநில உரிமையை வென்றெடுப்போம்.. உயர் கல்வி அனைவருக்கும் சமமானதாக நடத்தப்படும்.



> “மத்திய அரசின் பட்டியலில் உள்ள உயர் கல்வியை மாநில அரசின் பட்டியலுக்கு மாற்றும் உரிமையைக் கோருவோம்”

கல்விக் கொள்கை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



“காடுகளின் வளர்ப்பு, பெருங்கடல் ஆய்வுகள், கடல்சார் அறிவியல், தமிழர்களின் வரலாறு, தொல்லியல் ஆய்வுகளுக்கென்று தனியாகப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்”

## மாணவர்களுக்கு மிதிவண்டி

- மூன்று கிலோ மீட்டர், ஐந்து கிலோ மீட்டர் தூரங்களில் கல்விக்கூடங்கள் இருப்பதால் மாணவர்கள் மிதிவண்டியில் சென்றுவர அறிவுறுத்தப்படுவார்கள். அவர்களுக்கான மிதிவண்டிகளை **நாம் தமிழர் அரசே** வழங்கும்.

## உயர்கல்வி அவலங்கள்

- இன்று உயர் கல்விகள் அனைத்தும் வர்த்தகமாக மாற்றப்பட்டு விட்டது. வெளிநாட்டு முதலீடுகளும் கல்விக் துறையில் வந்துகொண்டிருக்கிறது. இது வசதியானர்கள் மட்டுமே உயர் கல்வியைப் பெற முடியும் என்ற அவலத்தை ஏற்படுத்தும். ஏழைகளுக்கு எட்டாக் கல்வியாக மாறும்.

## கூடுதல் ஆசிரியர்கள்

- தற்போது 30 முதல் நாற்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கிறார்கள். இது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமே ஒரு மனச்சிக்கலை ஏற்படுத்துகிறது.
- அதனால் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என நியமிக்கப்படுவார். கூடுதல் இடங்களுக்கு மேலும் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

## குளறுபடிக் கல்விமுறை

- தேசியக் கல்விக்குழு, ஆச்சாரியா கல்விக்குழு, இராமமூர்த்தி கல்விக்குழு ஆகிய குழுக்கள் பரிந்துரைத்த, “பொதுப்பள்ளிகளோடு இணைந்த அருகாமைப் பள்ளி” என்ற திட்டத்தைப் பாராளுமன்றமும் ஏற்றது. ஆனால் நடைமுறைப்படுத்தவில்லை. அரசுப் பள்ளிகளுடன் தனியார் பள்ளிகளையும் இணைத்துக்கொண்டு, அனைவருக்குமான சமநிலைக் கல்விமுறை என்ற திட்டம் கிடப்பிலேயே உள்ளது. நாம் அதைப் போராடி நிறைவேற்றுவோம்.

## கட்டாயக் கணினிக் கல்வி

- ஒன்றாம் வகுப்பில் இருந்து பத்தாம் வகுப்பு வரையிலும் கட்டாயக் கணினிப் பயிற்சி வகுப்பு இணைக்கப்படும்.
- சுமார் 21 ஆயிரம் கணினிப் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி முடித்துவிட்டு வேலையின்றிக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். மாணவர்களுக்கும் கணினி அறிவு புகுத்தப்படும்.

## தரம் உயரும் ஆராய்ச்சிப் படிப்புகள்

- பொறியியல், அறிவியல், வேளாண்மைத் துறைகளின் ஆய்வுக் கட்டமைப்புகள் அரசுக் கல்லூரி வளாகங்களிலோ தனியாக ஒரு இடத்திலோ நிறுவப்படும். உலகத் தரத்தில் உள்ள நவீன தொழில்நுட்ப வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகள் அனைத்தும் இதில் இருக்கும்.
- பொறியியல் தொழில்நுட்பக் கல்வி என்பது அது சார்ந்த தொழிற் சாலைகளோடு இணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். மருத்துவ மாணவர்களைப் போன்று அவர்களும் செயல்முறையில் பாடங்களைக் கற்றுக்கொள்ள வழி செய்யப்படும். இப்படிப் பயிலும் மாணவர்கள் சிறந்த தொழில் முனைவோர்களாக ஆக வாய்ப்பு இருக்கும்.

## சுற்றுலாத் துறைக்கான படிப்பு

- தமிழகம் சுற்றுலாத் துறையில் முக்கிய மாநிலமாக இருந்து வருகிறது. எனவே சுற்றுலா மேம்பாட்டிற்கென்று தனியே ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கப்படும்.
- இதன் மூலம் தமிழகத்தின் தொன்மை, வரலாறு, முக்கிய இடங்கள் அது குறித்த வரலாறு, கடலில் மூழ்கிய சங்ககால நகரங்கள் குறித்த வரலாறு அனைத்தையும் மீட்டெடுக்கும் ஆய்வுகள் நடத்தப்படும்.

## தனித்தனிப் பல்கலைக் கழகங்கள்

- மாணவர்களின் ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான உதவித்தொகைகள் உயர்த்தப்படும். உயர்கல்வி ஆய்வுப் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்குப் போதிய கற்கும் வசதிகள் உடனுக்குடன் வழங்கப்படும்.
- நமது காடுகளின் வளர்ப்பு, பெருங்கடல் ஆய்வுகள், கடல்சார் அறிவியல், தமிழர்களின் வரலாறு, தொல்லியல் ஆய்வுகளுக்கென்று தனியாகப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்.
- நீரிடர் மேலாண்மை, பேரிடர் மேளாண்மை, இயற்கை வளங்கள் இயற்கை உர மேலாண்மை, தேனி வளர்ப்பு, காளாண் வளர்ப்பு, சுற்றுச்சூழல் உள்ளிட்ட இயற்கை சார்ந்த உயர்கல்விக்கென்று தனிப் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்படும்.

## ஆசிரியர்களின் தகுதி உயர்த்தப்படும்

- பட்டதாரி ஆசிரியர்கள்தான் தொடக்கக் கல்விக்கான ஆசிரியர்களாக நிரப்பப்படுவார்கள். ஆசிரியர்களின் கல்வித் தரம் உயர்ந்ததாக இருக்கும்போதுதான், மாணவர்களின் அறிவுத் தரமும் உயர்ந்த்தாக இருக்கும். தொடக்கக் கல்வி ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள், அரும்பு, மொட்டு மலர் என்றிருக்கும் மழலைகளுக்கான ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கான ஊதியங்கள் அனைத்தும் உயர்த்திக் கொடுக்கப்படும். நல்ல தொடக்கம் பாதி வெற்றிக்குச் சமம். அதுபோல் வரும்கால தலைமுறையை வலுவானதாக உருவாக்க இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

> “எல்லாரும் தாய்மொழியில் பேசுகிறார்கள்
> நாங்கள் மொழிகளின் தாய்மொழியில் பேசுகிறோம்”

கல்விக் கொள்கை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## கல்விக் கடன் தள்ளுபடி

- கடன் வாங்கிக் கல்விக் கற்கும் நிலையில் மக்களை வைத்திருப்பது இழிவானதாகும். இதுவரை மாணவர்கள் பெற்றக் கல்விக் கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.

  **'கல்வி கடன் அல்ல கடமை'**

## மத்திய அரசின் நிதி

- மத்திய அரசின் மொத்த வருவாயில் ஆறு சதவீத நிதியைத்தான் தேசம் முழுவதுக்குமான கல்வி நிதியாக ஒதுக்கி வருகிறார்கள். இதை மற்ற மாநில அரசுகளோடு சேர்ந்து பத்துச் சதவீதமாக ஒதுக்க நடவடிக்கையை எடுப்போம்.

## மாணவர்கள் நல வாரியம்

- பள்ளிக் கல்லூரிகளில் ஏற்படும் குறைபாடுகள், விடுதிகளில் உள்ள சிக்கல்கள், அவர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளில் உள்ள தடைகள் உள்ளிட்ட பல குறைகளைக் கண்காணித்து உடனடியாகத் தீர்க்க வேண்டி இந்த நலவாரியம் செயல்படும்.

## புகையிலை எதிர்ப்புப் பாடம்


- புகையிலை ஏற்படும் பாதிப்புகளை விளக்கி, அதனால் ஏற்படும் புற்றுநோய், இதய, நுரையீரல் நோய் உள்ளிட்ட பல நோய்கள் ஏற்படா வண்ணம் புதிய பாடத்திட்டம் இணைக்கப்படும். புகையிலைக்கு எதிராக மாணவர் சமுதாயம் செய்ய வேண்டிய கடமைகள் அதில் எடுத்துரைக்கப்படும். புகையிலை பயன்படுத்தாத சமுதாயத்தை ஏற்படுத்துவதே நமது அரசின் நோக்கம்.

## நூலகங்கள்

- உலக மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள சிறந்த நூல்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட்டு தமிழை ஓர் ஆய்வியல் மொழியாக உயர்த்துவோம். அத்தகைய தமிழ் நூல்களைக் கொண்டு கணினி மயமாக்கப்பட்ட நூலகங்களை எல்லா மாவட்டங்களிலும் நிறுவுவோம்.
- இராமேசுவரத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பெயரில் அறிவியல் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

## மீண்டும் நுழைவுத் தேர்வு

- மருத்துவம் பொறியியல் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு முறை மீண்டும் கொண்டுவரப்படும். பல தனியார் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு +2ற்கான பாடங்களை மட்டுமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தன் பள்ளியின் மாணவர்கள் அதிக மதிப்பெண்களை பெற்றால்தான் அடுத்த ஆண்டு சேர்க்கை கூடுதலாக இருக்கும் என்ற கண்ணோட்டத்தில் அப்படி நடத்துகிறார்கள். அதனால் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் +2 பாடத்தை மட்டுமே படிப்பதால்அந்த மாணவர்கள் பொதுத் தேர்வில் கூடுதல் மதிப்பெண்களை பெறுகின்றார்கள். அந்த மதிப்பெண்கள் அடிப்படையில்தான் அவர்களுக்கு மருத்துவம் பொறியியலில் இடம் கிடைக்கிறது.
- ஆனால் அரசு பள்ளியில் +1 மற்றும் +2 படிக்கும் மாணவர்கள் முறையாக அந்த பாடங்களை கற்று வருகிறார்கள். அதனால் அவர்கள் குறைந்த மதிப்பென்களையே பெருகிறார்கள். மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவம் பொறியியலுக்கான இடங்களை இழக்கிறார்கள்.
- 'எனவே மீண்டும் நுழைவுத் தேர்வு முறை கொண்டு வரப்படும். அதில் +1, மற்றும் +2 பாடங்களில் இருந்து சரிபாதி கேள்விகளைக் கொண்ட கேள்வித்தாள் வழங்கப்படும். இப்படி நுழைவுத் தேர்வு எழுதும்போது முறையாக படித்த மாணவர்கள் வெற்றி பெருவார்கள் எனவே தனியார் பள்ளிகளின் நலன் கருதி நிறுத்தப்பட்ட நுழைவுத் தேர்வு முறை மீண்டும் கொண்டுவரப்படும்.



**உன்னை விமர்சிப்பவர்களுக்கு நிருபிக்கப் போராடுவதை விட, உன்னை நம்பி நிற்பவர்களுக்கு உண்மையாக இருக்கப் போராடு!**

– புரட்சியாளர் லெனின்

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

**விண்ணும் மண்ணும் விளங்கச் செய்யும்**
**எண்ணுதற் கினிய இயக்கமாய்த் துலங்கும்**
**மின்சா ரத்தின் மிகையுயர் பெருக்கம்**
**மின்னணு வாக மிளிர்தல் காண்மின்!**

**- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்**



# மாற்று மின் பெருக்கம்

## நமது அரசின் புதிய மின் உற்பத்திக் கொள்கை

தன்னியக்கம் தவிர மின்னியக்கம் இல்லாமல் எதுவும் இல்லை. ஒளி மயமான எதிர்காலத்திற்குத் தடையற்ற மின்சாரம் மிக அவசியம். அந்த வகையில் நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் இருக்கும் மின் உற்பத்தியில் தன்னிறைவைப் பெறும் நோக்கத்தோடு புதிய கொள்கையை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.

### தமிழகத்தின் மின் தேவை

- நாட்டின் வளர்ச்சிக்கு மிக அத்தியாவசியத் தேவை மின்உற்பத்தி. இந்த மின் உற்பத்திக் கொள்கையில் இதுவரை இம்மண்ணை ஆண்ட திராவிடர் ஆட்சியாளர்களின் தவறான கொள்கை முடிவுகளால் ஏற்பட்டுள்ள தடைகளை உடைத்து உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுத் தடையற்ற மின்சாரத்தை வழங்கும் வகையில் மாற்று நடவடிக்கைகளை நாம் தமிழர் அரசு உறுதியாக நடைமுறைப்படுத்தும்.
- தமிழகத்தின் தற்போதைய மொத்த **மின் தேவை 13,500 மெகாவாட்** மின்சாரம்.
- மாநில அரசின் மின் திட்டங்கள் மூலம் **5,152 மெகாவாட்** மின்சாரம் கிடைக்கின்றது.
- மத்திய அரசு மின் திட்டத்தின் மூலம் **4,000 மெகாவாட்** மின்சாரம் கிடைக்கிறது.
- தமிழகத்தின் பற்றாக்குறை மின்சாரம் **8,152 மெகாவாட்.**

### தனியாரிடம் வாங்குவதில் முறைகேடு

- அதனால் பற்றாக்குறையைப் போக்க தனியாரிடமிருந்தும், வெளி மாநிலத்தில் இருந்தும் 5,700 மெகாவாட் வாங்கப்படுகிறது. இந்த மின்சாரத்தை வாங்கினாலும், வாங்காமல் விட்டாலும் தமிழ்நாடு தனியார் நிறுவனங்களுக்கு 3,000 கோடியைக் கட்டாயம் செலுத்தியாக வேண்டும் என்ற ஒப்பந்தம் போட்டிருக்கிறது.
- இதில் தனியாரிடம் இருந்து ஒரு யூனிட் மின்சாரம் 6.50 (ஆறு ரூபாய் ஐம்பது காசு)க்கு வாங்குகிறார்கள். வெளி மாநிலத்தில் இருந்து ஒரு யூனிட் 3.40 (மூன்று ரூபாய் நாற்பது காசு)க்கு வாங்குகிறார்கள்.
- ஒரே அளவுள்ள மின்சாரம் வாங்குவதில் 3.10(மூன்று ரூபாய் பத்துக் காசு) வித்தியாசம், இதனால் பத்துக் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் முறைகேடு என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

> “மின்சாரத்தை வாங்கினாலும், வாங்காவிட்டாலும் 3,000 கோடியைக் கட்டாயம் செலுத்தியாக வேண்டும்”

மாற்று மின் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



அணு மின்
உற்பத்தி நிலையம்



அனல் மின்
உற்பத்தி நிலையம்



நீர் மின் உற்பத்தி
நிலையம்



சூரிய சக்தி ஒளிக்கற்றை
மின் உற்பத்தி



காற்றாலை
உற்பத்தி நிலையம்



திடக்கழிவு
உற்பத்தி நிலையம்

- இன்னுமொரு தனியார் நிறுவனத்திடம் ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 12 ரூபாய் என ஒப்பந்தம் போட்டு அது நீதிமன்றத்திற்குப் பொதுநலன் வழக்காக எடுத்துச் செல்லப்பட்டதால் தடுக்கப்பட்டிருக்கிறது.
- தற்போது அதானி போன்ற மிகப் பெரிய நிறுவனங்களும், தமிழகத்திற்குச் சூரிய ஒளி மின்சாரம் தயாரித்துக் கொடுப்பதாக ஒப்பந்தம் போட்டுக் கொண்டு பல மாவட்டங்களில் நிலங்களையும் வாங்கிப் போட்டிருக்கிறது.

## இன்றிருக்கும் மின் உற்பத்தி முறை

- அணு உலை மின் உற்பத்தி
- அனல் மின் உற்பத்தி
- நீர் மின் உற்பத்தி
- சூரியசக்தி மின் உற்பத்தி
- காற்றாலை மின் உற்பத்தி முறை என்ற வகைகளில் இருக்கின்றது
- இந்த முறைகள் மூலம் ஒரு மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்வதற்குச் சுமார் ஒன்பது கோடி முதல் 10 கோடி வரை செலவாகிறது. இன்னும் சொல்லப்போனால் அணு உலைத் திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிடக் கூடுதலாகவே செலவாகிக் கொண்டிருக்கிறது. இப்படிச் செலவாகும் தொகைதான் மின் கட்டண உயர்வுக்குக் காரணமாகி இருக்கிறது.

## இன்றைய மின் உற்பத்தி முறைகளும் பாதிப்புகளும்

- இதில் அணு உலை மின் உற்பத்தி தோல்வி அடைந்த, மிகுதியான பக்க விளைவுகள், சுற்றுப்புறச் சூழல்கேடு ஏற்படுத்துகிறது என உலகம் முழுவதும் எதிர்ப்பிற்கு உள்ளாகி இருக்கிறது. அணுக்கதிர் வீச்சின் பாதிப்புகள், அது ஏற்படுத்தும் கொடிய நோய்கள், அது சார்ந்த மனித இறப்புகள் என உலகாளவிய அச்சுறுத்தலை அணு உலை மின் உற்பத்தி முறை ஏற்படுத்தி வருகின்றது. பாதிப்பிற்குள்ளான வளர்ந்த நாடுகள் அணு உலைகளை மூடிவருகிறது.
- அதே போன்று அனல்மின் உற்பத்தியில் நிலக்கரி எரிப்பதால் கடும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகிறது.அனல் மின் உற்பத்தி நிலையங்களைச் சுற்றி வாழ்கிற மக்கள் பலவித நோய்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். உதாரணமாக நெய்வேலி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு இதயம் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட்டு வருகிறது.
- அது மட்டுமன்றி நிலக்கரிச் சுரங்கத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் தன்மை வேளாண்மைக்குப் பயன்படாத, மண்வளத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது.

> “பற்றாக்குறையைப் போக்க தனியாரிடமிருந்தும், வெளி மாநிலத்தில் இருந்தும் 5,700 மெகாவாட் வாங்கப்படுகிறது. இந்த மின்சாரத்தை வாங்கினாலும், வாங்காமல் விட்டாலும் தமிழ்நாடு தனியார் நிறுவனங்களுக்கு 3,000 கோடியைக் கட்டாயம் செலுத்தியாக வேண்டும் என்ற ஒப்பந்தம் போட்டிருக்கிறது”

மாற்று மின் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com


Clarity Version download at www.makkalarasu.com


## முன் மாதிரி




ஓடும் தொடர்வண்டியின் இருபுறமும் நவீன காற்றாடியை வைத்து ஒரு மெகாவட் மின்சாரம் அதன் மூலம் மின் உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதாகும்







# பாதிப்பில்லாப் புதிய மின் உற்பத்தி

- நீர்மின் உற்பத்தி
- காற்றாலை மின்உற்பத்தி
- சூரியசக்தி மின்உற்பத்தி
- திடக் கழிவுகளில் இருந்து மின் உற்பத்தி ஆகிய முறைகளில் மனித குலத்திற்கு எதிரான போக்குகள் இல்லை. அதனால் இவற்றில் மின்சாரம் தயாரிப்பதை நமது அரசு ஊக்கப்படுத்தும்.
- தற்போது ஒரு மெகாவாட் சூரியசக்தி (Solar) மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதற்குச் சுமார் ஒன்பது கோடி முதல் பதினோரு கோடி வரை செலவு செய்யப்படுகிறது. பராமரிப்புச் செலவும் அதிகம்.

# அரசுக்கு நட்டம் ஏற்படுவதேன்?

- மின் தயாரிப்பு இடத்தில் இருந்து பயன்படுத்தும் இடத்திற்கு மின்சாரத்தைக் கடத்திப் பகிர்ந்து வருவதில் ஏராளமான மின் இழப்பும் கசிவும் ஏற்பட்டு வருகிறது. இதனால் அரசுக்குப் பெரிய அளவில் நட்டம் ஏற்பட்டு வருகிறது. அதே போன்று தனியாரிடம் வாங்குவதிலும் முறைகேடு, அரசுக்கு நட்டம் ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

# புதிய வகை மின் உற்பத்தி

- புதிய வகை “சூரிய சக்தி ஒளிக்கற்றை’ (Cas Cad Solar Panel) மின் உற்பத்தியில் ஒரு மெகா வாட் உற்பத்தி செய்வதற்கு ஐந்து மனை நிலம் இருந்தால் மட்டும் போதுமானது.
- தற்போதுள்ள சோலார் தகட்டின்மீது புதிய வகை ஒளிக்கற்றை (ஒளி ஆடி) பொருத்துவதன் மூலம் சூரிய ஒளி பன்மடங்காக உள்வாங்கப்படும். அதனால் மின் உற்பத்தி கூடுதலாகப் பெறப்படும். தவிர எப்போது நல்ல சூரிய வெளிச்சம் இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. குறைந்த ஒளியிலும் நிறைவான உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.
- இதற்குச் சுமார் இரண்டு கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்தால் ஒரு மெகாவாட் மின் உற்பத்தியைப் பெற்றுவிடலாம். தவிர இப்போது உள்ள சூரிய ஒளி மின் உற்பத்திமுறை ‘உயர் அழுத்த மின் உற்பத்தியைக் கொண்டது அல்ல. அதனால் பெரும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த முடியாது. ஆனால் “சூரியசக்தி ஒளிக்கற்றை’ (Cas Cad Solar Panel) மின்உற்பத்தி முறை உயர் மின் அழுத்தத் தன்மை கொண்டது. பெரிய தொழிற்சாலைகளில் பயன்படுத்தலாம்.

# தொடர்வண்டிப் பாதையில் மின் உற்பத்தி


- பெரும் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலை நகரங்களில் ‘‘சூரிய சக்தி ஒளிக்கற்றை மற்றும் நவீன காற்றழுத்த மின் உற்பத்தி’’ (ElastoMecneticalFors) நிலையங்கள் அமைக்கப்படும்.
- இந்தப் புதிய முறை இரயில் தண்டவாளத்தின் மீது ஓடும் இரயிலின் இருபுறமும் நவீன காற்றாடியை வைத்து அதன் மூலம் மின் உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதாகும். இதன் மூலம் ஒரு மெகாவட் மின்சாரம் தயாரிக்கச் சுமார் மூன்று கோடி செலவாகும். இதுவும் ‘உயர்அழுத்த’ மின்சாரத்தைக் கொடுக்கும் என்பதால் தொழில் நிறுவனப் பகுதிகளில் தாராளமாக அமைத்துக் கொள்ளலாம். பதினோரு ஏக்கர் நிலத்தில் வட்டவடிவிலான இரயில் பாதையை உருவாக்கி, அதன் மீது சொந்தமாக இரயில் பெட்டிகளை உருவாக்கி, வட்டவடிவில் ஓடவிட்டு இருபுறமும்

மாற்று மின் பெருக்கம்




Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com






சூரிய சக்தி ஒளிக்கற்றைத் தகடு



> "வீடுகளுக்கான 24 மணிநேரத் தடையில்லா மின்சாரத்தை வழங்கி ஒரு யூனிட்டிற்கு வெறும் 25 காசுகளை மட்டுமே கட்டணமாக வசூலிக்கும்."

நவீன காற்றாடிகளை நிறுவி மின் உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளலாம்.

- நடுவில் இருக்கும் வெற்றிடத்தில் சூரியசக்தி ஒளிக்கற்றை முறையில் சோலார் தகடுகளை நிறுவி, அதன் மூலம் உயர் மின் அழுத்த மின்சாரத்தைத் தயாரித்துக்கொள்ளலாம். ஒரே நேரத்தில் இடத்தில் இரண்டு விதத்தில் மின் உற்பத்தியைத் தயாரிக்கும் இந்த உற்பத்தி சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத பசுமை ஆற்றல் ('கிரீன் எனர்ஜி') திட்டத்தினைக் கொண்டதாகும்.
- சூரிய ஒளித் தகட்டிற்குக் கீழாகப் பணப் பயிர் வேளாண்மையைச் செய்துகொண்டு, இதன் மூலமும் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம்.
- தமிழகத்தில் ஓடும் பல்லாயிரம் கிலோமீட்டர் நீள இரயில் பாதைகளையும் பயன்படுத்திக் கொண்டு மின் உற்பத்தியைத் தயாரித்துக் கொள்ளலாம். தமிழகத்தின் தேவைக்குப் போக மீதத்தை அருகில் உள்ள மாநிலங்களுக்கு மிகையாகவே வழங்கலாம் என்பதை **நாம் தமிழர் அரசு** செயல்படுத்தும்.

## அரசு கட்டடங்களில் எல்லாம் தயாரிக்கலாம்

- இந்தத் திட்டத்தின் படி அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் அரசு கட்டடங்களின் மேல் தளங்களிலேயேகூட மின் உற்பத்தியைச் செய்து கொள்ள முடியும். அதன் மூலம் அந்தந்தப் பகுதிகளின் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

## உழவர்களே மின் உற்பத்தி செய்யலாம்

- வேளாண் குடிமக்களே நேரடியாக மின் உற்பத்தியில் ஈடுபடும் எளிய முறையும் (Un Tapped Water Force) செயல்படுத்தப்படும். வேளாண்மைக்கான நீரை இறைக்கும் குழாயில் இந்தக் கருவியைப் பொருத்தி விட்டால் மின்சார உற்பத்தி தொடங்கிவிடும். உழவர்கள் வேளாண் விளைப் பொருட்களை உற்பத்தி செய்வதோடு, மின்சார உற்பத்தியையும் செய்து கொள்ளலாம். வேளாண் குடிமக்களிடம் இருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை அரசு விலை கொடுத்து வாங்கிக்கொள்ளும். இதனால் உழவர்களுக்கு இரண்டுவித வருவாய் கிடைக்க வழி செய்யப்படும்.

## ஒரு யூனிட் மின்சாரம் 25 காசு

- நாம் தமிழர் அரசு வீடுகளுக்கான 24 மணிநேரத் தடையில்லா மின்சாரத்தை வழங்கி ஒரு யூனிட்டிற்கு வெறும் 25 காசுகளை மட்டுமே கட்டணமாக வசூலிக்கும். இந்தியாவிலேயே மிகக் குறைந்த மின் கட்டணம் வசூல் செய்யும் மாநிலமாக தமிழகம் இருக்கும்.

## தொழிற்சாலை மின் கட்டணம் 4 ரூபாய்

- தற்போது பன்னாட்டுத் தொழிற்சாலை நிறுவனங்களுக்கு மட்டும் 24 மணிநேரத் தடையில்லா மின்சாரத்தை உத்திரவாதத்தோடு வழங்கிவிட்டு, சொந்த நாட்டின் சிறிய மற்றும் பெரிய தொழிற்சாலை நிறுவனங்களுக்குக் குறைந்த அளவு, தொடரற்ற மின்சாரத்தை வழங்கி வருகிறார்கள்.
- தங்கும் விடுதிகள், வர்த்தக நிறுவனங்களுக்கு ஒரு யூனிட் மின் கட்டணம் 7 ரூபாய் வசூலித்து வருகிறார்கள். தொழிற்சாலைகளுக்கு 12 ரூபாய் கட்டணம். நாம் தமிழர் அரசு இவர்களுக்கு ஒரு யூனிட் மின்சாரத்திற்கான மின் கட்டணம் 4 ரூபாய் என்று நிர்ணயிக்கும். இதில் மாற்றம் ஏதும் இருக்காது.

**"உழவர்களுக்கு இரண்டு வகை வருவாய் கிடைக்கும்"**

மாற்று மின் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



நெசவுத் தொழில்

# 24

சிறு மற்றும் குறுந்தொழில், மின்வெட்டினால் உற்பத்தி குறைந்து இழப்பில் நிற்கிறது. நாம் தமிழர்அரசு இதில் அக்கறை கொண்டு 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரத்தை வழங்கி ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கும்



தொழிற்சாலை



வேளாண் நிலங்களில் மின் உற்பத்தி

## ஒரு ரூபாய் மின் கட்டணம் யாருக்கு?

- சிறு மற்றும் குறுந்தொழிலை நடத்துவோர்கள் தொடர்ந்து மின்வெட்டிற்கு ஆளாகிறார்கள். அதனால் உற்பத்தி குறைந்து நட்டத்தில் நிற்கிறார்கள். நாம் தமிழர்அரசு இவர்களின் நலனில் அக்கறை கொண்டு 24 மணிநேரமும் தடையற்ற மின்சாரத்தை ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கும்.

## தனிக் கவனம் செலுத்தப்படும்

- பெரும் தொழிற்சாலைகள் நிறைந்த மற்றும் வர்த்தக நிறுவனங்கள் நிறைந்த பகுதிகளுக்கு அதன் அருகிலேயே தேவையான ‘உயர் அழுத்த’ வகை மின் உற்பத்தி நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும்.

## எளிய மக்களுக்கான மாற்றுத் திட்டங்கள்

- தற்போது உள்ள மின் உற்பத்தியில் இந்தியப் பெரும் முதலாளிகளும், நிறுவனங்களும் மட்டுமே முதலீடுகளைச் செய்து வருகிறார்கள்.. கூடவே பன்னாட்டுப் பெரிய நிறுவனங்களும் இலட்சக்கணக்கான கோடிகளை முதலீடாகக் கொட்டி வருகிறது. முதலீட்டுத் தொகையைவிட மேலும் பல ஆயிரங்கோடிகளை இலாபமாக எடுத்துச் செல்கிறார்கள்.

## நீங்களும் முதலாளி ஆகலாம்

- நாம் தமிழர் அரசு இதற்கு மாற்று திட்டத்தை நடைமுறைப்படுத்தும். பேரூராட்சி முதல் தொகுதியில் உள்ள தலைமை மின் உற்பத்தி நிலையம் வரைக்குமான ‘கூட்டுறவு மின் பண்ணை’ முறையை அமைக்கும். அதில் அரசு ஒரு தொகையை முதலீடாக வைக்கும். மீதத் தொகையை அந்தப் பகுதியில் உள்ள மக்களே முதலீடாகப் போடலாம். அவரவர் வசதிக்கேற்ற தொகையைப் போடலாம். கிடைக்கும் இலாபத்தில் அவரவர் போட்ட தொகைக்கு ஏற்ப பங்குப்பணம் வந்துகொண்டே இருக்கும். மக்களே பங்கேற்கும் முறையால் ஊழல் முறைகேடு நடக்காது.

## சிறு முதலாளிகளின் கூட்டு

- இந்தப் புதிய வகை ‘கூட்டுறவு மின் பண்ணை’ முறையில் தமிழகத்தில் உள்ள சிறு முதலாளிகள் பலர் ஒன்றாகச் சேர்ந்து முதலீடு செய்து மின் உற்பத்தித் திட்டத்தைச் செயல்படுத்தலாம். இலாபத்தை அவர்கள் பங்கிட்டுக் கொள்ளலாம். இதனால் பெரும் முதலாளிகள் மேலும் வளர்ந்து கொண்டிருப்பதைத் தடுக்க முடியும். மிகப்பெரும் முதலாளிகள் ஒரேடியாக இலாபப் பணத்தைக் கொண்டு போகும் முறை தடுக்கப்படும். இங்குக் கிடைக்கும் இலாபம் இங்குள்ள முதலாளிகளிடமும், மக்களிடமும் இருக்கும்படியான செயல் திட்டத்தை நடைமுறைப் படுத்துவோம். இதனால் பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு நிரந்தர வருவாய் கிடைத்தபடியே இருக்கும். வறுமை ஒழியும். வளமும் பெருகும்.
- இதன் மூலம் அந்தந்தப் பகுதியிலும் இளைஞர்களுக்கும், பெண்கள் அமைப்புக் குழுவினருக்கும் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்..

> “பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு நிலையான வருவாய் கிடைத்தபடியே இருக்கும்”

மாற்று மின் பெருக்கம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


நீர் நிலைகளின்மேல்
சூரியஒளி மின் உற்பத்தி

**நாம் தமிழர் அரசு வேளாண்மைக்கு மட்டும் தொடர்ந்து 24 மணிநேரமும் மும்முனை மின்சாரத்தைக் கட்டணமில்லாமல் வழங்கும்**


வேளாண் தொழிலுக்கு
தடையில்லா மின்சாரம்


கிராமந்தோறும்
துணைமின் நிலையம்


கைவினைத்
தொழில்

Clarity Version download at www.makkalarasu.com

## ஐம்பது காசு மின் கட்டணம்

- கிராமக் கைவினைப் பொருட்கள் பனை மற்றும் தென்னை உள்ளிட்ட மண்ணின் வளம் சார்ந்த சிறு தொழில் அமைப்பினர் அனைவருக்கும் ஒரு யூனிட் மின்சாரம் ஐம்பது காசுக்கு வழங்குவோம்.
- மருத்துவமனைகள் மற்றும் சேவை மையங்களின் சமூக அக்கறையைக் கண்காணித்து அவர்களுக்கு ஒரு யூனிட் மின்சாரம் 2 ரூபாய்க்கு வழங்கப்படும்.

## முற்றிலும் கட்டணமில்லா மின்சாரம்

- தற்போது உழவர்களுக்கு மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அப்படி கூறிக்கொண்டு நாள் ஒன்றுக்குச் சில மணி நேரமே வழங்கி வருகிறார்கள். அந்த மின்சாரமும் உழவர்களின் தேவையான நேரத்திற்குக் கிடைப்பதில்லை. இரவு நேரத்திலும் எப்போது வரும் எனக் காத்திருக்க வேண்டிய அவலம்தான். தொடர்ந்து மின்சாரம் கிடைத்தாலும் அது மும்முனை மின்சாரமாக இருக்காது. விளக்குகள் மட்டுமே எரிந்து கொண்டிருக்கும். நீர் இறைக்கப் பயன்படுத்த முடியாது இருக்கிறது.
- நாம் தமிழர் அரசு வேளாண்மைக்கு மட்டும் தொடர்ந்து 24 மணிநேரமும் மும்முனை மின்சாரத்தைக் கட்டணமில்லாமல் வழங்கும். எப்போது மின்சாரம் கிடைக்கும் என உழவர் பெருமக்கள் காத்திருக்க வேண்டிய அவசியமிருக்காது.
- நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண் குடிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## கிராமங்களிலும் மின் உற்பத்தி நிலையம்

- தற்போது குறிப்பிட்ட சில இடங்களில் மின் உற்பத்தி செய்து, அதைக் கிராமத்தின் கடைக்கோடி வரைக்கும் எடுத்துச் செல்லும் முறைதான் இருக்கிறது. இதனால் மின்பகிர்மான இழப்பு, மின் கசிவு இழப்பு ஏற்பட்டு வருகிறது.
- அதனால் ஒவ்வொரு பேரூராட்சியிலும் அருகில் உள்ள சிற்றூர்களை இணைத்து, அந்தந்தப் பகுதிக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் பொருட்டுத் 'துணை மின் உற்பத்தி நிலையங்களை'' அமைத்துக் கொடுப்போம். இதன் மூலம் அந்தப் பேரூராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சிற்றூர்களில் தடையற்ற மின்சாரம் கிடைக்கும். புதிய வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

## ஒவ்வொரு தொகுதியிலும்

- ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு 'தலைமை மின் உற்பத்தி நிலையம்' அமைக்கப்படும். சிற்றூர்களை உள்ளடக்கிய பேரூராட்சி மின் உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் அந்தத் தொகுதித் 'தலைமை மின் உற்பத்தி நிலையத்தோடு' இணைக்கப்பட்டிருக்கும். அதனால் அந்தத் தொகுதியில் உள்ள கடைக்கோடி கிராமமும் எளிதில் தடையற்ற மின்வசதியைப் பெற்றுக்கொள்ளும். **நாம் தமிழர் அரசு** இதற்கான நடவடிக்கையை இரண்டாண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கும்.

> "கிராமக் கைவினைப் பொருட்கள் பனை மற்றும் தென்னை உள்ளிட்ட மண்சார்ந்த சிறு தொழிலுக்கு ஒரு யூனிட் மின்சாரம் ஐம்பது காசுக்கு வழங்குவோம்"

மாற்று மின் பெருக்கம்



**போக்கு வரவுத் துறையே - நாட்டின்**
**பொருளியல் குவிக்கும் வழியே**
**ஆக்குக வெல்லும் வரைவே - தமிழர்**
**அரசு மக்கள் விழியே**

**- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்**




Clarity Version download at www.makkalarasu.com

# போக்குவரவுத்துறைக் கொள்கை

## தரமான சாலைகள் பாதுகாப்பான பயணம்

போக்குவரவு வளர்ச்சி என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்பதாகும். தரமான சாலை வசதியே நாட்டின் முன்னேற்றப் பாதைக்கு, வழியமைக்கும். இதைக் கருத்தில் கொண்டு **நாம் தமிழர் அரசு** புதிய சாலை வசதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்.

## தற்போது இருக்கும் சாலை வசதி

- நகரங்களிலேயே தரமற்ற சாலை வசதி. எங்குப் பார்த்தாலும் குண்டும் குழியுமான காட்சிகள். தரக்கட்டுப்பாடு இல்லாத சாலைகளுமாக இருக்கின்றன.
- புதிதாகச் சாலை போட்ட பிறகு, தொலைப்பேசி இணைப்பு, மின்சார இணைப்பு, கழிவுநீர், குடிநீர்க் கால்வாய் இணைப்பு ஆகியவைகளுக்காகப் பள்ளம் தோண்டிச் சாலைகளை மோசமானதாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
- மாநில தேசிய நெடுஞ்சாலைகளில் போதிய அவசரகால உதவி மருத்துவ வசதிகள் இல்லாமல் இருக்கின்றன.
- நெடுஞ்சாலைகளில் போதிய நிழல் தரும் மரங்கள் இல்லாமல் இருக்கின்றன. ஒரு மகிழுந்து (கார்) வெளியிடும் நச்சுப் புகையைக் கட்டுப்படுத்த 6 மரங்கள் தேவைப்படுகின்றன
- நெடுஞ்சாலைகளில் 100 கிலோ மீட்டருக்கு ஒரு விபத்துக் கால மருத்துவமனை இல்லாத நிலை இருக்கின்றது.

## இன்றுள்ள போக்குவரவு அவலம்

- தமிழகத்தில் தற்போது சுமார் 1 கோடியே 75 இலட்சம் வாகனங்கள் பயன் பாட்டில் இருக்கின்றது. ஆனால் அதற்கேற்ற சாலை வசதிகள் இல்லை. வாகனங்களின் பெருக்கத்திற்கு ஏற்பத் தொலைநோக்குப் பார்வையோடு சாலைத் திட்டங்கள் ஏதும் அமைக்கவில்லை
- நூறு வாகனங்கள் பயணிக்கும் பாதையில் ஆயிரம் வாகனங்கள் பயணித்துக் கொண்டிருக்கின்றன.
- நாற்பது பேர் பயணிக்கக்கூடிய பேருந்தில் குறைந்தது அறுபது முதல் எண்பது பேர் வரை பயணிக்கின்ற அவலத்தில் நெரிசல் இருக்கிறது. நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் இந்தநிலைதான்.
- காலமாற்றத்திற்கு ஏற்ற நவீன கட்டமைப்புகளைக் கொண்ட சாலைகளையும் போக்குவரவும் மாற்றாமலேயே வைத்திருக்கிறார்கள்

போக்குவரவுத்துறைக் கொள்கை



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


மிதிவண்டிகள்


மின்சாரத்தில் இயங்கும் மகிழுந்து

பிரேசில் நாட்டில் 85 சதவீத எத்தனால் 15 சதவீத பெட்ரோல் கலந்த எரிபொருளைப் பசுமை எரிபொருளாகவே பயன் படுத்துகிறது. அப்படித் தமிழகத்திலும் புதியதிட்டம் செயல்படுத்தப்படும்



எத்தனால் எரிபொருள் நிரப்பும் இடம்


மாற்றுத்திறனாளிகளுக்குக்கான தாழ்தளப் பேருந்து


நவீன இறங்கு தளம்

போக்குவரத்துறைக் கொள்கை

## சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது

- கார் மற்றும் இரண்டு சக்கரவாகனங்களின் பயன்பாட்டு எண்ணிக்கை ஒவ்வொர்ஆண்டும் கூடிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அதற்கேற்ற சாலை மேம்பாடு மாற்றுவழிகள் ஏதும் செயல்படுத்தப்படவே இல்லை.
- அதிகரிக்கும் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு அளவிற்கு மீறிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இந்தப் பாதிப்புகள் நீடித்துள்ளது.

## ஊழியர்களின் சிக்கல்கள்

- அரசு வாகனங்களின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்குக் கூடுதல் நேரப்பணி வழங்கப்படுகிறது. போதிய ஓய்வற்ற நிலையில் வாகனங்களை இயக்கும்போது விபத்துகள் ஏற்படுவதும் உயிரிழப்புகள் ஏற்படுவதும் அன்றாட நிகழ்ச்சியாக இருக்கிறது.
- போக்குவரவு ஊழியர்கள் போதிய அளவில் இல்லை. அவர்களுக்கான ஊதிய விகிதமும் குறைவானதாகவே இருக்கிறது. மக்கள் தொகைக்கு ஏற்ற பொதுவாகன வசதிகள் இல்லை.
- வாகனங்களின் இயக்கம் சுமார் 15 ஆண்டுகள் எனக் கட்டுப்பாடு வகுக்கப்படும். அதற்குப் பிறகான வாகனங்கள் தடை செய்யப்படும். இது நெரிசலான போக்குவரவைக் கட்டுப்படுத்த உதவும் நடவடிக்கையாக மாறும்.
- வாகன விற்பனையிலும் வாங்குவோரிடமும் கட்டுப்பாடுகள், விதிமுறைகள் ஏதும் இல்லை.

## பழைய பேருந்துகள் மாற்றப்படும்

- பழைய பேருந்துகள் அனைத்தும் நிறுத்தப்படும். புதிய பேருந்துகள் வாங்கப்படும். மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்பப் பொதுப் போக்குவரத்துகளின் எண்ணிக்கை கூட்டப்படும். பேருந்துகள், பொதுவாகனங்கள் அனைத்திலும் கதவுகள் கணினிக் கட்டுப்பாட்டில் இருக்கும். படிக்கட்டுப் பயணங்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் மரணங்கள் தவிர்க்கப்படும்.

## நகரங்களில் சிற்றுந்து

- நகரங்களில் நெரிசலைக் குறைப்பதற்கு அதிக சிற்றுந்துகள் இயக்கப்படும். தொலைதூரப் பயணத்திற்கு பேருந்துகள் பயன்படுத்தப்படும். பெரு நகரங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட மாட்டாது.

## மின் சக்தி வாகனங்கள்

- பேருந்துகள் அரசு வாகனங்கள் அனைத்தும் சூரிய ஒளி மின்சக்தியில் இயங்கக்கூடியதாக மாற்றி அமைக்கப்படும். ஒவ்வொரு பேருந்து நிலையத்திலும் மின்கலன் சேமிப்பு மையம் அமைக்கப்படும். இதன் மூலம் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கமுடியும். இதனால் நகரங்களில் உள்ள கரியமிலக் காற்றின் அளவு குறைக்கப்படும்.

## புதிய கட்டுப்பாடுகள்

- வாகனங்களை வாங்குவோர் அதை நிறுத்துவதற்கான இடத்தை வைத்திருக்க வேண்டும். வீட்டில் அதற்கான இடம் இருக்கிறதா என்பதை உறுதி செய்யத் தனிப்பிரிவு உருவாக்கப்படும். அவர்கள் ஆய்வு செய்து சான்றளித்த பிறகுதான் வாகனங்களை விற்க அனுமதிக்கப்படும். சாலைகள் மற்றும் பொது இடங்களில் வாகனங்களை நிறுத்த அனுமதி இல்லை. பாதுகாப்பிற்காகக் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும்.
- எல்லா அரசுப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



சாலைத் தொடர் வண்டி

பிரேசில் நாட்டில் 85 சதவீத எத்தனால் 15 சதவீத பெட்ரோல் கலந்த எரிபொருளைப் பசுமை எரிபொருளாகவே பயன் படுத்துகிறது. அப்படி தமிழகத்திலும் புதியதிட்டம் செயல்படுத்தப்படும்



நடைபாதை வியாபாரிகளுக்கான கடைகள்



வாகன நிறுத்த அடுக்ககம்



கணினி பயண அட்டை



நெடுச்சாலையும்-கண்காணிப்பும்

# நவீன வாகன நிறுத்தங்கள்

- ஒவ்வொரு பகுதியிலும் சாலை ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்கள் கணக்கெடுக்கப்படும். அதற்கேற்ப அந்தப் பகுதியிலேயே அரசு செலவில் அடுக்கு மாடி வாகன நிறுத்தக் கட்டட வசதிகள் அமைக்கப்படும். வாகனங்கள் நிறுத்த இடமில்லாதவர்கள் அந்த இடங்களில் குறைந்த மாதாந்திரக் கட்டணத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் சாலைகள் அனைத்தும் போக்குவரவுக்கும், நடப்பதற்குரியதாக மட்டுமே பயன்படும்.

# சிறு வணிகர்களுக்கு மாற்று இடம்

- சாலை ஓரங்களில் இருக்கும் சிறுவியாபாரிகளுக்கு அந்தந்தப் பகுதியிலேயே தனியாக ஒரு இடத்தைத் தேர்வு செய்து கடைகள் கட்டி மிகக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படும். அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாது, பாதசாரிகளும் பாதிக்கப்படமாட்டார்கள்.

# மீண்டும் டிராம் வண்டி

- நகரங்களில் உள்ள சாலைகளின் நடுவே மீண்டும் சாலைத் தொடர்வண்டி (டிராம்வண்டி) இயக்குவது குறித்து ஆய்வு செய்யப்படும். ஏதுவான இடங்களில்அது நிறைவேற்றப்படும். இதன் மூலம் பொதுப்போக்குவரவு அதிகமாகும். நெரிசலும் குறையும்.

# சுங்கச் சாவடிக்குத் தடை

- தமிழகத்தில் இருக்கும் அனைத்துச் சுங்கச்சாவடிகளும் நிரந்தரமாக மூடப்படும். வேறு எந்த வடிவிலும் சுங்கவரி வசூல் இருக்காது. அதற்கான நடவடிக்கையை **நாம் தமிழர் அரசு** எடுக்கும்.

# ஒருங்கிணைந்த போக்குவரவு

- ரோம்நகர், செனிவா உள்ளிட்ட இடங்களில் இருப்பது போல் ஒரே பயணச்சீட்டில் நகரப்பேருந்து, சாலைத் தொடர்வண்டி (டிராம்வண்டி) மெட்ரோ தொடர்வண்டி ஆகிய அனைத்திலும் பயணம் செல்லும்படி; தமிழகத்திலும் முக்கிய நகரங்களின் போக்குவரவு முறையை மாற்றி அமைப்போம்.

# மதுரவாயில் மேம்பாலம்

- வணிகம் மற்றும் போக்குவரவு வசதிகளை மேம்படுத்த நிலுவையில் உள்ள மதுரவாயில் மேம்பாலத் திட்டம் உடனடியாக முடித்துவைக்கப்படும். இதனால் துறைமுகத்தில் இருந்து வெளி மாநிலங்களுக்கான போக்குவரவு, சென்னைக்குள் நெரிசலை ஏற்படுத்தாமல் அமையும்.

# நடத்துநர்கள் இல்லாப் பேருந்து

- அரசுப் பேருந்துகளில் இப்போது பணியில் இருக்கும் நடத்துநர்கள் அதே வேலையில் தொடர்வார்கள். அவர்களுக்குப் பதிலாக இனி மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் பணியமர்த்தப்படுவார்கள். பேருந்துநிலையம், பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் பயணக் கணினி அட்டை வழங்கும் பணி இவர்களுக்கு வழங்கப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

# முன் மாதிரி


சாலை ஓரங்களில் நீர்த்தேக்கம்


மாநகரத் தொடர் வண்டி


தூரிய ஒளி மின்சக்தியில் இயங்கும் தானி


நவீன வசதிகளைக் கொண்ட சிற்றுந்து


தூரிய ஒளித்தட்டில் சாலை

Clarity Version download at www.makkalarasu.com

## கரும்புக் கழிவில் எரிபொருள் (எத்தனால்)

- தமிழகத்தில் அதிகம் கிடைக்கும் கரும்புக் கழிவிலிருந்து எடுக்கப்படும் எத்தனாலை எரிபொருளாகப் பயன்படுத்தாமல் இருந்து வருகிறார்கள். பிரேசில் நாட்டில் 85 சதவீத எத்தனால் 15 சதவீத பெட்ரோல் கலந்த எரிபொருளைப் பசுமை எரிபொருளாகவே பயன்படுத்துகிறார்கள். அப்படித் தமிழகத்திலும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

## தானியங்கிக் கதவுகள் கணினி மயம்

- அந்தப் பயண அட்டையைத் தானியங்கிக் கதவுகளில் பொருத்தினால் கதவு திறக்கும். இறங்க வேண்டிய இடத்தை ஒலி பெருக்கி அறிவித்தபடி இருக்கும். பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நிலையங்களில் அலுவலகம் அனைத்தும் கணினி மயப்படுத்தப்படும். அங்குள்ள மின் திரைகளில் எந்தப் பேருந்து எங்கே வந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்ளலாம்.

## சிற்றுந்துகள் அதிகரிக்கப்படும்

- பெரு நகரத்தின் போக்குவரவு நெரிசலை மேலும் கட்டுப்படுத்த வேண்டி சிற்றுந்துகள் நிறைய விடப்படும். எல்லா வழித் தடங்களிலும் ஐந்து நிமிடத்திற்கு ஒருமுறை சிற்றுந்துகள் விடப்படும். இதில் பெண்களுக்கான சிற்றுந்துகள் அதிகம் விடப்படும். குறிப்பாகக் காலை, மாலை, வேலை நேரங்களில் அதிக சிற்றுந்துகள் இயக்கப்படும். இதனால் பொதுப் போக்குவரவு விரைவாக இருக்கும். தனி வாகனங்களைப் பயன்படுத்துவோர் இதை அதிகம் பயன்படுத்திக் கொள்வார்கள்.

## நகரத் தொடர் வண்டி (மெட்ரோ ரயில்)

- மெட்ரோ ரயில் (நகரத் தொடர்) வண்டியின் பயன்பாட்டை மக்கள் அதிகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டி அதன் கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்படும். தொடர்வண்டி நிர்வாகத்திற்கு ஏற்படும் நட்டத்தை அரசு நிர்வாகம் ஈடு செய்யும். அரசு வாகனங்களைப் பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும்போதுதான், அதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும் போதுதான் நகரின் போக்குவரவு நெரிசல் குறையும்.

## சாலைகள் மேம்பாடு

- சாலைகள் அனைத்தும் உலகத் தரம் வாய்ந்த முறையில் அமைக்கப்படும். மண்ணை நஞ்சாக்கும் நெகிழிகள் எல்லாம் சேகரிக்கப்பட்டுச் சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். அந்தச் சாலைகளில் இருபுறமும் மழைநீர் வழிந்தோடும் வகையில் நீர்வழிகள் ஏற்படுத்தப்படும். நகரங்களில் எங்கெல்லாம் நீர்ச்சேமிப்பு இடங்களுக்கு வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் இந்தச்சாலை நீர் தேக்கப்படும்.

## சாலை ஓரங்களில் சிறுகுளங்கள்

- தேசிய, மாநில, கிராமச் சாலைகளின் இருபுறமும் நீர் வழிப்பாதைகள் கட்டாயம் அமைக்கப்படும். ஒவ்வொரு அரை கிலோமீட்டர் தூரத்திலும் சிறுசிறு குட்டைகள் வெட்டப்படும். சாலைகளில் வழியும் மழைநீர் அந்தக் குட்டைகளில் தேக்கப்படும்.

> **“உலகத் தரம் வாய்ந்த முறையில் சாலைகள் அமைக்கப்படும். நெகிழிகளை எல்லாம் சேகரித்துச் சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும்”**



Clarity Version download at www.makkalarasu.com

## முன் மாதிரி




சாலை ஓரங்களில்
மூங்கில் வளர்ப்பு



சாலை ஓரங்களில்
ஆலமரம் வளர்ப்பு



சாலை ஓரங்களில்
அரச மரம் வளர்ப்பு



நிலத்தடி
போக்குவரவு

Clarity Version download at www.makkalarasu.com

## நவீனக் கழிப்பிட வசதிகள்

- தமிழகத்தின் அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் கட்டணமில்லா நவீனக் கழிப்பிட வசதி அமைந்துத் தரப்படும். பயணிகளின் அடிப்படைத் தேவையான கழிப்பிடங்கள் மேம்பட்ட முறையில் பராமரிக்கப்படும். இப்போதைய ஆட்சியில் இருக்கும் மோசமான கழிப்பிடக் கட்டிடங்கள் **நாம் தமிழர் ஆட்சியில்** இருக்காது.

## இருபுறமும் நிழல் தரும் மரங்கள்

- போக்குவரவுச் சாலையின் இருபுறமும் நிழல் தரும் மரங்கள் கட்டாயம் நட்டு வளர்க்கப்படும். தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் உள்ள தோட்டப் பகுதியில் செடிவகைகள் மட்டுமே வளர்க்கப்படுகிறது. அதற்கு மாற்றாக நிழல் தரும் புங்கைமரம், வேப்பமரம் உள்ளிட்ட கன்றுகளை நட்டு வளர்ப்போம். குறிப்பாக ஒவ்வொரு அரை கிலோ மீட்டருக்கும் ஓர் அரசமரமும் ஆலமரமும் கட்டாயம் வளர்க்கப்படும்.

## உயிர்க் காற்றைத் தரும் மரங்கள்

- அரசமரம், ஆலமரம் இரண்டும் 24 மணி நேரமும் உயிர்க்காற்றை (ஆக்ஸிஜன்) வெளியிடக் கூடியதாகும். அதனால் ஊருக்குள்ளும் வெளியே சாலைகளின் ஓரமும் அரை கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு மரத்தை நட்டு வளர்ப்பதை முதல் கடமையாக முடிப்போம்.

## உயிர்க்காப்பு ஊர்திகள்

- தேசிய மாநில நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 100 கிலோமீட்டருக்கும் உயிர்க்காப்பு ஊர்தி வாகனங்களுடன் கூடிய அவசர சிகிச்சை மருத்துவ மையம் அமைக்கப்படும்.. விபத்துகளில் சிக்கியவர்களை உடனடியாக மீட்டு அந்த மருத்துவமனைகளில் முதலுதவி சிகிச்சைகளைக் கொடுத்து அருகில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்குக் கொண்டு போக நடவடிக்கை எடுக்கப்படும்.
- புதிய நகரங்களை உருவாக்கும் போது சாலை வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்படும் சாலைகள் பசுமைக் காப்பகச் சாலையாகவும் இருக்கும்.

## ஊழியர்களின் பிரச்சனைகள்

- ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு எட்டு மணி நேரம் மட்டுமே வேலை நேரம். ‘கூடுதல் வேலை நேரம்’ என்பது வழங்கப்பட மாட்டாது. இவர்களுக்கான புதிய குடியிருப்புகள் அமைத்துத் தரப்படும். ஊதிய உயர்வுப் பிரச்சனைகள் அனைத்தும் பேசி முடிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். அரசு ஊழியர்களுக்கான அனைத்து வசதிகளும் போக்குவரவு ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

> “அரசமரம், ஆலமரம் இரண்டும் 24 மணி நேரமும் உயிர்க்காற்றை (ஆக்ஸிஜன்) வெளியிடக் கூடியதாகும். அதனால் ஊருக்குள்ளும் வெளியேவும் அரை கிலோ மீட்டருக்கு ஒரு மரம் நடப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com

## கூவம் ஆற்றைத் தூய்மை செய்து, இலண்டன், சிங்கப்பூர் நகரங்களைப் போல் சென்னையையும் படகுப் போக்குவரவு நகரமாக மாற்றுவோம்



கூவம் ஆற்றில் சுற்றுலாப் போக்குவரவு (மாதிரி)



போக்குவரவு பயிற்சி மையம்



கடல்வழி போக்குவரவு



பள்ளியில் போக்குவரவுப் பாடம்

Clarity Version download at www.makkalarasu.com

- புதிதாகப் போடப்படும் சாலைகள் குறைந்தது ஓராண்டிற்கு உறுதிகுலையாத தன்மையுடன் இருக்க வேண்டும். அதற்குள் சிதைவுகள் ஏற்பட்டால் (பேரழிவுகள் ஏதுமின்றி) சாலைகளைப் போடும் நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும். அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாரீஸ் போன்ற நகரங்களில் மேம்பாலங்களை விடக் கீழ்ப்பாலங்களே சிறப்பாகச் செயல்படுகின்றன. கீழ்ப்பாலங்கள் மந்திரப் பெட்டிகள் தொழில்நுட்பம் எனப்படும் ஆயத்த நிலைப் பெட்டிகளைக் கொண்டு கட்டமைப்பதால் சாலைகள் போடுவதில் ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. தமிழகத்திலும் அதுபோன்ற பாலங்கள் தேவையான இடங்களில் அமைக்கப்படும்.

## கூவம் ஆறு தூய்மைப் படுத்தப்படும்

- தமிழகத்தில் நீர் வழிப் பாதைகளுக்கான சாத்தியங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்படும். சென்னைக்குள் ஓடும் கூவம் நதியைச் சுத்தம் செய்து அதில் பழையபடி பயணிகள் சரக்குப் படகுப் போக்குவரத்தைச் செயல்படுத்துவோம். கூவம் நதியில் கலந்து வரும் கழிவுநீர் தடுக்கப்படும். நதியின் இருபுறமும் பெரிய குழாய்கள் அமைக்கப்படும். அந்தக் குழாய்கள் மூலம் கழிவு நீர் கடலுக்குள் கொண்டு செல்லப்படும். இதனால் கூவம் நதி சுத்தமாக மாறும். பழையபடி போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதோடு, படகுச் சுற்றுலாத் தலமாகவும் மாற்றப்படும். இலண்டன், சிங்கப்பூர் நகரங்களைப் போலச் சென்னையையும் படகுப் போக்குவரத்து நகரமாக மாற்றுவோம்..

## கடலோர நீர் வழிப்பாதை

- கடலோரப் பகுதிகளில் புதிய நீர் வழிப் போக்குவரவு உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் கடலோர மாவட்டங்களின் பொதுப் போக்குவரவும் சரக்குப் போக்குவரவும் எளிமையாக்கப்படும். சாலை வழிப் போக்குவரவில் உள்ள நெருக்கடி குறையும்.
- விருதுநகர் மாவட்டம் இராசபாளையத்தில் தேனிக்குச் செல்ல வேண்டும் என்றால் தற்போது 182 கி.மீ. தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டியதாக இருக்கிறது. மத்திய வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பிளவக்கல் அணை அருகேஇருக்கும் பட்டுப் பூச்சி கிராமத்தில் இருந்து வருசநாடு காமராசர்புரம் வரையிலுமான எட்டுக் கிலோ மீட்டருக்குச் சாலை போட நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் 99 கிலோ மீட்டர்ச் சுற்றுப் பாதை குறையும். அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

## ஓட்டுநர் உரிமம் பெறுவதில் மாற்றம்

- ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பம் செய்வோருக்கு 4 வாரக் காலத்திற்குப் பயிற்சி வகுப்புகள் அரசுச் செலவில் நடத்தப்படும். வாகனங்களை ஓட்டுவது, போக்குவரத்து விதி முறைகளைக் கற்பது, முதலுதவிப் பயிற்சியைப் பெறுவது உள்ளிட்ட வகுப்புகள் நடத்தப்படும். அதன் பிறகுதான் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும்.

## போக்குவரவு செம்மைப்படுத்தப்படும்

- மாணவர்களுக்குப் பள்ளிப் பருவத்திலேயே போக்குவரவு விதிமுறைகள் பற்றிய அனைத்தையும் கற்றுக் கொடுத்து விடவேண்டும். கல்லூரிக் காலகட்டத்தின்போது போக்குவரவில் உதவியாகப் பணியாற்றிச் சான்றுகளைப் பெறவேண்டும். இப்படித் தொடக்கத்திலேயே போக்குவரவு விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ளும் அடுத்த தலைமுறைப் பிள்ளைகள்தான் போக்குவரவு நெறிமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவார்கள். அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் சொல்லித்தருவார்கள்.



Clarity Version download at www.makkalarasu.com

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு - தமிழ்மறை (466)



# மனிதர்கள் இல்லாமல் மரங்கள் வாழும் மரங்கள் இல்லாமல் மனிதர்களால் வாழவே முடியாது



Clarity Version download at www.makkalarasu.com

# பத்தாண்டுப் பசுமைத் திட்டம்

இந்த உலகம் உன்னுடையது அல்ல. உன் பிள்ளைகளுக்கு உரியது. கோடி கோடியாகப் பணம் சேர்த்து அவர்களுக்கு வைக்க வேண்டாம். விலை உயர்ந்த மகிழுந்துகளை (கார்) வாங்கி வைக்க வேண்டாம். வானுயர்ந்த மாளிகையை வாங்கி வைத்துவிட்டுப் போக வேண்டாம். இந்தப் பூமியை அவர்கள் வாழ்வதற்கு ஏதுவான ஒன்றாக விட்டுவிட்டுச் செல்லுங்கள்.

## மரம்

- **“மனிதர்கள் இல்லாமல் மரங்கள் வாழும்., மரங்கள் இல்லாமல் மனிதர்களால் வாழவே முடியாது.”**
- ஒவ்வொரு உயிரினத்திற்குமான உயரிய தேவை, தூய குடிநீர், தூயக் காற்று, தூய சுற்றுச் சூழல்.
- மரம் மண்ணின் வரம். வீசுகின்ற காற்றை மூச்சுக் காற்றாக மாற்றித் தருகின்ற அரிய பணியை மரங்கள் செய்கின்றன.
- ஒரு மகிழுந்து (கார்) வெளியிடுகின்ற நச்சுப் புகையைச் சுத்தப்படுத்த 6 மரங்கள் தேவைப்படுகிறதென்று ஆய்வுகள் சொல்கின்றன.
- மரங்களின் பேயான சீமைக் கருவேல மரம், தைல மரம் ஆகியவற்றை வேரோடு வெட்டி எடுத்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக மா, புளி, வேங்கை, புங்கை, மூங்கிள், ஆலமரம், அரசமரம் ஆகிய மரக்கன்றுகள் நடப்படும். நாவல்மரம், ஆலமரம், அரசமரம் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் நடப்படும். காரணம் இந்த மரங்கள்தான் தொடர்ந்து 24 மணி நேரமும் மூச்சுக் காற்றை (ஆக்சிஜன்) வெளியிடுகிறது.
- ஆறு, குளம், ஏரிக் கரையோரங்களில் தேக்கு, சவுக்கு, பனை போன்ற மரங்கள் நடப்படும். பத்தே ஆண்டுகளில் பசுமைத் திட்டத்திற்காகச் சிறப்புக் கூறுகள் வகுக்கப்படும். இதற்கென அரசு ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். இந்த மண்ணைக் காப்பதும், மீட்டெடுப்பதும் மண்ணின் பிள்ளைகளுக்குக் கடமையாகிறது. அதை நாம் தமிழர் அரசு செய்து முடிக்கும்..

> “பிறக்கும் குழந்தைக்குப் பெயரை பிறகு வை. பிறந்த குழந்தைக்குக் பரிசாக ஒரு மரக்கன்றை முதலில் நட்டு வை”

பத்தாண்டுப் பசுமைத் திட்டம்



Clarity Version download at www.makkalarasu.com

முன் மாதிரி




## விளம்பரங்களுக்குத் தடை

- பத்தே ஆண்டுகளில் பசுமைத் திட்டத்திற்கு பெருந் தடையாக நிற்பது விளம்பர பதாகைகளும் சுவரொட்டிகளும்தான்.. ஊர்தோறும் நினைத்த இடங்களில் நெகிழிப்பலகை விளம்பரங்கள் வைப்பதை நாம் தமிழர் அரசு முற்றாக தடை செய்கிறது. பொது மற்றும் தனியார் இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டக்கூடாது. நெகிழிப் பதாகைகள் வைக்கக்கூடாது. ஒவ்வொரு பகுதிக்கும் குறிப்பிட்ட ஒரு இடம் ஒதுக்கப்படும். அந்த இடங்களில்தான் சுவரொட்டியோ, பதாகைகளோ வைத்துக்கொள்ள வேண்டும். அனுமதிக்கப்படாத இடங்களில் விளம்பரம் செய்தால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## கழிவு மேலாண்மை

- பழந்தமிழர்கள் குப்பை மேலாண்மையில் சிறந்து விளங்கினார்கள். எந்த கழிவு பொருட்களையும் வீணடிக்காமல் நூறு சதவீதம் மறு சுழற்சி முறையில் பயன்படுத்தினார்கள். கழிவு மேலாண்மையை பொருத்தவரை தமிழகம் இன்று பின்தங்கியிருக்கிறது. மட்கும் திடக்கழிவில் இருந்து இயற்கை உரங்கள், எரிவாயு உள்ளிட்ட அனைத்தையும் தயாரித்துக்கொள்ளும் முறை இப்போது குறைவாகவே இருக்கின்றது. நாம் தமிழர் அரசு இதை கிராமங்கள் தோறும் விரிவாக்கம் செய்யும்.

- அழிக்க முடியா, மட்காத நெகிழி, குழைமம்( ப்ளாஸ்டிக்) போன்ற திடக்கழிவை முற்றாக எரிபொருளாக பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாம். மறுசுழற்சி செய்து சாலைகள் போடலாம். இதற்கு உதாரணமாக சுவீடன் நாடு உள்ளது. மொத்தக் கழிவுகளில் இருந்து 95 சதவீத்த்தை மறுசுழற்சி செய்து இயற்கை உரம், மின் உற்பத்தி என பயன்படுத்துகிறார்கள். நாம் தமிழர் அரசு அந்த புதிய முறைகளை நடைமுறைப்படுத்தும். தூய்மையான நகரத்தை உருவாக்கும்.



Clarity Version download at www.makkalarasu.com




## பசுஞ்சோலைத் திட்டம்

- கிராமம் தோறும் பசுஞ்சோலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். ஏற்கனவே இருக்கின்ற பள்ளி வளாகங்கள், அரசுக் கட்டடங்கள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்தும் பசுஞ்சோலையாக மாற்றப்படும். புதியதாக அமைக்கப்படும் மருத்துவப் பண்ணைகள், அரசின் புதிய கட்டடங்கள் அனைத்தும் பசுஞ்சோலைகளுக்கு நடுவே உருவாக்கப்படும். கட்டமைப்பின் போதே அரசு கட்டடங்களின் மீது புதிதாகச் சூரியஒளி மின் உற்பத்திக்கான வசதிகளோடு கட்டப்படும். ஒவ்வொரு கிராமச் சாலையிலும் மரங்கள் வளர்க்கப்படும். அதற்கென்ற ஊழியர்கள் அந்தந்தக் கிராமங்களில் இருந்தே நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்படும்.

## மருந்துகளைத் தவிர்க்க மரம் வளர்ப்போம்

- “பிறக்கும் குழந்தைக்குப் பெயரைப் பிறகு வை. பிறந்த குழந்தைக்குக் பரிசாக ஒரு மரக்கன்றை முதலில் நட்டு வை”. என்று ஊக்கப்படுத்தப்படுவார்கள்.
- மரங்களும் அதன் தேவைகளும் என்ன என்பதைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். வருகின்ற தலைமுறைப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் மரங்களை நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம்.
- ஒவ்வொரு நபருக்கும் ஒரு மரம் என்று நட்டு வளர்த்தாலே சுத்தமான காற்று, வளமான மண் என்றாகிவிடும். நோயற்ற வாழ்வின் தொடக்கமாக இருக்கும்.



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



பறவைகள் சரணாலாம்



பெண்கள் தாய் வீட்டிற்கு வந்து மகப்பேறு பார்த்துக்கொண்டு திரும்புவதுதான் தமிழர்களின் மரபு. அதுபோலத்தான் பறவைகளும்



காடுகளில் எந்த மரமும் மனிதன் நட்டதில்லை. எல்லாம் பறவைகள் இட்ட எச்சங்களால் விளைந்தவை தான்

## பாடத்திட்டத்தில்



*உண்ணக் கனி,*
*ஒதுங்க நிழல்,*
*உடலுக்கு மருந்து,*
*உணர்வுக்கு விருந்து,*
*அடையக் குடில்,*
*அடைக்கக் கதவு,*
*அழகு வேலி,*
*ஆடத் தூளி,*
*தடவத் தைலம்,*
*தாளிக்க எண்ணெய்,*
*எழுதக் காகிதம்,*
*எரிக்க விறகு,*
*மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான் !*
*மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான் !!*

என்ற மரங்களைப் பற்றிய விழிப்புணர்வுக் கவிதையை அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் நன்னூல் பாடமாகச் சேர்க்கப்படும்.



மரங்களைப் பற்றி எழுதிய கவிப்பேரசு வைரமுத்து அவர்களின் கவிதை

## பறவைகளின் வாழ்விடம்

- நல்ல நிழலும், பழங்களும் கொண்ட மரங்களில் தான் பறவைகள் அதிகமாக வந்து தங்கும். அதற்கேற்ப நாவல்மரம், புங்கை மரம், வேப்பம் மரம், அத்திமரம், அரச மரம் என பழங்களைக் கொடுக்கும் மரங்களாகக் கிராமங்களைச் சுற்றி வளர்க்கப்படும். ஏனென்றால் பறவைகள் இல்லை என்றால் உயிர்களின் சுழற்சி இல்லை.

- காடுகளில் எந்த மரமும் மனிதன் நட்டதில்லை. எல்லாம் பறவைகள் இட்ட எச்சங்களால் விளைந்தவை தான். மரத்தின் விதைகளைப் பறவைகள் உண்டுக் கழிவை வெளியிடும்போது அரச மரமும் ஆல மரமும் முளைக்கிறது. எனவே சுற்றுச்சூழல் நண்பனான மரங்களைப் பாதுகாப்போம்.

## பறவைகளின் தாய்வீடு

- பறவைகள் எங்கு வந்து தங்குகிறதோ அது மிகுந்த பாதுகாப்புடன் கண்காணிக்கப்படும். குறிப்பாக வெளி நாடுகளில் இருந்து வருகின்ற பறவைகளை, 'வெளிநாட்டுப் பறவைகள்' என்பதை நாம் தமிழர் அரசு ஏற்கவில்லை. பெண்கள் தாய் வீட்டிற்கு வந்து மகப்பேறு பார்த்துக்கொண்டு திரும்புவதுதான் தமிழர்களின் மரபு. இராமநாதபுரத்தில் தண்ணீர் இருப்பது சைபீரிய, ஆஸ்திரேலியா, சுவிசர்லாந்து நாட்டு பறவைகளுக்குத் தெரிய வாய்ப்பில்லை. காலம் காலமாகத் தாய் நிலமான தமிழ் நாட்டிற்குக்கு வந்து முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அவற்றோடு பறந்துவிடுகிறது. ஆமைகளும் பறவைகளும் மரபைக் கடைப்பிடிக்கின்றது. தனது தாய் நிலத்திற்கு வந்து போகும் பறவைகள் மிகுந்த அக்கறையுடன் பாதுகாக்கப்படும்.

## மரங்களை வெட்டக் கட்டுப்பாடு

- மனிதனை வெட்டிக் கொலை செய்வது எவ்வளவு பெரிய கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறதோ அதைப் போல் மரங்களை வெட்டுவதும் பெருங்குற்றமாக கருதப்படும்.

- அதனால் ''**நூறு மரம் நட்டு ஒரு மரம் வெட்டு**'' என்ற சட்டம் கொண்டு வரப்படும்.

- மரம் வெட்டுவதற்குத் தேவை இருக்குமேயானால் நூறு மரம் நட்டதற்கான சான்றுகளை, அருகில் இருக்கின்ற வட்டாட்சியர், அரசு அலுவலரிடம் காட்டி அனுமதியைப் பெற்று ஒரு மரம் வெட்டிக் கொள்ளலாம். சம்பந்தப்பட அதிகாரி நேரில் ஆய்வு செய்த பிறகே மரங்கள் வெட்ட அனுமதிக்கப்படும்.

- மரங்களை நட்டு வளர்க்கின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அரசு ஊக்கப்படுத்தி உதவித்தொகையும் வழங்கும்.

- இரத்த தானம், உடல் தானம் செய்கின்றவர்களுக்கு 'தமிழ் நற்குடி' என்றத் சான்றுகள் கொடுப்பதைப் போல, அதிக மரங்களை நட்டு சாதிப்பவர்களுக்கு, 'பசுமை நாயகன்', 'பசுமை நாயகி' பட்டமளித்துப் பாராட்டப்படுவார்கள்..

- மண்ணின் மீது அக்கறை கொண்டு, ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மரங்களை நட்டு வளர்த்து கொண்டு வருகின்ற பெருமக்களுக்கு, 'நற்குடிச் சான்றும்', தமிழ்த் தேசியச் சிறந்த குடிமகன் விருதும் வழங்கிப் பாராட்டப்படும்.

> "தனது தாய் நிலத்திற்கு வந்து போகும் பறவைகள் மிகுந்த அக்கறையுடன் பாதுகாக்கப்படும்"

பத்தாண்டுப் பசுமைத் திட்டம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## தூய்மைத்தொழிலார்களின் அவலம்











# தூய்மைப் பொறியாளர்

## மனிதக் கழிவை மனிதர்களே அள்ளுவது கொடுமை அதை மாற்ற வேண்டியது நமது கடமை

- நவீன அறிவியல் வளர்ச்சி வந்துவிட்ட இக்காலகட்டதிலும், மனிதக் கழிவை மனிதனே அகற்றும் இழிநிலை தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இத்தகையான தொழிலாளர்களின் நலனைக் காப்பதாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் பேசிய திராவிடக் கட்சிகள் அம்மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. எனவே இனியும் மனிதக் கழிவை மனிதர்களே அகற்றும் முறை முற்றாக தடை செய்யப்படும். அவர்களுக்கு நவீனக் கருவிகளுடன் 100 விழுக்காடுஅரசுப்பணி வழங்கப்படும்.
- ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சார்ந்தவர்களை மட்டும் தூய்மைப் பொறியாளராகப் பயன்படுத்திவரும் முறை தடை செய்யப்படும்.

## உயர்ந்த சம்பளம்

- தூய்மைப்படுத்தும் பொறியாளராக அனைவரும் பயன்படுத்தப்படுவர். அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கப்படும். இதன்மூலம் தூய்மைப் பொறியாளார் பணி பெருமைக்குரிய பணியாகக் கருதப்படும்.
- நவநாகரிக வாழ்க்கையில் முன்னை விட அதிகமாகக் குப்பைகள் சேர்கின்றது. கழிவுமேலாண்மை என்பது தமிழ் நாட்டில் இன்னும் வளர்ச்சி அடையாமால் இருக்கிறது. கழிவுகளும் குப்பைகளும் சரிவர அகற்றப்படாமல் இருப்பதால் சாலைகளும் தூய்மையற்றுக் கிடக்கிறது, தேங்கிக்கிடக்கும் குப்பையால் தொற்று நோய்களும் ஏற்படுகிறது.

## நச்சுக் கழிவுகள்

- மக்கும் குப்பைகளைவிட தொழிற்சாலைக் கழிவுகள் மிகவும் அபாயமானது மேலும் நச்சுத்தன்மை உடையது. அது நிலத்தையும் தண்ணீரையும் பாழ்படுத்துகிறது. சுத்தமான நீர் ஓடிக்கொண்டிருந்த சென்னையின் கூவம் ஆறு பாழ்பட்டுப்போனதற்கு பாதித் தொழிற்சாலைகளின் கழிவுகள் கலந்த்தும் காரணம். தொழிற்சாலைகளின் கழிவுகளைத் தனியாகப் பிரித்து, அதை மீண்டும் சுத்திகரிப்பு செய்து வெளியிட வேண்டிய கண்காணிப்பு அமைக்கப்படும்.

> “மக்கும் குப்பைகளைவிட தொழிற்சாலைக் கழிவுகள் மிகவும் அபாயமானது மேலும் நச்சுத்தன்மை உடையது”

தூய்மைப் பொறியாளர்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


கழிவிலிருந்து
மின்சார உற்பத்தி (சுவீடன்)

## முதன்மை நாடு

- கழிவு மேலாண்மையில் உலகத்திலே சிறந்து விளங்குகின்ற நாடு சுவீடன், இந்த நாட்டில் மொத்தக் குப்பைகளிலிருந்து
- **மறுசுழற்சி (25 விழுக்காடு)**
- **குப்பையிலிருந்து மின்சாரம் (55 விழுக்காடு)**
- **கழிவுகளிலிருந்து உரம் தயாரித்தல் (15 விழுக்காடு)**
- வெறும் 5 விழுக்காடு குப்பைகளை மட்டும் பயன்படுத்துவதில்லை என்ற முறையில் திடக் கழிவுகளைக் கையாண்டு வருகிறது. அந்த முறையை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.

## நவீன பாதுகாப்பு உடைகள்

- தமிழகத்தின் பிற பகுதிகளில் ஆறுகளில், நீர் நிலைகளில், பொது இடங்களில் கலக்கப்படும் தொழிற்சாலை நச்சுக்கழிவுகள் கலப்பதை முற்றாகத் தடுப்போம். இதற்கென்று தனிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். தேங்கிய கழிவுகளை அகற்றும்போது நச்சுக்காற்று தாக்கித் தொழிலாளர்கள் இறக்கும் அவலம் இனியும் இருக்காது. உயிர் சேதத்தைத் தவிர்க்க இதற்கென்று முழுப்பாதுகாப்புடன் கூடிய உடைகள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும்.

## மறு சுழற்சி முறை

- குப்பைகளை சேகரிக்கின்ற போது, மக்கும் தன்மையுடையது, மக்காதது, இரசாயண கலவையானது எனத் தரம் பிரித்து எடுக்கும் முறையில் அக்கறை செலுத்தப்படும். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கட்டமைப்பு உருவாக்கப்படும். இப்படிப் பிரித்தாளுவதுதான் கழிவுகளை மறு சுழற்சி செய்வதை எளிமையாக்க முடியும்.



# நாம் குடியிருக்கும் தெருவைக் கூட்டுவோம் தேசம் தானாய் சுத்தமாகும்

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

**ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை** - தமிழ்மறை (541)




# பெண் காவலர்களுக்கு 6 மணி நேரவேலை
# ஆண் காவலர்களுக்கு 8 மணி நேரவேலை

# காவல்
# மக்களுக்கான சேவை

*குற்றவாளிகளைப் பிடித்துக் கூண்டில் நிறுத்துவதல்ல காவல் துறையின் வேலை; குற்றவாளிகளே உருவாகாத ஒரு சமூகத்தை உருவாக்குவதுதான் காவல்துறையின் வேலை*

**- தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்**

## காவலர்களின் சீர்கேடு

- காவல்துறை அரசியல்வாதிகளின் ஏவல்துறையாக இருக்கிறது. இந்த நிலை உடனடியாக மாற்றி அமைக்கப்படும். நாம் தமிழர் அரசு, நேர்மையாகப் பணியாற்றுபவர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை அளிக்கும். காவல் துறை கம்பீரமும் நம்பிக்கையும் உள்ளதாகவும் மாற்றப்படும்.

## காவலர்கள் பற்றாக்குறை

- 222 பேருக்கு ஒரு காவலர் இருக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மன்றம் வரையறுத்துக் கூறியுள்ளது. ஆனால் தமிழகத்தில் 632 நபர்களுக்கு ஒரு காவலர் என்று இருக்கிறார். நாம் தமிழர் அரசு 200 பேருக்கு ஒரு காவலர் என்று தரத்தை உயர்த்தும். அதற்கேற்பப் புதிய ஊழியர்களைப் பணியில் அமர்த்தும்.

## ஏன் அவசியம்

- **டெல்லி - 83,000 காவலர்கள்**
- **மும்பை - 45,000 காவலர்கள்.**
- **கல்கத்தா - 23,000 காவலர்கள்.**
- **சென்னை - 14,000 காவலர்கள்.**

மற்ற மாநிலத் தலைநகரங்களை ஒப்பிடும்போது சென்னையில் குறைவான காவலர்களே பணியில் இருக்கிறார்கள். மாநிலத் தலைநகரத்தின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கப் புதிய கட்டமைப்புடன் கூடுதல் ஊழியர்கள் பணிமர்த்தப்படுவார்கள்..

## முதன்மையானவர்கள் (வி.ஐ.பி.)

- தமிழகத்தில் 632 பேருக்கு ஒரு காவலர்தான் இருக்கிறார். ஆனால் (அரசியல் முக்கிய நபர்களுக்கு) ஒரு அரசியல் வி.ஐ.பி.க்கு மூன்று காவலர் என்றிருக்கிறார்கள். இந்த அவலத்தை நாம் தமிழர் அரசு மாற்றும். காவல் என்பது மக்களுக்கான சேவை செய்வதற்கு மட்டுமேதான்.

காவல் மக்களுக்கான சேவை



Clarity Version download at www.makkalarasu.com

## முன் மாதிரி




Clarity Version download at www.makkalarasu.com

## அதிகப் பணிச்சுமை

- காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்குப் பாதுகாப்பிற்கு என்று இருக்கும் காவலர்கள் தான், குற்றங்களைத் தடுக்க வேண்டும். நடந்த குற்றங்களுக்கு விசாரணையை நடத்த வேண்டும். புலனாய்வு தேவை என்றால் அதையும் இவர்களே செய்ய வேண்டும்.

## பல மடங்கு வேலை

- இவ்வளவு வேலைகளுக்கு இடையில் இருக்கும் இந்தக் காவலர்களே தான் அரசு மற்றும் தனியார் பொது நிகழ்ச்சிகளுக்கான பாதுகாப்புக் காவலுக்கும் போக வேண்டும். அரசியல்வாதிகளின் நிகழ்ச்சிக்கும் பாதுகாப்பைக் கொடுத்தாக வேண்டும்.

## இரண்டு பிரிவு

- அதனால் பாதுகாப்பு பொது நிகழ்ச்சிகளுக்கான காவல் பிரிவைத் தனியாக அமைக்க வேண்டும். அது தனியாக இயங்க வேண்டும். குற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்கான காவல் பிரிவைத் தனி அமைப்பாக இயக்க வேண்டும். காவலர்களின் பணிச் சுமையைக் குறைக்க நாம் தமிழர் அரசு இந்த மாற்றத்தைக் கொண்டு வரும்.

## பெண் காவலர்களுக்கு 6 மணி நேர வேலை

- மற்ற அரசு ஊழியர்களைப் போல் காவலர்களுக்கும் எட்டு மணி நேர வேலை கட்டாயமாக்கப்படும். பெண் காவலர்களுக்கு ஆறு மணி நேர வேலை சட்டமாக்கப்படும். கூடுதலான காவலர்களை நியமித்து வெற்றிடம் நிரப்பப்படும். இதனால் சுமார் 25,000 பெண் காவலர்கருப் புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். காவலர்களின் பணிச்சுமை குறையும்.

## ஊதிய உயர்வு

- மத்தியக் காவல் படையில் இருப்பவர்களுக்கு இணையாக மாநிலக் காவல் பணியில் உள்ளவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படும். வீட்டு வசதிகள் உட்பட மற்ற நலத் திட்டங்கள் அனைத்தும் மத்தியக் காவல் படை ஊழியர்களுக்கு இணையாக வழங்கப்படும்.

## அடிப்படை வசதிகளுடன்

- காவலர்களுக்கான பழைய குடியிருப்புகள் அனைத்தும் மறு சீரமைப்பு செய்து தரப்படும். தேவையைக் கருதிப் புதிய குடியிருப்புகள் மாவட்டம் தோறும் உருவாக்கித் தரப்படும். அந்தக் குடியிருப்புகளில் வணிக வளாகங்கள், விளையாட்டுத் திடல், உடற் பயிற்சிக் கூடம், மருந்துக் கடைகள் அனைத்தும் அமைக்கப்படும். காவலர்கள் தங்கள் குடும்பத்தோடு இருக்கும் சூழலை உருவாக்கித் தருவோம்.

> “மத்தியக் காவல் படையில் இருப்பவர்களுக்கு இணையாக மாநிலக் காவல் பணியில் உள்ளவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படும்”

காவல் மக்களுக்கான சேவை



Clarity Version download at www.makkalarasu.com


தடுப்புக் காவல் படை



விசாரணைக் காவலர்கள்

**கலவர இடங்களுக்குத் ‘தடுப்புக் காவல் படை’ யின் தனிப்பிரிவு சென்று குற்றங்களைத் தடுத்து நிறுத்தும்**


மிதிவண்டிச் சுற்றுக் காவலர்


அதிவிரைவு மீட்புப்படை

Clarity Version download at www.makkalarasu.com

# இடமாற்றம், பதவி உயர்வு

- துறைசார்ந்த பதவி உயர்வுகள், மற்றும் இடமாற்றங்கள் வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்படும். நேர்மையான பணியாளர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை அளிக்கப்படும். துறைசார்ந்த புகார்கள் உடனுக்குடன் விசாரித்து முடிக்கப்படும். கால தாமதம் இருக்காது.

# இராணுவ மருத்துவமனை போல்

- காவலர்களின் குடியிருப்புகளிலேயே ஆரம்ப சுகாதார மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும். தவிர இராணுவத்தினருக்குத் தனி மருத்துவமனை இருப்பதைப் போன்று காவல் துறையினருக்கும் தனி மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்படும். இந்த மருத்துவ மனைகளில் அனைத்து வகை உயர் சிகிச்சைகளும், அறுவை சிகிச்சைகளும் அளிக்கப்படும்.

# தனித் தனிப் பிரிவு

- சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பிரிவில் உள்ளவர்களே குற்றவழக்குப் புலன் விசாரணைகளிலும் இறங்குகிறார்கள். இந்த முறையை நாம் தமிழர் அரசு மாற்றும். அனைத்து வித நிகழ்ச்சிகளுக்குமான பாதுகாப்பை அளிக்கும் பிரிவு தனியாகவும், வழக்குகளுக்குப் புலன் விசாரணை செய்யும் பிரிவு தனியாகவும் உருவாக்கப்படும். இதனால் பணிச்சுமை குறையும். விரைவான புலன் விசாரணைகளும் நடக்கும்.

# குற்றத் தடுப்புப் பிரிவு (Preventive Force)

- குற்றங்கள் நடந்த பிறகு நடவடிக்கையை எடுப்பதை விடக் குற்றங்களே நடக்காமல் தடுக்க வேண்டும் என்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம். அதற்காக வேண்டி 50,000 புதிய காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு உடல் தகுதி, சீருடை ஏதும் இருக்காது. அறிவுத் திறன் மட்டுமே பயன்படுத்தப்படும்.

## மக்களோடு மக்களாக

- 50,000 புதிய காவலர்களுக்குச் சர்வ தேசத் தரத்தில் உளவுப் பயிற்சி அளிக்கப்படும். இந்த ஊழியர்கள் மக்களோடு மக்களாக ஊடுருவியிருப்பார்கள். எங்கெல்லாம் குற்றங்கள் நடக்க வாய்ப்பிருக்கிறது என்பதை அறிந்து தகவலைத் கொடுப்பார்கள்.

## தடுப்புக் காவல் படை

- உடனே அந்த இடங்களுக்குத் ‘தடுப்புக் காவல் படை’ யின் தனிப்பிரிவு சென்று குற்றங்களைத் தடுத்து நிறுத்தும். இரு பிரிவினருக்கு இடையே சிக்கல் எழுந்திருக்கிறது. அதனால் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற தகவல் மக்கள் மத்தியில் இருந்தே கிடைத்துவிடும். அதன் பேரில்தான் உடனடித் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படும். இது அனைத்துவிதக் குற்றங்களுக்கும் பொருந்தும். இந்த உளவாளிகள் பற்றிய தகவல் அனைத்தும் கமுக்கமாகவே வைக்கப்படும்.

# நண்பன்

- ஒவ்வொரு பகுதியிலும் உள்ள காவலர்கள், அந்தப் பகுதி மக்களுடன் மாதம் தோறும் கலந்துரையாடலை நடத்த வேண்டும். உள்ளூர்ப் பிரதிநிதிகளும் அதில் கலந்துகொள்ள வேண்டும். இப்படிக் கலந்துரையாடும் போது அப்பகுதியில் நடக்க உள்ள குற்றங்கள் பற்றிய தகவலும் உடனுக்குடன் கிடைத்துவிடும் காவல்துறை மக்களுக்கு நண்பனாகவும் மாறும்.

காவல் மக்களுக்கான சேவை



Clarity Version download at www.makkalarasu.com



காவலர்



காவல் நிலையத்தில்
கண்காணிப்புக் கருவி

**காவலர்களின் ஆடையில் புதிய சிறிய வகை கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்டுப் பணி நேரத்தின் போது அவரது செயல்பாடு, விசாரணை முறை அனைத்தும் கணினியில் கண்காணிக்கப்படும்**








சாலையில்
கண்காணிப்புக் கருவி



போக்குவரத்துக்
காவலர்

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

காவல் மக்களுக்கான சேவை

## சீருடை மாற்றம்

- இன்று இருக்கும் காக்கி வண்ணத்திலான சீருடையில் மாற்றம் கொண்டு வரப்படும். புதிய நீல வண்ணத்திலான சீருடைகள் வழங்கப்படும். உடை என்பது உளவியல் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியது. அதற்கேற்பவே சீருடையில் மாற்றம் கொண்டு வரப்படுகிறது.
- சொந்த மக்களைப் பாதுகாக்கத்தான் காவல்துறையே தவிர சொந்த மக்கள் மீது எப்போதும் தடியடி நடத்தும் துறையாக இருக்கக்கூடாது என்பதில் **நாம் தமிழர் அரசு** உறுதியாக இருக்கும்.

## இடமாற்றம், பதவி உயர்வு

- துறைசார்ந்த பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்படும். நேர்மையான பணியாளர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை அளிக்கப்படும். துறைசார்ந்த புகார்கள் உடனுக்குடன் விசாரித்து முடிக்கப்படும். கால தாமதம் இருக்காது.

## கணினிக் கண்காணிப்பில்

- உளவுத்துறைப் பணிகளைத் தவிர்த்து மற்ற அனைத்தும் வெளிப்படையாக இயங்கும். ஒவ்வொன்றும் ஆவணப்படுத்தப்படும். காவல் நிலையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கண்காணிப்புக் கேமரா பொருத்தப்படும். காவலர்களுக்கு நவீன சிறியரக கண்காணிப்புக் கேமரா பொருத்தப்பட்ட சீருடைதான் வழங்கப்படும். பணி நேரத்தின் போது அவரது செயல்பாடு, விசாரணை முறை அனைத்தும் கணினியில் பதிவாகும்.

## காலக்கெடு

- பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்கள் மனு கொடுப்பதும், அதன் மீதான விசாரணகளும், முடிவுகளும் முறைப்படி ஆவணப்படுத்தப்படும். எதிலும் ஒளிவுமறைவு இருக்காது. இதன் மூலம் அப்பாவிகள் மீது பொய் வழக்குகள் பதிவு செய்வது முற்றாகத் தடுக்கப்படும். ஒவ்வொரு புகார் மனுமீதும் குறிப்பிட்ட நாள்களுக்குள் தீர்வுகள் கிடைக்க காலக்கெடு வரையறுக்கப்படும்.

## தனிப்பயிற்சி

- பணியமர்வுக்குப் பின்பு அவர்களுக்கு மேலும் தேவையான பயிற்சிகள் வழங்கப் படுவதில்லை. ஆசிரியர்களுக்கு, எப்படியெல்லாம் புதிய வகையில் பாடங்களை போதிக்க வேண்டும் என்று வகுப்புகள் மாதம் தோறும் நடத்தப்படுகிறதோ அப்படி, காவல் துறையினருக்கும் புதிய பயிற்சி வகுப்புகளுக்கான மையம் அமைக்கப்படும். அந்தப் பயிற்சியில் உலகளவில் ஏற்பட்டுள்ள புதிய புலனாய்வு விசாரணைப் போக்குகள் அனைத்தும் பயிற்றுவிக்கப்படும்.

> “சொந்த மக்களைப் பாதுகாக்கத்தான் காவல்துறையே தவிர சொந்த மக்கள் மீது எப்போதும் தடியடி நடத்தும் துறையாக இருக்கக்கூடாது என்பதில் நாம் தமிழர் அரசு உறுதியாக இருக்கும்”



## பெண் காவலர்கள்

- பெண் காவலர்களின் மகப்பேறு உள்ளிட்ட அனைத்து வகை உயர் மருத்துவமும், காவல் துறையினருக்கான தனி மருத்துவமனையில் பெற்றுக்கொள்ளலாம். அதற்கென்று தனிப்பிரிவு உருவாக்கப்படும். மகப்பேற்றுக் காலத்திற்கு முன்பாக 3 மாதமும், மகப்பேற்றுக்குப் பின்பாக 6 மாதமும் விடுப்பு அளிக்கப்படும்.

## தனிச்சிக்கல்கள்

- பெண் காவலர்களின் பணியில் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களில் தனிக் கவனம் செலுத்தப்படும். மேல் அதிகாரிகளால் ஏற்படுத்தப்படும் தேவையற்ற அழுத்தங்கள், பாலியல் சீண்டல்கள் உள்ளிட்ட அனைத்துப் புகார்களின் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கான பாதுகாப்பான சூழ்நிலையை நாம் தமிழர் அரசு வழங்கும்.

## அரசியல் தலையீடு இருக்காது

- அரசியல்வாதிகளின் விருப்பத்திற்குக் காவல்துறை அதிகாரிகளைப் பணிமாற்றம் செய்வதும், காவல்துறை அதிகாரிகள் அவர்களுக்குக் கீழான ஊழியர்களை முறையற்றுப் பணிமாற்றம் செய்வதும் நாம் தமிழர் அரசில் இருக்காது. ஒரு பணியிடத்தில் குறைந்தது 3 ஆண்டுகள் வேலை செய்வார்கள். தேவையற்ற இடமாற்றம் இருக்காது. அரசியல் தலையீடு இன்றி மிகச் சுதந்திரமாகப் பணியாற்றுவார்கள்.

## நவீன உள்கட்டமைப்பு

- காவலர்களின் பணியிடத்தில் உள்ள கட்டமைப்புகள் அனைத்தும் நவீனத் தரத்திற்கு உயர்த்தப்படும். ஊர்திகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், தடயவியலுக்கான நவீனக் கருவிகள் உள்ளிட்ட அனைத்தும் சர்வதேசத் தரத்திற்கு மாற்றப்படும்.

## நடவடிக்கைகள்

- பழிவாங்கும் முறைகளில் நடந்துகொள்வது
- மக்களுக்கு விரோதமாக நடந்து கொள்வது
- போதிய சாட்சியங்கள் இன்றி வழக்குப் போடுவது,
- பொய் வழக்குப் போடுவது,
- விசாரணை என்ற பெயரில் சித்ரவதை செய்வது,
- இலஞ்சம், ஊழல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் காவல் துறையினர் மீது குற்றம் சுமத்தப்பட்ட உடன் இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்படுவர், இக்காலகட்டங்களில் அவர்களுக்கு ஊதியம் மறுக்கப்படும் விசாரணையில் குற்றம் நிருபிக்கப்பட்டால் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்படுவர்.



> “பெண் காவலர்களின் மகப்பேறு உள்ளிட்ட அனைத்து வகை உயர் மருத்துவமும், காவல் துறையினருக்கான தனி மருத்துவமனையில் உருவாக்கப்படும். மகப்பேற்றுக் காலத்திற்கு முன்பாக 3 மாதமும், பின்பாக 6 மாதமும் விடுப்பு அளிக்கப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

காவல் மக்களுக்கான சேவை



> “இலஞ்சம், ஊழல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் காவல் துறையினர் மீது குற்றம் சுமத்தப்பட்ட உடன் இடைக்காலப் பணி நீக்கம் செய்யப்படுவர், இக்காலகட்டங்களில் அவர்களுக்கு ஊதியம் மறுக்கப்படும் விசாரணையில் குற்றம் நிருபிக்கப்பட்டால் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்படுவர்”

## வாய்ப்பு அளிக்கப்படும்

- குற்றங்களில் ஈடுபடும் காவல் துறையினருக்கு என்று தனியாக ‘மனச் சீர்திருத்த மையம்’ ஒன்று தொடங்கப்படும். பணி இடைநீக்கத்திற்கு உள்ளாகும் காவல் துறையினர், அந்த ஒரு மாத காலமும் ‘மனச் சீர்திருத்த வகுப்பில் தினமும் சென்று கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற்றுக்கொண்டதற்கான சான்றுகளைக் கொண்டு வந்தால் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

## நிரந்தரமாகப் பணி நீக்கம்

- இரண்டாவது முறையாகக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, விசாரணையில் அது நிருபிக்கப்பட்டால் நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்யப்படுவார்கள். அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த யாருக்கும் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு எந்த அரசுச் சலுகைகளும், உரிமைகளும் வழங்கப்படாது தடுத்து வைக்கப்படும்.

## குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாக வேண்டும்

- குற்ற வழக்குகளில் அரசுத் தலையீடு சுத்தமாக இருக்காது. சுதந்திரமான விசாரணையை நடத்தலாம். ஆனால் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பெற்றவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டால் வழக்கை அத்தோடு முடித்துக் கொள்ளக் கூடாது. உண்மையான குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசு சரியான இழப்பீட்டை வழங்கும். இழப்பீட்டில் பாதித் தொகை, வழக்கை நடத்திய விசாரணை அதிகாரியின் சம்பளத்தில் இருந்தே பிடித்தம் செய்யப்படும்.

## உயர் பதவிகளில்

- தமிழகக் காவல் துறையில் பணிபுரியும் ‘இந்தியக் காவல் பணி’ (ஐ.பி.எஸ்) அதிகாரிகளில் வேற்று மாநில அதிகாரிகளும் உள்ளனர். அவர்கள் தமிழர்களின் சமூகப் பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையும் அவர்களின் அரசியல் மற்றும் உளவியல் தன்மைகளையும் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருப்பதில்லை. எனவே தமிழ் மொழி அதிகாரிகள் மட்டுமே அரசின் முக்கிய உச்சப் பதவிகளில் பணியமர்த்தப் படுவார்கள்..



## மனநல மருத்துவமனை

- “சிறைக்கூடம் என்பது குற்றவாளிகளைத் தண்டிக்கும் கொலைக்களம் அன்று. அது மனநல மருத்துவமனை என்று அண்ணல் காந்தி சொல்கிறார்.
- ஒருவன் கொலை செய்கிறான், அது சட்டப்படி குற்றம். சட்டமே ஒரு கொலை செய்கிறது அது எப்படிச் சரியாகும்?
- கொலைக்குத் தண்டனை கொலைதான் என்றால் நாடே சுடுகாடாகும். அது நாகரீகம் மிக்க அறிவார்ந்த சமூகத்தின் செயல் அன்று.
- தண்டனை என்பது கூடுதல் உழைப்பு. சிறையில் கொடுக்கும் தண்டனையை உற்பத்தியில் செலுத்தி உற்பத்தியைப் பெருக்குவோம்.

## அனைவரும் விடுதலை

- பத்தாண்டுக்கும் மேலாகத் தண்டனை பெற்றுவரும் அனைவருக்கும் விடுதலை.
- இலஞ்சம் ஊழலில் சிக்கிய ஊழியர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், பாலியல் குற்றத்தில் ஈடுபட்டவர்கள், சாதிப் மதப் பெருமைக்கு, கூலிக்குக் கொலைச் செய்பவர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது.

## நில அபகரிப்பு மோசடி

- அப்பாவி மக்களிடம் ஏமாற்றி அபகரித்துக் கொண்ட நிலங்கள் அனைத்தும் மீட்கப்பட்டு உரியவர்களிடம் கொடுக்கும். அத்தகைய குற்றங்கள் மீண்டும் நடக்காமல் தடுக்கப்படும்.

## வேண்டாம் மரண தண்டனை

- எந்த ஒரு குற்றத்திற்கும் தண்டனை வேண்டாம் என்பது அன்று நமது நிலைப்பாடு. தண்டனை மரணமாக இருக்கக்கூடாது என்பதே நமது கொள்கை முடிவு.
- தண்டனை என்பது ஒருவன் தான் செய்த குற்றத்திற்கு வருந்தித் திருந்தி மறுபடியும் வாழ வாய்ப்பு கொடுப்பதுதான். ஆனால்,‘மரணம்’ என்பது தண்டனை அல்ல. அது ஒரு முடிவு.
- மரண தண்டனை குற்றம் செய்து மரணித்தவனுக்கு மட்டுமன்று. அவனைப் பெற்றவருக்கும், உடன் பிறந்தோர்க்கும், அவன் மனைவிக்கும், பெற்ற குழந்தைகளுக்கும் தான் அது தண்டனையாக அமைகிறது. எனவேதான் இத்தண்டனையை ஒழிக்க நமது அரசு துடிக்கிறது.



> “தண்டனை என்பது ஒருவன் தான் செய்த குற்றத்திற்கு வருந்தித் திருந்தி மறுபடியும் வாழ வாய்ப்புக் கொடுப்பதுதான். ஆனால்,‘மரணம்’ என்பது தண்டனை அன்று. அது ஒரு முடிவு”



Clarity Version download at www.makkalarasu.com

# எழுவர் விடுதலை உறுதி



பேரறிவாளன் சாந்தன் முருகன்

நளினி இராபர்ட் பயாஸ் ஜெயக்குமார் இரவிச்சந்திரன்

## கால்நூற்றாண்டு காலக் கண்ணீர்

- முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன், நளினி, இராபர்ட் பயாஸ் இரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய ஏழு பேரும் இரட்டை ஆயுள் தண்டனையை அனுபவித்து விட்டார்கள். சிறையில் நன்நடத்தை மதிப்பையும் பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் விடுக்க முடியா அரசியல் சதிராட்டத்தில் சிக்குண்டுத் தவிக்கிறார்கள். இங்கே சட்டமும் கருணையும் அனைவருக்கும் ஒன்றாக கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் 25 ஆண்டுகளாகச் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள்.
- தி.மு.க. அதிகாரத்தில் இருந்தபோது, பல ஆயுள்தண்டனைக் கைதிகளை நன்நடத்தை விதியின் கீழ் விடுதலை செய்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மதுரை லீலாவதியைக் கொலைச் செய்த கட்சிக்காரரையும் நன்னடத்தை விதியின் கீழ் விடுதலை செய்திருக்கிறது தி.மு.க. அரசு. ஆனால் எழுவர் விடுதலையைப் பற்றி சிந்திக்கவில்லை.
- உலகை உலுக்கிய மும்பைக் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக இருந்த பிரபல இந்தித் திரைப்பட நடிகர் சஞ்சை தத்திற்கு ஐந்தாண்டுகள் தான் சிறைதண்டனை. அதைக்கூட முழுமையாக அனுபவிக்கவில்லை. பாதி நாள்கள் மீள்வரல் உறுதி விடுவிப்பு பெற்று (பரோல்) வெளியே இருந்தார். இப்போது நன்னடத்தை விதியின் கீழ் சுத்தமாக விடுதலை செய்துவிட்டார்கள்.
- ஆனால் தமிழகச் சிறையில் உள்ள அந்த எழுவரையும் விடுவிக்கத் தடைபோட்டபடி இருக்கிறார்கள்.
- நாம் தமிழர் அரசு அந்த ஏழுபேர் உட்பட பத்தாண்டுகளுக்கு மேலாக சிறையில் உள்ள அனைத்து ஆயுள்தண்டனைக் கைதிகளையும் மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை வைத்து விடுதலை செய்யும். தேவை என்றால் பிறகு சட்டப்போராட்டத்தை நடத்திக்கொள்ளும்.

**கால்நூற்றாண்டு காலக் கண்ணீரும் கவலையும் துடைக்கப்படும்.**

எழுவர் விடுதலை உறுதி



Clarity Version download at www.makkalarasu.com

## நாடொறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
## கோடாமை கோடாது உலகு

- தமிழ்மறை (520)




# மண்சார்ந்த தொழில் முனைவோர்கள் அரசிடம் கேட்கும் கோரிக்கைகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்



Clarity Version download at www.makkalarasu.com

# தொழில் வளர நாடு உயரும்

ஒரு தேசத்தின் முன்னேற்றம் தொழிற் கொள்கையில்தான் இருக்கிறது. வலுவான தொழிற் கொள்கைதான் தேசத்தின் கட்டமைப்பை வலிமையாக்கும். அந்த வகையில் கடந்த ஐம்பதாண்டு கால ஆட்சியில் இருந்தவர்கள் வேளாண் தொழிலை மோசமாகச் சீர்குலைத்துவிட்டார்கள். மற்ற தொழில் வளங்களைத் தனியாரின் கைகளில் கொடுத்து விட்டார்கள். இன்று பொருளாதார, வேலையில்லாச் சிக்கலுக்குக் காரணம் சரியான தொழிற் கொள்கை இல்லாததே.

## நவீன தொழில் நுட்பங்கள்..

- தொழில் வளர்ச்சிக்காக உலக நாடுகளோடு போட்டி போட வேண்டியுள்ளது. அதற்கேற்ற தொழில் நுட்பத்தை வளர்ப்போம். திறன் வாய்ந்த தொழிலாளர்களை உருவாக்குவோம். அனைத்து மாவட்டங்களிலும் ‘தொழிற் பயிற்சிக் கூடங்கள் நிறுவப்படும். அங்கு நவீனத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படும். வரும் காலத்தில் அனைத்துத் தொழில்களிலும் திறன் வாய்ந்த இளைஞர்கள் இருப்பார்கள். அதற்கேற்ற திட்டங்களை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.

## தொழில் வளர..

- தொழிலில் இழப்பு ஏற்படுகிறது என்றால் அதற்குக் காரணம் போதிய பயிற்சியும் அனுபவமும் இல்லாததுதான். இந்தக் குறை நீக்கப்படும். தொழில் தொடங்குவோருக்குத் தகுந்த ஆலோசனைகளும், பயிற்சிகளும் வழங்கத் தனி மையம் ஒன்று உருவாக்கப்படும்.

## உள்ளூர்த் தொழில்கள்

- அயல்நாட்டு முதலீட்டைக் காட்டிலும், உள்ளூர்த் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தான் நாம் தமிழர் அரசு முனைப்பு காட்டும். எல்காட், டிட்கோ, சிப்காட் போன்ற நிறுவனங்களில் ஊழல் மலிந்து கிடக்கிறது., தேவையான உயர் தொழில்நுட்பத் தொழில் முனைவோரை உருவாக்கத் தவறிவிட்டது. நாம் தமிழர் அரசு இதை மாற்றி அமைக்கும்.

> “அயல்நாட்டு முதலீட்டைக் காட்டிலும், உள்ளூர்த் தொழில் முனைவோரை உருவாக்குவதில்தான் நாம் தமிழர் அரசு முனைப்புக் காட்டும்”

தொழில் வளர நாடு உயரும்



Clarity Version download at www.makkalarasu.com



மரப்பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை

ஒரு நபரால் தொழில் தொடங்க இயலாது என்றால் பல முதலாளிகளைக் கூட்டாகச் சேர்த்து முதலீடு செய்ய வழி செய்யப்படும். மேலும் பணம் தேவை என்றால் அரசே பெரும் தொகையைக் கொடுத்துத் தன்னையும் ஒரு பங்குதாரராக இணைத்துக் கொண்டு, தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்த உதவியாக நிற்கும்



தக்காளிச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை



கணினி நிறுவனம்



அரசு தொழில் நுட்பப் பூங்கா

Clarity Version download at www.makkalarasu.com

## தமிழ்த்தேசிய முதலாளிகள்

- உலகில் பரவி வாழ்கின்ற தமிழ்ச் சொந்தங்களைச் சந்தித்துத் தாயகத் தமிழகத்தில் முதலீடு செய்ய அழைப்போம். ஒரு முதலாளியிடம் அவ்வளவு பணம் இல்லையென்றால் கூட்டு முதலாளிகளை உருவாக்குவோம். வர்த்தக தரகு முதலாளிகள் என்ற நிலையிலிருந்த தமிழ்த்தேசிய முதலாளிகளை உற்பத்தி முதலாளிகளாக மாற்றிவோம்.

## கணினி முறை மேம்பாடு

- தொழில் வளர்ச்சியில் உள்ள குறைகள் உடனடியாக நீக்கப்படும். தொழில் முனைவோர்கள் அரசிடம் கேட்கும் கோரிக்கைகள் நியாயமானதாக வளர்ச்சிக்கானதாக இருந்தால் உடனடியாக செய்து கொடுக்கப்படும். அவர்களுக்கு அரசின் எந்த மட்டத்திலும் தடையோ தொய்வோ இருக்காது.

## வெளிப்படைத் தன்மை

- இந்தத் துறையில். அனைத்தும் வெளிப்படைத் தன்மைக்கு மாற்றி அமைக்கப்படும். தொழில் முனைவோர்களின் கோரிக்கை மனு அல்லது புகார் மனு எந்த நிலையில், இவர்களின் விண்ணப்பங்கள் எந்த மட்டத்தில் இருக்கிறது எனக் கணினியிலே அறிந்து கொள்ளலாம். தாமதத்திற்கான சரியான காரணத்தை அந்த அதிகாரி அளிக்க வேண்டும். தவறினால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## காத்திருக்க வேண்டாம்

- தொழிற்சாலைகளுக்கான தண்ணீர் இணைப்பு, மின் இணைப்பு, கழிவுநீர் வெளியேற்ற இணைப்பு உள்ளிட்ட எதற்கும் மாதக்கணக்கில் காத்திருக்கத் தேவையில்லை. எல்லாமும் உடனுக்குடன் கிடைக்க **நாம் தமிழர் அரசு** உறுதி அளிக்கிறது.

## புதிய பூங்காக்கள்

- கோவை, மதுரை, திருச்சி,சேலம் நகரங்களில் புதிய தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும். புதிய தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களில் உள்ளூர் நிறுவனங்கள் பங்கு பெற வேண்டிய உதவிகள் அனைத்தையும் நாம் தமிழர் அரசு செய்யும்.

## ஊக்கம் அளிக்கும்

- ஆய்வில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்ட மென்பொருள் தயாரிப்புகளுக்குக் கடன் வசதியுடன் தொழில் தொடங்க ஊக்கம் அளிக்கப்படும். இப்படியான வாய்ப்புகள் பல தமிழகத்தை விட்டு வெளியேறியிருக்கிறது. வரும் காலங்களில் அப்படி நடக்காமல் இருக்க மென் பொருள் தயாரிப்பாளர்களுக்கு வேண்டிய கடனையும் ஊக்கத்தையும் **நாம் தமிழர் அரசு** அளிக்கும்.

> “ஒருவர் தொழில் தொடங்க இயலாது என்றால் பல முதலாளிகளைக் கூட்டாகச் சேர்த்து முதலீடு செய்ய வழி செய்யப்படும்”

தொழில் வளர நாடு உயரும்



Clarity Version download at www.makkalarasu.com

“நம்முடைய நெசவுத் தொழில் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இவை நவீன உலகத்தோடு போட்டியிடக்கூடிய அளவிற்குப் புதிய தரத்தில் புதுமைகளோடு வளர்த்தெடுக்கப்படும். இதற்கான ஆய்வு மையங்களும், பயிற்சி மையங்களும் தொடங்கப்படும்”


நாற்று நடும் இயந்திரம்


கண்ணாடித் தயாரிக்கும் தொழிற்சாலை


பாசி வளர்த்தல்


காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை


ஆயத்த ஆடைகள் தயாரிப்பு

Clarity Version download at www.makkalarasu.com

## புதிய கண்டுபிடிப்புகள்

- வேளாண் தொழில், மின் உற்பத்தி, கணினிவியல், இயந்திரவியல் என்று பல பிரிவுகளிலும் புதிய புதிய கண்டு பிடிப்பாளர்களைத் தற்போதைய அரசு கண்டுகொள்வதே இல்லை. நாம் தமிழர் அரசு இவர்களை ஊக்குவித்து அனைத்து உதவிகளையும் வழங்கி அதற்குக் காப்புரிமையையும் பெற்றுக்கொடுக்கும்.

## இளம் விஞ்ஞானிகள்

- இளம் விஞ்ஞானிகளுக்கும் புதிய கண்டு பிடிப்பாளர்களுக்கும் தனிப் பிரிவு ஒன்று தொடங்கப்படும். அந்தப் பிரிவு, புதிய கண்டுபிடிப்பாளர்களின் முயற்சிக்கு ஊக்கமளித்து உதவிகளைச் செய்யும். வெற்றிகரமாக வெளிவரும் புதிய கண்டுபிடிப்புகளை தமிழகத்திலேயே செயற்படுத்தத் தொழிற்சாலைகள் அமைக்கக் கடன் அளிக்கப்படும். இந்த முயற்சி தமிழகத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக அமையும்.

## கண்ணாடித் தொழிற்சாலை

- மணலில் இருந்து பிரிக்கப்படும் இரசாயனம் (சிலிகான்), கண்ணாடி உட்பட பலதொழிலுக்குப் பயன்படக் கூடியது. அதைத் தயாரிப்பதற்கான அனைத்து வசதி வாய்ப்புகளும் இங்கே உள்ளது. எனவே கண்ணாடித் தயாரிப்பில் முன்னணி இடமாக தமிழகம் இருக்கும் அளவிற்குப் புதிய தொழிற்சாலைகள் நிறுவப்படும்.

## பாரம்பரியத் தொழில்

- நம்முடைய நெசவுத் தொழில் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஆனால் இன்று நலிந்துபோய் உள்ளது. இவை நவீன உலகத்தோடு போட்டியிடக்கூடிய அளவிற்கு வளர்த்தெடுக்கப்படும். புதிய தரத்தில் புதுமைகளோடு நெசவுத் தொழில் மாற்றப்படும். இதற்கான ஆய்வு மையங்களும், பயிற்சி மையங்களும் தொடங்கப்படும்.

## நெசவுச் சோலை..

- திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய பகுதிகளில் நெசவுத் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும். அங்கு மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் உறைகள், துண்டுகள், பஞ்சு, பசுமை வலைகள், பாதுகாப்பு உடைகள், பொட்டல ஆடைகள் ஆகியவைகள் தயாரிக்கப்படும். அவற்றுக்குத் தொழில்நுட்ப உதவிகளை நாம் தமிழர் அரசு வழங்கும். கைத்தறித் துறைத் தொழிலாளர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்படுவர்கள்

## மருந்து வேதிப்பொருட் தொழில்

- பன்னாட்டு நிறுவனங்களுக்கு இத்துறையில் தொழில் செய்ய அழைப்பு விடுக்கப்படும். தமிழர்களுக்கு அரசு முதலீட்டையும், தொழில் நுட்பத்தையும் வழங்கி, பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாக வளர்க்க ஒத்துழைப்புகள் அளிக்கப்படும். சிறப்பு வேதிப்பொருட்கள், வண்ணங்கள், சாந்துகள், எண்ணெய்கள், நொய்மப் (ரப்பர்) பொருள்கள், செருப்புகள், தாள்(காகிதம்) ஆகியவை இந்தத் துறையில் அடங்கும்.

> “கைத்தறித் துறைத் தொழிலாளர்கள்
> அரசு ஊழியர்களாக மாற்றப்படுவார்கள்”

தொழில் வளர நாடு உயரும்



Clarity Version download at www.makkalarasu.com

முன் மாதிரி


நெகிழிக்கு மாற்றாகப் பொருட்கள் தயாரிப்பு


தோல் பொருள் தயாரிப்பு


சுரங்கத் தொழிற்சாலை

**மண்ணில் இருந்து எடுக்கப்படும் கனிம வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம்**

## வேலூரில் புதிய முயற்சி

- வேலூர் மாவட்டம் ஆம்பூரில் உள்ள பெரும் அளவிலான தோல் மற்றும் செருப்புத் தொழில்கூடங்கள் மேம்படுத்தப்படும். அங்கு உள்ளூர்த் தயாரிப்பாளர்கள், உலக நிறுவனங்களுக்குத் தயாரிப்பதை விட்டுவிட்டு, அவர்களுடைய பெயரில் தயாரித்துப் பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டியிட ஊக்கப்படுத்தப் படுவார்கள்.

## நடவடிக்கை

- தோல் மற்றும் வேதிப்பொருள் தொழிற்சாலைகள், ஆபத்தான கழிவுகளை வெளியேற்றி மாசுபடுத்தினால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். எச்சரிக்கைக்குப் பிறகு நிரந்தரமாக மூடப்படும். தொழிற்சாலைக் கழிவுகள் மண் வளத்தையும், நீர்வளத்தையும் பாதிக்காத அளவிற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## நெகிழிகளுக்கு மாற்று

- நெகிழிப் பொருட்கள் தயாரிப்புக்கு நிரந்தரமாகத் தடை விதிக்கப்படும். அதற்கு மாற்றாக இயற்கை வழியிலான பனை, பாக்கு, தென்னை மட்டைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்களைத்தான் பயன்படுத்த வேண்டும். அதற்கான தொழிற்சாலைகள் நவீன தொழில் நுட்பத்துடன் தொடங்கப்படும்.

## உணவு பதப்படுத்தல் / தயாரித்தல்

- முக்கிய பெரு நகரங்களில் வேளாண்மையோடு உணவுத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும். அதற்கான பயிற்சி, ஆய்வுக் கூடங்களும் ஏற்படுத்தப்படும். இயற்கை வேளாண் உணவு பொருட்கள் ஏற்றுமதியை முன்னணித் தொழிலாக மாற்றுவோம்.



Clarity Version download at www.makkalarasu.com


மூலிகைப் பண்ணை


உயிரித் தொழில்நுட்பம்

**20,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மருத்துவமும், மருந்துகளும் பயன் படுத்தியவர்கள் தமிழர்கள்**

## இளநீர், பதநீர், நுங்கு ஏற்றுமதி

- அனைத்துவித இராசயனக் குளிர்பானங்களும் தடை செய்யப்படும். அது நமது உடல்நலத்திற்குக் கேடானது. இரசாயனக்கலப்பிலானது. அதற்கு மாற்றாக இளநீர், பழச்சாறு, பதநீர், நுங்கு போன்ற பானங்களை இரசாயனக் கலப்பில்லாமல் ஏற்றுமதி செய்தவற்கான தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

## உயிரித் தொழில்நுட்பம்

- உயிரிகள், அவற்றின் கிளைப் பொருள்கள், அவற்றின் வினைப் பொருட்கள், விளை பொருள்கள் உள்ளடக்கியதே உயிரித் தொழில்நுட்பம். இதில் தனிக் கவனம் செலுத்தப்படும். தமிழ் மரபு வழி மருத்துவத்திற்கும் பயன்படுத்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

## மரபு சார் மருத்துகள்

- 20,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே மருத்துவமும், மருந்துகளும் பயன் படுத்தியவர்கள் தமிழர்கள். எனவே இயற்கை மூலிகைப் பண்ணைகள் மூலம் தயாரிக்கப்படும் மரபு வழியிலான மருந்து தயாரிப்புக்கான ஆய்வு கூடங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்படும். இவைகளுக்கான அறிவுசார் உரிமங்கள் பெறத் தனித்துறை அமைக்கப்படும்.
- சித்த மருத்துவத்தில் மயக்க மருந்தாகப் பயன்படும் கஞ்சாச் செடிகளின் மீதான தடை நீக்க வேண்டிச் சட்டப் போராட்டம் நடத்தி மீட்கப்படும்.
- நிலமும் வளமும் சார்ந்த தொழிற்சாலை, வேலை வாய்ப்பு, வளர்ச்சி ஆகியவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.






Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# முப்பாத்தாள் கண்ணகி



பெண்களுக்குக் கல்வி நிலையங்களில் தற்சார்பு வாழ்க்கை முறை, தற்காப்புக் கலைகள், வாழ்க்கைக் கல்வி, ஆகியவை சிறந்த வல்லுநர்களைக் கொண்டு சிறப்புக் கல்வியாகக் கற்றுத்தரப்படும்

Clarity Version download at www.makkalarasu.com

# எங்கள் குலமாதர்

*பெண் விடுதலை இல்லையேல்*
*மண் விடுதலை இல்லை*

**- தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்**

தமிழ்ச் சமூக அமைப்பு பெண்களை வீரம் செறிந்தவர்களாகவும், அறிவிற் சிறந்தவர்களாகவும் பதிவு செய்கிறது. இடைபுகுந்த பண்பாட்டுக் கலப்பு, பல்வேறு இனங்களின் தாக்கம் ஆகியவை பெண்ணை ஆணுக்குரிய போகப் பொருளாகக் குறுக்கியதை **நாம் தமிழர் அரசு** உணர்ந்து, அவர்களுக்கான சமத்துவ உரிமையை அளிக்கும்.

## பிறப்பில்

- பெண் சிசுக்கொலை அறவே ஒழிக்கப்படும். பாலின அறிவிப்புத் தடைச் சட்டம் தீவிரமாக நடை முறைப்படுத்தப்படும். பெண் குழந்தைகளைப் பெருஞ்சுமையாக, அவமானமாக எண்ணும் காரணிகளான வரதட்சணை, பெரும் செலவிலான திருமணங்கள், சடங்குகள், ஆகியவற்றிற்கு எதிராகத் தீவிர விழிப்புணர்வுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படும்.

## கல்வியில்

- தொடக்கக் கல்வி முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிக் கல்வி வரை பெண்கள் விரும்பும் துறையில் படிக்க ஊக்கப்படுத்தப்படுவர். அரசின் அனைத்து உதவிகளும் இவர்களுக்கு அளிக்கப்படும். கல்வி நிலையங்களில் பாலியல் விழிப்புணர்வு, உடல்நல ஆலோசனைகள், தற்சார்பு வாழ்க்கை முறை, தற்காப்புக் கலைகள், வாழ்க்கைக் கல்வி ஆகியவை சிறந்த வல்லுநர்களைக் கொண்டு சிறப்புக் கல்வியாகக் கற்றுத்தரப்படும்.

> “பெண்களுக்கு அவர்களின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தைக் கவனிக்க, அவர்களுக்கான வேலை நேரம் ஆறு மணியாகக் குறைக்கப்படும். வீட்டிலிருந்தபடியே கணினி வழிப் பணி புரியவும் வழிவகைச் செய்யப்படும்”

எங்கள் குலமாதர்



> பெண்களைப் போற்றுவோம்
> பெருமைக்குரிய நாடாக மாற்றுவோம்!

## வேலை வாய்ப்பில்

- தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சரிபாதி (ஐம்பது சதவீத) வேலை வாய்ப்பு அளிக்கப்படும்
- விளையாட்டில் பெண்ணுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- காவல்படை, கடற்படை, சிறப்புக் காவல், விமானப் போக்குவரத்து, மென்பொருள், வன்பொருள் தயாரிப்பு, நீதித்துறை என அனைத்திலும் வாய்ப்புக் கொடுத்து, பெண்களின் பேராளுமை உறுதி செய்யப்படும். தமிழினத்தின் வீர மங்கையர்கள் பெயரில் வேலைவாய்ப்புத் திட்டங்கள் உருவாக்கப்படும்.
- பெண்களுக்கு அவர்களின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தைக் கவனிக்க, அவர்களுக்கான வேலை நேரம் ஆறு மணியாகக் குறைக்கப்படும். வீட்டிலிருந்தபடியே கணினி வழிப் பணி புரியவும் வழிவகைச் செய்யப்படும்.

## பாதுகாப்பு உறுதி...

- பணியிடத்தில் எந்த அச்சமுமின்றி வேலை செய்ய ஏதுவாக, பாலியல் வன்கொடுமைத் தடைச் சட்டங்கள் கடுமையாக்கப்படும். புகார் அளிக்கும் பெண்களைப் பற்றிய தரவுகள் கமுக்கமாக வைக்கப்படும். நடவடிக்கைகள் விரைவாக எடுப்பதன் மூலம் பணியிடத்தில் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.
- ஊடகங்களில் பெண்களின் உரிமைகளைக் கொச்சைப்படுத்துவது தகுந்த சட்டங்களின் வழி அறவே தடுக்கப்படும். திரைப்படங்களில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பெண்களைக் கொச்சைப் படுத்தும் போக்கைப் பெண்ணிய இழிவாக நாம் தமிழர் அரசு கருகிறது. நல்ல கலைஞராக, பார்வையாளராக நேர்மையான விமர்சனங்களை வைக்கலாமே ஒழிய, தனிப்பட்ட வாழ்வைக் கொச்சைப்படுத்துவதை ஏற்க முடியாது. புதிய உத்தரவுகளின் மூலம் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## கடன் தள்ளுபடி – மகளிர் சுய உதவிக்குழு

- மகளிர் சுய உதவிக்குழுக்கள் பெற்றிருக்கின்ற அனைத்துக் கடனும் தள்ளுபடி செய்யப்படும்.

## திருநங்கைகள்

- பிறப்பால் ஆணாகவும், உணர்வால் பெண்களாகவும் உள்ள நம் உடன் பிறந்தவர்களை நாம் தமிழர் அரசு தன்மானத்துடனும், இயல்பு மனிதர்களுக்கு நிகராகவும் வாழ, அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் பேராளுமை பெறப் பயிற்சி மற்றும் அங்கீகாரத்தை வழங்கும். அவர்களுக்கான தங்கும் விடுதிகள், கல்வி மற்றும் தொழிற் கல்வி, வேலை வாய்ப்புப் பயிற்சி மையங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். அவர்கள் சுயதொழில் தொடங்கத் தமிழ்த் தேசிய வைப்பகத்தில் இருந்து வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். இவர்களுக்கென்று தனியாக நலவாரியம் அமைக்கப்பட்டு எல்லா உதவிகளும் வழங்கப்படும்.

> மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல
> மாதவம் செய்திடல் வேண்டுமம்மா
>
> - மகாகவி பாரதி

Clarity Version download at www.makkalarasu.com






Clarity Version download at www.makkalarasu.com

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது - தமிழ்மறை (68)



# பிள்ளைகளுக்கு அறிவூட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவே தாழ்வு மனப்பான்மையற்ற, தன்னம்பிக்கையுள்ள, நல்ல உளவியலோடு வளர்தெடுப்பதும் முக்கியமாகிறது

Clarity Version download at www.makkalarasu.com

# அன்புத் தளிர்

குழந்தைகள் நம் நாட்டின் வருங்கால அறிவுச் சொத்துகள். தேச வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் நிற்பவர்கள். அப்படியான பிள்ளைகள் வறுமையால் கல்வியைக் கை விடுவதும் தெருவோரங்களில் அனாதைகளாக நிற்பதும் மாபெரும் கொடுமை. **நாம் தமிழர் அரசு** இவர்களின் நலனில், வளர்ச்சியில் முழு அக்கறை செலுத்தும்.

## தனி அமைச்சகம்

- இந்தியாவின் பல்வேறு சட்டங்கள் சிறார்களுக்கான வயதை வெவ்வேறாக வைத்திருக்கிறது. இதனால் பல சிறார்கள் சட்டப் பாதுகாப்புக் கிடைக்காமல் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். நாம் தமிழர் அரசு, ஐக்கிய நாடுகள் வரையறுத்துள்ள 18 வயதுக்குக் கீழ் உள்ளவர்களைச் சிறார்களாக அறிவிக்க மத்திய அரசை வலியுறுத்திப் பெற்றுத் தரும்.

## சிறுவர்கள் வேலைகளுக்குத் தடை

- சிறுமிகளுக்கான அனைத்துத் தளங்களிலும் அரசு பாதுகாப்பு உதவிகளை வழங்கும். சிறு வயதிலேயே வேலைக்குச் செல்வது முற்றாக ஒழிக்கப்படும். கட்டாயம் படித்தாக வேண்டும் என்ற உத்தரவுடன், தடையின்றித் தங்கி படிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் நமது அரசு ஏற்படுத்தித் தரும்.

## சட்டங்கள் குறித்த பயிற்சி

- சமூகத்தின் பல்வேறு தளங்களில் உள்ள ஆசிரியர்கள், அதிகாரிகள், காவல்துறையினர் என அனைவருக்கும் சிறுவர்கள் சட்டங்கள், உரிமைகள், அவர்களின் உளவியல் என்று கட்டாயப் பயிற்சி அளிக்கப்படும். அதன் பேரில்தான் அவர்கள் கடமையாற்ற வேண்டும். சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்களைச் செய்வோருக்குக் கடுமையான தண்டனை என்ற சட்ட வரைவு கொண்டு வரப்படும்.

## அன்புத் தளிர்

- சிறப்புக் குழந்தைகள், கைவிடப்பட்டக் குழந்தைகள், ஆதரவற்ற சிறுவர்கள், மீளா வறுமையில் வாழ்விழந்து வேலைக்குச் செல்லும் சிறார்கள், திருநங்கைகள், இடம் மாறும் தொழிலாளர்களின் குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகள், பேரிடரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காக 'அன்புத் தளிர்' அமைக்கப்படும். இங்கிருந்தபடியே இவர்கள் படித்து உயர் பணிகளில் தங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் வரை நாம் தமிழர் அரசு துணையாக நிற்கும்.


> “சிறுமிகளுக்கான அனைத்துத் தளங்களிலும் அரசு பாதுகாப்பு உதவிகளை வழங்கும்”

அன்புத் தளிர்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



"பிள்ளைகளுக்கு அறிவூட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவே தாழ்வு மனப்பான்மையற்ற, தன்னம்பிக்கை உள்ள, நல்ல உளவியலோடு வளர்த்தெடுப்பதும் முக்கியமாகிறது"

## தன்னம்பிக்கை

- சிறுவர்களின் உடல் நலன், மனநலன் குறித்த ஆலோசனை மையங்கள் அமைக்கப்படும். அதன் மூலம் சிறார்களுக்கு மன உறுதி, தன்னம்பிக்கைப் பயிற்சிகள் அளிக்கப்படும். தேவையெனில் மருத்துவ வசதிகளுக்கும் ஏற்பாடு செய்து தரப்படும். உடல் ஊனமுற்ற சிறார்களுக்குத் தனிக் கவனம் செலுத்தப்படும். உணவு, உடை, கல்வி, வேலை வாய்ப்பு என அனைத்திலும் உதவியாய் நின்று வளர்த்தெடுக்கும்.

## பள்ளிகளில் மனநல ஆய்வுத்துறை

- பிள்ளைகளுக்கு அறிவூட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவே தாழ்வு மனப்பான்மையற்ற, தன்னம்பிக்கையுள்ள, நல்ல உளவியலோடு வளர்த்தெடுப்பதும் முக்கியமாகிறது. அதற்கு வேண்டிய அனைத்துக் கட்டமைப்புகளும் பள்ளிகளில் அமைத்துக் கொடுக்கப்படும்.

## கற்றல் குறைபாடு மையம்

- நான்கு சதவீதம் முதல் 12 சதவீத சிறார்களுக்குக் கற்றல் குறைபாடு இருக்கிறது என்பதாகப் புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. 'படித்தல் எழுதுதல் குறைபாடு' (Dyslexia), 'கணிதக் கற்றல் குறைபாடு'(Dyscalculia) என்றிருப்பதையும், ADHD என்ற குறைபாடும் பெரும் சிக்கலாக பார்க்கப்படக்கூடாது., இது ஒரு கவனக்குறைபாட்டுச் சிக்கல்தான். இப்படியான குழந்தைகளுக்குத் தனி வகுப்புகளை உருவாக்கி, தேர்ந்த ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படும். அதற்கான வாய்ப்புகளும் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும்.
- அனைத்துப் பள்ளிகளிலும் தனி நூலகங்கள் அமைக்கவும், மாதம் ஒரு முறை அறிவுசார் ஆவணப்படங்கள் காண்பிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.



# நாங்கள் எம் மக்களின் குறைகேட்க வந்தவர்கள் அல்ல! தீர்க்க வந்தவர்கள்!

Clarity Version download at www.makkalarasu.com

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல் - தமிழ்மறை (70)



**பெற்றோரைக் கைவிடும் பிள்ளைகளுக்கு குடும்ப அட்டை, அடையாள அட்டை, மின் இணைப்பு உள்ளிட்ட அனைத்து உரிமைகளும், அரசின் பிற சலுகைகளும் வேலை வாய்ப்பும் அளிக்கப்படாது**



Clarity Version download at www.makkalarasu.com

# அன்புச்சோலை

***வீட்டின் பெயரோ 'அன்னை' இல்லம்***
***அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்***
***ஆலமரத்தைத் தாங்கியபடி விழுதுகள்***
***முதியோர் இல்லத்தின் வாசலில்***

## மூத்தோர்களை அரவணைப்பது

- முதிர்வது இயற்கை முறை. மூத்தோர்களை அரவணைப்பது நம் தமிழ் சமூகத்தின் குடும்ப முறை. பெருத்த அறிவும், அனுபவமும் கொண்ட முதியோர்களை கைவிடுவது சமூகத்திற்கு எதிரானது. எனவே நாம் தமிழர் அரசு முதியோர்களைப் போற்றிப் பாதுகாக்கும். அவர்களின் நலன் காக்கப் புதிய திட்டங்கள் கொண்டு வரப்படும்.
- முதியோர்களுக்கான உதவித் தொகை மாதம் 2500 ரூபாய் என உயர்த்தப்படுவதோடு தமிழகம் முழுவதும் அனைவருக்கும் ஒரே நேரத்தில் அளிக்கப்படும்.
- தமிழ் நாட்டிற்குள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல, ஆண்டு முழுவதுக்குமான ஒரே பயண அட்டை வழங்கப்படும். மாதம் தோறும் இதற்காக அலைந்து கொண்டிருக்க வேண்டியதில்லை.

## சிறப்பு மருத்துவத் திட்டங்கள்

- முதியோர்களின் மருத்துவத்திற்காக சிறப்புத் திட்டங்கள் கொண்டு வரப்படும். தொலைப்பேசியில் தகவல் கொடுத்தால் மருத்துவக் குழு வீடு தேடி வந்து மருத்துவம் பார்க்கும். மருந்து மாத்திரை கொடுத்து ஆலோசனைகளை வழங்கும் மேல் மருத்துவம் தேவைப்பட்டால் அவர்களாகவே 108 என்ற எண்ணுக்கு அழைப்பு விடுத்து அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். அரசு மருத்துவமனையில் உயர் சிகிச்சைகள் அனைத்தும் வழங்கப்படும்.
- மருத்துவக் கல்லூரிகளில் முதியோர்களுக்கான முதுகலை மருத்துவப் படிப்பு (MD-Geriatric Medicine) மிகக் குறைவான இடங்களே ஒதுக்கப்படுகிறது. முதியோர்களைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டி, இந்த முதுகலை மருத்துவப்படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்படும்.

> "தமிழ் நாட்டிற்குள் விரும்பிய இடங்களுக்குச் செல்ல, ஆண்டு முழுவதுக்குமான ஒரே பயண அட்டை வழங்கப்படும்"

அன்புச்சோலை



Clarity Version download at www.makkalarasu.com





"பெற்றோர்களை நேசிக்காதவன், மற்றவர்களை எப்படி நேசிப்பான், தாயை நேசிக்காதவன் தாய் மண்ணை எப்படி நேசிப்பான்"

## அன்புச்சோலை

- ஆதரவற்ற முதியோர்களுக்காக, 'அன்புச்சோலை' அமைக்கப்படும். அங்கு அவர்களுக்கு மருத்துவ வசதிகளுடன் கூடிய அனைத்து ஏற்பாடுகளும் அளிக்கப்படும். விரும்புபவர்கள் வேண்டிய வேலைகளைச் செய்யலாம். வேண்டாம் என்பவர்கள் ஓய்விலேயே இருக்கலாம்.
- முதியோர்களின் அனுவங்களை, பட்டறிவை இளைய தலைமுறையினருக்குக் கடத்த வேண்டி, மாதம் ஒரு முறை சிறார்களுக்குக் கதை சொல்லும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்படும். முதியோர்களில் நல்ல கதை சொல்லிகளாக, நாடகக் கலைஞர்களாக இருப்பவர்களை, அவர்களின் விருப்பத்தினைப் பெற்றுப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## அனைத்து உரிமைகளும் மறுக்கப்படும்

- இதுவரையிலும் கைவிடப்பட்ட முதியோர்களை அரசு கவனித்துக் கொள்ளும். பெற்றோர்களை நேசிக்காதவன், மற்றவர்களை எப்படி நேசிப்பான், தாயை நேசிக்காதவன் தாய் மண்ணை எப்படி நேசிப்பான். எனவே, இனிவரும் காலத்தில் பெற்றோரைக் கைவிடும் பிள்ளைகளுக்கு குடும்ப அட்டை, அடையாள அட்டை, மின் இணைப்பு உள்ளிட்ட அனைத்து உரிமைகளும், அரசு சலுகைகளும் அளிக்கப்படாது. வேலை வாய்ப்பும் அளிக்கப்படாது.



Clarity Version download at www.makkalarasu.com

# உலகத்திலேயே மிக வலிமையான ஆயுதம் ஏழைகளின் கண்ணீர்!



Clarity Version download at www.makkalarasu.com

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு

- தமிழ்மறை (247)



நீர்வளமும் நிலவளமும் சார்ந்த தொழிற்சாலை வேலை வாய்ப்பு வளர்ச்சியைத்தான் நாம் தமிழர் அரசு முதன்மையாக முன்னெடுக்கும்

Clarity Version download at www.makkalarasu.com

# பொருளாதாரக் கொள்கை

நம் தேசமும், மக்களும் எதற்கும் கையேந்தாதவர்களாக இருக்க வேண்டும். தனக்கான தேவைகள் வளர்ச்சிகள் அனைத்தும் தம் மண்ணிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான அத்துணை வளங்களும் தமிழகத்தில் இருக்கின்றன. அந்த வளங்களைப் பயன்படுத்தி மக்களை வளப்படுத்த தற்சார்பு பொருளாதாரக் கொள்கையை நாம் தமிழர் அரசு முன்வைக்கிறது.

## தற்சார்புப் பசுமைப் பொருளாதாரம்

- தற்சார்புப் பசுமைப் பொருளாதாரக் கொள்கைதான் ஒரு தேசத்தின் எதிர்காலத்திற்குப் பாதுகாப்பு என்று அன்னை இந்திராகாந்தி சொல்கிறார். அண்ணல் காந்தியடிகள் கண்ட சுயராஜ்யம்தான் நமது கொள்கை. இன்றைக்கு எல்லாமே தனியார் மயம், தாராளமயம், உலக மயமாக மாறி நிற்கிறது. இந்தப் பொருளாதாரக் கொள்கை, அன்று கப்பலில் வர்த்தகம் செய்ய வந்த ஒரு நாட்டினரைப் போராடி விரட்டிவிட்டு, இன்றைக்கு வானூர்தியில் வர்த்தகம் செய்ய வரும் பல நாட்டினரை வா வாவென்று கூப்பிடுகின்ற பொருளாதாரக் கொள்கைதான் இது. இந்த நாட்டின் வளங்களும், மக்கள் நலன்களும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பெரு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கின்ற கொள்கைதான் இந்தத் தனியார்மயம், தாராளமயம், உலகமயம்.
- **நீர்வளமும் நிலவளமும் சார்ந்த தொழிற்சாலை வேலை வாய்ப்பு வளர்ச்சியைத்தான் நாம் தமிழர் அரசு முதன்மையாக முன்னெடுக்கும்.**

## பெருந்தலைவர் காமராசர்

- பெருந்தலைவர் காமராசர் சொல்கிறார், “ஏம்பா சாப்பாட்டுக்குக் கூடவா வெளிநாட்டுல கை ஏந்துறது. உணவுக்கு ஊரான் நாட்டுல கை ஏந்துறதுக்கா போராடிச் சுதந்திரத்தைப் பெற்றோம். நம்மகிட்ட என்ன இருக்கோ கஞ்சியோ, கூழ் இருக்குனா அதைக் குடிச்சுட்டு நிம்மதியா படுப்போம்பா. அதுதான் நாட்டுக்குப் பாதுகாப்பு, அதுதான் நல்லது.” எனச் சொல்கிறார், இதுதான் தற்சார்புப் பொருளாதாரக் கொள்கை.

## வெனிசுலா அதிபர் சாவேஸ்

- வெனிசுலா நாட்டின் அதிபராக சாவேஸ் பொறுப்பேற்றவுடன், ‘தற்சார்புப் பொருளாதாரக் கொள்கை’யைத்தான் கையாண்டார். மண்ணின் வளங்கள் அனைத்தும் மக்களுக்கானது என முடிவெடுத்துச் செயல்பட்டார். அதனால் தான் அந்த நாட்டில் 10 ரூபாய்க்குப் பெட்ரோல் விற்கின்றது. அந்நாடும், மக்களும் சொந்தப் பொருளாதாரத்தில் நிற்கின்றனர்.





Clarity Version download at www.makkalarasu.com

ஏம்பா சாப்பாட்டுக்குக் கூடவா வெளிநாட்டுல கை ஏந்துறது. உணவுக்கு ஊரான் நாட்டுல கை ஏந்துறதுக்கா போராடிச் சுதந்திரத்தைப் பெற்றோம். நம்மகிட்ட என்ன இருக்கோ கஞ்சியோ, கூழோ இருக்கிறதை குடிச்சுட்டு நிம்மதியா படுப்போம். அதுதான் நாட்டுக்குப் பாதுகாப்பு, அதுதான் நல்லது



பெருந்தலைவர் காமராசர்

## ஜப்பான்

- ஜப்பான் நாட்டில் ஹிரோஷிமா, நாகசாகி மீது அமெரிக்கா அணுகுண்டு வீசி அழித்தது. அந்தப் பேரழிவிற்குப் பிறகு பிற நாடுகளிடம் கை ஏந்தாமல் தன் மண்ணின் வளத்தையும், மக்களின் உழைப்பையும் நம்பி 25 ஆண்டுகளாக கடுமையாக உழைத்து பொருளாதாரத்தை வளர்த்தெடுத்து உலக வல்லாதிக்க நாடுகளில் ஒன்றாக இன்றைய ஜப்பானை நிறுவியிருக்கிறார்கள்.

## நாம் தமிழர் அரசு

- தற்சார்புப் பசுமைப் பொருளாதாரக் கொள்கையைத் தான் நாம் தமிழர் அரசு கொண்டு வருகிறது.
- எல்லா வளங்களையும் வைத்துக்கொண்டு நம் நாடு பிற நாடுகளிடம் கை ஏந்தி நிற்பது அவமானச் செயல் என்று கருதுகிறோம். அதனால் நாம் தற்சார்பு பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்கிறோம். கிராமங்களில் இருந்து மண் சார்ந்த கிராமத் தொழிலை வளர்த்தெடுப்போம். அதில் தான் ஒரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சி என்பது சம விகிதத்தில் இருக்கும்.

## தொழிற்சாலைகள் மட்டுமே போதாது

- வெறும் நகர்ப்புற வளர்ச்சியை மட்டும்தான் இந்த நாடு கணக்கில் எடுத்துக் கொள்கிறது. வேளாண்மைக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைத் தொழிற்சாலைகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. நமது மண்ணின் தன்மை வேளாண் தொழில் சார்ந்தது. நம் மண் வேளாண் பூமியாக இருக்கிறது. அதை ஒழித்துவிட்டுத் தொழிற்சாலை நகரமாக மாற்றிக் கொண்டிருப்பதால் நாடு தற்சார்பற்ற நாடாக மாறிப்போகும். வெறும் இயந்திரங்களை மட்டுமே தயாரித்துக்கொண்டு, உணவுகளுக்காக வெளிநாட்டில் கையேந்த வேண்டும் என்ற நிலையை நமது அரசுகள் உருவாக்கியிருக்கின்றன.

## தரகு அரசு

- அனைத்துமே தனியார் மயம் என்றாகி வருகிறது. அரசுப் போக்குவரவு தனியார், மருத்துவமனை தனியார், கல்வி தனியார், வானூர்தி தனியார், குடிநீர் தனியார், மின்சார உற்பத்தி தனியார், என்று அனைத்துமே தனியார் என்றால், அரசு என்ன வேலையைச் செய்கிறது?. கைகட்டி இலஞ்சம் (கமிசன்) வாங்கியபடி அமைதியாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவா அரசு? மக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே தரகு வேலை பார்ப்பது தான் அரசா?. இந்த நிலை மாற்றப்படும்



Clarity Version download at www.makkalarasu.com




Clarity Version download at www.makkalarasu.com

# இந்த உலகம் உங்களுக்கானதல்ல! உங்கள் சந்ததியினருக்கானது!

Clarity Version download at www.makkalarasu.com



# கிராமப் பொருளாதார வளர்ச்சி





## சிற்றூர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் நாம் தமிழர் அரசு மிகுந்த கவனத்தைச் செலுத்திச் செயலாற்றும்

# சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி

ஒரு அரசு தலை நிமிர்ந்திருக்க வேண்டும் என்றால் முதலில் கிராமப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். தொழில் சார்ந்த கொள்கைகள் அனைத்தும் கிராமத்தில் இருந்தே செயல்பட வேண்டும். நாம் தமிழர் அரசு அதற்கான திட்டத்தை முன்வைக்கிறது.

## தற்சார்புப் பொருளாதாரம்

- ஒரு தேசத்தின் பொருளாதாரத்தைச் சம விகிதத்தில் வளர்த்தெடுக்க வேண்டுமென்றால் 80 விழுக்காடு மக்கள் வாழ்கின்ற கிராமப் புறத்தை மேம்படுத்தாமல் வளர்த்தெடுக்க முடியாது.
- இங்கு 'ஸ்மார்ட் சிட்டி' இருக்கின்றதே தவிர 'ஸ்மார்ட் வில்லேஜ்' என்ற பெயரில் அழகான கிராமம் கிடையாது. பொலிவுறும் நகரம் இருக்கின்றதே தவிர பொலிவுறும் கிராமம் இந்தத் திட்டத்தில் இல்லை.

## கிராமத்தில் வசதிகள்

- கிராமங்களை விட்டு மக்கள் வெளியேறி வெகுதூரம் நகர்ப்புறத்தை நோக்கி வரக்காரணம் தரமானக் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு நகரத்தில் கிடைக்கின்றது என்பதால்தான் மக்கள் இடம் பெயர்ந்து குவிகிறார்கள். இது தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகிவருகிறது, அதனால்தான் நகரம் நெருக்கடியாகப் பிதுங்கி வழிகிறது.

## சம அளவில் வளர்ச்சி

- **உடலில் எல்லாப் பாகங்களும் வலிமை பெற்று வளர்வதுதான் வளர்ச்சி. குறிப்பிட்ட பகுதி மட்டும் வளர்ந்துகொண்டு போவது வீக்கம். அது வளர்ச்சி அன்று. கட்டி, நோய்.**
- அதுபோலத் தான் நகர்ப்புற வளர்ச்சியை அந்தப் பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கிறது. அதனால் அதை நாம் தமிழர் அரசு ஏற்கவில்லை. சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சியும் நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சியும் ஒரே அளவில் சம விகிதத்தில் வளர்த்தெடுக்காமல், தேசத்தின் பொருளாதார வளர்ச்சியைச் சம விகிதத்தில் வளர்த்தெடுக்க முடியாது.

> "கிராமப்புற மக்களின் வாழ்விடத்திற்கு அருகாமையிலே தரமான கல்வியையும், மருத்துவத்தையும் கொண்டு செல்வோம்"





Clarity Version download at www.makkalarasu.com

> நெசவு ஒரு குறிப்பிட்ட சமூகம் செய்யும் வேலை என்பதனை மாற்றி, அதனை விரிவுப்படுத்தி நெசவுச்சோலை தொடங்கப்படும். அனைத்து மக்களுக்கும் பயிற்சியும், வேலைகளுக்கான மூலப்பொருட்களும் வழங்கி நெசவுத் தொழில் வளர்க்கப்படும்

## கிராமத்தை நோக்கி

- மக்கள் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்குச் செல்வதன் மூலம் கிராமப்புற மக்களுக்கே உரிய கலைகள், பண்பாடு, அவர்களது வாழ்வியல் முறை அனைத்தும் சிதைக்கப்படுகிறது. அதனால் பண்பாட்டுப் பெருமைகளை மீட்டெடுக்கவும், பாரம்பரிய தொல்குடி வேளாண்மையைப் பாதுகாத்திடவும் அவர்களது வாழ்விடங்களிலேயே அனைத்து வசதிகளும் செய்துகொடுக்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகிறது. அதனால், கிராமப்புற மக்களுக்கு அவர்களின் வாழ்விடத்திற்கு அருகிலேயே தரமான கல்வியையும், மருத்துவத்தையும், வேலைவாய்ப்பையும் கொண்டு செல்வோம்.

## வேலைவாய்ப்பு

- வேளாண்மை, ஆடுமாடு வளர்த்தல், மீன் வளர்த்தல், கோழி வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீக்கள் வளர்த்தல், பாய் பின்னுதல், கட்டில் பின்னுதல், பானை செய்தல், நெசவு நெய்தல் உள்ளிட்ட எல்லாவற்றையும் நிறுவனமயமாக்கி அரசுப் பணியாக்குவோம்.
- சான்றாகக் கன்னியாக்குமரியில் தென்னை மரங்கள் மிகுதியாக இருக்கிறது. அதனைக் கொண்டு, தேங்காய் எண்ணெய் தயாரிப்பது, இளநீரைப் பதப்படுத்திப் பாதுகாப்பான குளிர் பானமாக மாற்றி ஏற்றுமதி செய்வது, தேங்காய் நாரைக் கொண்டு கயிறு தயாரிப்பது, கட்டில் செய்வது, படுக்கை செய்வது உள்ளிட்ட பல தொழில்கள் உருவாக்கப்படும்.

## கிராமத் தொழில்கள்

- மண்பானை செய்வது, தச்சுவேலை செய்வது போன்ற பாரம்பரிய தொழில்கள் நிறுவனமயமாக்கப்பட்டு, தொழிற்சாலைகள் தொடங்கப்படும். அந்த வேலைப்பாடுகள் தொடர்பான மாதிரிப் புத்தகங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பொருட்கள் தயாரித்துத் தரப்படும்.

## நெசவுத் தொழில்

- நெசவு ஒரு குறிப்பிட்ட சமூகம் செய்யும் வேலை என்பதனை மாற்றி, அதனை விரிவுப்படுத்தி நெசவுச்சோலை தொடங்கப்படும். அனைத்து மக்களுக்கும் பயிற்சியும், வேலைகளுக்கான மூலப்பொருட்களும் வழங்கி நெசவுத் தொழில் வளர்க்கப்படும். பொருட்களைச் சந்தைப்படுத்துகிற வேலையை அரசு செய்யும். இப்படி, மக்களின் வாழ்விடங்களிலே அவர்களுக்கான வேலைகள் உருவாக்கப்படும்.

## இதுதான் நமது திட்டம்

- சிற்றூர்களின் பொருளாதாரத்தை வளர்க்காமல் நகரமயமாதலைத் தடுக்க முடியாது. நகரமயமாதலைத் தடுக்காவிட்டால் நாடு முழுமையான வளர்ச்சியை அடையாது. இதனால், மக்களின் வாழ்விடங்களிலே இருக்கிற வளங்களைக்கொண்டு வேலைவாய்ப்பைப் பெருக்கிச் சிற்றூர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் நாம் தமிழர் அரசு மிகுந்த கவனத்தைச் செலுத்தி, செயலாற்றும். இதன்மூலம், மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுப்பது தடுக்கப்படும்.




Clarity Version download at www.makkalarasu.com

# சிரிக்கும் ஏழை முகம் பார்க்கலாம்!
# சிந்தும் கண்ணீர்தனை மாற்றலாம்!



Clarity Version download at www.makkalarasu.com



LOSS TO THE NATION

₹1760000000000


A Raja deprived govt of this much money in 2G spectrum allocation: CAG report

K S Narayanan | ENS
New Delhi, November 10

THE sheer enormity of the figure when one learns about it, was perplexing than enabling to grasp its exactness. The gravity of the offence, though, was evident on Wednesday as Telecom Minister A Raja came under stinging indictment by the Comptroller and Auditor General for arbitrarily undertaking the 2G spectrum allocation, ignoring the advice of ministries, avoiding deliberations of the Telecom Commission — and causing the exchequer a loss of ₹1.76 lakh-crore.

This the first time Raja, the DMK MP from Tamil Nadu's Nilgiris, has come under fire from a top constitutional body during the last two years. The draft report blasted the minister for squandering "a scarce finite national asset at less than its true value on flex





# இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 1,76,000 இலட்சம் கோடி ஊழல் நடந்ததாகச் நீரராடியா, ஆ.இராசா, கனிமொழி ஆகியோர் மீது வழக்கு நடந்து வருகிறது



Clarity Version download at www.makkalarasu.com

# ஊழல் இலஞ்சம் ஒழிப்பு

உ தமிழகத்தில் ஊழலற்ற ஆட்சி என்பது பகற்கனவாகவே இருக்கிறது. ஊழலை ஒழிப்பதாகப் பேசிக்கொண்டே ஊழல் முறைகேடுகளை வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் தமிழர் அரசு இவற்றைத் தடுத்து நிறுத்தும், அதற்காக திட்டங்களை முன் வைக்கிறது.

## சுதந்திர இந்தியாவில்

- ஊழல் இலஞ்சம் தேசியமயமாக்கப்பட்ட தேசத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ‘சுரண்டிக் கொழுக்கிறது வெள்ளையர் ஆட்சி’ என்ற முழக்கத்தை வைத்து விடுதலை பெற்ற சுதந்திர இந்தியா இன்று சொந்த நாட்டு அரசியல் தலைவர்களால் இலஞ்சம் ஊழல் முறைகேடு என்று சுரண்டிக் கொள்ளையடிக்கிறார்கள். தமிழகத்தில், காமராஜர் ஆட்சிக்குப் பிறகு கடுகளவு இருந்த முறைகேடுகளைக்கூட பெரிதுபடுத்திப் பேசியே ஆட்சியைப் பிடித்த திராவிடக் கட்சிகள் இன்று மலையளவு இலஞ்சம், ஊழல், முறைகேடுகளைச் செய்து நாட்டை சீரழித்துக் கொண்டிருக்கின்றன.

## மத்திய அரசின் முதல் ஊழல்

- சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாபாகிஸ்தான் போர் நடந்தது. அப்போது காங்கிரஸ் ஆட்சியின் மீது எதிர்க்கட்சிகள் புகார் எழுப்பியது. தொடக்கம் அதுதான். அப்படித் தொடங்கிய ஊழல், இலஞ்சம், முறைகேடு என்பது இன்று உலகம் பேசும் பெரும் ஊழல் பட்டியலில் வந்து நின்றிருக்கிறது.
- கர்நாடக மாநில நிலக்கரி சுரங்கம் ஒதுக்கியதில் 2,00,000 இலட்சம் கோடி ரூபாய் முறைகேடு நடந்ததாக காங்கிரஸ் மீது எதிர்க்கட்சிகள் புகார் கூறியன.
- உத்திரப் பிரதேச மாநில முதல்வராக இருந்த மாயாவதி மீது 10,000 கோடி ஊழல் முறைகேடு என்ற குற்றச்சாட்டு எழுந்தது.
- மாயாவதியால், முலாயம்சிங், மீது 35,000 கோடி ஊழல் முறைகேடு என்ற குற்றச்சாட்டு பேசப்பட்டது.
- இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை ஒதுக்கீட்டில் 1,76,000 இலட்சம் கோடி ஊழல் நடந்ததாகச் நீராராடியா, ஆ.இராசா, கனிமொழி ஆகியோர் மீது வழக்கு நடந்து வருகிறது.
- பொதுநலவாய (காமன்வெல்த்) விளையாட்டுப் போட்டியில் 3,500 கோடி ஊழல் நடந்ததாக சுரேஷ் கல்மாடி மீதும் காங்கிரஸ் அரசு மீதும் குற்றச்சாட்டுப் பதிவானது.

## முதல்வர் அண்ணாதுரைக்குப் பிறகு

- திராவிட கட்சிகளின் சார்பாக முதன் முதலாக முதன்மை அமைச்சராக இருந்த அண்ணாதுரை அவர்கள் குறுகிய காலத்திலேயே இயற்கை எய்தினார். பிறகு முதல்வராக அமர்ந்த கருணாநிதி காலத்தில் இருந்துதான் இலஞ்சம் ஊழல் முறைகேடு, அரசு சொத்துக்கள் அபகரிப்பு என்று வளரத் தொடங்கியது.

ஊழல் இலஞ்சம் ஒழிப்பு



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

> “மீண்டும் காமராஜர் ஆட்சி என்று கருணாநிதியும் பேசினார். எம்.ஜி.இராமச்சந்திரனும் பேசினார். செல்வி ஜெயலலிதாவும் பேசி வருகிறார். ஆனால் ஒருவரும் அப்படிப்பட்ட நேர்மையான ஆட்சியைத் தரவில்லை”

## திராவிடக் கட்சிகளின் ஊழல்

- வீராணம் குழாய் ஊழல் தொடங்கி, அடுக்கடுக்கான ஊழலைச் செய்தார் கருணாநிதி என்று எதிர்க்கட்சித் தலைவரான எம்.ஜி.இராமச்சந்திரன் குற்றம் சாட்டினார். ஆளுநரிடம் புகார் கொடுத்தார். நீதிபதி சர்க்காரியா தலைமையில் விசாரணை நடந்தது. அவர் உலகிலேயே விஞ்ஞான முறையில் ஊழல் செய்தவர்கள் என்ற கருத்தைச் சொன்னார்.
- பிறகு முதல்வராக அமர்ந்த எம்.ஜி.இராமச்சந்திரன் மீது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதியால் ஊழல் குற்றச்சாட்டு வாசிக்கப்பட்டது.
- அடுத்து முதல்வராக அமர்ந்த கருணாநிதி மீது எதிர்கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா ஊழல் குற்றச்சாட்டை வாசித்தார்.
- பிறகு முதல்வராக அமர்ந்த செல்வி ஜெயல்லிதா மீது ‘முறைகேடாகச் சொத்துச் சேர்த்த’ வழக்கைப் போட்டது எதிர்கட்சியாக இருந்த கருணாநிதி தரப்பு.

## மீண்டும் காமராசர்

- பெருந்தலைவர் காமராசர் ஆட்சி காலத்தில் உண்மையும், நேர்மையுமாக இருந்த நிர்வாகம், திராவிடக் கட்சிகளின் ஆட்சி காலத்தில் ஊழல், இலஞ்சம் நிறைந்த ஆட்சியாக மாற்றி அமைக்கப் பட்டிருக்கிறது. மீண்டும் காமராசர் ஆட்சி என்று கருணாநிதியும் பேசினார். எம்.ஜி.இராமச்சந்திரனும் பேசினார். செல்வி ஜெயலலிதாவும் பேசி வருகிறார். ஆனால் ஒருவரும் அத்தகைய நேர்மையான ஆட்சியைத் தரவில்லை. மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்களாகவே மாறி நிற்கிறார்கள். இதை வெளிப்படையான நிர்வாகத்தின் மூலம் முற்றும் **நாம் தமிழர் அரசு** ஒழிக்கும்.

## சொத்துகள் அனைத்தும் பறிமுதல்

- முதன்மை அமைச்சர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட யாராயிருந்தாலும் ஊழல், இலஞ்சம் மூலம் ஈட்டிய சொத்துகள் அனைத்தும், மாற்று நபர்கள் பெயரில் இருந்தாலும் பறிமுதல் செய்யப்படும். குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்குத் துணையாக இருந்தவர்களுக்குச், சிறை தண்டனை வழங்கப்படும். வாழ்நாள் தண்டனை கிடைத்தால், ‘தண்டனை குறைப்பு’ எனக் கருணை காட்டப்பட மாட்டாது. வாழ்நாள் முழுவதும் சிறையில்தான் இருந்தாக வேண்டும்.

## சலுகைகளும் உரிமைகளும் முடக்கம்

- குற்றத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பத்தாருக்கு அரசின் சலுகைகள், அரசு வேலைகள் ஏதும் கொடுக்கப்பட மாட்டாது. அரசின் சலுகைகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.
- ஊழல், இலஞ்சத்தில் ஈடுபடுபவர்களுக்கு இடைக்காலப் பணி நீக்கம் கிடையாது. உடனடியாக விசாரணை நடத்தி உறுதி செய்யப்பட்டால் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்படுவர்.
- இப்போது இருப்பது இலஞ்சம் ஊழல் நிறைந்த ஆடம்பரமான நிர்வாக முறை. நாம் தமிழர் அரசு, உண்மை, நேர்மை எளிமையான நிர்வாக முறையை வெளிப்படைத் தன்மையோடு கொண்டுவரும்.
- **மக்களுக்காகவே நாம் தமிழர் அரசு. மக்களோடு நாம் தமிழர் கட்சி.**




**நல்லவர்கள்கூட தோற்றதாக வரலாற்றில் செய்தி உண்டு, நம்பிக்கை கொண்டவர்கள் தோற்றதாகச் செய்தி இல்லை.**

**- தேசியத் தலைவர்**

Clarity Version download at www.makkalarasu.com

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு - தமிழ்மறை (739)




# தமிழர் அரசு அமைப்போம்
# மக்கள் நலன் காப்போம்

Clarity Version download at www.makkalarasu.com

# வெளிப்படையான நிர்வாகம்

## தொலைநோக்குப் பார்வையோடு

தமிழக மக்களின் தேவைகளும் மானுட வளர்ச்சியும் குறித்துத் தொலைநோக்குப் பார்வையை அடுத்த நூறாண்டுகளுக்கு எடுத்துச் செல்ல **நாம் தமிழர் அரசு** திட்டமிட்டு செயல்படும். தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாகச் செழித்திருக்கும் என்பதை உறுதி செய்கிறது.

## ஊழியர்களுக்கான நிலைப்பாடு

- நாம் தமிழர் அரசில் உயர் அதிகாரப் பதவிகளான உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், மாவட்ட நிர்வாகம் போன்ற அனைத்து பதவிகளிலும் ஐயா சகாயம், அமுதா போன்ற நேர்மையான தமிழர்கள் பணி அமர்த்தப் படுவார்கள்.
- ஊழல், கையூட்டு (இலஞ்சம்)ஆகியவற்றில் ஈடுபடும் அனைத்து அரசு அலுவலர், அதிகாரிகள், அமைச்சர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதோடு, பத்தாண்டுக்கு அவர்கள் குடும்பத்தினருக்கு அரசுப்பணியும் கிடையாது.
- அரசு ஊழியர்களுக்கு அவரவர் விரும்பிய இடத்திற்குப் பணி இடமாற்றம் உடனே வழங்கப்படும்.
- அரசு ஊழியர்களாக இருக்கும் கணவன், மனைவி இருவருக்கும் ஒரே இடத்தில் பணி இடமாற்றம் வழங்கப்படும்.
- பகுதி நேர, தற்காலிக ஊழியர்கள் அனைவரும் நிரந்தர அரசு ஊழியர்களாக்கப் படுவார்கள்.
- அரசு அதிகாரிகள் அனைவரும் கோப்புகளில் தமிழில் மட்டுமே கையொப்பமிட வேண்டும்.

## வலைத்தளம்

- உலகிலேயே டென்மார்க் நாட்டில்தான் ஊழல் மிகக் குறைவாக இருக்கிறது என்று பன்னாட்டு வெளிப்படைத்தன்மை என்ற அமைப்பு கூறுகிறது.
- அதற்குக் காரணம் அங்கு அனைத்துச் செயல்பாடுகளும் மக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்படுகிறது. அவ்வாறே **நாம் தமிழர் அரசு** முழுமையாக வெளிப்படையான நிர்வாகத்தைக் கடைப்பிடிக்கும்.

> **“பகுதி நேர, தற்காலிக ஊழியர்கள் அனைவரும் நிலையான அரசு ஊழியர்களாக்கப் படுவார்கள்”**



Clarity Version download at www.makkalarasu.com

## முதன்மைத் திட்டங்கள்

- ஒவ்வொரு துறைக்கும் இணையத்தளம் உருவாக்கப்படும். அரசின் திட்டங்கள் அனைத்தும் அதில் வெளியிடப்படும்.
- அரசின் ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்ததாரர் விவரங்கள் வெளியிடப்படும். மொத்தத் தொகை, முடிக்க வேண்டிய காலகட்டங்கள். அதன் தன்மை என அனைத்தும் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.'
- துறை வாரியாக அரசு அதிகாரிகளின் பெயர்கள், அவர்களின் பொறுப்புகள், செய்ய வேண்டிய பணிகள் குறித்த விவரம் இருக்கும்.
- ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் எவ்வளவு. செலவிடப்பட்ட விதங்கள் என்ன என்ற வரவு செலவுக் கணக்குகள் தொடர்ந்து வெளியானபடி இருக்கும்.
- நமது அரசுக்கு எந்தெந்த வகையில் நிதி வருவாய் கிடைக்கின்றது. அதைக்கொண்டு துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு என்ற விவரங்களை வெளியிடும்.

## கண்காணிப்புக் குழு

- ஒவ்வொரு துறைக்கும் ஐம்பேராயம், எண்பேராயம் என்று குழு அமைக்கப்படும். இவர்கள் அந்தத் துறைக்குத் தகுந்த ஆய்வுரைகளைத் திட்டங்களைத் தீட்டி வழங்குவார்கள். அதன் பேரில் அந்தத் துறைகள் செயலாற்றும். அதே போன்று ஒவ்வொரு துறைக்கும் தனியே ஒரு கண்காணிப்புக் குழு செயல்படும். அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடையாமல் எங்கே தடங்கலாகி நிற்கிறது, அதற்கான காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்க இந்தக் கண்காணிப்புக் குழு செயலாற்றும்.

## மக்களும் கண்காணிக்கலாம்

- ஊராட்சி முதல் மாநகராட்சி வரை, அதன் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும். அந்த நிர்வாகம் குறித்த தகவல்களும் மாவட்ட வாரியாக இணையத்தில் தனிப்பிரிவாக வெளியிடப்படும்.
- மக்களின் கோரிக்கை மனு எந்த அதிகாரியிடம் இருக்கிறது. அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பதை வெளிப்படையாக அறிந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஒரு குறியீட்டு எண் வழங்கப்படும். அதை வைத்து அவர்களே கணினியில் தங்கள் மனு குறித்த தகவல்களை வெளிப்படையாக அறிந்தகொள்ளலாம். இதன் மூலம் இலஞ்சம் ஊழல் தவிர்க்கப்படும்.

## ஊடக உரிமை

- அச்சு ஊடகம் மற்றும் காணொளி ஊடகங்களுக்கு 100 விழுக்காடு சுதந்திரம் அளிக்கப்படும். பாகுபாடின்றி அனைத்துச் சிறிய பெரிய ஊடகங்களுக்கும் விதிமுறைகளுக்குட்பட்டு அரசு விளம்பரம் அளிக்கப்படும்.
- ஊழியர்களின் நலனைக் காக்காத ஊடக நிறுவனங்களுக்கு அரசு விளம்பரங்கள் அளிக்கப்பட மாட்டாது.
- வெளிமாநிலங்களில் இருந்து வரும் ஊடகங்கள் இங்குள்ள ஊழியர்களுக்கு உரிய நலன்களைப் நல்க வேண்டும்.
- ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்படும் அரசின் குற்றங்கள் குறைபாடுகள் சரியாக இருப்பின், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

> “ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் எவ்வளவு. செலவிடப்பட்ட விதங்கள் என்ன என்ற வரவு செலவுக் கணக்குகள் தொடர்ந்து வெளியானபடி இருக்கும்”



Clarity Version download at www.makkalarasu.com

> ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்படும் அரசின் குற்றங்கள் குறைபாடுகள் சரியாக இருப்பின், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## அச்சு – ஊடக பத்திரிகையாளர் நலன்

- பத்திரிகையாளர்கள் நலன் காக்க, நலவாரியம் அமைக்கப்படும். இதுவரையில்லாத் புதிய அமைப்பு உருவாக்கப்படும். அதன் மூலம் வீடற்றவர்களுக்கு அரசு வீடு ஒதுக்கிக் தரும். அவர்களுக்கான பயணச் சலுகைகள் அளிக்கப்படும், ஆண்டிற்கு ஒருமுறை குடும்பச் சுற்றுலா சென்றுவர ஏற்பாடுகள் செய்யப்படும். ஊடகம் சார்ந்த உயர் படிப்பிற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

## மக்கள் நீதிமன்றம் (லோக் ஆயுக்தா)

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர் மற்றும் அமைச்சர் போன்றவர்கள் ஊழல் செய்யும்போது அதைத் தட்டிக்கேட்டுத் தடுக்கும் அதிகாரம் படைத்த மக்கள் நீதிமன்றம்(லோக் ஆயுக்தா) கொண்டு வரப்படும்.

## சேவை பெறும் உரிமைச்சட்டம்

- மக்களின் சேவைக்காக நியமிக்கப்பட்ட அரசு ஊழியர்கள். செய்ய வேண்டிய வேலைகளைச் தாமதிக்கச் செய்யும் போது, அவர்களுக்குத் தண்டனையாக மக்களுக்கு இழப்பீடு வழங்கும் அதிகாரம் படைத்த, சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும். பாதிக்கப்படும் மக்களுக்குத் தகுந்த அதிகாரியே இழப்பீட்டை வழங்க வேண்டும்.

## மக்கள் அரசுச் சேவை மையம்

- நாம் தமிழர் அரசின் ‘சேவை மையம்’ மக்களுக்கான சேவைகளை வீட்டைத்தேடி வந்து முடித்துக் கொடுப்பதாகும். பொது மக்கள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று, காத்திருந்து கையூட்டுக் கொடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையில்லை.
- வீட்டுவரி, சொத்துவரி, குடும்ப அட்டை, குடிநீர் வரி, புதிய இணைப்புக் கட்டணங்கள் உள்ளிட்ட உங்களின் கோரிக்கையைச் சேவை மைய இயந்திரத்தில் பதிவு செய்து விட்டால், சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் வீட்டிற்கே வந்து தேவைகளைச் செய்து கொடுப்பார்கள்.
- இச்சேவை மையம், பணம் எடுக்கும் இயந்திரம் (ATM) போல் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படும்.
- இச்சேவை மையம் முழுவதும் கணினிமயத்தில் இயங்கும். இதற்கான மென்பொருளை மென்பொறியாளர்களை(Software Engineers) வைத்து உருவாக்கி அரசே ஏற்று நடத்தும்.

## நியாய விலைக் கடைகள்

- தற்போது நியாயவிலைக் கடைகளில் பொது மக்களுக்கான வழங்கு பொருட்கள் சரியாகக் கிடைப்பதில்லை. அரிசி சர்க்கரை உள்ளிட்ட முக்கியப் பொருட்கள் ஒரே நாளில் தீர்ந்து போய்விடுகிறது என்கிறார்கள். அடுத்தநாள் செல்பவர்களுக்கு கிடைப்பதில்லை. அனைவருக்குமான வழங்கு பொருட்களை அரசு அனுப்புவதில்லையா? அல்லது இடையில் இருப்பவர்கள் கள்ள சந்தையில்

வெளிப்படையான நிர்வாகம்




Clarity Version download at www.makkalarasu.com

விற்றுவிடுகிறார்களா? என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் **நாம் தமிழர் அரசு** இதை முறைப்படுத்துகிறது.

- கிராமங்களில் 200 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடையும், நகரங்களில் 100 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாவிலைக் கடையும் அமைக்கப்படும். ஊழியர்களுக்கு மாதம் 20,000 ஊதியம் வழங்கப்படும். பொருட்களின் இருப்பு விவரங்கள் மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படும். இதன் மூலம் தவறுகள் ஏதுமின்றி அனைவருக்கும் அனைத்து பொருட்களும் எளிதாகக் கிடைக்கும்.

## கணினிமய நிர்வாகம்




- நாம் தமிழர் அரசு அனைத்து அரசுத்துறைகளையும் சேவைகளையும் முழுவதும் கணினி மயமாக்கப்பட உள்ளது.
- கணினி மயமாக்குவதன் மூலம் கையூட்டு (இலஞ்சம்), நேரவிரயம் பெருமளவு தடுக்கப்படும்.
- எனவே அரசுத் துறைகளுக்குத் தேவையான அனைத்து மென்பொருட்களையும் (Software), வலைத்தளங்களையும் தானே ஒரு மென்பொருள் நிறுவனத்தை உருவாக்கி அதற்கான பொறியாளர்களை அரசு ஊழியர்களாக நியமித்துத் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும்.
- தற்போதைய அரசு கணினிப் பயன்பாட்டிற்கு மட்டும் 1000 கோடி ரூபாய் செலவு செய்து சேவையைப் பெற்றுவருகிறது.
- நாம் தமிழர் அரசின் அனைத்து அரசு துறைக் கணினியிலும் Microsoft Windows இயங்கு தளங்களை நீக்கித் திறந்த வெளிமூலத் தொழில்நுட்பமான (Open source technology) Linux இயங்கு தளங்களைப் பயன்படுத்தும்.
- Linuxஇயங்கு தளத்திற்கான பயிற்சியை அரசே வழங்கும்.




## திறந்தவெளி மூலத் தொழில்நுட்பம் [Open Source]

- திறந்தவெளி மூலத் தொழில் நுட்பத்தைப் (Open source technology) பயன்படுத்தி அனைத்து மென்பொருள், வலைத்தளங்களை உருவாக்கிக் கொள்ளும்.
- நாம் தமிழர் அரசு நடத்தும் வேளாண்பண்ணை, ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை, மாட்டுப்பண்ணை,உரம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்ற அனைத்துப் பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தேவையான நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning) மென்பொருளை அரசே தயாரித்துக் கொள்ளும்.
- அரசுத் துறைகளுக்கான வலைத்தளங்களையும் அரசு மென்பொருள் நிறுவனத்தைப் பயன்படுத்தி உருவாக்கி கொள்ளும்.
- அரசு உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருள்களின் உலக மற்றும் வெளிமாநிலச் சந்தை வர்த்தகத்திற்கென்று (Marketing) சிறப்பு வலைத்தளம் உருவாக்கபடும்.
- அரசுக்குத் தேவையான தகவல் தரவகத்தை(database Server) ஒரு பாதுகாப்பான இடத்தில் அமைத்து, அரசே நிர்வகித்துக் கொள்ளும்.

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

வெளிப்படையான நிர்வாகம்



ஜமீன் தேவர்குளம் கிராமம்





## கண்காணிப்பு

- நாம் தமிழர் அரசு காவல் நிலையங்கள்,அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், சாலைகள் மற்றும் பொது இடங்களில் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்திக் கண்காணிக்கும்.
- இதற்குத் தேவையான கண்காணிப்பு மையம், பராமரிப்பு போன்ற சேவைகளிலும் அரசு மென்பொருள் நிறுவனம் ஈடுபடும்.
- அரசு சேவைகளுக்கான அலைப்பேசி அழைப்பு உதவி மையம்(Call Center)அரசு மென்பொருள் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும்.

## மாதிரிக் கிராமம் பேரூராட்சி

- ஒவ்வொரு கிராமமும் திருநெல்வேலி மாவட்டம் ஜமீன் தேவர்குளம் கிராமம் போன்று மாற்றப்படும். சிறப்பான சாலைகள். லஞ்சம் இல்லாத நிர்வாகம், ஊர் முழுவதும் கண்காணிப்புக் கருவி, புகார்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள். பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்பு. கிராமக் கைத்தொழில் என்று பல வகையிலும் முன்னோடிக் கிராமமாக இருந்து வருகிறது.
- அதே போன்று சுத்தமான குடிநீர், சுகாதாரமான நகரம், லஞ்சம் இல்லா நிர்வாகம் என்ற உறுதி, நவீன சாலை வசதிகள், மக்களின் வரிப்பணத்தை முறையாகச் செயல்படுத்துவது என்று எல்லா வகையிலும் ஏர்வாடி பேரூராட்சி சிறந்து விளங்குவதைப் போல் தமிழகப் பேரூராட்சிகள் கொண்டு வரப்படும்.



## டாஸ்மாக் அவலங்கள்



# குடிக்கின்ற மக்கள் கொடுக்கின்ற காசில் நடக்கின்ற அரசு என்பதாலேயே இது குடியரசு என்றாகி இருக்கின்றது

Clarity Version download at www.makkalarasu.com

# மது, புகையிலை ஒழிப்பு

## குடியை கெடுக்கும் அரசு

- குடிக் குடியைக் கெடுக்கும் என்று விளம்பரப்படுத்துகிற அரசே.
- தன் குடிமக்களின் குடியைக் கெடுக்க மதுபானம் விற்பது அவமானமாகும்.
- குடிக்கின்ற மக்கள் கொடுக்கின்ற காசில் நடக்கின்ற அரசு என்பதாலேயே இது குடியரசு என்றாகி இருக்கின்றது

## அரசே தள்ளாடும்

- ஒரு குடிகாரன் ‘மது குடிப்பதால் நாம்தான் தள்ளாடுகிறோம். குடிக்கவில்லை என்றால் அரசே தள்ளாடும்’ என்று சொல்லும் அளவிற்கு அரசு மதுபான விற்பனை மோசமாகி இருக்கிறது..

## இங்கேயும் ஒரு இனப்படுகொலை

- ஈழ மண்ணில் சிங்கள இனவெறி அரசு நடத்திய இனப்படுகொலையில் 1,70,000 பேர் இறந்து போனார்கள்.
- ஆனால் இங்கே திராவிட அரசுகள் கொண்டுவந்த மதுவிற்பனையால் 2,00,000 பேர் இறந்திருக்கிறார்கள். இது என்ன இனப்படுகொலை.? அங்கே சிங்களவன் கொல்கிறான். இங்கே எங்களவன் கொல்கிறான்.

## கைம்பெண்கள் அதிகம்

- மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில்தான் கைம்பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்றாகி இருப்பதற்கு மாறி மாறி ஆட்சியில் அமர்ந்துகொண்டு மது விற்பனையைப் போட்டிபோட்டு நடத்திய திராவிடக் கட்சிகளே காரணம்.

## சிந்திக்கும் திறனற்று

- இந்தத் திராவிடக் கட்சிகள் கொண்டு வந்த மதுவிற்பனையால், ஒரு பகுதியினரைச் சொத்தமாக சிந்திக்கவும் உழைக்கவும் திறனற்ற மக்களாக மாற்றிச் சிறுவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் என்று அனைவரையும் குடி நோயாளிகளாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்

## கள்ளச்சாராயத்தைத் தடுப்போம்

- அரசு மதுபாணங்களை நிறுத்தினால் நாட்டில் கள்ளச்சாராயம் பெருகும் என்று கூறும் காரணத்தை நாம் தமிழர் அரசு ஏற்கவில்லை. கடுமையான கண்காணிப்பை ஏற்படுத்தும். கள்ளச்சாராயத்தைத் தடுக்கும் சிறப்புக் காவல் பிரிவை ஏற்படுத்தி முற்றாக தடுத்து நிற்கும்.





Clarity Version download at www.makkalarasu.com

> நாம் தமிழர் அரசு மதுவையும் புகையிலைப் பொருட்களையும் முற்றாகத் தடை செய்கிறது. தமிழகத்திற்குள் புகையிலை பொருட்களை எந்த வடிவில் கொண்டுவந்தாலும் தடை செய்வோம்

## அச்சுறுத்தும் புற்றுநோய்

- புகையிலையில் சுமார் 4 ஆயிரம் நச்சுப்பொருட்கள் இருக்கின்றது. பயன்படுத்தும் மனிதனின் நுரையீரல், தொண்டைக்குழல், குரல்வளை, வாய்ப் பகுதி உள்ளிட்ட பல உறுப்புகளைத் தாக்கி அழித்துப் புற்றுநோயை உருவாக்குகிறது. புகையிலை விற்பனை செய்வதில் வரும் வருமானத்தைவிட அதனால் ஏற்படும் நோய்களுக்கான மருத்துவச் செலவு அதிகம் என்ற எச்சரிக்கை விழிப்புணர்வும் எழுந்துள்ளது.
- புற்று நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையில் 45 விழுக்காடு மக்கள் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துபவர்களாக இருக்கிறார்கள்.

## தலைமுறை அழிக்கும் மது

- இன்று புகையிலை பாதிப்பைவிட மதுபாண பாதிப்பு பெரும் அச்சுருத்தலாய் மாறி நிற்கிறது.. தமிழக அரசின் மதுக்கொள்கையால் இன்று 40 சதவீத ஆண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்ள். அவர்களைப் பார்த்து வளரும் குழைந்களும் மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் குடும்பமும் பாதிக்கப்பட்டு தற்கொலை முடிவை நோக்கிச் செல்கின்றன.

## 60 வகையான நோய்

- எயிஸ்ட்ஸ், எலும்புருக்கி நோயால் இறப்பவர்களைக் காட்டிலும் புகையிலை பொருட்களால் ஏற்படும் நோய் ஏற்படுத்தும் மரணங்கள் அதிகம். அதைவிட மதுப்பழக்கத்தால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகம். மதுவைக் குடிக்கும் நபர்கள் 60 வகையான நோய் பாதிப்பிற்கு ஆளாகிறார்கள்.

## மனச்சோர்வு – தற்கொலை

- மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தொடர்ந்து மனச்சோர்வு, மனநோய்க்கு ஆளாகி இறுதியாக தற்கொலையும் செய்துகொள்கிறார்கள். இப்படிப்பட்ட மனநோயாளிகளால் பாலியல் வன்முறை, கொலை, கொள்ளை போன்ற வன்முறைகளும் நடந்தேறுகிறது

## சாலை விபத்துக்களை விட அதிகம்

- தமிழகத்தில் நடக்கும் சாலை விபத்துகளில் 70 விழுக்காடு விபத்துகள் மதுக்குடிப்பவர்களால்தான் நடந்தேறுகிறது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் அதிக சாலை விபத்துகளும், மரணங்களும் நடந்தேறுகின்றன. அதற்குக் காரணம் மதுபான விற்பனைதான்.

## முற்றிலுத் தடை செய்யும்

- இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு நாம் தமிழர் அரசு மதுவையும் புகையிலைப் பொருட்களையும் முற்றாகத் தடை செய்கிறது. தமிழகத்திற்குள் புகையிலைப் பொருட்களை எந்த வடிவில் கொண்டுவந்தாலும் தடை செய்வோம். மதுவால் பாதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து மீட்க மாவட்டம்தோறும் மனநல கலந்தாய்வு மையங்கள் நடத்தப்படும்.
- திரைப்படம், சின்னத்திரை ஆகியவற்றில் புகையிலை, மதுக்குடிக்கும் காட்சிகளுக்கு முற்றாகத் தடை விதிக்கப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



**என் தாய்மொழியை என்னைவிட நீ சிறப்பாகப் பேசுகிறாய் என்றால், என்னை ஆளவேண்டும் என்ற ஆசை உனக்கு வந்துவிட்டது என்று அர்த்தம்**

**– சீன பேரரசன் சன்ட் சூ**

Clarity Version download at www.makkalarasu.com





# அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பு, அதற்கேற்ற ஊதியம் அதைக் கொண்டு பெருமைக்குரிய வாழ்க்கை. இதுதான் நம் கனவு

# இலவச ஒழிப்பு!

## இலவசத் திட்டங்கள் நிறுத்தப்படும்

- தனிமனிதன் கையேந்தினால் பிச்சை, நம்நாட்டு மக்கள் முழுவதுமாய்க் கையேந்தினால் அதுபிச்சை இல்லாது இலவசமா? கோட்டைகட்டி ஆண்ட இனத்தை, குடிசைக்கு வக்கில்லாமல் நிற்கவைப்பதும், ஈக்கும், எறும்புக்கும் இரையாய் இருக்கட்டுமே என்று அரிசி மாவில் கோலம் போட்ட அன்னைத் தமிழ்ச் சமூகத்தை, அரைப்படி அரிசிக்குக் கையேந்தி நிற்கவைப்பதும் அவமானகரமானது.
- மயிலுக்குப் போர்வை கொடுத்து, முல்லைக்குத் தேர்கொடுத்த வள்ளல் பெருமக்களின் வாரிசுகள், மானத்தை மறைக்க வேட்டி, சேலைக்குக் கையேந்தி நிற்கிற இழிவான நிலைக்குத் தள்ளப்பட்டு இருப்பது கொடுமையானது.

## ஆடு மாடு உங்களுக்கு; நாடு எங்களுக்கு

- ஆடு, மாடு உங்களுக்கு இலவசம். நாடு எங்களுக்கு இலவசம் என்று எடுத்துக்கொள்கிற ஆட்சியாளர்களால்தான் இந்த அவமானகரமான நிலை.

*“ஆறுதலால் காயங்கள் ஆறுவதில்லை*

*அழுவதினால் எதையும் அடைந்து விடமுடியாது*

*தூறல்களால் பயிர்கள் விளைவதில்லை*

*என் தேசத்தை நாசமாக்கிய ஒரே சொல் இலவசம்”* என்று

மதிப்பிற்குறிய பெருமகன் ஐயா குன்றக்குடி அடிகளார் கூறுகிறார்.

- இலவசம் என்பது வளர்ச்சித் திட்டம் அல்ல. அது ஒரு வீழ்ச்சித் திட்டம். சென்ற ஆண்டு இலவசத்தைப் பெற்றவன், இந்த வருடம் வளர்ந்துவிட்டேன், இலவசம் வேண்டாம் என்று சொல்வதில்லை. மறுபடியும் கையேந்தி நிற்கிறான்.
- ஏழைகளின் வாழ்வாதாரத்தை மாற்றுவதற்கு எந்த வளர்ச்சித் திட்டங்களும் இங்கே இல்லை.

## கட்டணமில்லாமல்...

- நாம் தமிழர் அரசில் குடிக்கத் தூயகுடிநீர், கல்வி, மருத்துவம், இவை மட்டுமே கட்டணமில்லாமல் வழங்கப்படும்.
- இலவசம் பெற வேண்டிய நிலையில் இல்லாது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படும்.
- கல்வி அதற்கேற்ப வேலை வாய்ப்பு, அதற்கேற்ப ஊதியம், அதைக் கொண்டு பெருமைக்குரிய வாழ்க்கை **இதுவே நாம் தமிழர்** அரசின் கொள்கை.
- நாம் தமிழர் அரசில் இலவசத் திட்டம் முழுவதுமாய் ஒழிக்கப்படும்.
- இலவசத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி தனிநபர் வேலை வாய்ப்புக்கும், மனித உழைப்பு உற்பத்திக்கும் பயன்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்யப்படும்.

வெளிப்படையான நிர்வாகம்



Clarity Version download at www.makkalarasu.com

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை - தமிழ்மறை (1031)



Clarity Version download at www.makkalarasu.com

# உழவர் நலனை உயர்த்துவோம்

உழுபவர் கணக்குப் பார்த்தால் உழக்குகூடத் தேராது என்ற முதுமொழிக்கேற்ற துயர நிலைதான் உழவர் பெருமக்களுக்கு இன்றும் நீடித்து வருகிறது. உலகிற்கு உணவிடும் உழவர்களின் வாழ்க்கை வறுமையில் உழலும் நிலையை நாம் தமிழர் அரசு மாற்றியமைக்கும்.

## உழுபவரே விலையை உறுதிப்படுத்த வேண்டும்

- ***ஒருவன் மது இல்லாமல் வாழ முடியும்.***
  ***புகையிலைப் பொருள் இல்லாமல் வாழ முடியும்.***
  ***உணவில்லாமல் வாழ முடியாது.***

  ஆனால் மதுவையும் புகையிலைப் பொருட்களையும் விற்பவன் வசதியாக வாழ்கிறான். உணவை உற்பத்தி செய்யும் உழவன் ஏழையாகவே இருக்கின்றான். காரணம் உலகத்தில் எந்தப் பொருட்களையும் உற்பத்தி செய்கிறவர்களே அதற்கான விலையை நிர்ணயிக்கின்றனர். உழவர்கள் அவர்கள் விளைவிக்கக் கூடிய பொருட்களை அவர்களே உறுதிபடுத்த முடிவதில்லை.

## வாழும் தெய்வங்கள்

- எல்லாரும் மனிதர்கள் செய்யக்கூடிய வேலையையே செய்வார்கள். உழவர்கள் மட்டும் தெய்வத்தின் வேலையைச் செய்கிறார்கள். உலகிற்கே உணவளிக்கின்ற உழவர்கள் தெய்வத்திற்கு இணையானவர்கள்.

***“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்***

***உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே”*** - சீத்தலைச் சாத்தனார்.

## உழவுத் தொழில் அரசுப் பணி

- ஒருவர் வாழ்க்கையில் மருத்துவரை எப்போதாவதுதான் சந்திக்கின்றார். வழக்கறிஞரையும் வாழ்க்கையில் என்றாவது ஒருநாள் சந்திக்கின்றார். ஆனால் நாம் உணவருந்தும் போதெல்லாம் ஒவ்வொரு நாளும் மூன்று முறை சாப்பிடுவதன் மூலம் நாம் வேளாண் குடிமகனை சந்திக்கிறோம். அப்படிப்பட்ட உழவர்களின் நலன் போற்றப்பட வேண்டும். நாம் தமிழர் அரசு உழவுத் தொழில் செய்வோரை அரசு ஊழியர்களாக மாற்றும்.

## தனி நலவாரியம்

- உழவர்களுக்கென தனியாக வாரியம் அமைக்கப்படும். அவர்களின் சிக்கல்கள் தீர்க்கப்படும். உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நலவாரியமே ஒரு விலையை நிர்ணயிக்கும். அந்த விலையைத்தான் அரசும் மற்றவர்களும் வாங்க வேண்டும்.மேலும் அவர்களின் நலனுக்குண்டான அனைத்து மாற்றங்களையும் கொண்டு வருவோம்.

உழவர் நலனை உயர்த்துவோம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

> எந்தத் தொழிற்சாலையிலும் கழிவுதான் வருகிறது. வேளாண் தொழிலில் மட்டுமே உயிர்ச்சூழல் உருவாகிறது. வேளாண்மை என்பது தொழில் அன்று பண்பாடு, அதனால் நாம் தமிழர் அரசு உழவர்களைப் பெரிதும் போற்றும்

## தேசியப் பயிரினங்களுக்கு உதவி

- கம்பு. கேழ்வரகு, சோளம், தினை, இயற்கை நெற்பயிர்கள் ஆகிய தேசியப் பயிரினங்களைப் பயிரிடும் போது அதற்குப் காப்பீடும்,ஊக்கத்தொகையும் வழங்கப்படும். மற்ற பயிரினங்களுக்கு மானியம் வழங்கப்படும்.

## 5,000 ரூபாய் நிவாரணம்

- உழவுத் தொழில் இல்லாமல் இருக்கும் மழைக்காலம், கோடைக்காலம் மேலும் பேரிடர் காலங்களில் உழவர் குடும்பத்திற்குத் தலா 5,000 ரூபாய் நிவாரண உதவி அளிக்கப்படும்.
- நலிந்த உழவர்களுக்கு அனைத்து உழவுப் பொருட்களும் குறைந்த விலைக்கு வழங்கப்படும்.

## 2,500 ரூபாய் ஓய்வூதியம்

- அந்த 60 வயதுக்கு மேற்பட்ட உழவர்களுக்கு மாத ஓய்வூதியம் 2,500 வழங்கப்படும். தங்கள் அனுவங்களை அடுத்த தலைமுறையினருக்குப் பயிற்சியாக அளிக்கும் மூத்த உழவர்களுக்குக் கூடுதலாக 2,500 அளிக்கப்படும். அவர்களுக்கான மருத்துவ வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்படும்.

## கரும்பு உழவர்களுக்கு

- கரும்புப் பயிர் உழவர்கள் ஒவ்வொரு முறையும் விலையை உயர்த்திக் கொடுக்கச் சொல்லிப் போராடி வருகிறார்கள். நாம் தமிழர் அரசில் இந்த அவலம் இருக்காது. கரும்பு உற்பத்தி உழவர்களோடு அரசும் சேர்ந்து பயிரிடும். உழவர்களும், அவர்களுக்கான நலவாரியமும் சேர்ந்து நிர்ணயிக்கும் விலையிலேயே அரசு வாங்கிக்கொள்ளும்.

## வேலை வாய்ப்பில் முன்னுரிமை

- இயற்கைவழி வேளாண்மையில் ஆய்வை மேற்கொள்ளும் உழவர்களுக்கு ஊக்கத்தொகையுடன் அரசு ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- உழவர்களின் வாரிசுகளுக்குக் கல்வி,மருத்துவம்,வேலை வாய்ப்பு அனைத்திலும் முன்னுரிமை இருந்தாலும் மிகுந்த அக்கறையோடு முதன்மையிடம் கொடுக்கப்படும்.
- எந்தத் தொழிற்சாலையிலும் கழிவுதான் வருகிறது. வேளாண் தொழிலில் மட்டுமே உயிர்ச்சூழல் உருவாகிறது, வேளாண்மை என்பது தொழில் அன்று பண்பாடு, அதனால் நாம் தமிழர் அரசு உழவர்களைப் பெரிதும் போற்றும்.

**ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமே இல்லை.**

# அடிமையாக வாழ்வதையே அருமையான சுதந்திரமென்று எம்மக்கள் கருதுகிறார்கள்

- செந்தமிழன் சீமான்




Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

**பெருங்கடல் முழங்கும் பெருமித முற்ற
நெய்தல் நிலத்தில் நெத்திலி சுறா
நெய்மீன் பெருகும், நேர்த்திசால் முத்தும்
உப்பும் குவியும்; உயிரின் கூற்றாய்
இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நிகழும்
ஒருமா நிலமாய் ஓங்கும் நெய்தலே!**

*- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்*



# மீனவர் நலன்

பெருமைக்குரிய நெய்தல் நிலத்து மக்கள் கடலை ஆண்டப் பெருமைக்குரியவர்கள். கடல் தாண்டியப் பயணங்களும் வெற்றிகளும் இவர்களின்றிக் கிடையாது. இவர்களின் முக்கிய மீன் பிடிப்புத் தொழில்தான் அதிக வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தருகிறது. எனவே நாம் தமிழர் அரசு இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த புதியத் திட்டங்களைக் கொண்டு வருகிறது.

## மீனவர்களுக்குத் தனித்தொகுதி

- மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள் இருக்கின்றன. 591 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 12 இலட்சம் மீனவ மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் மொத்த கடல்மீன் உற்பத்தியில் 12 சதவீதம் தமிழக மீனவர்களின் பங்களிப்புதான். ஆனால் தொகுதிப் பங்கீட்டில் இவர்களுக்கு எந்த முன்னுரிமையும் வழங்கப்படவில்லை. எனவே கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் மட்டுமே போட்டியிட ஆறு சட்டமன்றத் தனித் தொகுதி ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்க நாம் தமிழர் அரசு உறுதி அளிக்கின்றது.

## நீண்ட நாள் கோரிக்கை

- மீனவ மக்கள் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள். எனவே இவர்களைப் பாரம்பரிய பழங்குடியினர் இனத்தில் சேர்க்கவேண்டும் என்று மண்டல் ஆணையம் பரிந்துரைத்திருந்தது. அதனை ஏற்று ஆந்திரா, கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி, மாநிலங்களைப் போல் தமிழக அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும். மத்திய அரசுடன் போராடிப் பெற்றுத்தரும்.

## கச்சத் தீவை மீட்போம்

- கச்சத் தீவின் ஒப்பந்தத்தை ரத்து செய்து நமது மீனவர்களின் மீன்பிடிப்பு உரிமையை நிலைநாட்ட நடவடிக்கையை எடுப்போம். அதற்கான சட்ட நடவடிக்கையையும் மேற்கொள்வோம். இதனால் கச்சத் தீவுப் பகுதியில் நமது மீனவர்கள் அச்சமின்றி மீன் பிடிப்பார்கள்.

> “வருடத்திற்குச் சுமார் 6,000 கோடியை அந்நியச் செலாவணியாக ஈட்டிக்கொடுக்கிறது. ஆனால் மீனவர்களுக்கென்று மத்தியில் தனி அமைச்சகம் இல்லை.”

மீனவர் நலன்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



கச்சத் தீவு
மாதா கோவில்

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்கள், 591 மீனவக் கிராமங்கள், சுமார் 12 இலட்சம் மீனவ மக்கள் வாழ்கிறார்கள். எனவே கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் மட்டுமே போட்டியிட ஆறு சட்டமன்றத் தனித் தொகுதி ஒதுக்க நடவடிக்கையை எடுக்க நாம் தமிழர் அரசு உறுதி அளிக்கின்றது



இலங்கை கடற்படையால் கைது
செய்யப்பட்ட மீனவர்கள்



மீனவர்களுக்கான நவீன
அடுக்குமாடிக் குடியிருப்பு



சிறப்புக் கடலோரப் பாதுகாப்பு
படை(மாதிரிப் படம்)

Clarity Version download at www.makkalarasu.com

மீனவர் நலன்

## தனி அமைச்சகம்

- 45,181 பாரம்பரிய மீன்பிடிக் கலன்கள், 5596 இயந்திரப் படகுகள், 3 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் 363 மீன் இறக்கும் மையங்கள் என்ற கட்டமைப்பைக் கொண்டிருக்கும் தமிழகக் கடலோர மீன்பிடிப்புத் தொழில், வருடத்திற்குச் சுமார் 6,000 (இந்திய அளவில் 36,000 கோடி) கோடியை அந்நியச் செலாவணியாக ஈட்டிக்கொடுக்கிறது. நாட்டின் 80 விழுக்காடு மக்களுக்கான உணவை அளிக்கிறது. ஆனால் மீனவர்களுக்கென்று மத்தியில் தனி அமைச்சகம் இல்லை. அதனால் மீனவர்களின் நலனுக்கென்று தனி அமைச்சகம் வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசை வலியுறுத்திப் பெறுவோம்.

## சிறப்புக் கடலோரக் காவல் படை

- தமிழக மீனவர்களைப் பாதுகாக்கவென்று தனியே ஒரு சிறப்புக் கடலோரப் பாதுகாப்புப் படை உருவாக்கப்படும். இதில் பெரும்பான்மையான கடலோர மீனவ இளைஞர்கள் இணைக்கப்படுவார்கள். மீனவர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல். தாக்குதலில் இருந்து நமது சிறப்புக் கடலோரக் காவல் படை பாதுகாப்பைக் கொடுக்கும்.

## வழக்குப் பதிவு

- தமிழக எல்லையில், இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டாலும், தாக்கப்பட்டாலும் அதற்கான வழக்குப் பதிவை இங்கே முறையாகப் பதிவு செய்வதில்லை. இப்போது வழக்குப்பதிவு செய்தாலும் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை. நமது அரசு வழக்குப் பதிவு செய்வதோடு ‘இலங்கைக் கடற்படைமீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என்று முறையாக நீதிமன்றத்தை அணுகிச் சட்ட நடவடிக்கையை எடுப்போம். நம் மக்களின் பாதிப்பிற்கு ஒரு நியாயத்தைப் பெறாமல் விடமாட்டோம்.

## மாநில அரசிடம் அதிகாரம்

- இந்தியாவில் இரண்டாவது பெரிய கடற்பரப்பைக் கொண்டிருக்கும் தமிழகம் 1076 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்டது. இப்பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் நலன் காக்கக் கடலில் சுற்றுக்காவல் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் ஒவ்வொரு நாளும் மத்தியக் காவல் படையின் உத்தரவைப் பெற வேண்டியிருக்கிறது. இயற்கைச் சீற்றம் போன்ற காலகட்டங்களில் இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும் என மத்திய அரசிடம் கேட்டுப் பெறுவோம். உடனடி மீட்பு நடவடிக்கைக்கு இது ஏற்றதாக இருக்கும்.

## இருப்பிட வசதி

- மீனவர்களின் குடியிருப்புகள் நவீன வசதிகளுடன் கட்டித் தரப்படும். ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் ஒரு வீடு என்ற திட்டத்தைக் கொண்டு வருவோம். கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும் மீனவர்களுக்கே சொந்தம். அதனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீனவர்கள் கடலோரப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள். மீனவர்களை அப்புறப் படுத்திவிட்டுக் கொண்டுவரும் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி அளிக்க மாட்டோம்.

> “கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும் மீனவர்களுக்கே சொந்தம். எனவே கடலோரப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள்”





கடல் அட்டை
வளர்ப்பு



கடலுக்குள் சிப்பி
வளர்ப்பு

**இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள 21 தீவுகளில் நமது மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்தத் தடையை நீக்கச் செய்வோம். அதனால் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமை பாதுகாக்கப்படும்.**



தமிழகக்
கடலோரத் தீவு - 1



தமிழகக்
கடலோரத் தீவு - 2



தமிழகக்
கடலோரத் தீவு - 3



தமிழகக்
கடலோரத் தீவு - 4

Clarity Version download at www.makkalarasu.com

## கடல் அட்டைக்குத் தடை நீக்கம்

- கடல் அட்டை அரிய உயிரினம் என்றுகூறி, அதைப் பிடிப்பதற்குத் தடை விதித்திருக்கிறது மத்திய அரசு. இதனால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் பல வெளிநாட்டு நிறுவனங்கள் கடல் அட்டையைப் பிடித்து ஏற்றுமதி செய்துகொண்டு தான் இருக்கின்றன. எனவே கடல் அட்டை மீதான தடையை நீக்க நமது அரசு நடவடிக்கை எடுக்கும். மீனவர்களே அவற்றை வளர்த்துப் பெருக்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்.

## பண்ணைகளில் வளர்ப்பு

- கடலுக்குள் கூண்டு வலைகள் கொண்ட பண்ணைகள் அமைத்து அதற்குள்ளாகத் தடை செய்யப்பட்ட கடல் அட்டை, நண்டு, சிப்பி, கடல்பாசி, கடல் ஆமை, சிங்கி, பாறை மீன் ஆகியவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்படும். அதற்குத் தேவைப்படும் உதவிகள் அனைத்தும் மீனவர்களுக்கு வழங்கப்படும்.

## தீவுகளில் மீன்பிடிப்பு உரிமை

- இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள 21 தீவுகளில் நமது மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்தத் தடையை நீக்கச் செய்வோம். அதனால் நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை பாதுகாக்கப்படும்.

## கடல்சார் பல்கலைக்கழகம்

- புதிய கடல்சார் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் தொடங்கப்படும். இதில் மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன் மூலம் இளைஞர்கள் நவீன மீன்பிடிப்புத் தொழில், பதப்படுத்தும் பயிற்சி உள்ளிட்ட அனைத்துக் கல்வி முறையையும் பெற்றுக்கொள்ளலாம்.

## இளைஞர்களுக்குப் பயிற்சி

- நவீன மீன்பிடிப்புப் பயிற்சி, படகுகளை இயக்குவது, மீன் பண்ணைகளைப் பராமரிப்பது, பதப்படுத்தும் பயிற்சி, இயற்கை முறையில் மீன வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, ஆகிய பயிற்சிகள் மீனவ இளைஞர்களுக்கு வழங்கப்படும். பயிற்சி முடிந்தவுடன் சொந்தமாகத் தொழில் தொடங்கக் கடன் அளிக்கப்படும்.

## மீனவர்கள் நலவாழ்வு வைப்பகம் (வங்கி)

- வேளாண் பெருங்குடி மக்களுக்கு இருப்பது போல் மீனவர்களுக்கான வங்கி தனியே அமைக்கப்படும். தமிழ்த்தேசிய வைப்பகத்தின் ஒரு கிளையாகச் செயல்படும் இந்த ‘மீனவர்கள் வைப்பகம்’ மிகக் குறைந்த வட்டியில் கடன் அளிக்கும். தொழில் தொடங்குவற்கான கருவிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக நிற்கும்.

“புதிய கடல்சார் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் தொடங்கப்படும். இதில் மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்”





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


இராமேசுவரம்

**கடலோர மீனவ மக்களின் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய அணு உலை, அனல் மின் உலைகள், வணிகத் துறைமுகங்கள் ஆகியவற்றை முழுதும் தடுக்க நடவடிக்கை எடுப்போம்**


மீன்பிடித் துறைமுகம்


கூடங்குளம் அணுமின் நிலையம்


தூண்டில் வளைவுப் பாலம்

## நெய்தல் நிலத் தலைநகரம்

- தமிழர்களின் மூத்த குலத்தொழிலாக இருக்கும் மீனவர்களின் பண்பாட்டைப் போற்றும் விதத்தில் இராமேசுவரம் நெய்தல் நிலைத்தின் தலைநகராக அறிவிக்கப்படும். இங்கு நெய்தல் நிலத்து மக்களின் கலை, பண்பாடு அறிந்து கொள்ளும் விதத்தில் ஒரு கண்காட்சியகம் அமைக்கப்படும். இங்கு நெய்தல் நிலத்தின் பெருமைகளையும், வரலாறுகளையும் அறிந்துகொள்ளலாம்.

## உறுதி செய்கிறோம்

- நூற்றுக் கணக்கான அயல்நாட்டு இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்பட்ட மீன்பிடி உரிமங்கள் திரும்பப் பெறப்படும். இவர்களால் இந்த மண்ணின் பாரம்பரிய மீனவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண படகுகளிலும், கட்டுமரங்களிலும் சென்று மீன்பிடித்து வந்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது

## தடை செய்யப்படும்

- கடலோர மக்களின் மீன்பிடிப்புத் தொழில், உரிமைகள் பாதிக்கக்கூடிய அணு உலை, அனல் மின் உலைகள், வணிகத் துறைமுகங்கள் ஆகியவை முழுதும் தடுக்கப்படும். அதற்கான நடவடிக்கைகை எடுப்போம். மக்கள் நலனைப் பாதிக்கும் தொழிற் சாலைகளுக்கான ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படும். மேலும் புதிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி மறுக்கப்படும்.

## மீனவர்களுக்கே குத்தகை

- ஏரி, கண்மாய், குளம், அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகளில் வளர்க்கப்படும் மீன்களைத் தனிநபர்களிடம் குத்தகைக்கு விடுவது தடுக்கப்படும். மீனவர்களின் சங்கங்களுக்கும், பெண்கள் குழுக்களுக்கும் மட்டுமே குத்தகை வழங்கப்படும். அதில் கிடைக்கும் இலாபத்தைத் தனி நபர் மட்டுமே எடுத்துக்கொள்ளாமல் கூட்டுக் குழுமமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## அரசே கொள்முதல் செய்யும்

- மீனவர்களுக்குத் தேவையான அனைத்து வகை வலைகள், கட்டுமரம், படகு கட்டும் கருவிகள், மீன்பிடிப்புச் சாதனங்கள், நவீன கடல்சார் தொழிற் கருவிகள் என அனைத்தையும் தனியாரிடம் அதிக விலை கொடுத்து வாங்குவதைத் தடுக்க, அவற்றை நாம் தமிழர் அரசே கொள்முதல் செய்யும், குறைந்த விலையில் வழங்கும்.

## கடற்கரை அரிப்பைத் தடுக்க


- தமிழகத்தின் பல கடலோரப் பகுதிகளான உவரி, பெரியதாழை, தொடங்கி எண்ணூர் வரை பட இடங்கள் கடல் அரிப்பால் பாதிப்பிற்குள்ளாகி வருகிறது. அந்த இடங்களில் எல்லாம் தூண்டில் வளைவுப் பாலங்கள் அமைக்கப்படும். கடலோரக் கிராமங்களையும், சிறிய மீன்பிடிப்பு, இறக்குமதி இடங்களையும் இதன் மூலம் பாதுகாக்காப்போம்.

> “அயல்நாட்டு இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்பட்ட மீன்பிடிப்பு உரிமங்கள் திரும்பப் பெறப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



செயற்கைக்கோள் கண்காணிப்பு மாதிரிப் படம்

**செயற்கைக் கோள் உதவியுடன் எங்கெங்கு மீன்வளம் அதிகமாக இருக்கிறது என்ற தகவல்களைப் பெற்று உடனுக்குடன் மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தை நமது அரசு செயல்படுத்தும். ஆபத்துக் காலங்களில் காணாமல் போவோரையும் இதன் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்**


உப்பளம்


மீன் பதப்படுத்தும் தொழிற்சாலை

## கடலூரில் தூண்டில் வளைவுப் பாலம்

- முக்கிய ஆறும் கடலும் இணைகின்ற முகத்துவாரப் பகுதி கடலூரில் உள்ளது. படகுகள் அனைத்தும். முகத்துவார ஆற்றுப் பகுதியில் இருந்து கடலுக்குள் செல்லும் பகுதியில், கடலில் இருந்து வரும் அலைகளால் இழுத்து வரப்படும் மணல் மேடுகள் படகுகளுக்குத் தடையாக இருக்கின்றது. எனவே மீனவர்களின் நலன் வேண்டி இப் பகுதியில் தூண்டில் வளைவுப் பாலம் அமைத்துக் கொடுக்கப்படும்.

## செயற்கைக் கோள்

- செயற்கைக் கோள் உதவியுடன் எங்கெங்கு மீன்வளம் அதிகமாக இருக்கிறது என்ற தகவல்களைப் பெற்று உடனுக்குடன் மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தை நமது அரசு செயல்படுத்தும். ஆபத்துக் காலங்களில் காணாமல் போவோரையும் இதன் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

## தூத்துக்குடியில் உப்பு

- தூத்துக்குடியில் உள்ள உப்புத் தொழிற்சாலைகள் அனைத்தும் மேம்படுத்தப்படும். அங்குக் கடல்சார் மக்களுக்குக் கூடுதல் வேலை கிடைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அரசு நிறுவனமும் உப்பளத் தொழிலில் ஈடுபடும். இதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்பை உருவாக்கும்.

## பதப்படுத்தும் தொழிற்சாலை

- முக்கியக் கடலோரப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்தி வைக்கும் குளிரூட்டிக் கூடங்கள், கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்குத் தேவையான பனிக்கட்டிகளை (ஐஸ் கட்டிகளை) உற்பத்தி செய்து கொடுக்கும் தொழிற்கூடங்கள் அனைத்தையும் அரசே அமைக்கும். குறைந்த விலையில் மீனவர்களுக்கு வழங்கும்.

## ஏற்றுமதி நிறுவனம்

- பிடிக்கப்படும் மீன்களை அரசே கொள்முதல் செய்யும். வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகளை முறைப்படுத்தி, மீனவர்களுக்கு வருவாய் கிடைக்கும் வகையில் திட்டங்கள் கொண்டு வரப்படும். இறால்களை உயிருடன் ஏற்றுமதி செய்வது, நண்டின் சதைப் பகுதியை மட்டும் ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட வகைகளில் இரட்டிப்பு இலாபத்தைப் (மதிப்புக் கூட்டிய விலை) பெற மீனவர்களுக்கு ஊக்கம் அளிக்கபடும்.

## கிராமப்புற மீனவர்களின் நலன்

- கடலோரப் பகுதி மீனவர்களைத் தவிர்த்துக் கிராமப் புறங்களில் ஏரி குளம் ஆறுகளில் மீன்பிடிப்புத் தொழிலைச் செய்து வரும் மீனவர்களின் நலனும் பாதுகாப்பப்படும். வருடத்தில் சில மாதங்கள் வேலையற்று இருக்கும் இந்த மீனவர்களுக்கு வேண்டிய உதவித் தொகைகள் வழங்கப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com




# உள்நாட்டு வணிகத்தில் அன்னியரின் முதலீட்டு ஆதிக்கம் அகற்றப்படும். வணிகர் நல வாரியத்தைப் புதுப்பித்துச் செயல்முறைக்குக் கொண்டு வருவோம்

# வணிகர் நலன் பாதுகாப்பு

## அந்நிய முதலீட்டுக்குத் தடை

- உள்நாட்டு வணிகத்தில் அன்னியரின் முதலீட்டு ஆதிக்கம் அகற்றப்படும். உள்நாட்டுத் தயாரிப்புப் பொருள்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடக்கத்தில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.

## நலவாரியம்

- வணிகர் நல வாரியத்தைப் புதுப்பித்துச் செயல்முறைக்குக் கொண்டு வருவோம். கந்து வட்டிக் கொடுமையிலிருந்து சிறு வியாபாரிகளைப் பாதுகாத்திடத் தொகுதிவாரியாக வர்த்தக வங்கி தொடக்கி அவர்களுக்குக் கடன் வழங்குவோம்.

## முடக்கப்படும்

- இணையத்தளத்தில்(Online Shopping) நடத்தப்படும் வணிக நிறுவனங்கள் அனைத்தும் முடக்கப்படும். அதனால் உள்ளூர் வணிகர்கள் பாதிக்கப்படுவது தடுக்கப்படும்.
- சிறந்த வியாபாரிகளை ஆண்டுதோறும் தேர்வு செய்து அவர்களுக்கு நல் வணிகர் என்ற விருது வழங்கிப் பெருமைப்படுத்துவோம்.

## விருதுகள் வழங்கப்படும்

- ஆண்டுதோறும் முறையாக வரி கட்டும் வணிகர்களைப் பெருமைப்படுத்த அவர்களுக்கு அதிக அளவில் அரசுக்கு வரி செலுத்தியோர் என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்படுவர். சிறந்த வியாபாரிகளை ஆண்டுதோறும் தேர்வு செய்து அவர்களுக்கு ‘நல்வணிகர்’ என்ற விருது வழங்கிப் பெருமைபடுத்தப்படுவர்.

## சாதாரணக் கட்டணங்கள்

- வணிக நிறுவனங்களில் பயன்படுத்தும் எரிகாற்று உருளை, மின்கட்டணம், குடிநீர்க் கட்டணம் போன்றவைகளுக்கு வசூலிக்கப்படும் இரட்டிப்புக் கட்டணத்தை நீக்கி விட்டு, வீட்டு உபயோகத்திற்கான கட்டணமே பெறப்படும்.

## இழப்பீடு வழங்கும்

- சாலைகள் அகற்றும் பணியில் பாதிக்கப்படும் நில உரிமையாளர்களுக்கு இழப்பிடு வழங்குவது போல அங்கு வியாபாரம் செய்பவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்படும்.

## பாதுகாப்பு

- சமூக விரோதிகளின் மிரட்டல்கள், திருட்டுக் கொள்ளைச் சம்பவங்கள் ஏதும் நடக்காமல் அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கும் தகுந்தப் பாதுகாப்பு வழங்கப்படும்.

வணிகர் நலன் பாதுகாப்பு



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

**அலைதவழ் கடலும் அரும்பெரும் கோயிலும்**
**மலைகள் அருவி மணக்கும் காடொடு**
**உலகக் கலையின் ஊற்றுக் கண்ணாய்**
**நிலவும் தமிழகம் நெடுபுகழ் நாடே!**

- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்



# இன்பச் சுற்றுலாக் கொள்கை

## வழங்குவது அரசின் கடமை

சுற்றுலா வளர்ச்சியின் மூலம் தமிழினத்தின் கலை இலக்கியம், பண்பாடு, வாழ்வியல் முறை, வழிபாடு, வரலாற்றுப் பெருமை, நாகரீகம், மரபு சார்ந்த மருத்துவப் பெருமை ஆகியவற்றை உலகறியச் செய்யும் அரிய வாய்பை வளர்த்தெடுப்பதே **நாம் தமிழர் அரசின்** நோக்கம்.

## உலகெங்கும் வாழும் தமிழர்கள்

- உலகெங்கிலும் 130 நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டினரைத் தமிழகத்திற்குப் பார்வையிட, உறவுகளோடு கலந்துகொள்ள வரச் செய்ய வேண்டும். தமிழகச் சுற்றுலா அலுவலர்கள் அந்தந்த நாடுகளுக்குச் சென்று அவர்களைச் சந்திக்க நியமனம் செய்யப்படுவார்கள்.
- கோயில்கள், நகரங்கள், பாரம்பரியத் தலங்கள், மலைப்பகுதிகள், அருவிகள், தேசியப் பூங்காக்கள், தமிழகப் பாரம்பரிய உணவு, வனவளம், விலங்குகள், இயற்கை எழில் கொண்ட ஏராளமான இடங்கள் இங்கே இருக்கின்றன.

## பண்பாட்டுச் சுற்றுலா

- பல்லாயிரம் ஆண்டுகளாக நம் பாரம்பரியக் கலைகள் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிறது. பொங்கல், தைப்பூசம், ஏறுதழுவல், மாட்டுப்பொங்கல், ஆடிப்பெருக்கு, சித்திரைத் திருவிழா, கார்த்திகை தீபம் முதலிய திருவிழாக்களின்போது பயணிகளை வரவழைக்கச் சுற்றுலா மையங்கள் திறக்கப்படும்.

## கலை நிகழ்ச்சி


- முக்கிய நகரங்களில், நமது பண்டைய பாரம்பரிய விளையாட்டுகளான சல்லிகட்டு, ‘சடுகுடு’ எனும் கபடி, மற்போர், மல்யுத்தம், மள்ளர் கம்பம், சிலம்பு, சேவல் சண்டை, சதுரங்கம், கிளித்தட்டு, மாட்டுவண்டிப் பந்தயம் ஆகியவை நடத்தப்படும்.
- பறையாட்டம், பொம்மலாட்டம், சாக்கை ஆட்டம், காமன் பண்டிகை, கைச் சிலம்பு, கோலாட்டம், ஒகம், கரகாட்டம், காவடி, கழைக்கூத்து, கும்மி, மயிலாட்டம், பொய்க்கால் ஆட்டம், ஒட்டன்கூத்து, ஒயிலாட்டம், ஒயில் கும்மி, பாம்பாட்டம், பொய்க்கால் குதிரை, புலிஆட்டம், சேவை ஆட்டம், தெருக்கூத்து, உருமி ஆட்டம், வில்லுப்பாட்டு ஆகிய பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள் புத்துணர்வுடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும். இதனுடன் உலகெங்கும் சுவைக்கும் தமிழ்நாட்டின் சிறப்பான 200 வகை இயற்கை வழி உணவுகளும் பரிமாறப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



மள்ளர்
கம்பம்





தஞ்சைப் பெரிய கோவில்



ஏறுதழுவுதல்



சேவற் சண்டை



சிலம்ப விளையாட்டு


Clarity Version download at www.makkalarasu.com


வேளாங்கண்ணி கோயில்


நாகூர் தர்கா


பொங்கல் விழா




இளவட்டக் கல்

## பாரம்பரியச் சுற்றுலா

- உலகம் போற்றும் கோனோரிக் கோன் கோட்டை, திருமுருகன் திருக்கோயில்களான அறுபடை வீடுகள், கல்லணை, பத்தாம் நூற்றாண்டின் சித்தன்னவாசல் ஓவியம், ஆதிச்சநல்லூர் அகழ்வராய்ச்சி இடம், தஞ்சைப் பெரிய கோயில், ஆறாம் நூற்றாண்டின் மாமல்லபுர ஒரேகல் தேர்கள், மேட்டுப்பாளையம் நீலமலை(ஊட்டி) பொம்மைத் தொடர்வண்டி, மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவண்ணாமலை கோயில் காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் ஆகியவை உலகச் சுற்றுலா மையங்களாகப் பொலிவூட்டப்படும்

## சாகசச் சுற்றுலா


- திருப்பெரும்புதூர் கார் மோட்டார் விரைவுச் சாலையில், இந்தியாவின் இரண்டாவது நவீன பந்தயத் தடங்களில் சிற்றுந்துப் பந்தயங்கள் நடத்தப்படும்.

## மெய்யியல் சுற்றுலா

- ஆயிரக்கணக்கான கோயில்கள், முக்கிய மசூதிகள், தர்காக்கள், தேவாலயங்கள், புனிதர்களின் சமாதிகள் ஆகியவை மெய்யியல் சுற்றுலாத் தலங்களாகப் புனரமைக்கப்படும்






ஆயிரங்கால் மண்டபம், இராமேசுவரம்


நெல்லை - பேரருவி


புலிகள் சரணாலயம்


மலையடிவாரச் சுற்றுலாத் தலம் (முன்மாதிரி)


பழவேற்காடு


சித்தன்னவாசல் குகை ஓவியம்


சுற்றுலாப் பயணிகள் தங்கும் குடில்கள் (முன்மாதிரி)

Clarity Version download at www.makkalarasu.com

இன்பச் சுற்றுலாக் கொள்கை

## வளர்ச்சிக்கான வழிகள்

- தமிழ் நாட்டில் சுற்றுலாத் துறை மேலும் வளர்ச்சியடையக் கீழ்க்கண்ட சுற்றுலாத் தாழ்வாரங்களை அரசு அமைக்கும்.

1) திருச்சி - தஞ்சை - கும்பகோணம்
2) மதுரை - இராமேசுவரம்
3) மதுரை - கொடைக்கானல்
4) சென்னை - காஞ்சிபுரம் - வேலூர்
5) சென்னை - மாமல்லபுரம் - புதுச்சேரி - சிதம்பரம்
6) கோவை - குன்னூர் - உதகைமண்டலம் - ஏற்காடு - ஏலகிரி
7) கூடலூர் - தெப்பக்காடு - மசினாகுடி
8) கோவை - ஆழியாறு - திருமூர்த்தி அணை - டாப்ஸ்லிப் - வால்பாறை
9) தூத்துக்குடி - திருநெல்வேலி - நாகர்கோயில் - கன்னியாக்குமரி

இந்த வழித்தடங்களில் உள்ள கலை, பண்பாட்டு இடங்களை, இயற்கை மலைகளை, அருவிகளை எல்லாம் சுற்றுலாப் பயணிகளுக்குச் சுற்றிக்காட்டும் விதமாக முறைப்படுத்தப்படும்.

## வசதி வாய்ப்புகள் அவசியம்

- எளிமையான கட்டண விகிதங்கள் இருக்க ஆவன செய்வோம். அதற்கு ஏற்ற பயணிகளின் பயணச் செலவுத் திட்டத்தை உருவாக்குவோம்.

## செய்ய வேண்டியவை

- உலகத் தரம் வாய்ந்த, பல நாட்டுப் பயணிகளுக்கு ஏற்ற தங்குமிடங்கள் அமைக்கப்படும்.
- சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு முழு உத்தரவாதம் அளிப்போம். திறன் வாய்ந்த வழிகாட்டிகள் அமர்த்தப்படுவார்கள்.
- ஒரே நேரத்தில் அனைத்துத் பயண வாகனங்களையும் பயன்படுத்திக் கொள்ளும்படியான ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்படும்.
- நல்ல காற்றையும் இயற்கை எழிலையும் ஒருங்கே அனுபவிக்க மலையேற்றப் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.
- சுற்றுலாப் பயணிகளின் முக்கியத் தேவையான தூய குடிநீர், மருத்துவ வசதி, சுகாதார, கழிப்பிட வசதிகள் அளிக்கப்படும்.

## பழவேற்காடு

- வரலாற்றுச் சிறப்பு மிக்க பழவேற்காடு ஏரியைச் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவோம். பயணிகள் தங்கும் வசதியோ, நவீன படகு சவாரி வசதியோ, சிறந்த பொழுதுபோக்கு அம்சங்களோ இல்லாமல் இருக்கும் பழவேற்காடு ஏரி சுற்றுலாப் பகுதி உலகத் தரத்திற்கு உயர்த்தப்படும். அந்தப் பகுதியில் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் அனைத்தும் பராமரித்து சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு விடப்படும்.


## புத்துணர்வுச் சுற்றுலா

- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மூலிகைக் காற்றுச் சூழலில் ஓகம், உடல் ஒத்தடம், தொக்கணம் ஆகியவை அடங்கிய சோலைகள், குடில்கள் நிறுவிப் புத்துணர்வுச் சுற்றுலா பெருக்கப்படும். சித்த முறைப்படியான மருத்துவ முறைகளும் அங்கே செய்யப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com


Clarity Version download at www.makkalarasu.com





# தீவுகள்

இந்த 21 தீவுகளும் தமிழகத்திற்குச் சொந்தமானவை. நடுவண் அரசின் ஒப்புதலைப் பெற்று வெளிநாடுகளைப் போன்ற சிறப்பான சுற்றுலாத் தலமாக மாற்றுவோம்.




கடற்கரைச் சுற்றுலா செல்வோர் தங்கும் அறை


விசைப்படகு விளையாட்டு


சிறு தீவுப் பகுதி மரப்பாலம்


அலைச் சறுக்கு விளையாட்டு


நீர்மூழ்கி விளையாட்டு


ஆழ்கடல் அருங்காட்சி


கையுந்துப் பந்து விளையாட்டு

Clarity Version download at www.makkalarasu.com

இன்பச் சுற்றுலாக் கொள்கை


பாம்பன் பாலம்
இராமேசுவரம்

# தமிழகத்தில் தீவுச் சுற்றுலா

- வங்கக் கடலிலும், இந்தியப் பெருங்கடலிலும் 21 தீவுகள் தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக இருக்கின்றது. நாம் தமிழர் அரசு தீவுச் சுற்றுலாவைப் புதிதாக உருவாக்கும்.




மீன் அருங்காட்சியகம்

# கடற்கரைச் சுற்றுலா

- இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டது தமிழகம்தான். உலகின் நான்காவது நீளக் கடற்கரை மெரீனா கடற்கரை. கேளிக்கைகள், குடும்ப விருந்து, இசைத் திருவிழா, நடனத் திருவிழா, நாட்டுப்புறக் கலைகள் போன்றவை நடத்தப்படும்.
- காற்றலை விளையாட்டு, கடற்கரை இருசக்கர வண்டிகள், மணல் கலை, குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல், கலைப் பூங்காக்கள், கடற்கரைக் கைப்பந்து, கால்பந்து ஆகியவை நடத்திச் சுற்றுலா வளர்க்கப்படும்.
- ஆழமற்ற கடல்நீரில் நீந்தும் விளையாட்டுகளுக்கான ஏற்பாடுகள், மீன்களும் பவளப் பாறைகளும் நிறைந்த இராமேசுவரம் கடலில் அமைக்கப்படும்.
- கண்ணாடிப் படகுகள் நீந்த முடியாதவர்களுக்குக் கடலுக்குள் சென்ற உணர்வைத் தரும்.


பாய்மரப் படகு
சறுக்கு விளையாட்டு




இழுவைச் சறுக்கு
விளையாட்டு




Clarity Version download at www.makkalarasu.com


கரிகாலன் கல்லணை


சாத்தனூர் அணை


குற்றால அருவி


நீலமலை ஏரி


பிச்சாவரம் சதுப்பு நிலக்காடு


வனவிலங்குப் பூங்கா







## சுற்றுலா அணைகள்

- மேட்டூர் அணை, ஆத்துப்பாளையம் அணை, கல்லணை, வைகை அணை, தாமிரபரணி, அமராவதி அணை, மணிமுத்தாறு அணை, பாபநாசம் அணை, பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, பரம்பிக்குளம் அணை, ஆழியாறு ஆணை, பவானிசாகர் அணை, சாத்தனூர் அணை, புகழ்பெற்ற நீர்ப்பிடிப்பு பகுதிகள் அனைத்தும் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றப்படும். வார இறுதி நாள்களில் கலைநிகழ்ச்சிகள் சிறப்புப் போக்குவரவு வசதிகள் செய்யப்படும்.

## இயற்கைச்சூழல் சுற்றுலா

- நீலமலை(ஊட்டி), கொடைக்கானல், குற்றாலம் சென்னிமலை, சதுரகிரி, சவ்வாது மலை போன்ற மலை, மலைசார்ந்த பகுதி, வனங்கள், அருவி நீர்ப் பகுதிகள் அனைத்தும் சுற்றுலாத் தலமாக மாற்றப்படும். மலைப்பகுதிகளில் மலைவாழ் மக்களே வழிகாட்டிகளாக நியமிக்கப்படுவார்கள். தற்சமயம் 25 இயற்கைச் சூழல் தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் இடங்களை **நாம் தமிழர் அரசு** அடையாளப்படுத்தும்

## வன உயிரிகள் சுற்றுலா

- தமிழகத்தில் மொத்தம் 3 வன உயிரிப் பாதுகாப்புக் காடுகளும், 6 தேசிய உயிரியல் பூங்காக்களும், 8 வனவிலங்குச் சரணாலயங்களும், 4 யானைகள் பாதுகாப்புப் பகுதிகளும், 4 புலிகள் சரணாலயங்களும், 5 முதலைப் பண்ணைகளும், 16 பறவைகள் சரணாலயங்களும் இருக்கின்றன. இப்பகுதிகள் மேலும் சிறப்பாக மாற்றப்படும்.
- இது தவிரக் கடலோரங்கள் முழுதும் ஆமைகள் பாதுகாக்கப்படும்.
- இவை பல்லுயிர்ப் பாதுகாப்பு, கல்வி, பொழுதுபோக்கு, புராதன இடங்களைப் பாதுகாத்தல், நில, கடல் தன்மைகள் பாதுகாத்துப் பராமரிக்கப்படுவதோடு, சுற்றுலா வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும்.

## சதுப்புநிலச் சுற்றுலா

- 177 வகைப் பறவைகள் வந்து தங்கும் பிச்சாவரம் சதுப்பு நிலக் காடுகள் உலகிலேயே பெரிய சதுப்பு நிலக்காடாகும்.
- வெள்ளாறு, காலறூன் ஆறுகள் கடலில் வடியாமல் பின்னுக்குத் தள்ளப்படும் நீரில் படகு விளையாட்டுகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். 400 மேற்பட்ட நீர்வழிகளில் படகு உலா அமைக்கலாம்.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



நாட்டுக்கோட்டை
செல்வந்தர் வீடு



பறக்கும் வில்குடை
விளையாட்டு



கயிற
விளை



களரி விளையாட்டு



குழு நடனம்



கரகாட்டம்



பறையாட்டம்



ு கட்டித் தொங்கும்
ளையாட்டு





Clarity Version download at www.makkalarasu.com

## பிச்சாவரம்

- சதுப்பு மரங்கள் நீரில் சில அடிகள் வரை வேர்கொண்டிருப்பதைக் காணும் அரிய காட்சி கிடைக்கும். புத்துணர்வு மையங்கள், பாரம்பரிய மருத்துவ முறைகள், பாரம்பரிய உணவு ஆகியவை உள்ளடக்கிய உடல்நலச் சுற்றுலாவை இந்தப் பகுதிகளில் வளர்க்க ஏற்பாடு செய்யப்படும்.

## நாட்டுப்புறச் சுற்றுலா

- பழமை மாறாத கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குச் சுற்றுலா மையங்கள் அமைத்துப் பொருளாதார மேம்பாடு, சமூக ஆர்வம் பெருக்கப்படும்.

## வான் விளையாட்டுகள்

- உதகை, கொடைக்கானல், ஏலகிரி போன்ற மலைப் பகுதிகளில், காற்று பந்துலா, கயிறு தொங்கும் உலா, சிறு வானூர்தி உலா, ஆகிய விளையாட்டுகள் நடத்தப்படும்
- சுற்றுலாத் தலங்களில் அழகிய கைவினைப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள், வரலாற்று நினைவுப் புத்தகங்கள் ஆகியவை விற்பனை செய்யப்படும்.

## தேயிலைத் தோட்டச் சுற்றுலா

- தமிழகத்தின் நெடிய பரந்த தேயிலைத் தோட்டங்களும் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பரந்த மாளிகைகளும் காண்பதற்கினிய காட்சிகளும் சுற்றலாத் தலமாக உருவாக்கப்படும்..


## கேளிக்கைச் சுற்றுலா

- முக்கிய மலைப் பகுதிகளில் கயிற்றுப் பாலங்கள், கோல்ப் மைதானங்கள், குழந்தைகள் விளையாட்டுப் பூங்காக்கள், தண்ணீர்ப் பூங்காக்கள், உயிரியல் பூங்காக்கள், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் ஆகியவை வளர்த்தெடுக்கப்படும்.
- தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் உலகெங்கிலும் நம் வியத்தகு வரலாறு, பண்பாடு, பாரம்பரியம், கேளிக்கை, ஓய்வு, மகிழ்ச்சி ஆகிய அனைத்தும் கலந்த முழுமையான ஒரு அனுபவத்தைக் எடுத்துச் சென்று பரப்பும் என்பதோடு, முதன்மையான சுற்றலாத் தலமாகவும் விளங்க நாம் தமிழர் அரசு நடவடிக்கை எடுக்கும்.





பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் - தமிழ்மறை (996)



தமிழர் தந்தை
சி.பா.ஆதித்தனார்

# ஒவ்வொரு ஊராட்சியிலும் தரம் வாய்ந்த விளையாட்டுப் பயிற்சித் திடல்கள், பயிற்சியாளர்கள் ஊராட்சி அளவிலேயே அமர்த்தப்படுவார்கள்



Clarity Version download at www.makkalarasu.com

# உடலினை உறுதி செய்!

*“அறிவை விரிவாக்கு,*
*கொள்கை வகுத்து நில்,*
*கூடிச் செயல் செய்யப் பழகு.”*

- **உலக அரங்கில் ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த தடகள ஓட்டப்பந்தைய வீரர் உசேன் போல்ட், தன் தாய்நாட்டின் பெயரை ஒரே ஒரு விளையாட்டின் மூலம் உலகறியச் செய்தார்.**
- விளையாட்டு, உடலை உறுதியாக வைத்துக் கொள்கிறது. சீரான உடல் இயக்கமே சரியான சிந்தனைகளுக்கு வழி வகுக்கும்.
- விளையாட்டு வீரர்கள் தன் உடல் ஆரோக்கியத்தின் மீது அதிகக் கவனம் கொண்டிருப்பார்கள். தங்களின் இலக்கை எட்ட உடல் உறுதி அவசியம் என்றிருப்பார்கள். தீய பழக்கங்களை உடையவர்களாக இருந்தால் விளையாட்டில் முழுத் திறனை வெளிப்படுத்த முடியாது. அதனால் மாணவப் பருவத்தில் இருந்தே விளையாட்டைப் பாடமாக வைப்பதால் தீய பழக்கங்கள் இல்லாதவர்களாக வளர்வார்கள்.

## சி.பா.ஆதித்தனார்

- சி.பா. ஆதித்தனார் பெயரில் விளையாட்டுப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும். இங்குச் சர்வதேச அளவில் சிறந்த விளையாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். விளையாட்டுத் துறையில் உயர் ஆராய்ச்சிப் படிப்புகளும் மேற்கொள்ளப்படும்.
- ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்விவரை விளையாட்டு ஒரு கட்டாயப் பாடமாக இருக்கும்.
- தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித்துறை நகரங்களில் மட்டும் இல்லாமல் ஒன்றியம்/பகுதிகள் தோறும் அமைக்கப்படும்

## மண்ணின் பாரம்பரிய விளையாட்டு

- மாநில, தேசிய, பன்னாட்டு விளையாட்டுகளை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கும் அதே வேளையில், சடுகுடு, கிளித்தட்டு, கிட்டிப்புள், நொண்டியாட்டம், பல்லாங்குழி, உரியடித்தல், ஆடுபுலியாட்டம், அஞ்சாங்கல் உள்ளிட்ட 120க்கும் மேற்பட்ட தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளையும் மீட்டெடுக்கத் தனித்துறை அமைக்கப்படும்.
- தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் அனைத்து உளவியல் தன்மை கொண்டவை. உடலை வலிமைப் படுத்துவதோடு மனதை ஒருமுகப்படுத்தி, வலுப்படுத்தும். இவ்வகை விளையாட்டுகள் வாழ்க்கையில் எல்லாவிதச் சோதனைகளையும் எதிர்கொள்ள வைக்கும்.

> **“மாணவப் பருவத்தில் இருந்தே விளையாட்டைப் பாடமாக வைப்பதால் தீய பழக்கங்கள் இல்லாதவர்களாக வளர்வார்கள்”**

உடலினை உறுதி செய்!





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


சடுகுடு


உரியடித்தல்


கிளித்தட்டு


கிட்டிப்புள்


பல்லாங்குழி


ஆடுபுலியாட்டம்


நொண்டியாட்டம்

# ஊராட்சிகள் தோறும்

- பள்ளிகளில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அதிக ஆர்வம் உள்ள மாணவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிறப்பு பயிற்சிகள் அளித்து மேலும் வளர்த்தெடுக்கப் படுவார்கள்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் தரம் வாய்ந்த விளையாட்டுப் பயிற்சி மைதானங்கள் அமைக்கப்படும். அனைத்து விளையாட்டுகளுக்குமான பயிற்சியாளர்கள் ஊராட்சி அளவிலேயே அமர்த்தப்படுவார்கள்.

# கிராமங்களிலும் உடற்பயிற்சிக் கூடங்கள்

- கிராமங்கள் தோறும், பள்ளிகள் தோறும் நவீன உடற்பயிற்சிக் கூடங்கள் அனைத்துவிதக் கருவிகளோடும் அமைக்கப்படும்.
- ஆண்டுதோறும் தமிழர் திருநாள் அன்று விளையாட்டுப் போட்டிகள் பெருமளவில் நடத்தப்படும்.

# தமிழ்ப் போராளிகள் பெயரில்

- தேசிய, உலக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி படைக்கும் வீரர்களுக்குத் தமிழ்ப் போராளிகள் பெயரில் விருதுகள் வழங்கப்படும்.
- சாதனை விருதுகள் பெற்ற வீரர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அரசுச் சலுகைகள் வழங்கப்படும்.
- போட்டிகளுக்குத் தேர்வு செய்யப்படும் வீரர்களின் தேர்வு வெளிப்படையாகவும் அவர்களின் திறமையின் அடிப்படையிலும் நடைபெறும்.
- மாநில, தேசிய, உலக விளையாட்டிற்குத் தேர்வு செய்யப்பட்ட வீரர்களுக்குத் தங்கும் வசதி, உணவுடன் கூடிய சிறப்புப் பயிற்சிகள் வழங்குவதோடு முழுச் செலவையும் அரசே ஏற்கும்.

# பயிற்சியாளர்கள்

- அனைத்து விளையாட்டுகளுக்கும் தனித்தனி சிறப்புப் பயிற்சியாளர்கள் மூலம் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- 6 மாதங்களுக்கு ஒருமுறை மாவட்டங்களுக்குள் உள்ள பயிற்சியாளர்கள் தங்கள் மாணவர்களுக்குள் போட்டிகள் நடத்தி அவர்களுக்கான திறமைகளைக் கண்டறிந்து குறிப்பெடுத்து வைக்கவேண்டும்.
- மாநிலப் போட்டிகளுக்கு வீரர்கள் தேர்வு செய்யப்படும் போது அவர்களின் பயிற்சியாளர்கள் அளிக்கும் மதிப்பெண்களும் சேர்க்கப்பட வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வருவோம்.
- விளையாட்டு வீரர்களுக்கு வழங்குவது போல் பயிற்சியாளர்களுக்கும் சாதனை விருதுகளும் சலுகைகளும், தமிழ்ப் போராளிகள் பெயரில் வழங்கப்படும்.

# சிறப்பு மருத்துவம்

- பயிற்சியின் போது அல்லது விளையாட்டுப் போட்டியின் போது வீரர்களுக்கு எதிர்பாரா விபத்துகள் நடந்துவிடும். விபத்துகளுக்கு வேண்டிய உயர் சிகிச்சை முறைகள் இப்போது இல்லை. தனியார் மருத்துவ மனைகளைச் சொந்த செலவில் நாடவேண்டியிருக்கிறது. அந்தக் குறையைப் போக்க, உலகத் தரத்தில் ‘சிறப்பு மருத்துவப் பிரிவு’ ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் நுண்ணாற்றல் பெற்ற மருத்துவர்கள் இதற்கென்று நியமிக்கப்படுவார்கள்.

உடலினை உறுதி செய்!



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

**மெச்சுத் தொழிலாய் மிடுக்குடன் கட்டடம்**
**உச்சியில் நின்றே உறுதியாய்க் கட்டுநர்**
**தச்சுத் தொழிலர் தையலர் கூலியர்**
**அச்சுப் பணியரும் அமைப்பிலா தோரே!**

\- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்



# அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலன்

கட்டடத் தொழிலாளர்கள், வீட்டு வேலைசெய்வோர், ஆட்டோ ஓட்டுநர்கள் என 17 வகை அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் சுமார் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் பேர் இருக்கின்றார்கள். அவர்களில் தமிழ்நாடு அமைப்புச்சாராத் தொழிலாளர் நல வாரியத்தில் சுமார் 60 லட்சம் பேர்தான் உறுப்பினராக இருக்கின்றார்கள். நாம் தமிழர் அரசு இவற்றை முறைப்படுத்தி மாற்றி அமைக்கும்.

## முறைகேடுகள் இருக்காது

- அமைப்புச் சாராத் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையில் முறைகேடுகள் நடந்து வருகிறது. பெரும்பாலும் ஆளும்கட்சிக்குச் சாதகமான நபர்களே உறுப்பினராகப் பதிவு செய்யப்படுகிறார்கள். உண்மையான தொழிலாளர் பதிவு அலைக்கழிக்கப்படுகிறது. நலவாரியத்தின் சலுகைகள் அனைத்தும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிகமாகச் சென்றுகொண்டிருக்கிறது எனத் தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டி வருகிறது. எனவே. நாம் தமிழர் அரசு இந்த முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தும்.

## ஆளும் கட்சித் தலையீடு இருக்காது

- ஆளும் கட்சிகளின் தலையீட்டிற்குத் தடை கொண்டுவரப்படும். சுதந்திரமாக இயங்க நடவடிக்கை எடுப்போம். உறுப்பினர் சேர்க்கை விதிமுறைகள் எளிதாக இருக்கும். ஏதேனும் ஒரு அடையாளச் சான்று கொண்டுவந்தாலே உறுப்பினர் ஆகலாம். மாவட்டத்தின் தலைநகரங்களில் மட்டுமின்றி அந்த மாவட்டங்களில் உள்ள முக்கிய ஊர்கள்தோறும் அமைப்புச்சாரா உறுப்பினர் சேர்க்கைக்கான அலுவலகம் திறக்கப்படும். அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் நலவாரியத்தில் குழு உறுப்பினராக இருப்பார்கள்.

## 3,000 ஓய்வூதியம்

- தற்போது மாதம் 1000 ரூபாய் ஓய்வூதியம் கிடைக்கிறது. அதிலும் நிறைய முறைகேடுகள். நாம் தமிழர் அரசில் மாதம் 3000 ரூபாய் ஓய்வூதியத் தொகை அவரவரின் வங்கிக் கணக்கிலேயே சேர்க்கப்படும்.

## 75,000 திருமண உதவித் தொகை

- ஆண்களுக்கான திருமண உதவித் தொகை 3 ஆயிரம், பெண்களுக்கான திருமண உதவித்தொகை 5 ஆயிரம் என்பதை மாற்றிப் பெண்களுக்கு 50,000, ஆண்களுக்கு 25 ஆயிரம் திருமண உதவித்தொகையாக வழங்கப்படும். ஆகத் திருமணம் செய்துகொண்ட தம்பதியருக்கு 75,000 ரூபாய் கிடைக்கும்.

அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலன்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## இலவச மருத்துவம்

- அமைப்புசாராத் தொழிலாளர்கள் அனைவருக்கும் உயர்வகை மருத்துவம் உட்பட அனைத்தும் இலவசமாகவே கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். அதற்கான அடையாள அட்டைகள் அளிக்கப்படும். விபத்து மற்றும் இயற்கைச் சீற்றம் நடக்கும் காலங்களில் மாதம் 2,000 உதவித்தொகை வழங்கப்படும்.

## விபத்தில் இறந்தால் 5 லட்சம்

- அமைப்புசாராத் தொழிலாளர்கள் இயற்கை மரணம் அடைந்தால் ஒரு லட்சமும், விபத்துகளில் இறந்தால் 5 லட்சமும் நாம் தமிழர் அரசு வழங்கும்.

## கல் உடைக்கும் தொழிலாளர்கள்

- தமிழகத்தின் 26 மாவட்டங்களில் 1500க்கும் மேற்பட்ட இடங்களில் கல்குவாரித் தொழில் நடந்து வருகிறது. தனி முதலாளிகளும், தனியார் நிறுவனங்களுமே இதை நடத்தி வருகிறார்கள். ஆண்டிற்கு பல ஆயிரம் கோடிகளை வருவாயாக ஈட்டித்தரும் இந்தத் தொழிலில் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.
- கல்குவாரிகளை நடத்தி வரும் தனி முதலாளிகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தொழிலாளர்களுக்குரிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தால் மட்டுமே கல்குவாரிகளுக்கான அனுமதி அளிக்கப்படும். விபத்து ஏற்படாத பாதுகாப்பு முறை, கழிப்பிட வசதியுடன் கூடிய வீடு, விபத்துக்கால அவசர ஊர்தி, முதலுதவி மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்தும் தொழிலாளர்களுக்குச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- இவர்களுக்கான நிரந்தர வருவாய், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை வசதி, உயர் மருத்துவத்திற்கான வசதி, பிள்ளைகள் தடையின்றிப் படிப்பதற்கான வசதி, ஓய்வூதியம் என அனைத்து வசதிகளையும் நாம் தமிழர் அரசு செய்துகொடுக்கும்.



கல்குவாரி



> “நிரந்தர வருவாய், வருங்கால வைப்பு நிதி, பணிக்கொடை வசதி, உயர் மருத்துவத்திற்கான வசதி, பிள்ளைகள் தடையின்றிப் படிப்பதற்கான வசதி, ஓய்வூதியம் என அனைத்து வசதிகளையும் நாம் தமிழர் அரசு செய்துகொடுக்கும்”

# என் தாய்மொழி உங்கள் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்கிறது என்றால்; உங்களின் கட்டுமானத்தை எங்கள் தாய் நிலத்தில் கட்டி இருப்பீர்கள்

- எழுத்தாளர் குருதீஸ் மூசா



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# கட்டுமானத் தொழில் வளர்ச்சி







கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். அதற்கேற்ப சிறப்புப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆண்டிற்குச் சுமார் 10,000 இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்

கட்டுமானத் தொழில் வளர்ச்சி

தமிழகக் கட்டுமானத் தொழிலில் சுமார் ஐம்பது இலட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்டுநர்கள் (பில்டர்கள்) உள்ளிட்ட 120 பொருட்களைத் தயாரிப்பவர்கள், விற்பனையாளர்கள் உட்பட பல இலட்சம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் வளர்ச்சியில் இலஞ்சம் (கையூட்டு) தடையாக இருந்து வருகிறது. எனவே நாம் **தமிழர் அரசு புதிய** கொள்கையை அறிவிக்கின்றது.

## உடனடி அனுமதி

- கட்டுநர்கள் செயல்திட்ட விண்ணப்பத்திற்குப் (பிளான் அப்ரூவல்) பதினைந்து நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படும். விண்ணப்ப முறை அனைத்தும் கணினி முறையில் கண்காணிக்கப்படும். என்ன காரணத்திற்காகத் தாமதிக்கப்படுகிறது என்பதை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். அதிகபட்சமாக ஒரு மாதத்திற்குள் கட்டுநர்களுக்கான அனுமதியை வழங்கியாக வேண்டும்.

## கடுமையான நடவடிக்கை

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் என்பது கையூட்டுப் பெறும் நிறுவனமாக மாறி வருகிறது. கட்டுநர்கள் கட்டிட வேலையைத் தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு கட்டமாகச் சதுர அடிக்கு இவ்வளவு தொகை என நிர்ணயித்துக் கையூட்டுப் பெற்று வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நாம் தமிழர் அரசு இதை முற்றாகத் தடுக்கும். சரியான பணிகள் முடிந்த கட்டிடத்திற்குப் 'பணி நிறைவுச்சான்று' உடனடியாக வழங்க வேண்டும். காலதாமதம் செய்யும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஒரு மூட்டை பைஞ்சுதை (சிமெண்ட்) 180

- தமிழகத்தில் உள்ள சிமெண்ட் தயாரிப்பு நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்படும். சிமெண்ட் தயாரிப்பாளர்கள், அரசின் நிலக்கரி எரிப்புச் சாம்பலை இலவசமாகப் பெற்றுக்கொள்கிறார்கள். சுண்ணாம்புக் கற்களை மானிய விலையில் வெட்டி எடுத்துக் கொள்கிறார்கள். **50 கிலோ சிமெண்ட் மூட்டைக்கான தயாரிப்புச் செலவு, கட்டுச் செலவு, போக்குவரவுச் செலவு, வரிகள், கட்டணம், மற்றும் 20 விழுக்காடு லாபம் உட்பட ஒரு மூட்டை சிமெண்ட்டின் விலை 180 ரூபாய்தான்.** ஆனால் தனியார் நிறுவனங்கள் 450 ரூபாய் என்று விற்றுக்கொண்டிருக்கின்றன. அது தடுக்கப்படும். அதிகபட்சமாக 200 ரூபாய் என விலை உறுதிப்படுத்தப்படும்.

## நலவாரியம்

- சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மட்டும் இருக்கும் 'கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம்' தமிழகம் முழுதும் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்படும். தொழில் பாதுகாப்பு, விபத்துக் காப்பீடு, மருத்துவ வசதி உட்பட பல வசதிகளை நாம் தமிழர் அரசு செய்து கொடுக்கும்.


## தனிப்பயிற்சி

- தமிழகத்தைச் சேர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். அதற்கேற்பச் சிறப்புப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆண்டிற்குச் சுமார் 10,000 இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு உள்ள இடங்களைத் தேர்வு செய்து அரசே இவர்களை அனுப்பி வைக்கும்.



Clarity Version download at www.makkalarasu.com

**மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண்** - தமிழ்மறை (966)




## காடு வளம்பெற்றிருந்தால்தான் நாடு வளம் பெற்றிருக்கும். எனவே காடுகளைத் பாதுகாக்கச் சிறப்புத் திட்டங்களும், புதிய சட்டங்களும் கொண்டு வரப்படும்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



# காட்டு வளம்

ஒரு தேசம் தன் குடிமக்களை எப்படிப் பாதுகாத்துப் போற்றி வருகிறதோ, அதைவிடக் கூடுதலாகக் காட்டு வளங்களைப் பாதுகாத்தாக வேண்டும். காட்டு வளம் சிதைக்கப்படாமல் இருந்தாலே நாட்டின் அனைத்துச் சூழல்களும் செம்மையாக இருக்கும். நாம் தமிழர் அரசு இதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும்.

## வனப்பாதுகாப்பு

- ஐம்பெரும் நிலத்தில் குறிஞ்சி நிலமான மலைகள் பாதுகாப்பானதாக இருந்தால்தான் மற்ற நிலங்களின் வளங்கள் செழித்தோங்கும்.

## மலைகளும் ஆறுகளும்

- மேற்குத் தொடர்ச்சி மலை உச்சியில் உள்ள புல் தரைவெளிகள்தான் நீரைச் சேமித்து வைத்துச் சிறுகச் சிறுக வெளியிடும் தன்மை கொண்டது. அதுதான் சோலைகளை உருவாக்கும். சோலைப் பகுதிகளில் இருந்துதான் சிறு சிறு நீரோடைகள் பெருகிச் சிற்றாறுகளாகி வற்றாத ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே மலைகள் அழிக்கப்பட்டால் தஞ்சை விவசாயிகளும் இல்லை, தாமிரபரணி விவசாயிகளும் இல்லை.

## சட்டம் கடுமையாக்கப்படும்

- காடு வளம்பெற்றிருந்தால்தான் நாடு வளம்பெற்றிருக்கும். எனவே காடுகளை பாதுகாக்கச் சிறப்புத் திட்டங்களும், புதிய சட்டங்களும் கொண்டுவரப்படும்.

## அனுமதி பெற வேண்டும்

- மாநில அரசுகளின் அனுமதியைப் பெறாமல் தமிழகத்தின் எந்த மலையையும், எந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசு எடுக்கக்கூடாது. இதற்கு எதிராக மற்ற மாநிலங்களோடு சேர்ந்து கூட்டியக்க முறையில் மத்திய அரசிடம் கோரிக்கை வைக்கப்படும்.
- தற்போது உள்ள வனப்பாதுகாப்புச் சட்டங்கள் அனைத்தும் சரியாகவே இருக்கின்றது. அவற்றை நடைமுறைப்படுத்துவதில்தான் இதுவரை இருந்த அரசுகள் அக்கறையற்று இருந்தன. அதனாலேயே நமது வனங்கள் சூறையாடப்பட்டு வந்தது. அவற்றைத் தடுத்து நிறுத்துவதோடு, மீட்பதற்கான வழிகளையும் **நாம் தமிழர் அரசு** கண்டறிந்து நடவடிக்கையை எடுக்கும்.

> “மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள புல் வெளிகள்தான் நீரைச் சேமித்து வைத்துச் சிறுகச் சிறுக வெளியிடும். அதுதான் சோலைகளை உருவாக்கும்”



Clarity Version download at www.makkalarasu.com







"யானைகள் செல்லும் பாதைகளை வளர்ச்சி என்ற பெயர்களில் ஆக்ரமித்துப் புதிய புதிய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள்"

## அப்புறப்படுத்தக்கூடாது

- எக்காரணத்தைக் கொண்டும் மலைவாழ் மக்கள் மலைப்பிரதேசங்களை விட்டு வெளியேற்றப் படுவதை அனுமதிக்க முடியாது. அந்த மலைமண் அவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் வாழ்ந்த பூமி. அந்தக் குறிஞ்சி நிலம்தான் அவர்களுக்கு நீரைத் தருகிறது. சோற்றைத் தருகிறது, வாழ்வைத் தருகிறது. எனவே அம்மக்கள் வனங்களுக்கு எதிரானவர்களாக ஒருகாலும் இருக்க மாட்டார்கள். அவர்கள்தான் காடுகளுக்குப் பாதுகாப்பானவர்கள். அந்நியர்களின் சுரண்டலுக்காக, மலை வளத்தைக் கொள்ளையடிப்பதற்காக அவர்களை மலைகளை விட்டு அப்புறப்படுத்தப்படுவதை நாம் தமிழர் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. உறுதியாக நின்று தடுக்கும்.

## ஆக்கிரமிப்புகள்

- மலையோரத் தரைப்பகுதிக் காடுகள் அனைத்தும் வனவிலங்குகளுக்கான வழிப்பாதைகள். யானைகள் ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல இந்தத் தரை வனப்பகுதியைத்தான் பயன்படுத்தும். மற்ற விலங்குகளுக்கும் அதுதான் பாதையாக இருக்கிறது. இப்படியான இடங்களில்தான் வளர்ச்சி என்ற பெயர்களில் ஆக்கிரமித்துப் புதிய புதிய கட்டிடங்களைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அந்த ஆக்கிரமிப்புகள் அனைத்து மீட்கப்படும்.

## அதிகாரம் மாற்றப்படும்

- வனப்பகுதிகளில் உள்ள இடங்களுக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம் முழுதும் அந்தந்தப் பஞ்சாயத்துகளிடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தித்தான் பெரும் நிறுவனங்கள் எல்லாம் சிறுகச் சிறுக இடங்களை வாங்கிப் பகுதிப் பகுதியாகக் கட்டிடங்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த முறை மாற்றப்படும். வனத்துறை பகுதிகளில் அனுமதி அளிக்கும் அதிகாரம் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்கு மாற்றப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com

## மற்ற இனங்களுக்கெல்லாம் வாழ்க்கையில் போராட்டம் எப்போதாவது வருகிறது, தமிழ்த்தேசிய இனத்திற்குப் போராட்டமே வாழ்க்கையாக மாறி நிற்கிறது

Clarity Version download at www.makkalarasu.com

**“நாளெல்லாம் எங்கள் செல்வம்
கொள்ளை கொண்டு போகவோ நாங்கள் சாகவோ”**

- பெரும்புலவர் பாரதி


இரும்புத் தாது கொள்ளை


தாதுமணல் கொள்ளை


சலவைக்கல்(Granite) கொள்ளை


கருங்கல் கொள்ளை


நிலக்கரிக் கொள்ளை

**எம் மண்ணின் வளங்கள் மக்களுக்கானது. அது உள்நாட்டு வெளிநாட்டுப் பெரும் முதலாளிகளுக்கானது அல்ல.**

# கனிம வளப் பாதுகாப்பு

ஒன்றுபட்ட சென்னை இராஜதானியாக இருந்த தமிழகம் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் என மொழிவாரி மாநிலமாகப் பிரிந்த போது நமது நீர்வளங்கள் பறிபோனது. மீதம் இருக்கும் நிலவளத்தை நாசகர நச்சுத் தொழிற்சாலைகள் சீரழித்து வருகின்றன. பொன் விளையும் பூமியாக இருந்த தமிழகத்தை நஞ்சு விளையும் பூமியாக மாறத் திராவிடக் கட்சிகளின் அக்கறையற்ற ஆட்சி முறையே காரணம்.

## மக்களுக்குச் சொந்தம்

- இந்த மண்ணின் கனிம வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம். அதைப் பணத்திற்காகவும், பெரும் கையூட்டிற்காகவும் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது திராவிட கட்சிகளின் ஆட்சிதான். அரசே ஏற்று நடத்த வேண்டிய கனிமவளத் தொழிலைத், தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். அரசுக்கு வரவேண்டிய பல ஆயிரம் கோடியைத் தனி முதலாளிகளுக்குத் தூக்கிக் கொடுத்ததும் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில்தான். இந்த நிலையை நாம் தமிழர் அரசு மாற்றும். மண்ணின் வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம் என்ற முழக்கத்தை முன்னெடுக்கும்.

## நிலக்கரிக் கொள்ளை

- பல்லாயிரம் கோடி மதிப்பிலான பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் வெட்டி எடுக்கப்படுகின்றது. அதனால் அப்பகுதியின் நிலவளமும், நீர்வளமும் சீரழிந்துபோனது. மின் உற்பத்திகாக வெட்டி எடுக்கப்படும் நிலக்கரிப் பயன்பாடு தமிழகத்திற்கு மட்டுமின்றி கர்நாடக, ஆந்திர மாநிலங்களுக்கும் போகிறது. தண்ணீரைத் தரமறுக்கும் மாநிங்களுக்கு எங்களின் நிலக்கரி கனிமவளம் பங்கு போகிறது.

## இரும்புத்தாதுக் கொள்ளை

- இரும்புத் தாது அதிகமாக இருக்கின்றது எனத் திருவண்ணாமலை பகுதி மலைகளை எடுத்து ஜிண்டால் நிறுவனத்துக்குத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளது மத்திய அரசு. அதற்கு மாநில அரசும் உடந்தையாக நிற்கிறது. பலகோடி மதிப்பலான இரும்புத்தாதுக் கொள்ளை அப்பகுதி நிலவளத்தை முற்றாகச் சீர்குலைத்துவிடும். நீர்வளத்தை முடக்கிவிடும்.

> “மண்ணின் கனிம வளங்களைப் பணத்திற்காக தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது திராவிட கட்சிகளின் ஆட்சிதான்”

கனிம வளப் பாதுகாப்பு



Clarity Version download at www.makkalarasu.com

> கனிம வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம். தனி நபர்களுக்கானது அன்று. தனி நபர்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்

## தாது மணல் கொள்ளை

- தென்மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில், கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிர்கன், மோனசைட் போன்ற அரியவகைக் கனிமங்கள் உள்ள மணலையும், தூத்துக்குடிப் பகுதிகளில் நிறைந்துள்ள தோரியம் செறிந்த மணற்காடுகளையும் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்திருக்கிறார்கள். இதனால் பல இலட்சம் கோடி ரூபாய் தனியாக்குச் சென்று கொண்டிருக்கிறது. கையூட்டைப் பெற்றுக்கொள்ளும் திராவிடக் கட்சிகளின் ஆட்சி வேடிக்கை பார்த்தபடி இருக்கின்றது.

## கிரானைட் கொள்ளை

- இந்த மண்ணின் தொன்மச் சின்னங்களாக இருந்த மலைகள் எல்லாம் உடைக்கப்பட்டது. பெருங்கற்களாக ஏற்றுமதியானது. சலவைக் கற்கலாக மாற்றப்பட்டது. பல்லாயிரம் கோடி முறைகேடு என்ற குற்றச்சாட்டு எழுந்தது. மூத்த இந்திய ஆட்சிப் பணி(ஐ.ஏ.எஸ்) அதிகாரியான திரு.சகாயம் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. சுமார் 50,000 கோடியில் ஊழல் முறைகேடு நடந்திருக்கிறது. இது மதுரை மாவட்டப் பகுதிகளில் மட்டுமே ஏற்பட்ட இழப்பு. அது தவிரத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் நடந்தேறிய கொள்ளை கணக்கில் இல்லை. அத்தனை கொள்ளைகளிலும் பங்காளிகளாக இருந்துகொண்டிருப்பது திராவிடக் கட்சி ஆட்சியினர்தான்.

## சுண்ணாம்புத் தாதுக் கொள்ளை

- அரியலூர் மாவட்டப் பகுதி நிலத்தடியில் உள்ள சுண்ணாம்புக் கற்களை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்காக வெட்டி எடுத்துக்கொள்ளும் உரிமையை மிகக் குறைந்த விலைக்குத் தனியாரிடம் கொடுத்திருக்கிறார்கள். இதில் பல்லாயிரம் கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

## மேற்குத் தொடர்ச்சி மலை

- இப்போது சுமார் 1600 கி.மீ நீளமுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் முழுமைக்கும் ஏராளமான கனிம வளம் குவிந்துகிடப்பதை கண்டறிந்துள்ளார்கள். அதையும் அபகரிக்க மத்திய அரசு திட்டம் போட்டு வருகிறது. அதற்குத் இந்த திராவிடக் கட்சிகளின் ஆட்சியும் துணைபோனபடி இருக்கின்றது.

## ஆற்று மணற் கொள்ளை


- காவிரி, தாமிரபரணி, பாலாறு, வைகை, வெள்ளாறு, மணிமுத்தாறு, தென்பெண்ணை ஆறு உள்ளிட்ட பல ஆறுகள் மணற் கொள்ளையர்களால் பாழ்பட்டு போயிருக்கிறது. வேளாண்மையை வளர்த்த ஆறுகள் இன்று நிலத்தடி நீரையும் இழந்து மரணித்துக் கொண்டிருக்கிறது. இன்று தமிழகத்தின் பல பகுதிகளில் தினமும் சுமார் 55,000 சுமையூர்திகள் ஆற்று மணல் கொள்ளையில் ஈடுபட்டு வருகிறது. இதில் சட்டவிரோதமாக நடக்கும் மணல் கடத்தல் மட்டுமே ஆண்டிற்கு 19,800 கோடி ரூபாய் இழப்பு என்று ஊடகங்கள் எழுதியது.

## நாம் தமிழர் அரசின் தீர்வுகள்

- கனிம வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம். தனி நபர்களுக்கானது அன்று. தனி நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தும் திரும்பப் பெறப்படும். புதிய சட்டங்கள் இயற்றப்படும். மக்களின் தேவைக் கேற்ற கனிமங்களை அரசே வெட்டி எடுத்துக்கொள்ளும்படியான கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com



என்னுடைய
பொருளாதாரம், அரசியல்,
அதிகாரம் இவை மூன்றில்
எதாவது ஒன்று
பிறரிடத்தில் இருந்தாலே
நான் அடிமையாகி
விடுவேன், ஆனால்
எம் இன மக்களுக்கு இவை
மூன்றும் நீண்ட காலமாகப்
பிறரிடத்தில் இருக்கிறது.

– செந்தமிழன் சீமான்

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com












**சொந்த மண்ணில் இன்றும் நிலவி வரும் உயர்பாதுகாப்பு வளையங்கள், ஆயுதம் தாங்கிய இராணுவப் படையின் அதிகார இருப்பு, ஆக்ரமிக்கப்பட்ட தமிழர் நிலங்கள் திரும்ப ஒப்படைக்கப்படாத சூழல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், மீள் குடியமர்வைக் கேள்விக் குறிகளாக்கியுள்ளன**

# ஈழத்தமிழ் உறவுகளுக்கான தீர்வு

*“வந்தவரை எல்லாம் வசதியாக வாழவைத்த தமிழினம், தன் சொந்த உறவுகளை அகதியாக வாழ வைத்திருப்பது பெருத்த அவமானம். இந்தத் துயரம் துடைத்தெறியப்படும்.”*

## ஈழ உறவுகளின் அவலம்

- தமிழகத்தில் 34524 குடும்பங்களைச் சேர்ந்த 1,02,055 ஈழ உறவுகள், அகதிகளாக(ஏதிலிகளாக) இருக்கிறார்கள். அவர்களில் 19625 குடும்பங்களைச் சேர்ந்த 64924 பேர் 107 முகாம்களில் தங்கி இருந்தார்கள். 1987 முதல் 1989 வரை 25600 அகதிகள் இங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 1992இல் இருந்து 1995 வரை ஏறக்குறைய 54,000 பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.
- இந்த 54,000 அகதிகள் அனைவரும் வவுனியாவின் சிதம்பரபுரம் முகாமில் பல வருடங்களாகத் தங்கியிருந்தார்கள். அங்கும் பல கொடுமைகள் நீடித்திருந்தது. அதனால் பல அகதிகள் மீண்டும் இந்தியாவிற்கே திரும்பி விட்டார்கள்.
- இவர்கள் அடையாளமற்று, போக்குவரவு முடக்கப்பட்டு, சுதந்திரமற்ற முகாம் கண்காணிப்பில் அவதிபட்டபோதும் 3500 பட்டதாரிகளையும் முதுநிலை பட்டதாரிகளையும் உருவாக்கிக் காட்டினார்கள்.
- சொந்த மண்ணில் இன்றும் நிலவி வரும் உயர்பாதுகாப்பு வளையங்கள், ஆயுதம் தாங்கிய இராணுவப் படையின் அதிகார இருப்பு, ஆக்ரமிக்கப்பட்ட தமிழர் நிலங்கள் திரும்ப ஒப்படைக்கப்படாத சூழல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், மீள் குடியமர்வைக் கேள்விக் குறிகளாக்கியுள்ளன.

## தொடரும் துயரங்கள்

- தமிழகத்தின் அகதிகள் முகாமில் அவர்களுடைய துயரங்கள் சொல்லித் தீராதவை. போதிய தங்குமிடம் சுகாதார வசதிகள் இல்லாத கொட்டில்களில் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாகும் நிலையில் இருக்கிறார்கள். ‘கியூ’ பிரிவுக் காவலர்களும், வருவாய் அதிகாரிகளும், ‘சொல்லமுடியாத’ பல்வேறு காரணங்களுக்காக முகாம் அகதிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். குடும்பத்தாரையே பிரித்துச் சிறப்பு முகாமில் போட்டுவிடுவோம் என்று பணம் கேட்டு மிரட்டுவது பாலியல் தொந்தரவுகளைக் கொடுப்பது எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

> “போக்குவரவு முடக்கப்பட்டு, சுதந்திரமற்ற முகாம் கண்காணிப்பில் அவதிபட்டபோதும் 3500 பட்டதாரிகளையும் முதுநிலை பட்டதாரிகளையும் உருவாக்கிக் காட்டினார்கள்”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## திபெத், வங்க அகதிகள்

- அகதிகள் சார்ந்த நடவடிக்கையில் ஒரு தேசம் இரண்டு விதமாய் நடந்து கொண்டு வருவது உலகத்தில் இந்தியாவில் மட்டுமேதான். கருணைக்கும் அகிம்சைக்கும் பெயர் பெற்ற இந்தியா எமது ஈழ அகதிகள் நிலைப்பாட்டில் மட்டும் இரக்கமற்று நடந்துகொள்கிறது.
- அஸாம் மேகாலயா, மிசோராம் மாநில உறவுகள் வருத்தப்படக் கூடாது என்று வங்கதேச அகதிகளை இராஜமரியாதையுடன் நடத்துகிறது. காரணம் அந்த அகதிகள் இங்கே இருக்கும் மூன்று மாநிலத்திற்கும் உறவுக்காரர்கள் என்பதால்
- அருணாச்சலப் பிரதேசத்து மக்கள் வருத்தப்படக்கூடாது என்று திபெத்திலிருந்து வந்த அகதிகளுக்கு இங்கே இராஜபாட்டை விரிக்கிறார்கள். காரணம் திபெத் அகதிகளுக்கு அருணாச்சல பிரதேச மக்கள் உறவுக்காரர்கள் என்ற காரணம்தான்.

## திராவிடர் ஆட்சிதான்

- ஈழ அகதிகளின் இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் தமிழக ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி அதிகாரத்தைச் சுவைத்திருந்த திராவிடக் கட்சிகளின் துரோகம்தான். தங்களின் ஊழல் முறைகேடுகளில் இருந்து தப்பிக்கொள்ள மத்திய அரசின் கண்ணசைவுக்கு ஏற்றார்போல் சட்டங்களைக் கொண்டு வந்து ஈழ உறவுகளைப் பழிதீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

## இங்கும் கொடுமையா?

- சொந்த மண்ணில் போர்க்கொடுமைகளில், தொடர்ந்து அச்சுறுத்தலாய் இருக்கும் இராணுவக் கொடுமைகளில் இருந்து தப்பி, அடைக்களம் கேட்டு வந்தவர்களைத் தீவிரவாதிகளைப் போல் அடைத்து வைத்துள்ளது. அவர்கள் சுதந்திரமாக எங்கும் வேலைக்குச் செல்ல முடியாது. மாலை ஆறுமணிக்குள் முகாமிற்குள் திரும்பிவிட வேண்டும். அடைக்கலம் கேட்டுவந்த மண்ணிலும் கொடுமை என்றால் எங்குப் போய் முறையிடுவது.

## நாங்கள் யார்?

- ஆனால் ஈழத்தில் இருந்து வரும் தமிழ் அகதிகளை மட்டும், மூன்றாம் தரக்குடி மக்களாக அல்ல, ஐந்தாம்தரக் குடிமக்களாக நடத்துகிறது இந்தியா. காரணம் இங்கிருக்கும் எட்டுக் கோடி தமிழர்களையும் மூன்றாம்தரக் குடிகளாகப் பார்ப்பதுதான்.
- திபெத் அகதிகளையும் வங்கதேச அகதிகளையும் வசதியான காலனிகளுக்குள் வைத்து, அனைத்து உதவிகளையும் செய்துகொடுத்துச் சுதந்திரமாக வேலை செய்ய அனுமதிக்கும் இந்திய அரசு, ஈழ அகதிகளை முகாம்களுக்குள், 'கொத்தடிமைகளைப்' போல் நடத்திக்கொண்டிருக்கிறது.



"ஈழ அகதிகளின் இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் தமிழக ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி அதிகாரத்தைச் சுவைத்திருந்த திராவிடக் கட்சிகளின் துரோகம்தான்"



> “அகதிகள் சார்ந்த நடவடிக்கையில் ஒரு தேசம் இரண்டு விதமாய் நடந்து கொண்டு வருவது உலகத்தில் இந்தியாவில் மட்டுமேதான்”

## தீர்வு

- நாம் தமிழர் அரசு அவர்களுக்கு இந்தியக் குடியுரிமையை மத்திய அரசிடம் பேசிப் பெற்றுத்தரும். ஈழ உறவுகள் விரும்பும் வரை இங்கே இருக்கலாம். தேவை என்றால் சொந்த நாட்டிற்குச் செல்லலாம்.
- இதுவரைக் காலமும் அவர்களுக்குத் திணிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நிரந்தரமாக நீக்கப்படும். அகதிகளுக்கு உலக நாடுகள் என்ன நிதி உதவிகளை வழங்குகிறதோ அதையே மாநில அரசும் வழங்கும். திபெத், வங்கதேச அகதிகளைப் போல் விரும்பிய வேலைகளுக்குச் சென்று வரலாம்.
- தமிழக மலைப்பிரதேசச் சுற்றுலாத் தலங்களில், திபெத் அகதிகளுக்கும், வங்கதேச அகதிகளுக்கும் கடைகள் ஒதுக்கப் பட்டிருப்பதைப் போல ஈழ உறவுகளுக்கும் கடைகள் ஒதுக்கித் தரப்படும்.
- அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளைப் போல் இந்தியாவும் உலகளாவிய அகதிகளுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்தைப் போட வேண்டும் என்று நாம் தமிழர் அரசு தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்துச் செய்து முடிக்கும்.
- தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாம், சிறப்பு முகாம்கள் அனைத்தும் நிரந்தரமாக மூடப்படும். அங்கிருந்து தமிழகம் வரும் ஈழ உறவுகள், முறைப்படி பதிவுகளுக்குப் பிறகு அரசுக் குடியிருப்புகளில் தங்க வைக்கப்படுவார்கள். பிறகு அவர்கள் விரும்பிய இடங்களில் சென்றுத் தங்கிக்கொள்ள ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

## காவல்துறை நடவடிக்கை

- முகாம் தமிழர்கள் மீது, ‘குற்றத் தடுப்புப் பிரிவு’ (கியூ பிரிவு) காவலர்களின் கண்காணிப்பு, விசாரணை முறைகளும், வருவாய் துறை அதிகாரிகளின் விசாரணை முறைகளும் நீக்கப்படும்.

## கல்வி வேலை வாய்ப்பு

- கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு அனைத்திலும் தமிழர்களைப் போல் சம உரிமையுடன் வாழ அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

## தனி வாரியம்

- ஈழ உறவுகளுக்கான நல வாரியம் உருவாக்கப்படும். ஈழத் தமிழர்கள் இங்கே சிறுதொழில் செய்ய, வீடு கட்டிக்கொள்ள, திருமண உதவி பெற என்று பல்வேறு திட்டங்களுக்குத் தனியாக நிதியம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com




**போர்க்குற்றம் என்றால் போர் சரியானது அதில் சில குற்றங்கள் நடந்திருகிறது என்றாகிறது ஆனால் நாம் தமிழர் அரசு அந்தப் போரையே குற்றமாகப் பார்க்கிறது, திட்டமிட்ட இனப் படுகொலையாகப் பார்க்கிறது.**

# ஈழம்
# எங்கள் இனத்தின் தேசம்

ஈழத் தேசம், ஒன்றுபட்ட நாடாக இலங்கை மாறியதற்கு முன்பிருந்தே தமிழர்கள் ஆண்ட பூமி. தமிழுக்கும் தமிழ் மக்களுக்குமான வரலாறு சிங்களவர்களுக்கும் முன்னதானது. அப்படி வாழ்ந்த இனம் இன்று இன அழிப்பிற்கு உள்ளாகி நாடற்ற இனமாக உலகத்தாரிடம் நீதி கேட்டு நிற்கிறது.

## உயிர் மூச்சாக

- நாம் தமிழர் அரசு ஈழத்தை ஒரு தொலைதூரத் தீவாக, மூன்றேழுத்துச் சொல்லாகப் பார்க்கவில்லை. தமிழ்த்தேசிய இனத்தின் மூச்சாக, உயிராக, பெருங் கனவாகப் பார்க்கிறது. ஒரு தேசிய இனம் தனக்கென ஒரு தேசத்தை என்று அடைகிறதோ அன்று தான் முழுமையான விடுதலை அடையும்.

## தமிழர்க்கென்று நாடில்லை

- உலகத்தில் ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கும் மூத்த தொல்குடி இனமாகிய தமிழ்த் தேசிய இனம் 130 நாடுகளில் பரவி வாழ்கிறது.
- தமிழன் வாழாத நாடில்லை! ஆனால் தமிழனுக்கென்று ஒரு நாடில்லை. 4 இலட்சம், 5 இலட்சம், 20,000 எனத் தேசிய இன மக்களைக் கொண்ட நாடுகளும் 200 கி.மீ., 300 கி.மீ. சுற்றளவுக்குள்ளே வாழும் தேசிய இனமக்களும் விடுதலை பெற்றுப் பெருமையாக வாழ்கின்றார்கள்..

## மேதகு வே. பிரபாகரன்

- ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த தமிழ்க்குடி, 13 கோடிக்கு மேல் பூமிப்பந்தில் நிறைந்து வாழ்கின்ற ஒரு தேசிய இனத்தின் மக்கள், இந்த உலகில் தங்களுக்கென்று ஒரு தேசம் அடைந்து எல்லா மொழிவழித் தேசிய இனங்களைப் போல விடுதலை பெற்று, உரிமை பெற்று, உயர்ந்து, சிறந்து பெருமையோடு ஏன் வாழக்கூடாது? என்ற கனவோடுதான் அங்கே ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கியது. அதைத்தான் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்தார்கள்.

## விடுதலைப் போராட்டம்

- ஆயிரம் ஆண்டுகள் அடிமையாக வாழ்வதை விடச் சுதந்திரமாகச் சாவது மேலானது. அதுவும் அந்தச் சுதந்திரத்திற்காகப் போராடிச்சாவது அதைவிட மேலானது என்ற முழக்கத்தை முன்வைத்துத்தான் அங்கே விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
- இதைப் பிரிவினைவாதம், பயங்கரவாதம், தீவிரவாதம் என்று பார்ப்பது வெறும் அர்த்தமற்ற தேவையற்ற ஒரு குற்றச்சாற்றாக நாம் தமிழர் அரசு பார்க்கிறது.

ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



தமிழீழமே தீர்வு - வட்டுக்கோட்டை



கருப்பு ஜூலை
கலவரத்தின் போது







# இனத்தின் பிறப்புரிமை

- இரஷ்ய புரட்சியாளர் இலெனின், 'ஒடுக்குகின்ற தேசிய இனத்திடம் இருந்து ஒடுக்கப்படுகின்ற தேசியயினம் விடுதலை பெற விரும்புவது தன்னுரிமை, அந்தத் தன்னுரிமையைப் போராடிப் பெறவேண்டியது ஒவ்வொரு தேசிய இனத்தின் பிறப்புரிமை' என்று சொல்கிறார்.

- ஒரு வீட்டில் வாழப்பிடிக்காத பெண் சட்டப்படி மணமுறிவு பெறுவதைக் குடும்ப உறவையே சிதைக்கின்ற ஒன்றாகப் பார்ப்பது எப்படிச் சரியாகாதோ அது போன்று, ஒரு நாட்டில் இருந்து ஒரு நாடு பிரிவதென்பதை தவறாகப் பார்ப்பது, பிரிவினைவாதமாகப் பார்ப்பது ஏற்க முடியாதென்று இலெனின் கூறியுள்ளார். அந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய இனமக்கள் பிறப்புரிமைக்காக நிற்கின்றோம். எங்கள் தாய் நிலத்திலே நாங்கள் பிறந்த இடத்திலே சுதந்திரமாக வளர்ந்து வாழ்வதற்கான உரிமையைத்தான் கேட்கின்றோம்.

# சிங்களப் பேரினவாதம்

- அந்தப் போராட்டத்தைச் சிங்களப் பேரினவாத அரசு உலகப் பேராதிக்க நாடுகளின் துணையோடு நசுக்கி எமது நாட்டைச் சுடுகாடாக்கி நிறுத்தியிருக்கின்றது. எமது மக்கள் வீட்டை இழந்து, நாட்டை இழந்து, உயிரை இழந்து, இன்று ஏதிலிகளாகப் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்கள்.

# அவமானச் சின்னமாக

- உலகத்தில் தன்மானத்திற்கு என்று இயக்கம் கண்டவன் தமிழன். இன்று அவமானச் சின்னமாக அலைகின்றான். ஈக்கும் எறும்புக்கும் இரையாக இருக்கட்டும் என்று அரிசிமாவில் கோலம் போட்ட இனம், அரைப்படி அரிசிக்குக் கையேந்தி நிற்கின்றது. கோட்டைகட்டி ஆண்ட இனம் கோணித்துணி கட்டித் தூங்குகின்றது.

- இப்பிடிப்பட்ட இழிநிலையில் ஒரு அவமானத்தின் இழிவான சாட்சியாக எமது இனம் நிறுத்தப்பட்டு இருக்கின்றது. ஒரு அரசியல் விடுதலைப் போராட்டத்தை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் முன்னெடுக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் இறுதியாக 2008 தொடங்கி 2009 மே18 க்குள் 1,75,000 பேருக்கு மேல் மக்களைக் கொலைசெய்து, உலக வரலாற்றில் இப்பிடியொரு கொடூர இனப்படுகொலை நடக்கவில்லை என்கின்ற அளவிற்கு நடத்திக் காட்டியிருக்கின்றது சிங்கள அரசு.

# இழப்புகளைத் தாங்கி

- வரலாறே பதிவுசெய்யப் பயப்படுகிற அளவிற்கு மிகக்கொடுமையான போரை நிகழ்த்தித் தன் சொந்தநாட்டு மக்களைச் சிங்களப் பேரினவாத அரசு அழித்து ஒழித்து விட்டது. இதைப்பற்றிப் பேச உலகத்தில் ஒருவரும் இல்லை. இன்றைக்கும் அந்த நிலத்தில் 90,000 விதவைகள் இருக்கின்றார்கள்.

- பல்லாயிரக்கணக்கான பிஞ்சுக் குழந்தைகள் நச்சுக் குண்டுகளுக்கு இரையாகிக் கரிக்கட்டையாகக் கிடந்தார்கள். பல்லாயிரக்கணக்கான எம் குலப்பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

- இதைப்பற்றி பேச உலகத்தில் ஒருவரும் இல்லை. தங்கை இசைப்பிரியாவின் மரணத்தையும், தம்பி பாலசந்திரனின் மரணத்தையும் குறிப்பிட்டுப் பேச மானுட நேயம் பேசுகிற உலகத்தாரிடதிலே ஒரு குரலும் உயரவில்லை என்பது வரலாற்றில் பெருந்துயரம்.

> "கோட்டைகட்டி ஆண்ட இனம் கோணித்துணி கட்டித் தூங்குகிறது"

ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


முள்வேலி முகாம்


ஈழமண்ணில்
இனஅழிப்பு போர்


முள்ளிவாய்க்கால் இனஅழிப்புப்
போரின் போது






இராணுவக் கட்டுப்பாட்டில்






ஈழத்தில் நடந்த இனப்படுகொலை



# மண் அழுதிருக்கிறது

- உடலில் எங்கு காயப்பட்டாலும் முதலில் கண் அழுவதுபோல, உலகத்தில் எங்குக் காயப்பட்டாலும் முதலில் எங்கள் மண் அழுதிருக்கிறது. அப்படிப்பட்ட நாம் கண்ணீர் வடிக்கும்போது அதைத் துடைக்கவோ, கை நீட்டவோ காயம்பட்டபோது அதற்கு மருந்திடவோ ஒருவரும் இல்லாதது பெருங்கொடுமை. நிற்கதியாக நிற்கிற எமது இனமக்கள், இந்த உலகத்தில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நீதியைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகத்திலும், ஐ.நா. பெருமன்றதிலும் நியாயம் கேட்டு நிற்கிறார்கள். உலகத்தின் பெரும் நாடுகளும் தலைவர்களும் (இந்திய உட்பட), அங்கு நடந்தது வெறும் மனித உரிமை மீறல்தான் என்றும், சிலர் போர்க்குற்றம் தான் என்றும் கூறினர். இதை நாம் தமிழர் அரசு ஏற்க மறுக்கிறது.
- மனித உரிமை மீறல் என்பது ஒரு மனிதன் உயிரோடு இருக்கும்போது அவன் உரிமையைப் பறிப்பது ஆகும். ஒரு மனிதனின் உயிரையே பறிப்பது உரிமை மீறல் அன்று அது கொலை.

# போர்க் குற்றமல்ல, போரே குற்றம்.

- போர்க்குற்றம் என்றால் போர் சரியானது. அதில் சில குற்றங்கள் நடந்திருகிறது என்றாகிறது. ஆனால் நாம் தமிழர் அரசு அந்தப் போரையே குற்றமாகப் பார்க்கிறது. அங்கே நடந்திருப்பது வெறும் கொலை அன்று, இனப்படுகொலை. பச்சிளம் குழந்தைகள், வயது முதிர்ந்தவர், கர்ப்பிணிபெண்கள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று மரபு இருக்கின்றது. அதையெல்லாம் மீறி இவையெல்லாவற்றின் மீதும் தாக்குதல் நடத்தி அழிக்கப்பட்டது.
- குறிப்பாக இது பாதுகாப்பான பகுதி எல்லோரும் வாருங்கள் என்று அழைத்து, அங்கே மக்களைக் குவித்து, அந்த இடத்திலேயே தாக்குதல் நடத்தி அழித்தது.

# இனப்படுகொலை

- சொந்த நாட்டின் மக்களின் மீது வான்வழி தாக்குதல் நடத்தக்கூடாது என்று போர் மரபு இருக்கிறது. அதைமீறி அனைத்துத் தாக்குதலையும் வான்வழி மூலமாகவே நடத்தியது சிங்கள அரசு. அதும் வெறும் படுகொலை அல்ல, இனப்படுகொலை. இறந்தது முழுக்க தமிழர்கள், கொன்றொழித்தவர்கள் சிங்களவர்கள். எனவே அது இனப்படுகொலை. வெறும் இனப்படுகொலை மட்டும் அல்ல திட்டமிட்ட இனப்படுகொலை. வெறும் ஒன்றரை ஆண்டுகளுக்குள் இந்தப் போரை நடத்தி அவர்கள் அழித்தொழிக்கவில்லை. சிறுகச் சிறுகச் சதி செய்து அழிக்கப் பட்டார்கள் தமிழர்கள்.

# சிறுகச் சிறுகச் சதி

- ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்கும் மேலாக எமது மொழியைச் சிதைத்து, எமது அதிகாரங்களைப் பறித்து, எமது வளங்களைச் சுரண்டி, எமது நிலங்களை ஆக்கரமித்து எமது மக்களைச் சிறுகச் சிறுக அழித்து முடித்தனர். எனவே இதைத் திட்டமிட்ட இனப் படுகொலையாக நாம் தமிழர் அரசு பார்க்கின்றது.
- எங்களைக் கொன்றொழித்த கூட்டத்தோடு இனி கூடி வாழ்வதென்பது சாத்தியமில்லை. இலங்கையில் இரண்டு இனங்கள் ஒன்று தமிழர் மற்றொன்று சிங்களர். இரண்டும் பகை இனங்களாக 60 ஆண்டுகளாக மாறி நிற்கிறது.
- என் தாய், தந்தையர், என் அக்காள் தங்கை, பெரியம்மா சின்னம்மா உள்ளிட்ட என் உறவுகளின் பிணத்தின் மீது ஏறிச் சென்று, எம் மக்கள் சிந்திய கண்ணீரிலும் இரத்தத்திலும் நனைந்து கொண்டு போய் எமது இனமக்களைக் கொன்று குவித்த சிங்களவனோடு ஆரத்தழுவி, அரவணைத்து வாழ்வதென்பது சாத்தியமில்லை.

ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


ஐ.நா. மன்றத்தில் ஈழ இனபடுகொலை குறித்து

இலங்கையில் ஒரே ஆட்சியின் கீழ்தான் வாழ்ந்தாக வேண்டும், இரண்டு நாடாகப் பிரியக்கூடாது என்று பேசுகிற பெருமக்கள், கருத்தாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், “எம் மக்களிடத்தில் ஒரே இலங்கைக்குள் வாழ்கிறார்களா? தனித் தமிழீழமாக மீள்கிறீர்களா?” என்ற கருத்தை வைத்து ஒரு வாக்கெடுப்பு நடத்துங்கள்


பல்வேறு நாடுகளில் நடந்த போராட்டங்கள்






# சாத்தியமில்லை

- எனவே எமக்கிருக்கிற ஒரே ஒரு வழி நோர்வே, சுவீடன் பிரிந்தது போல, கிழக்குத் தைமூர், மேற்குத் தைமூர் பிரிந்தது போல், செர்பியா நாட்டிலிருந்து கொசோவா விடுதலைப் பெற்றதைப் போல், அண்மையில் தெற்குச்சூடான் விடுதலை பெற்றதைப் போல்...
- கனடாவில் கியுபெக் இன மக்கள் இரண்டுமுறை பொதுவாக்கெடுப்புக்கு வந்து அந்த பொதுவாக்கெடுப்பு தோற்றுபோய், இன்று கனடாவில் இணைந்து வாழ்வதுபோல, அண்மையில் ஸ்காட்லாந்து இன மக்கள் தனியாக நாடு கேட்டு அதற்குப் பொதுவாக்கெடுப்பு நடக்கப்பெற்று இங்கிலாந்தில் வாக்கெடுப்பு தோற்றுபோய், அவர்கள் இங்கிலாந்தோடு வாழ்வதுபோல்...
- எமக்கொரு அரசியல் வாய்ப்பு, ஜனநாயக வாய்ப்பு தந்தாக வேண்டும். கிளிக்குத் தங்கத்திலே கூண்டு வைத்தாலும் அதில் தங்குவதா இல்லையா என்பதை முடிவெடுக்க வேண்டிய உரிமை கிளிக்குதான் உண்டு. ஒற்றை இலங்கைக்குள் ஒரே ஆட்சிக்குள்தான் வாழ்ந்தாக வேண்டும், இரண்டு நாடாகப் பிரியக்கூடாது என்று பேசுகிற பெருமக்கள், கருத்தாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், 'எம்மக்களிடத்தில் ஒரே இலங்கைக்குள் வாழ்கிறார்களா? தனித்தமிழ் ஈழமாக மீள்கிறீர்களா?'' என்ற கருத்தை வைத்து ஒரு வாக்கெடுப்பு நடத்துங்கள்.

# பொதுவாக்கெடுப்பு (Referendum)

- ஒரே இலங்கைக்குள் வாழ்கிறோம் என்று வாக்குச் செலுத்தி விட்டால் உலகில் உள்ள தமிழர்கள் அனைவரும் வாய்மூடி மவுனியாகின்றோம். தனித் தமிழீழமாக மீள்கிறோம் என்று வாக்களித்து விட்டால், அறிவார்ந்த பெருமக்கள் வல்லாதிக்கத் தலைவர்கள் எல்லோரும் மற்ற நாடுகள் எப்படி ஜனநாயக முறைப்படி பிரிந்ததோ. அப்படி எமது நாட்டைப் பிரித்துச் சுதந்திர நாடாக, எல்லாரையும் போல சுதந்திரமாகப் பிறக்க - வாழ - இறக்க எங்கள் தாய்நிலத்தில் உரிமை பெற்றுத்தாருங்கள்.

# இந்தியாவின் கவனத்திற்கு

- இந்தியா - பாகிஸ்தான் போரின்போது இலங்கை பாகிஸ்தான் பக்கமே நின்றது. பாகிஸ்தான் வானூர்திகள் கொழும்பு வானூர்தி நிலையத்தில் எண்ணெய் நிரப்பிக்கொள்ளக் அனுமதிக்கப்பட்டது.
- இந்திய - சீனா போரின்போதும், இலங்கை சீனாவின் பக்கமே நின்றது. ஒருபோதும் இந்தியாவின் பக்கம் உண்மையாக விசுவாசமாக இருந்ததில்லை.
- ஆனால் ஈழத் தமிழர்களோ, இந்தியா - இலங்கை கிரிக்கெட் விளையாடும்போது இந்தியாதான் வெல்லவேண்டும் என்று உணர்வோடு கையொலி எழுப்புவார்கள்.

# இந்தியப் பற்றாளர்

- தேசியத் தலைவர் பிரபாகரன், உலகத்தில் எத்தனையோ விடுதலைப் போராட்டத் தலைவர்களுடைய வரலாற்றை வாசித்து, நேசித்து இருந்தாலும், இந்திய மண்ணின் விடுதலைக்குப் போராடிய நேதாஜி சுபாஸ்சந்திர போசைத் தான் தனது முன்மாதிரியாக எடுத்துக் கொண்டார்.

> “இந்தியா பாகிஸ்தான் போரின்போது இலங்கை பாகிஸ்தான் பக்கமே நின்றது”

ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



Clarity Version download at www.makkalarasu.com



எம்.ஜி.ஆர் பிரபாகரன் சந்திப்பு



இராஜீவ்காந்தியைத் தாக்கும் இலங்கைக் கடற்படை வீரன்



முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தியுடன் பிரபாகரன் சந்திப்பு


**சொந்த நாட்டில் வாழமுடியாத ஏதிலிகளாக எம்மக்கள் இடம் பெயரும் போது வயிற்றுக்குள் கருவில் இருக்கும் குழந்தையையும் இடுப்பில் இருக்கிற ஒருவயது குழந்தையையும் சர்வதேசச் சமூகம் தீவிரவாதிகளாகத்தான் பார்க்கிறது**



பாலசந்திரன் மரணத்திற்கு நீதி கேட்டு நடந்த போராட்டம்



இராஜபக்சே - முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் சந்திப்பின் போது




விடுதலைபுலிகள் தடையை நீக்கக்கோரிப் போராட்டம்

Clarity Version download at www.makkalarasu.com

## மறுப்புத் தெரிவித்தார்

- எத்தனையோ நாடுகள் உங்களுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுக்கின்றோம். உதவியாய் நிற்கின்றோம். அதற்குப் பதிலாக எங்களுக்குத் திரிகோணமலைத் கடற்பரப்பை 30 ஆண்டு ஒத்திகையாகக் கொடுங்கள் எனக் கேட்டபோது பிரபாகரன் அதை ஏற்கவில்லை. அதற்குக் காரணம் இந்தியாவிற்கு ஒருபோதும் நாங்கள் எதிராக போகமாட்டோம் என்பதுதான். மிகப்பெரிய இந்தியப் பற்றாளராக இருந்தார்.
- இந்தியாவைத் தங்கள் தந்தையர் தேசமாக ஈழத்தமிழ் உறவுகள் நேசித்து நின்றனர். தந்தையின் விரலைப் பிடித்துக்கொண்டு நடந்துபோகும் செல்ல மகனைப்போல இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஈழம் இருக்கும்.

## இந்தியாவுக்கு ஈழமே பாதுகாப்பு

- ஈழம் என்ற ஒரு நாடு இருந்தால்தான் இங்கு இரத்த உறவுகளை வைத்திருக்கிற இந்தியாவிற்குப் பாதுகாப்பாக இருக்கும். இந்தியாவிற்கு எப்போதுமே உண்மையாக இருக்கும் ஒரு நாடு உண்டு என்றால் அது ஈழமாகத்தான் இருக்கும். இந்தியாவின் பாதுகாப்பிற்கும் எதிர்காலத்திற்கும் எப்போதுமே ஈழம் என்று ஒரு நாடு இருப்பதுதான் சரியாக இருக்கும். இதை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும். புரிந்து கொள்ள வைப்போம்.
- ஈழத்தில் உள்ள எம்மக்கள் இந்தியாவின் விடுதலைக்குப் போராடிய சுபாஷ்சந்திரபோஸ், நேரு, காந்தி, இந்திராகாந்தி ஆகியோரின் புகைப்படங்களைத்தான் வைத்திருந்தனர். இந்தியாவின் தலைவர்களைத்தான் தங்களின் தலைவர்களாக ஏற்றிருந்தார்களே தவிர சிங்களத்தின் தலைவர்களை அல்ல. ஆனால் எந்தச் சிங்களவனும் இந்தியத் தலைவர்களை ஏற்றுக்கொண்டதில்லை. கொண்டாடியதுமில்லை. சீனாவையும், பாகிஸ்தானையும் நேசிக்கின்றார்களே ஒழிய, இந்தியாவை எதிரி நாடாகத்தான் பாவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## இன்னும் துரோகமா?

- இவ்வளவிற்குப் பிறகும் தொடர்ந்து இந்தியா இலங்கைக்கு இராணுவப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது. கப்பல், இராணுவத் தளவாடங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. இலங்கை எந்த நாட்டுடன் சண்டை போடுவதற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது? தன் சொந்த நாட்டு மக்களையே கொல்வதற்கு இந்த உதவிகளைச் செய்வது கொடுமையானது. இதை முற்றும் தடுக்க நாம் தமிழர் அரசு போராடும்.

## புலிகள் மீதான தடை நீக்கம்

- விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற தடையை நாம் தமிழர் அரசு தமிழ்த் தேசிய இனத்தின் மீது திணிக்கப்பட்ட ஓர் அவமானமாகக் கருதுகிறது.
- தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் போராடிய மக்கள் இராணுவம் தான் விடுதலைப் புலிகள் அமைப்பு. அப்படித் தான் நாம் தமிழர் அரசு பார்க்கிறது.
- இன்றைக்கு அந்த இயக்கம் முழுவதுமாய் ஒழிக்ககப் பட்டுவிட்டதாக இலங்கை அரசே அறிவித்தப் பிறகும், இந்தியாவில் தடையைத் தேவையற்று நீட்டிப்பது தமிழின மக்களின் உரிமை, அரசியலாக முன்நகர்வதை பலவழிகளில் தடுக்கிறது.
- இன்றைக்குத் தங்கள் சொந்த நாட்டில் வாழமுடியாத ஏதிலிகளாக எம்மக்கள் இடம் பெயரும் போது வயிற்றுக்குள் கருவில் இருக்கும் குழந்தையையும் இடுப்பில் இருக்கிற ஒரு வயதுக் குழந்தையையும் சர்வதேச சமூகம் தீவிரவாதிகளாகத்தான் பார்க்கிறது. இனவெறி அரசுக்குத் தப்பி ஓடிவரும் அகதிகளாகப் பார்க்கவில்லை. இப்படி அனைத்திற்கும் காரணம் புலிகள் மீதான தடைதான். அதுதான் முட்டுக்கட்டையாக உள்ளது.
- எனவே நாம் தமிழர் அரசு மத்திய அரசுடன் போராடித் தடையை நீக்கும்.

ஈழம் எங்கள் இனத்தின் தேசம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



அறிவார்ந்த ஆளுமைகளை
ஒன்று திரட்டிக் குழு

## அறிவார்ந்த ஆளுமைக் குழு

- அறிவார்ந்த ஆளுமைகளை ஒன்று திரட்டிக் குழு அமைக்கப்படும். அந்தக்குழு, இந்தியாவின் பிற மாநில முதல்வர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள், அரசியல்வாதிகள், கருத்தாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரைத் தொடர்ச்சியாகச் சந்தித்துப் பேசும். ஈழ இனப்படுகொலைக்கான காரணங்கள் என்ன, எதற்காகப் புலிகள் போராடினார்கள் என்பதையெல்லாம் ஆவணங்களோடு விளக்கிக் கூறுவார்கள். இப்படித் தொடர் அழுத்தங்கள், பிரச்சாரங்கள் மூலம் இந்தியாவின் பிற மாநில மக்களின், பிற தேசிய இனங்களின் ஆதரவைப் பெற்று மத்திய அரசின் போக்கை மாற்ற முயற்சிகள் எடுக்கப்படும்.
- அதே போன்று உலகளவில் அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளை, அறிவார்ந்தவர்களைச் சந்தித்து, புலிகள் மீதான தடை, இனப்படுகொலை விசாரணை, பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட பலவற்றையும் எடுத்துரைத்து நீதியைப் பெற்றுத் தருவோம்.

## தனித் தமிழீழ பொதுவுடமைக் குடியரசு பேரறிவிப்பு

- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழ் பெருமக்கள், அறிஞர்கள், துறைசார் வல்லுனர்கள், அந்தந்த நாட்டு பிரதிநிதிகள். பிற மொழித் தேசிய இனத் தலைவர்கள், பிற மாநிலத்தில் உள்ள கல்வியாளர்கள், தலைவர்கள் மாந்தநேய பற்றாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உட்பட அனைவரையும் அழைத்து தமிழ்ப் பெருங்குடி மக்களை பல இலட்சக்கணக்கில் திரட்டி மாபெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாட்டை நடத்தி அந்த மாநாட்டில் தமிழ்த் தேசிய இனத்திற்கென்று பரந்து விரிந்து கிடக்கின்ற இந்தப் பூமிப்பந்தில் ஒரு தேசம் அது தனித் தமிழீழ பொதுவுடமை குடியரசே என்று நாம் தமிழர் அரசு பேரறிவிப்பு செய்யும்.

## இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை

- நாம் தமிழர் அரசுக்கு உயர்ந்த நோக்கங்கள் பல இருப்பினும் மிக உயரிய உயிரான கொள்கை தமிழ்த்தேசிய இன மக்களுக்கென இந்தப் பூமிப் பந்தில் ஒரு நாடு அடைவதில் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கிறோம். இதில் 60ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி எமது அன்னைத் தமிழ்ச் சமூகம் இரத்தம் சிந்தி, கண்ணீர் சிந்தி, உயிரை விலையாகக் கொடுத்து வீட்டை இழந்து நாட்டை இழந்து பல்வேறு நாடுகளில் பரவி வாழ்கின்ற தாய்த்தமிழ் உறவுகள் பன்னாட்டு அரசியலாக மாற்றி நிறுத்தியிருக்கிற தனித் தமிழீழச் சோசியலிசக் குடியரசை அடைவதே இறுதி இலக்காக வைத்திருக்கும். இன்று, இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை என்ற புனிதக் கனவோடு நாம் தமிழர் அரசு ஒவ்வொரு அடியும் மிகக்கவனமாக எடுத்துவைத்து வெல்லும்.



தொடக்கத்தில்
எதையும்
வீண்முயற்சி
என்பார்கள்
வென்றுவிட்டால்
விடாமுயற்சி
என்பார்கள்

- பிடல் காஸ்ட்ரோ

Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும் - தமிழ்மறை (466)




**தமிழ் ஆட்சிமொழி, அதிகார மொழி, பண்பாட்டு மொழி, பயன்பாட்டு மொழி, வழிபாட்டு மொழி, வழக்காடு மொழியாகக் கொண்டு வருவோம் நாம் தமிழர் அரசு**

# தமிழ்மொழி மீட்சி

உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழியாகவும் இந்தியத் துணைக் கண்ட மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் இந்தியாவிற்கு வெளியே இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் விளங்கும் ஒரே மொழி நம் தமிழ்மொழியாகும்.

***“தமிழன் என்றோர் இனமுண்டு***
***தனியே அவர்க்கொரு குணமுண்டு***
***அமிழ்தம் அவரது மொழியாகும்***
***அன்பே அவரது வழியாகும்”***

என்றார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார். ஆனால் மொழி நம் மண்ணில் செம்மையற்று நிற்கிறது என்பதே வேதனையான ஒன்று. இதை மீட்க வேண்டிய கடமையில் இருக்கிறது **நாம் தமிழர் அரசு.**

## 50,000 ஆண்டுகளுக்கு மூத்த மொழி

- தமிழ் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு மூத்த மொழி என்று ஆய்வால் நிறுவினார் ஐயா மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்.
- ஆதி மனிதன் காடுகளிருந்து இடம் பெயரும் போது பேசிய மொழியின் ஒலி வடிவமும், வரி வடிவமும் இன்னும் தமிழில் இருக்கிறது என்று கூறும் கால்டுவெல் எல்லா மொழிகளுக்கும் மூத்தமொழி தமிழ் எனச் சொல்கிறார்.

## அழிந்து வரும் மொழிகளில் தமிழும் ஒன்று

- ஒரு நாட்டை அழிக்கவேண்டுமானால், யானைப் படை, குதிரைப் படை கொண்டு வந்து போர் தொடுத்து அழிக்க வேண்டும் என்பதில்லை. அவன் தாய்மொழியை அழித்தால் கலை, பண்பாடு அழிந்துவிடும், பிறகு நாடும் அழிந்துவிடும். இதுதான் உலக முழுதும் இருக்கின்ற வரலாற்று உண்மை. இந்த உலகத்தில் அழிந்து வரும் மொழிகளில் தமிழும் ஒன்று என்று யுனெஸ்கோ நிறுவனம் சொல்கிறது. மொழி சிதைந்து அழிந்தால் தமிழ் இனம் அழிந்துவிடும்.
- முகம் சிதைந்து கிடந்தால் ஒருவன் பிணத்தை அடையாளம் காட்ட முடியாததைப் போல மொழி சிதைந்து அழிந்தால் ஓர் இனத்தை அடையாளம் காட்ட முடியாது போய்விடும்.

> “பெற்ற தாயைப் பட்டினிப் போட்டுவிட்டு எத்தனை ஆயிரம் அன்னதானம் செய்தாலும் ஒரு பயனும் இல்லை”

தமிழ்மொழி மீட்சி





Clarity Version download at www.makkalarasu.com

- அதற்குச் சான்று, நம்மைப் போல எலும்பும், நரம்பும், இரத்தமும், சதையுமாக இருக்கிற நரிக்குறவர்களுக்கு நேர்ந்துள்ள அவலம்தான். அவர்களுக்கு இந்தத் தேசம் எந்த அங்கீகாரத்தையும் அளிக்காததற்குக் காரணம் அவர்களுக்கு மொழி இல்லை என்பதால்தான். மொழியைத் தொலைத்தவன் நாடோடியாக அலைவான் என்பதுதான் இந்த உலகத்தில் கண்முன்னே தெரிகின்ற சான்று.

## மொழித் திரிபு

- தமிழோடு சமற்கிருதம் கலந்து பேசிப் பேசித்தான் தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் அனைத்தும் உருவானது.
- 15 ஆம் நூற்றாண்டில் மலையாளம் இல்லை. வெறும் 500 ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் சேர சோழ பாண்டியர்களில் சேரப் பாட்டன் பிள்ளைகள் மலையாளியாக மாறிப் போனான். மொழித் திரிபு, பிறமொழிக் கலப்பு, ஒரு மொழியைச் சிதைத்து அழிக்கிறது.
- பாலில் தண்ணீர் கலப்பது, அரிசியில் கல் கலப்பது என எதிலும் கலப்படத்தை விரும்பாத நம் மக்கள், உயிருக்கு நிகரான நமது தாய்மொழியில் பிறமொழி கலப்பதை எப்படி ஏற்பார்கள்?

***“மணக்க வரும் தென்றலிலே***
***குளிரா இல்லை?***
***தோப்பில் நிழலா இல்லை?***
***தணிப்பரிதாம் துன்பமிது***
***தமிழகத்தின் தமிழ்த்தெருவில்***
***தமிழ்தான் இல்லை”***

என்று வருந்தி நம் பாட்டன் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகிறார்.

## எங்கும் தமிழ், எதிலும் தமிழ்

- **பெற்ற தாயைப் பட்டினிப் போட்டுவிட்டு எத்தனை ஆயிரம் அன்னதானம் செய்தாலும் ஒரு பயனும் இல்லை.**
- தாய் மொழியில் படிக்காது உலகத்தில் எந்த மொழி படித்தாலும் அவனை அறிவாளி என்று உலகம் மதிக்கப்போவதில்லை.
- **உங்கள் வீடுகளுக்கு எத்தனை சன்னல் இருக்கிறதோ அத்தனை சன்னலாக உலக மொழிகள் இருக்கட்டும். நுழை வாயிலாகத் தலைவாயிலாக நம் தாய்மொழி தமிழ் இருக்கட்டும். தாய்மொழி மறந்த இனம் வரலாற்றில் வாழ்ந்ததாகச் செய்தி இல்லை.**
- எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது நமது கனவு. தமிழ் ஆட்சிமொழி, அதிகார மொழி, பண்பாட்டு மொழி, பயன்பாட்டு மொழி, வழிபாட்டு மொழி, வழக்காடு மொழியாகக் கொண்டு வருவோம்.

## இத்தனை இருந்தும் வளராத தமிழ்

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் இணையக் கல்விக் கழகம்., செம்மொழித் தமிழ் உயராய்வு மையம்., தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழ்ச் சங்கம் போன்ற நிறுவனங்களைத் தமிழக அரசு நடத்தி வந்தபோதும், தமிழின் வளர்ச்சி மெல்லக் குன்றி இன்று தேங்கி நிற்கிறது என்றே சொல்ல வேண்டும். இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் நாம் தமிழர் அரசு தமிழ் மொழி மீட்புக்கான வழிகளை முன்வைக்கின்றது..



**“ஆதி மனிதன் காடுகளிருந்து இடம் பெயரும் போது பேசிய மொழியின் ஒலி வடிவமும், வரி வடிவமும் இன்னும் தமிழில் இருக்கிறது என்று கூறும் கால்டுவெல் எல்லா மொழிகளுக்கும் மூத்தமொழி தமிழ் எனச் சொல்கிறார்”**

Clarity Version download at www.makkalarasu.com

# இலக்கியக் கல்வி

- தமிழ்வழிக் கல்விக்கு முன்னுரிமை அளிப்பதோடு, கல்விக்கான உதவித் தொகையும் அளிக்கப்படும். கூடவே தமிழ்மொழியில் படித்தவர்களுக்கு மட்டுமே தமிழகத்தில் வேலைவாய்ப்பு முன்னுரிமை அளிக்கப்படும் என அறிவிக்கின்றது. தமிழ் இலக்கியக் கல்வியை +2 முதலே முழுமையாகத் தொடங்கி முனைவர் பட்டம் வரையிலும் வளர்த்தெடுப்பதற்கான வழிமுறைகளைக் கற்றறிந்த சான்றோர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவோம்.

# தனித் தமிழ்த் தன்மையுடன்

- தனித் தமிழ்ப் பேச்சுப் பயிற்சி, தமிழ்ப் பாடல்கள், இலக்கியப் பயிற்சி ஆகியவற்றில் இசையோடு தமிழைக் கற்றுத் தரும் பேராசிரியர்கள் உருவாக்கப்படுவர்.
- தனித்தமிழ்ப் பேச்சுப் பயிற்சி இசைப்பாடல் பயிற்சியோடு தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் பெருமளவில் பயிற்றிவிக்கப்படுவர்.
- தனித்தமிழ்ப் பேச்சுப் பயிற்சி நாட்டுப்புறக் கலைகளில் திறன் கொண்ட தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் பெருமளவில் உருவாக்கப்படுவர்.

# பிறமொழி அறிஞர்களைப் போற்றுவோம்

- ஒட்டு மொத்த மாந்த அறிவுக்கும் தமிழர்களின் பங்களிப்பைச் செய்வதில் தமிழ் மொழியின் பங்கு என்ன என்பதை உலகுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்லத் தனிவகை அறிஞர்களை உருவாக்குவதோடு, தமிழின் மீது மதிப்புக் கொண்டுத் தமிழைச் செழுமைப் படுத்திய பிறமொழி அறிஞர்களையும் போற்றுதல்.

# தமிழ்மொழிப் பயிற்சி நடுவம்

- ஜெர்மன், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் அவர்களின் தாய்மொழியை இலவசமாகக் கற்றுக்கொடுக்கத் தனிப் பயிற்சி மையம் வைத்துள்ளார்கள். உலகின் மூத்த மொழியான நம் தமிழைப் பிற மொழியினர் இலவசமாகக் கற்றுக்கொள்ள வேண்டி அனைத்து மாவட்டத் தலைநகரிலும் '**தனித் தமிழ்ப் பயிற்சி மையம்**' அமைக்கப்படும். வெளிநாட்டினர், வெளி மாநிலத்தினர் அனைவரும் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள வழிசெய்யப்படும். தமிழகத்தில் பணிபுரியும் வேற்று மாநில மத்திய அரசு ஊழியர்களும் தமிழைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துவோம்.
- பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் அரசுச் செலவில் பயிற்சி மையம் நடத்தப்படும். தமிழ்மொழியைப் பேச எழுதக் கற்றுக்கொள்ள மறந்த இந்தத் தலைமுறையினருக்கு இப் பயிற்சி மையம் வாய்ப்பாக அமையும்.

தமிழ்மொழி மீட்சி



Clarity Version download at www.makkalarasu.com

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் - தமிழ்மறை (996)




## ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு செய்து புதைந்த வரலாற்றை மீட்டெடுக்கத் தொல்லியல் துறை அமைக்கப்படும்

Clarity Version download at www.makkalarasu.com

# கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி

உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்தவர்கள்தான் தமிழர்கள். ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ என்று இந்த மானுட உலகத்திற்கு முதலில் பொதுவுடைமைக் கருத்தைச் சொன்னவர் நம் முப்பாட்டன் திருவள்ளுவர். மொழி, கலை, பண்பாட்டில் சிறந்தோங்கி வாழ்ந்த நம் இனத்தின் அடையாளங்கள் அனைத்தும் மீட்டுருவாக்கம் செய்யச் செய்வதே **நாம் தமிழர் அரசின்** இலக்கு.

## பண்பாட்டுப் புரட்சி இல்லாது அரசியல் புரட்சி வெல்லாது

- தமிழர்கள் ஐம்பதாயிரம் ஆண்டுநீண்ட நெடிய மூத்த இனம், தனித்தப் பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” “தீதும் நன்றும் பிறர்தர வாரா” போன்ற உயர்ந்த பண்பாடு உடைய இனத்தின் மக்கள். ஒரு இனம் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு ஆகிவற்றைச் சிதையக் கொடுக்குமானால் அந்த இனமே சிதைந்து அழிந்துவிடும். எனவே அதற்கான மீட்சியை **நாம் தமிழர் அரசு** மேற்கொள்ளும்.

## திருமுருகப் பெருவிழா

- தமிழரின் மூத்த இறையோனாகவும் குறிஞ்சி நிலத் தலைவனாகவும் இருக்கின்ற எம் முப்பாட்டன் முருகப்பெருமானின் தைப் பூசத் திருவிழா திருமுருகப் பெருவிழாவாகக் கொண்டாடப்படும்.
- தமிழர் இறையோன் முப்பாட்டன் முருகப்பெருமானின் தைப்பூசத் திருவிழாவிற்கு அரசு பொது விடுமுறை விடப்படும்.

## ஐந்திணைத் திருவிழா

- முல்லை நில இறையோனாகவும், தலைவனாகவும் இருக்கின்ற மாயோன் (கண்ணன்), மருதம் (இந்திரன்), நெய்தல் (வருணன்), பாலை (கொற்றவை) ஐந்து திணைகளில் வாழ்ந்த எம் முன்னோர்களுக்குத் திருவிழா எடுக்கப்படும்.

## கண்ணகிக் கோயில்

- ஆண்டுதோறும் சித்திரை முழுநிலவன்று மறத்தை வீழ்த்தி அறத்தைக் காத்து நின்ற எங்கள் முப்பாத்தாள் கண்ணகிப் பெருமாட்டியினுடைய விழா ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.
- நமது பாட்டன் சேரன் செங்குட்டுவன் இமயத்திலிருந்து கல் எடுத்து வந்து எனது முப்பாத்தாள் கண்ணகிக்குக் கோயில் கட்டியது கும்பிடத்தானே ஒழியக் குட்டிச்சுவராகப் போடுவதற்கில்லை.

கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



வீரமங்கை வேலுநாச்சியார்



வீரன் சுந்தரலிங்கம்



தீரன் சின்னமலை



கோனேரிக்கோன் கோட்டை



பூலித்தேவன்



பெரும்பிடுகு முத்தரையர்



மருதுபாண்டியர்

கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி

## அருண்மொழிச் சோழன்

- உலகத்தில் மூன்றாம் பெரும் வல்லரசை நிறுவிய நம் அருமைப் பெரும்பாட்டன்கள் அருண்மொழிச் சோழனுக்கும் அவர் அன்பு மகன் அரசேந்திரச் சோழனுக்கும் தஞ்சை உடையாளூரிலே மாபெரும் நினைவகம் கட்டப்படும்.
- குஜராத்தில் சாராபாய் அருங்காட்சியகத்தில் உள்ள நமது பெரும்பாட்டன் அருண்மொழிச் சோழன் சிலையை மீட்டுக் கொண்டு வந்து உடையாளூரில் அவருக்குக் கட்டப்படும் நினைவகத்தில் வைக்கப்படும்.
- நம் பெரும்பாட்டன் அருண்மொழிச் சோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு வெளியே வாசலில் உள்ள அருண்மொழிச் சோழன் (இராசராச சோழன்) சிலை அவன் கட்டிய கோயிலுக்குள்ளேயே வைக்கப்படும்.

## கோனேரிக்கோன் கோட்டை

- செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு 300 ஆண்டுகளாக எம் அருமைப் பெரும்பாட்டன்கள் கிருஷ்ணக்கோன் மகன் ஆனந்தக்கோன், ஆனந்தக்கோன் மகன் மாரிக்கோன், மாரிக்கோன் மகன் கோனேரிக்கோன், கோவிந்தக்கோன் பரம்பரை பரம்பரையாக ஆண்ட கோட்டை இன்று தேசிங்கு இராஜா கோட்டையாக மக்களால் அழைக்கப்படுவதை, அறியப்படுவதைப் பெருத்த அவமானமாகத் தமிழ்த்தேசியப் பிள்ளைகள் கருதுகிறோம். அதனால் அதை மீட்டு எம் பாட்டன் பெயரில் கோனேரிக்கோன் கோட்டை எனச் சட்டபூர்வமாக நிறுவுவோம்.

## வீரப்பாட்டி வேலுநாச்சியார்

- பெண்ணினத்தின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றிய பெருமைமிகு பெரும் வீரப்பாட்டி வேலுநாச்சியாருக்கு, அவர் நினைவைப் போற்றும் வகையில் நினைவகம் கட்டப்படும். அவருடைய வாழ்க்கை வரலாறு பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் பாடமாக வைக்கப்படும்.

## மான மறவர்கள்

- மான மறவர்கள், மருதுபாண்டியர், பூலித்தேவன், வீரன் அழகுமுத்துகோன், வீரன் சுந்தரலிங்கம், பெரும்பிடுகு முத்தரையர் ஆகியோரின் நினைவைப் போற்றும் வகையில் தனித் தனியே நினைவகம் கட்டப்படும். அவர்களின் வாழ்க்கை வரலாறு பள்ளிகளில் பாடமாக வைக்கப்படும்.

## தமிழ்ப் புத்தாண்டு

- உலகத்தில் மூத்த குடியான, தமிழனுக்குப் புத்தாண்டு எதுவென்று தெரியவில்லை. தமிழர்களிடம் இருந்து பிரிந்து சென்ற தெலுங்கர், கன்னடர், மலையாளர், துளுவர் மக்களுக்குப் புத்தாண்டு எதுவென்று தெரிகிறது. ஆனால் தமிழர்களுக்குப் புத்தாண்டு சித்திரை ஒன்றா, இல்லை தை ஒன்றா என்று தெரியவில்லை.
- நமது தேசியத் தலைவர் தான் கட்டி எழுப்பிய தனித் தமிழீழ நாட்டில் தை ஒன்றைத் தமிழர் புத்தாண்டாகக் கொண்டாடினார். அதையே **நாம் தமிழர் அரசு** சட்டப்படி அறிவித்துத் தமிழர் புத்தாண்டாகக் கொண்டாடப்படும்.

> “உலகத்தில் மூன்றாம் பெரும் வல்லரசை நிறுவியவர்கள் நம் அருமைப் பெரும்பாட்டன்கள் அருண்மொழிச் சோழன், அரசேந்திரச் சோழன்”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


பொங்கல் திருவிழா

# பொங்கல் திருவிழாவாக ஒரு வாரம் நடத்தப்படும். தமிழருக்குத் தேசியப் பண்டிகை பொங்கல்தான் என்று நினைவுக்கு வரும் வகையில் மீட்டுருவாக்கம் செய்யப்படும்


தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்


ஒயிலாட்டம்


தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு


காவடியாட்டம்

# தமிழ்த் தேசியத் திருவிழா

- தை 1 முதல் ஒரு வார காலத்திற்குத் தமிழ்த் தேசியத் திருவிழா கொண்டாடப்படும். மிகப்பெரிய நிலப்பரப்பில் மாபெரும் விழாவாகக் கொண்டாடப்படும்.
- பல்வேறு நாட்டின் தலைவர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் உலக முழுமைக்கும் பரவி வாழும் எம்மினச் சொந்தங்கள் அனைவரும் சிறப்பு அழைப்பாளராக வரவழைக்கப்படுவர்.
- சாதி, மத வேறுபாடின்றித் தமிழ்ச் சமூகம் ஒரே நேரத்தில் அதிகாலை பொழுதில் பொங்கல் வைத்துப் பாரம்பரிய விளையாட்டுகளை அரங்கேற்றி, மண்ணின் கலைகளை நிகழ்த்திக் காட்டி, தமிழர் கலை, இலக்கிய, தொன்ம வரலாற்றுப் படிமங்களை, பண்பாட்டுக் கூறுகளை உலகம் அறியும் அரிய வாய்ப்பாகஆண்டுதோறும் இதை நிகழ்த்துவோம்.
- இது மிகப் பெரிய திருவிழாவாக ஒரு வாரம் நடத்தப்படும். தமிழருக்குத் தேசிய பண்டிகை பொங்கல்தான் என்று நினைவுக்கு வரும் வகையில் மீட்டுருவாக்கம் செய்யப்படும்.
- தமிழ்ப் புத்தாண்டுக்குத் தமிழர்கள் வாழும் பிறமாநிலங்களில் விடுமுறை விடக் கோரப்படும். அப்படி விடாத நிலையில் அவர்கள் புத்தாண்டுக்குத் தமிழ்நாட்டில் விடுகின்ற விடுமுறை நீக்கம் செய்யப்படும்.

# தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்

- தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் ஆயிரம் கோடி வைப்புத்தொகை வைத்து அதில் ஓராயிரம் தமிழ் அறிஞர்களுக்கு ஒரே இடத்தில் வேலைவாய்ப்பு ஊருவாக்கப்படும்.
- ஓலைச்சுவடிகள், கல்வெட்டு, கடலாய்வு, மெய்யியல், மொழியியல், தமிழிசை, நாட்டுப்புறக்கலைகள் போன்ற துறைகளில் உயர் ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
- பண்டைய சங்ககால இலக்கியங்கள் அனைத்தும் முறையாக ஆவணப் படுத்தப்படும். தனியார்களிடம் இருக்கும் ஓலைச்சுவடிகளை அரசே பொறுப்பேற்றுப் பாதுகாப்பை அளிக்கும். தஞ்சை சரசுவதி மகாலில் பூட்டப்பட்டுக் கிடக்கும் ஓலைச்சுவடிகளை அரசு கண்காணிப்பில் எடுத்துக்கொள்ளும். இதுவரை வாசிக்கப்படாமலே இருக்கின்ற இலட்சக்கணக்கான ஓலைச் சுவடிகளைப் படித்தாய்ந்து வெளிக் கொண்டுவர அறிஞர்கள் குழு அமைக்கப்படும்.

# ஆதிக் கலைகள் மீட்பு

- மொழி இனக்கலப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மறைந்து போன பறையிசை, தெருக்குத்து, மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், தேவராட்டம், கும்மியாட்டம் போன்ற பரம்பரைக் கலைகள் மீட்டுருவாக்கம் செய்யப்படும். மாவட்டம் தோறும் தமிழகச் சுற்றுலாத் துறையோடு சேர்ந்து நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் இந்தக் கலைகளைக் கட்டாயம் நடத்தவும், புதிய தலைமுறை இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

> “கலைகளை மீட்பதும், கலைஞர்களை காப்பதும் நமது கடமை. கலைகளை வளர்த்தெடுக்க நாம் தமிழர் அரசு அனைத்துவித முயற்சியும் எடுக்கும்”

கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



களரி
மான்கொம்பு



பறையாட்டம்



தெருக்கூத்து



வாள் சண்டை



மயிலாட்டம்



சிலம்பச் சண்டை



ஆதிச்சநல்லூர்

## போர்க்கலைகள்

- தமிழனின் போர்க்கலைகளான சிலம்பாட்டம், வாள்வீச்சு, களரி மான்கொம்பு, மற்போர், வர்மம், நோக்கு வர்மம் போன்றவை மீட்டுருவாக்கம் செய்யப்படும். முக்கியப் பெருநகரங்களில் இவற்றிற்கான பயிற்சி வகுப்புகள் தனியாக அமைக்கப்படும்.
- பள்ளி கல்லூரிகளில் இருந்தே தமிழர்களின் மரபுவழிப் போர்க்கலைகள் கற்றுத்தரப்படும், தற்காப்பிற்கும் உடல் ஆரோக்கியத்திற்காகவும் இது பயிற்றுவிக்கப்படும்

## எங்கும் தமிழிசை

- தமிழகக் கோயில்களில் நடக்கும் திருவிழாக்களிலும், பொங்கல் போன்ற திருவிழா நிகழ்ச்சிகளிலும் நடக்கும் கலை நிகழச்சிகளிலும், தமிழிசை விழாவும் சிறப்பாக நடத்தப்படும். இசை அறிஞர்களை அழைத்து இசை வளர்ச்சிக்கென்ற ஆராய்ச்சி நடுவம் ஏற்படுத்துவோம்.

## கிராமக் கோயில்களில் தமிழ்

- தமிழகத்தில் உள்ள 30,000 கிராமக் கோயில்களில் தமிழ்முறை வழிபாடு கட்டாயமாக்கப்படும். அவர்களுக்கான அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் தொடர்ந்து திருமுறைகளும், திவ்யப்பிரபந்தம் உள்ளிட்ட தமிழ் வழிபாட்டு முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

## சிறப்பு ஆய்விதழ்

- மிகப்பெரும் மூத்த இனம், இந்த உலகம் முழுதும் பல்வேறு கண்டங்களில் பரவியிருக்கின்ற இனம், பல இலக்கியப் பண்பாட்டுப் பெருமைகளைக் கொண்ட இனம் என்ற பெருமைக்குரிய தமிழினம் குறித்த சிறந்த ஆய்வு நூல் ஒன்று மாதம் தோறும் வெளிக்கொண்டு வரப்படும். அந்த இதழில் தமிழர்களின் தொன்மம், இலக்கியம், பண்பாட்டு முறைகள் என்ற சிறந்த ஆய்வுகள் அறிஞர் பெருமக்களால் ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகள் இருக்கும். உலகில் வேறு எங்கெல்லாம் தமிழ், தமிழ்ச் சமூகம் பரவியிருக்கின்றது, அதற்கான ஆதாரங்கள் என்ன என்பதற்கான தேடல் ஆய்வுகளும் ஆதாரங்களுடன் பதிவு செய்யப்படும். சங்க இலக்கியங்கள், புதைந்து போன தொல்லியல் வரலாறு போன்ற பல ஆய்வுகளும் தாங்கியதாக அந்த இதழ் இருக்கும்.
- உலகின் பல மூலைகளிலும் உள்ள தமிழறிஞர்கள் ஆய்வாளர்களின் பங்களிப்போடு இந்த ஆய்வு இதழ் வெளிக்கொண்டு வரப்படும். இதற்கான பெரும் முயற்சியை **நாம் தமிழர் அரசு** முதல் கடமையாக ஏற்றுச் செய்யும்

## துறை சார்ந்த ஆய்வு நூல்கள்

- கணிதம், அறிவியல், வரலாறு, கணினி உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் வெளிவரும் ஆய்வுகள் அனைத்தும் தமிழிலேயே ஆய்விதழாகக் கொண்டு வரப்படும்.
- உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவரும் புதிய தகவல்கள், ஆய்வுகள், சிறப்புக் கட்டுரைகள், கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட அனைத்தும் உடனுக்குடன் தமிழில் மொழி பெயர்க்கப்படும். இதற்கெனத் துறைசார் வல்லுநர்கள் நியமிக்கப்படுவார்கள். உலகின் புதியன அனைத்தும் தமிழில் அறிந்துகொள்ளும் முயற்சி நம் தலைமுறையினருக்கு வழங்க **நாம் தமிழர் அரசு** செயல்படுத்தும்.



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


மஞ்சுவிரட்டு


மரத்தச்சர்


சேவற்
சண்டை


மண் பானை
செய்தல்


குலைகுலையா
முந்திரிக்கா


கூடை
முடைதல்

# தமிழகத் தொல்லியல் துறை

- மாநில அரசின் கீழ் தனியே ஒரு தொல்லியல் துறை அமைக்கப்படும். தமிழ் மண்ணில் ஆதிச்சநல்லூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு செய்து புதைந்த வரலாறு மீட்டெடுக்கப்படும். மைசூரில் பூட்டிக்கிடக்கும் பண்டைய தமிழ்க் கல்வெட்டுக்கள் அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும்.

# ஏன் சல்லிக்கட்டை நடத்த வேண்டும்

- ஏறு தழுவும் விளையாட்டு தமிழர்களின் இறையாண்மை சார்ந்தது. ஆண்டாண்டு காலமாய் வீரியமான காளைகளை, அதன் மூலம் வீரியம் மிக்க பசுக்களின் மரபணுக்களைக் கடத்திக்கொண்டிருக்கும் கமுக்கமும் ஏறு தழுவுதலில் இருக்கின்றது.
- உலகம் முழுதும் மரபணு மாற்றப்பட்ட கலப்பின ஜெர்சி மாடுகளை விற்பனைக்கு இறக்கினார்கள். அப்படித் தமிழகத்திற்குள்ளும் நுழைக்கப்பட்டது. ஒரு நாற்பதாண்டுக் காலத்தில் தமிழகமெங்கும் ஜெர்சி வகை மாடுகளே நிரம்பியிருக்கிறது. அதிகம் பால் கொடுக்கிறது என்ற காரணத்திற்காக மட்டுமே இந்த வகையை மக்கள் வாங்கினார்கள்.
- இப்போது உலக நாடுகள் பலவும் ஜெர்சிவகை மாடுகளின் பாலைத் தடை செய்து கொண்டிருக்கிறது. காரணம் மனித குலத்திற்கு ஒவ்வாத, பல அதிர்ச்சி நோய்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் A-1 பாலைக் கொடுத்துக் கொண்டிருப்பதுதான்.
- தமிழகத்தின் நாட்டு மாடுகள் மனித குலத்திற்கு ஏற்ற, நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டக்கூடிய A-2 வகைப் பாலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வகை பாலைக் கொடுப்பது நாட்டுப் பசு மாடுகள். நாட்டுப் பசுமாடுகளின் உற்பத்திக்கு நாட்டுக் காளை மாடு அவசியம். கலப்பில்லாத பசுக்களை உருவாக்கும். இந்த சூட்சுமத்தை அறிந்துதான் பன்னாட்டுக் கம்பெனிகளின் கட்டளைக்கு இங்குச் சல்லிக்கட்டு விளையாட்டிற்குத் தடை என்கிறார்கள்.
- சல்லிக்கட்டுக்காகவே காளைகளைப் பராமரிக்கிறார்கள். ஆண்டுக்கு ஒரு முறைதான் அந்த விளையாட்டு. மற்ற காலங்களில் இனப் பெருக்கத்திற்குதான் பயன்படுத்தப்படுகிறது. விளையாட்டை நிறுத்தினால் மற்ற மாடுகளைப் போல் அடிமாடாகப் போய்விடும். இந்த இனம் அழிந்துவிடும். ஜெர்ஸி பசுக்களின் பெருக்கம் நிரந்தரமாக இடம் பிடித்துவிடும்.
- இந்தப் பின்னணியை உணர்ந்த நாம் தமிழர் அரசு சல்லிக்கட்டு விளையாட்டிற்கான தடையை எதிர்க்கிறது. தடையின்றி விளையாட்டை நடத்தும்.

# சேவல் கிடாய்ச் சண்டை

- கிராமங்கள் தோறும் ஆடு கோழிகளுக்கான சண்டை நடந்து வருவது வாடிக்கைதான். இரண்டு சேவல் மோதிக்கொள்ளும் போது அதில் வீரியமான சேவல் வெற்றி பெருகிறது. தோற்ற சேவலைக் கறிக்காகக் கொடுத்துவிடுவார்கள். வெற்றி பெற்ற சேவலைத் தான் இனப்பெருக்கத்திற்கு விடுவார்கள். இப்படி செய்வதன் மூலம் வீரியமிக்க கோழிக்குஞ்சுகள் பெருகி வளரும். இந்த வகை கோழிகளை விரைவில் நோய்கள் தாக்காது. எதிர்ப்புச் சக்திகள் அதிகமாக இருக்கும். இப்படி வீரியமிக்க மரபணுக்களைக் காப்பாற்றிக் கடத்துவதற்காகவே கோழிச் சண்டைகளும் ஆட்டுக்கிடாய்ச் சண்டைகளும் நடத்தப்படுகிறது. எனவே தமிழினத்தின் கலாச்சாரத்தைக் காக்கும் விதமாக இவ்வகையான விளையாட்டுகளை நமது அரசு ஊக்குவிக்கும்





Clarity Version download at www.makkalarasu.com

# எம் உயிர்த் தமிழ் காக்கத் தம் உயிர் தந்த ஈகிகள்



நடராசன் 1919-1939



தாளமுத்து 1915-1939



கீழப்பழுவூர் சின்னசாமி 1919-1939



கோடம்பாக்கம் சிவலிங்கம் 1941-1965



விருகம்பாக்கம் அரங்கநாதன் 1931-1965



கீரனூர் முத்து 1943-1965



மாணவர் இராசேந்திரன் 1947-1965



சத்தியமங்கலம் முத்து 1942-1965



அய்யம்பாளையம் வீரப்பன் 1938-1965



விராலிமலை சண்முகம் 1945-1965



பீளமேடு தண்டபாணி 1944-1965



மயிலாடுதுறை சாரங்கபாணி 1947-1965



Clarity Version download at www.makkalarasu.com

## தமிழர் மரபுசார் தொழில் மீட்பு

- தமிழர்களின் கலை இலக்கியம், பண்பாட்டோடு, நாட்டுப் புறக் கலைகள், நம் முன்னோர்களின் மரபுவழித் தொழிலான மரத்தச்சர், கல்தச்சர், பெருந்தச்சர், ஓவியர், படிமக் கலை, பைஞ்சுதை, வருவார் படக்கலை, பொற்கொல்லர், கருங்கொல்லர், மண்பாண்டக் கலை, பாரிவேட்டை, மஞ்சு விரட்டு, கூடைமுடைவார், பொம்மலாட்டம், பனுவல் பயிற்சி, பண் இசை, கிராமிய விளையாட்டு, மெய்யியலைச் சொல்லித்தரும் முதியோர் அவை உள்ளிட்ட பலவும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். மரபு வழியிலான தொழிற் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

## வரலாற்று நாயகர்களின் வாழ்விடம்

- வரலாற்று இன முன்னோர்களுடைய அறம், நெறி, வாழ்க்கைமுறை, அறம் சார்ந்த ஆட்சிமுறையை நமது வருங்காலத் தலைமுறையினருக்குத் தெரியப்படுத்தும் வாய்ப்பாகத் தமிழர் மெய்யியல் தலைநகரான கன்னியாக்குமரியில் மிகப்பெரிய நினைவிடம் எழுப்பப்படும்.
- இதில் வரலாற்று நாயகர்களின் வாழ்விடம், வருங்காலத் தலைமுறைக்கான வழித்தடம் என்ற பெயரிலே நமது முன்னோர்கள், சித்தர்கள், ஞானிகள் தொடங்கி நமது அருமைப் பெரும்பாட்டன்கள் சேரன், சோழன், பாண்டியன் வரலாறு, அருண்மொழிச் சோழன், அரசேந்திர சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றோர்களின் வரலாற்றுக் குறிப்புகளும், படங்களும் குறிப்பிடப்பட்டு இருக்கும்.
- மொழிப்போர், எல்லைப்போர் ஈகிகளின், ஈழ விடுதலைப் போராளிகளின் வரலாற்றை அறியும் வகையில் குறிப்புகளும், படங்களும் குறிப்பிடப்பட்டு இருக்கும்.
- கடைசியாக நமது இனக்காவலராக இருக்கும் தமிழ்த்தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வீரம் செரிந்த போராட்ட வரலாறும், வாழ்க்கை வரலாறும் அதில் குறிப்பிடப்பட்டு இருக்கும்.
- தமிழர் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் வகையிலும், எவர் வந்தாலும் புரிந்து கொள்ளும் வகையிலும் ஒரு கல்லூரி போல உருவாக்கப்படும். அங்கே உயர்தரத் தங்கும் விடுதிகள், திரையரங்குகள், வணிகவளாகங்கள் உருவாக்கப்பட்டு மிகப் பெரிய சுற்றுலாத் தலமாக்கப்படும்.

## இலக்கியச் செல்வர்

- இலக்கியவாதிகளின் படைப்புகளை நாம் தமிழர் அரசு போற்றுகிறது. மூத்த எழுத்தாளர்களை அரசே தத்தெடுத்துக் கொள்ளும். இளம் எழுத்தாளர்கள் படைப்புகளுக்கு ஊக்கமளிக்கப்படும். சிறந்த படைப்பாளிகளுக்கு, ‘இலக்கியச் செல்வர்’ விருது வழங்கும். பாவலேறு பெருஞ்சித்தரனார், தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார், ம.பொ.சி., அறிஞர் குணா, சாத்தூர் சேகரனார், வைரமுத்து, எஸ்.இ. ராமகிருட்டிணன், இரா.மதிவாணன், க.செல்வராசு. நெடுஞ் செழியன். உள்ளிட்ட பல இலக்கியவாதிகளின் படைப்புகள் அனைத்தும் அரசுடமையாக்கப்படும்.

> “நம் முன்னோர்களுடைய அறம், நெறி, வாழ்க்கைமுறையை, அடுத்தத் தலைமுறையினருக்குத் தெரியப்படுத்த தமிழர் மெய்யியல் தலைநகரான கன்னியாக்குமரியில் மிகப்பெரிய நினைவிடம் எழுப்பப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


கங்கை கொண்ட சோழபுரம்


நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்


ஐயா வீரப்பனார்


அப்துல் ரவுப்


முத்துக்குமார்


செங்கொடி


புலவர் கலியபெருமாள்


பொன்பரப்பித் தமிழரசன்

கலை, இலக்கியப் பண்பாட்டு மீட்சி

## மறை ஓதும் பள்ளிகள்

- மலையடிவாரங்களில் தமிழர் மறை திருக்குறள் ஓதும் பள்ளிகள் உருவாக்கப்படும்

## மொழிப்போர் ஈகியர்

- மொழிப்போர், எல்லைப்போர் ஈகியர்களைப் போற்றும் வகையில் மாபெரும் நினைவகம் எழுப்பப்படும்.
- தமிழ்மொழி இன மீட்சிக்காகப் புரட்சிப் போராளிகளாகத் திகழ்ந்த ஐயா புலவர் கலியபெருமாள், தமிழரசன் உள்ளிட்ட இனநலப் போராளிகளுக்கு நினைவகம் கட்டப்படும்.

## நடிகர் திலகம்

- தமிழ்த் தேசிய இனத்தின் பெருமைமிகு கலை அடையாளமாக இருக்கின்ற நடிகர் திலகம் ஐயா சிவாஜி கணேசன் அவர்களுக்கு மதுரையில் மாபெரும் கலைக்கோயில் கட்டப்படும். இளம் வயது முதல் அவருடைய அரிய சாதனைகள், அனைத்தையும் வருங்காலப் பிள்ளைகள் அறிந்து கொள்ளும் வகையில் அங்கே நிறுவப்படும்.

## ஐயா வீரப்பனார்

- தமிழர்களின் வனக்காவலராக இருந்த ஐயா வீரப்பனாருக்கு, அவர் நினைவைப் போற்றும் வகையில் நினைவகம் கட்டப்படும்.

## ஈகைத்தமிழர்கள் நினைவகம்

- வருங்கால தலைமுறைப் பிள்ளைகள் ஈகத்தைப் போற்றும் வகையில் இன விடுதலைக்குத் தன்னுயிரை ஈகம் செய்த ஈகைத் தமிழன் அப்துல் ரவுப், வீரத் தமிழன் முத்துக்குமார் மற்றும் மூன்று அண்ணன்மார்களைத் தூக்குக் கயிற்றில் இருந்து காக்கத் தன்னுயிரை ஈகம் செய்த வீரத்தங்கை செங்கொடிக்குத் தனித்தனியே நினைவகம் அமைக்கப்படும்.

## ஐந்தாம் தமிழ்ச் சங்கம்

- நாம் தமிழர் அரசு மதுரையில் புதிதாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கும். இப் பல்கலைகழகம் அனைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகங்களுக்கும் ஒருங்கிணைப்புத் தலைமையிடமாக இருக்கும். கலைபண்பாடு, மொழி வளர்ச்சி, தமிழின வரலாற்று ஆய்வு, தொல்லியல் குறித்த அனைத்தும் மீட்டெடுக்கும் விதமாக ஆய்வு மேற் படிப்புகள் அனைத்தும் கற்கும் வகையில் செயல்படும்.

> “தமிழ்த் தேசிய இனத்தின் பெருமைமிகு கலை அடையாளமாக இருக்கின்ற நடிகர் திலகம் ஐயா சிவாஜி கணேசன் அவர்களுக்கு மதுரையில் மாபெரும் கலைக்கோயில் கட்டப்படும். இளம் வயது முதல் அவருடைய அரிய சாதனைகள், அனைத்தையும் வருங்காலப் பிள்ளைகள் அறிந்து கொள்ளும் வகையில் அங்கே நிறுவப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு - தமிழ்மறை (27)




# பழனி முருகன் கோவில் உள் விவகார நிர்வாகம் போகர் வழி வந்த புலிப்பாணி சித்தர்கள் வசம் ஒப்படைக்கப்படும்

Clarity Version download at www.makkalarasu.com

# தமிழர் மெய்யியல்

*இயற்கை எனது நண்பன்*
*வாழ்க்கை எனது தத்துவாசிரியன்*
*வரலாறு எனது வழிகாட்டி*

**- மேதகு வே.பிரபாகரன்**

## ஐம்பெரும் ஆற்றல்..

- சூரியப் பெருநெருப்பு வெடித்துச் சிதறிய துண்டுகளில் ஒன்றுதான் இந்தப் பூமி என்கிறது பூகோள அறிவியல். அப்படித் தோன்றிய பூமியின் உயிரியல் பரிணாமத்தின் இறுதிப் புள்ளியாக மனித இனம் இன்று நிற்கிறது. விண், மண், நீர், காற்று, நெருப்பு ஆகிய ஐம்பெரும் ஆற்றல் இல்லாமல் உலகில் எந்த உயிரினமும் தோன்ற முடியாது. அதனால்தான் ஆதித்தமிழினம் ஐம்பெரும் ஆற்றலான இயற்கையை (பஞ்சபூதங்களை) வழிபட்டு வந்திருக்கிறது. உலகத் தமிழினம், இயற்கையைப் போற்றும் உழவர் திருநாளான பொங்கலைத் தனது தேசியத் திருநாளாகக் கொண்டாடுகிறது.
- அறிவியல் நாகரீகமற்ற முதல் குடிமகன் தனது உயிரை இயற்கை, கொடிய விலங்குகள், நச்சுப்பாம்புகள், நோய் இவைகளிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ளப் போராடினான். காட்டுத்தீ, சூறைக்காற்று மழை, காட்டு வெள்ளம் என்று இயற்கைச் சீற்றங்களைக் கண்டு பயந்தான். அந்த அச்சத்தால் இயற்கையை வணங்கத் தொடங்கினான். மறுபுறம் இயற்கையை நம்பினான். இந்த நம்பிக்கையின் வடிகாலாய்த் தோன்றியதே தமிழர் வழிபாட்டு மெய்யியல்.

## இயற்கை வழிபாடு மூத்தோர் தெய்வங்கள்...

- ஆதித்தமிழ் இனமக்கள் தமக்காகவே போரிட்டுத் தம்மைக் காக்க இறந்துபோன மனிதர்களையும் தெய்வமாக வணங்கினார்கள். இப்படித்தான் இயற்கையையும், முன்னோர்களையும் வணங்கும் பழக்கம் ஆதித் தமிழர்களிடம் இருந்தது. சிந்துசமவெளி வழிபாட்டு முறைகள் அனைத்தும் பறைசாற்றுவது, முன்னோர்களைப் போற்றும் நடுகல் வழிபாட்டைத் தமிழர் மரபியல் என்பதைத்தான். சமீபத்தில் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள வடிவங்களில் இப்படியான தெய்வ வழிபாட்டுக் குறிப்புகள் இருப்பதாக தொல்லியியல் ஆய்வுகள் சொல்கிறது.
- மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையிலும், பழந்தமிழ் இலக்கிய வரலாற்று ஆவணங்களின் அடிப்படையிலும் தமிழர் அறம் சார்ந்த மெய்யியல் ஒழுகலாறு என்பது தொடக்கத்தில் இயற்கையாகவும் பிறகு அந்த இயற்கையின் பாதிப்பில் இருந்து மக்களைக் காப்பாற்றிய மனிதர்களைப் போற்றுவதிலும் இருந்து தமிழர் மெய்யியல் மரபு வழிபாடு வந்தது.

தமிழர் மெய்யியல்






Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


கன்னியாக்குமரி


குமரிக்கண்டம்


தைப்பூசத் திருவிழா


காந்தாரி அம்மன் கோயில்


பூசாரிகள்

## ஐந்திணைத் தெய்வ வழிபாடு...

- குறிஞ்சி நிலத்தின் இறையோனாகச் சேயோன்(முருகன்), முல்லை நிலத்தின் இறையோனாக மாயோன்(கண்ணன்) மருதம் நிலத்தின் இறையோனாக இந்திரன், நெய்தல் நிலத்தின் இறையோனாக வருணன், பாலை நிலத்தின் இறைவியாகக் கொற்றவை என ஐந்திணை நிலத்திற்கும் தனித்தனி இறையோனாக நாம் தமிழர் அரசு ஏற்று அறிவிக்கின்றது. முருகனுக்கு உகந்த நாளான தைப்பூசத் திருநாளை அரசுவிடுமுறையாக அறிவித்து “திருமுருகன் பெருவிழாவாகத்” தமிழகம் முழுமைக்கும் கொண்டாட அரசாணை பிறப்பிக்கும்.

## மெய்யியல் தலைநகரம்

- தமிழரின் தொன்ம வரலாறு என்பது கடலினுள்ளே மூழ்கிக் கிடக்கும் லெமூரியாக்கண்டத்தின்(குமரிக்கண்டம்) தொடக்கம் என்பதை அடுத்த தலைமுறைக்கு நினைவு கூற வேண்டும். ஆதித்தமிழனத்தின் கூறுகளாகப் பிரிந்த ஈழத் தமிழினத்தின் இனவிடுதலைக் களத்தில் களப்பலியான மாவீரத் தெய்வங்களின் நினைவைப்போற்றுவதையும் எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழர் தொன்மங்கள் மரபு சார்ந்த கலைகள், வரலாறுகள், வீரம், போர், வேளாண்முறை எல்லாம் எப்படி இருந்தது என்பதை அடுத்து தலைமுறையினருக்குக் கடத்த வேண்டும். உலகுக்கும் கூற வேண்டும். அதற்காகக் குமரிக்கண்டத்தின் நீட்சியாக விளங்கும் கன்னியாக்குமரியில் நாம் தமிழர் அரசு, ‘தமிழர் கோயில்’ கட்டமைக்கும். 1000 ஏக்கர் பரப்பளவில் தங்கும் விடுதி வசதிகளோடு கலையரங்கக் கூடங்களோடு சிறந்த சுற்றுலாத் தலமாக நிறுவப்படும்.

## அன்னை காந்தாரிக்குக் கோயில்

- கோவில்பட்டிக்கு மிக அருகில் உள்ள குறிஞ்சாக்குளம் கிராமத்தில் தமிழர் நிலத்தின் பெருமைக்குரிய மூதாதை காந்தாரி அம்மன் கோவில் இருக்கிறது. கடந்த 32 வருடங்களாக அந்த மண்ணின் பூர்வகுடி மக்கள் சென்று வணங்க விடாமல் நாயக்கர் காலத்தில் வந்து அமர்ந்த மக்கள் தடுத்து வருகிறார்கள். நாம் தமிழர் அரசு அந்த அவலத்தை நீக்கி, எந்தவித இனமோதலுக்கும் இடமளிக்காமல் பிரச்சனையைத் தீர்க்கும். அன்னை காந்தாரிக்கு அரசின் நேரடிப் பார்வையில் கோவில்கட்டித் தரப்படும்.

## தமிழர் அறநிலையத்துறை

- தமிழர் மரபு வழி வழிபாட்டுமுறையாக, நன்றி நவில்தல் தொடக்கி, நடுகல் முறை வழியாக முன்னோர்களையும் இயற்கையையும் மட்டுமே வணங்கிவந்துள்ளது. பழந்தமிழ் நூல்களிலோ, தமிழர் வரலாற்றுச் சுவடுகளிலோ "இந்து" என்ற சொல் இல்லை. எனவே இந்து என்ற சொல்லும், இந்து என்ற மதமும் தமிழருடையது அல்ல. தமிழகக் கோவில்களை நிர்வாகிக்கும் துறையின் பெயரான "இந்து சமய அறநிலையத்துறை" என்பதற்குப் பதிலாக "தமிழர் அறநிலையத்துறை" என்ற பெயர் மாற்றம் செய்யப்படும்..

## பூசாரிகளுக்கு(அர்ச்சகர்) அரசு வேலை

- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தை உடனே நிறைவேற்றும். அர்ச்சகர் தொழிலைத் தமிழர் அறநிலையத்துறையின் கீழ் இயங்கும் அரசு வேலையாக மாற்றுவோம். மற்றைய அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீட்டுமுறை பின்பற்றப்படுவதைப் போல் அர்ச்சகர் வேலையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

> “அன்னை காந்தாரிக்கு அரசின் நேரடிப் பார்வையில் கோயில்கட்டித் தரப்படும்”



Clarity Version download at www.makkalarasu.com


பழனி முருகன் கோவில்


கண்ணகி கோட்டம்

## தமிழ் வழிபாடு

- தமிழகக் கோயில்களில், உலகின் மூத்த மொழியான தமிழ்மொழியில் இறைவனைத் துதிக்க முடியவில்லை. கோவில்களில் "தமிழிலும் அர்ச்சனை செய்யலாம்" என்ற சொல்லை நீக்கிவிட்டு "இங்குச் சமற்கிருதத்திலும் அர்ச்சனை செய்யப்படும்" என்று எழுதப்படும். தமிழ் வழிபாடு கொண்டு வரப்படும்.

## கிராமக்கோயில் பூசாரிகளுக்கு ஊதியம்

- தமிழ் நாட்டின் மண்வரலாறு, பழந்தமிழ் வீரம் இவைகளோடு கூடிய கிராமக் கோவில்கள் அனைத்தும், சிறுகச் சிறுகத் தமிழ்ப் பூசாரிகளிடம் இருந்து வேதம் ஆகமம் என்ற பெயர்களில் சமற்கிருதத்தின் கைகளுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இந்த நிலையைத் தடுக்க வேண்டும். கிராமங்களில் இருக்கும் அனைத்துக் குல தெய்வ கோயில்களையும் நிர்வகிக்கும் உரிமை இதுவரை நிர்வகித்துவந்த கிராமப் பூசாரிகளுக்கே உரியது என்று நாம் தமிழர் அரசு அறிவிக்கும். கிராமப் பூசாரிகளுக்கான மாத ஊதியம், 'தமிழர் அறநிலையத்துறை' மூலமாகவே வழங்கப்படும். ஏற்கனவே பணிசெய்து வயதுமுதிர்ந்த கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படும்.

## கோயில் சீரமைப்பில் கட்டுப்பாடு

- கோவில் சீரமைப்பு என்ற பெயரில் தமிழரின் கட்டடக் கலைகள், கல்வெட்டு ஆவணங்கள், பழமை கூறும் வரலாற்று ஆவணங்கள் அனைத்தும் சிறுகச் சிறுக ஆளும் ஆரியதிராவிட அதிகார வர்க்கத்தினரால் அழிக்கப்பட்டு வருகிறது. எனவே கோயில் மற்றும் கல்வெட்டுச் சீரமைப்பிற்கு முன்னதாக அனைத்துப் பழைய புராதான சின்னங்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்படும். முறையான அனுமதியின்றி, தேவையின்றி மாற்றம் செய்யக்கூடாது என்ற நடைமுறை கொண்டுவரப்படும்.

## பழனிக் கோயில் உரிமை

- ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழனி முருகன் கோயில் உள்விவகார நிர்வாகத்தைப் போகர் வழி வந்த புலிப்பாணிச் சித்தர்கள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதற்கான வழக்கு திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் நடந்தது. அந்த வழக்கில், புலிப்பாணிச் சித்தர்களுக்கு அந்தப் பொறுப்புள்ளது எனத் தீர்ப்பை அளித்தது. 30 வருடப் போராட்டத்திற்குப் பிறகு பெற்ற தீர்ப்பை **நாம் தமிழர் அரசு** உடனே நிறைவேற்றும்.

## வழிபாட்டுக் கட்டண நீக்கம்

- தமிழகத்தின் அனைத்துக் கோயில்களிலும் தற்போதைய நிலையில் உள்ள பொருளாதார வருவாய்களை ஒருநிலைப்படுத்தி அவை தமிழர் அறநிலையத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும். தெய்வ வழிபாட்டிற்கான தரிசனத்திற்கான கட்டணங்கள் நீக்கப்படும். அனைவருக்கும் ஒரே மாதிரியான வழிபாட்டு முறையே நடைமுறைப் படுத்தப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com

> நாம் தமிழர் அரசு கண்ணகிக்குத் தனி கோட்டம் அமைத்துத் தமிழக வனப்பகுதி வழியாக உள்ள பாதையை அமைத்துத் தரும்

தமிழர் மெய்யியல்

## கண்ணகிக் கோயிலுக்குத் தனிப்பாதை

- அறம் காத்து மறம் வீழ்த்திய மானத்தமிழ்மறத்தி முப்பாத்தாள் கண்ணகியின் கோயில் இன்று கவனிப்பாரற்றுச் சிதிலமடைந்து கிடக்கிறது. அந்தக் கோயிலுக்கு தமிழகத்தின் வனப்பகுதியின் வழியாகச் செல்ல பாதை இருந்தும், தமிழக அரசு அந்தப் பாதையை உபயோகிக்க அனுமதிப்பதில்லை. கேரளா அரசின் எல்லைப்பகுதி வழியாகச் செல்லும் பாதையில் கேரளா வனச்சரகக் காவல்துறை மிகுந்த கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. நாம் தமிழர் அரசு கண்ணகிக்குத் தனி கோட்டம் அமைத்துத் தமிழக வனப்பகுதி வழியாக உள்ள பாதையை அமைத்துத் தரும். மேலும் பெரும்பாட்டி கண்ணகியின் நினைவைப் போற்றும் வகையில் ஒவ்வொரு வருடமும் சித்திரை முழுநிலவு நாளில் கண்ணகி கோவிலை நோக்கி பெரும் பயணம் மேற்கொள்வோருக்குப் பாதுகாப்பைத் தரும். அரசு விழாவாகவும் அறிவிக்கும்.

## உயர்ந்த குணங்களே கடவுள்

- கடவுள் என்பது பொய் சொல்லாது. ஏமாற்றாது. துன்பத்தில் காப்பாற்றும், நம்மைச் சாகவிடாமல் காப்பாற்றும், பசிக்குச் சோறு போடும், துன்பம் என்றால் தாங்கிப் பிடிக்கும். எப்படியும் வந்து உதவியாய் நிற்கும் என்ற உயர்ந்த குணங்களைத்தான் நம் மக்கள் கடவுளாக உருவப்படுத்திப் பார்க்கிறார்கள். இந்த நம்பிக்கையை அனைத்தும் ஆளுகின்ற அரசுகளால் செய்ய முடியும். இறை என்றால் அரசு. இறைவன் என்றால் அரசன் என்ற பொருளும் இருக்கிறது.

## உயர்ந்த மெய்யியல்

- தெய்வம் என்பது இங்கு எப்படிப் பார்க்கப்படுகிறது என்றால், ஒரு மனிதனை மிகச் சிறந்தவன், நல்லவன், மிகவும் நல்லவன் மிக மிக நல்லவன் என்பதற்கு மேலும் வார்த்தைகள் இல்லாததால், 'நீ தெய்வமப்பா'. என்பார்கள். இப்படித்தான் நம் மக்கள் தெய்வத்தை அடையாளப் படுத்தி வந்தார்கள். அதைத்தான் நமது தமிழ்மறை

***'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப்படும்.***"(குறள்50) என்றுகூறுகிறது.

இன்னும் சொல்வதென்றால்

***பிரபாகரன் இருந்தால் எங்கள் தலைவன்.***
***இறந்தால் எங்கள் இறைவன்.***

இது தான் எங்கள் மெய்யியல் கோட்பாடு.


பிரபாகரன் வழிபாடு என்பது,

***அவன் வழியே பாடுபடு,***
***அவன் வழியே பயணப்படு,***
***அவன் வழியே செயல்படு என்பதுதான்.***



Clarity Version download at www.makkalarasu.com

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் - தமிழ்மறை (972)









# ஆதித் தமிழர்களுக்கு ஆங்கிலேயர் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பஞ்சமி நிலங்கள் கண்டறியப்பட்டு வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்

Clarity Version download at www.makkalarasu.com

# தொல்தமிழர் மீட்சி

## ஆதித் தமிழர் விடுதலை இல்லாது
## மீதித் தமிழர் விடுதலை வெல்லாது

**- செந்தமிழன் சீமான்**

## பழந்தமிழர் தொல்தமிழர்

- 1956 இல் திராவிட எல்லையாகக் குறிப்பிடப்பட்ட ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்திலிருந்து மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் அங்கே வாழும் தாழ்த்தப்பட்டோர் சமூகம், ஆதித் கன்னடர், ஆதி ஆந்திரர், ஆதி மலையாளி என்று அரசாணை மூலம் அழைக்கப்படுவதைப் போன்று, தமிழகத்தில் பட்டப் பெயர்களால் சுட்டப் பெறுவது தடை செய்யப்படும். மாற்றாக பட்டியல் வகுப்பு சமூகங்களை ஒருங்கிணைத்து “ஆதித்தமிழர்” / “பழந்தமிழர்” என்று அழைத்திட சட்டம் இயற்றப்படும்.

## ஆதித் தமிழர்களா? திராவிடர்களா?

*ஆதி திராவிடன் என்பது வரலாற்றுப் பிழை.*

*அரிசன் என்பது காந்தியின் ஏமாற்று.*

*தாழ்த்தப்பட்டவன் என்பது தன்மானமின்மை.*

*தலித் என்பது தமிழின இழப்பு.*

*பழந்தமிழன் என்பதே சிறப்பும் பெருமையும்.*

*ஆதி ஆந்திரன், ஆதிக் கன்னடன், ஆதிக் கேரளன் என்று பிறர்தம்மைச் சுட்டும்பொழுது ஆதித்(பழந்) தமிழன் என்பதே சிறந்தது.*

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

## பொது வாழ்விடம், பொது இடுகாடு

- தனி இரட்டை வாழ்விடம்(ஊர்,சேரி) இரட்டை வழிபாட்டுத் தலங்கள், தனி இடுகாட்டு முறை அறவே நீக்கப்படும், பொது வாழ்விடம், பொது இடுகாடு உருவாக்கபடும்.

## நிதி ஒதுக்கீடு

- ஆதித் தமிழர் சமூகத்திற்கென ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு நிதியில் அம்மக்கள் தொகை விழுக்காட்டிற்கு இணையான இடஒதுக்கீடு செய்வதோடு மேற்படி நிதியை ஆதித்தமிழர் நலத்துறைத் திட்டங்கள் மூலம் செயலாக்கப்படும்





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## பஞ்சமி நிலங்கள்

- ஆங்கிலேயர் காலத்தில் இம்மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பஞ்சமி நிலங்கள் கண்டறியப்பட்டு வெள்ளை அறிக்கை வெளியிடப்படும். ஆதித்தமிழர் அல்லாதோரிடமிருக்கும் ஆக்கிரமிப்பு நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு, ஆதித்தமிழர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.
- போலிச்சான்றிதழ்கள் பெற்று அரசுப் பணிகளில் உள்ளோரைக் கண்டறிந்து பணிநீக்கம் செய்வதோடு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## சமூகநீதிப் போராளிகள்

- சாதி எதிர்ப்புப் போரில் அரசு வன்முறை ‘ சாதிவெறித் தாக்குதலில் பலியானோரை “சமூகநீதிப் போராளிகள்” என்று அறிவித்து அவர்தம் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடும், அரசுப் பணியும், வாரிசுகளுக்கு உதவித்தொகையும் வழங்கப்படும்.

## வனவள உரிமைச் சட்டம் 2008

- வனவள உரிமைச்சட்டம்2008 முழுமையாக நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மலைவாழ் தமிழர்களுக்குச் சொந்தமாக ஐந்து ஏக்கர் வேளாண் நிலத்தை அப்பகுதியிலேயே ஒதுக்கித் தரவேண்டும் என்ற ஆணையை நாம் தமிழர் அரசு நிறைவேற்றும்.

## அயோத்திதாசர் நிதியம்


- ஆதித்தமிழர்/பழங்குடிகள் மேம்பாட்டுக்கென இயங்கும் தாட்கோவிற்கு மாற்றாக அயோத்திதாசர் பெயரில் நிதியம் உருவாக்கப்படும்.
- அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 35 விழுக்காடு நடைமுறையாக்கப்படும் அதில் 50 விழுக்காடு ஆதித்தமிழர் 50 விழுக்காடு ஆதிப் பழங்குடியினருக்கு வழங்கப்படும்.

## இருவர் பெயரிலும் பட்டா

- அரசினால் வழங்கப்படும் திட்டங்கள் நிலங்கள் மனைப்பட்டாக்கள் ஆண் பெண் இருவர் பெயரில் கூட்டாக வழங்கப்படும்.
- அரசு கட்டித்தரும் வீடுகள் தரமானதாக வழங்கப்படும்.
- படித்து தத்தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு ஐம்பது விழுக்காடு மானியத்துடன் உதவித்தொகை வழங்கப்படும் .



“ஆதித்தமிழர் / பழங்குடிகள் மேம்பாட்டுக்கென இயங்கும் தாட்கோவிற்கு மாற்றாக அயோத்திதாசர் பெயரில் நிதியம் உருவாக்கப்படும்”



> ஆதி திராவிடன் என்பது வரலாற்றுப் பிழை.
> அரிசன் என்பது காந்தியின் ஏமாற்று.
> தாழ்த்தப்பட்டவன் என்பது தன்மானமின்மை.
> தலித் என்பது தமிழின இழப்பு

## இடஒதுக்கீட்டு முறைப்படி

- கிராமப் பொது வளங்களான ஏரி மீன் ஏலமிடல், மர மகசூல் மற்றும் அரசு ஒப்பந்தப்பணிகளில் சமபங்கு வழங்கப்படும்.
- மாநகராட்சி,நகராட்சி,மாவட்ட வட்டத் தலைநகரங்கள்,பேரூராட்சி, ஊராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் வணிக வளாகங்களில் வருவாய் தரும் கட்டடங்களில் ஆதித்தமிழர், பழந்தமிழர் குடிமக்களுக்கு உரிய இடஒதுக்கீடு முறைப்படி உறுதியாக வழங்கப்படும்.

## தீண்டாமை ஒழிப்பு

- தீண்டாமைக் குட்பட்ட மக்களுக்குத் தற்போது இருந்து வரும் தனித் தொழில்கள், தனிக் கிணறு,தனி வாழுமிடம்,தனிப் பாதை போன்ற இழி முறைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படும்.
- பறையடித்தல்,செத்தமாடு சுமத்தல்,பிணம் சுடுதல்,செருப்புத் தைத்துக் கொடுக்க வற்புறுத்தல் போன்ற தீண்டாமைத் தொழில்கள் முற்றிலும் நீக்கப்படும்.

## பொது விடுதி

- பட்டியல் வகுப்பிற்கு தனி மாணவர் விடுதி, பிற்படுத்தப் பட்டோருக்குத் தனி மாணவர் விடுதி எனப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் அமைப்பு மாற்றப்பட்டு அனைவரும் ஒரே விடுதியில் தங்கிப் படிக்க ஆவணம் செய்யப்படும்.

## பழங்குடிகள் முன்னேற்றம்

- பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடிகள் முன்னேற்றத்திற்கு எனத் தனி அதிகாரம் படைத்த பட்டியல் வகுப்பு நலக்குழு நிலையாக அமைக்கப்படும்.
- பட்டியல் வகுப்பார் என்ற ஆதித்தமிழர்பழந்தமிழ்க் குடி மக்கள் எவ்வகையான பாகுபாடுமின்றி மீதித் தமிழர்களுக்குச் சமமாக உரிமையுடன் வாழ நாம் தமிழர் அரசு சிறப்புச் சட்டம் இயற்றும்.

நாம் தமிழர் கட்சி



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# தமிழின ஒருங்கிணைப்பு முன்னேற்றம்

ஆதியில் தமிழர்க்குச் சாதி இல்லை. பாதியில் வந்த கொடுமைதான் சாதியப் பாகுபாடுகளும் சமயச் சச்சரவுகளும்



## சாதி மோதல்கள் இருந்ததில்லை

- நமது முன்னோர்களான சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் காலத்தில் அரசியல் மோதல்களும் அதற்கான போர்களும் நடைபெற்றுள்ளதாகத் தான் வரலாற்றில் படிக்கிறோம், சாதி மோதல்கள் நடைபெற்றதாக எங்கும் காணப்படவில்லை. திராவிடர்களின் ஆட்சிக்குப் பிறகே சாதி மோதல்களும், கலவரங்களும் வளரத் தொடங்கியது.

## கீழ்வெண்மணிப் படுகொலை

- சமூகநீதிபேசி ஆட்சியைப் பிடித்த திராவிடக் கட்சிகளின் ஆட்சியில்தான் அதிக சாதி மோதல்கள் வளர்த்தெடுக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டம் கீழ்வெண்மணியில் ஆதித்தமிழ்க்குடி மக்கள் அறுவடைக் கூலி உயர்வு கேட்ட ஒரு காரணத்திற்காகவே 44 பேரை ஒரே குடிசைக்குள் போட்டு உயிருடன் எரித்துக் கொன்றார் கோபால் நாயுடு. இக்கொடுமை 1968 இல் அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் நடந்தது.

## மாஞ்சோலை – அரசியல்

- 1966 வாக்கில் கோவை மாவட்டம் வால்பாறையில் கூலி உயர்வு கேட்டுப் போராடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது காவலர்படை சுட்டதால் ஒருவர் பலியானார். அதை

***“கூலி உயர்வு கேட்ட அத்தான்***

***குண்டடிபட்டுச் செத்தான்”***

என 1967 இல் சுவரொட்டி ஒட்டிய தி.மு.க, தனது ஆட்சிக் காலத்தில் 1999 இல் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஊர்வலம் போனபோது 17 தமிழர்களைத் தாமிரபரணி ஆற்றில் தள்ளி அடித்துக் கொன்றது.  இப்படித் தொடர்ந்து பல சாதி மோதல்களை வளர்த்தது.

> தி.மு.க தனது ஆட்சிக் காலத்தில் 1999 இல் மாஞ் சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஊர்வலம் போனபோது 17 தமிழர்களைத் தாமிரபரணி ஆற்றில் தள்ளி அடித்துக் கொன்றது

## இடஒதுக்கீட்டில் மோசடி

- தமிழகத்தின் வகுப்புரிமை பெறும் சமூகங்களாகவும், பட்டியல் (எஸ்.சி, எஸ்.டி) 76+36=112 சமூகங்களாகவும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (எம்.பி.சி) 109 சமூகங்களாகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சமூகங்களாகவும் கிட்டத்தட்ட 200 சமூகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.
- இதில் தமிழ்ச் சமூகங்களின் எண்ணிக்கை மொத்தத்தில் 100 எண்ணிக்கை கூடத் தேறாது. அதே வேளை 69 விழுக்காடு இடஒதுக்கீட்டு வேலைவாய்ப்பில் 50 விழுக்காடு இடங்களைப் பிற மொழியாளர்களே கைப்பற்றிக் கொள்கிறார்கள். தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டவர்கள் மிகக் குறைவான வேலைவாய்ப்பையே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## மாற்றி அமைக்கப்படும்

- ஆனால் தமிழ்ச்சாதி மக்களில் எந்த ஒரு பிரிவினருக்கும் கேரளா, கர்நாடக, ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் கல்வியிலோ, வேலை வாய்ப்பிலோ இட ஒதுக்கீடு கொடுக்கப்படுவதில்லை.
- இந்நிலை குறித்து 1971 இல் அமைக்கப்பட்ட சட்டநாதன் குழு அறிக்கையின் படி ஆய்வுக்குட்படுத்தி எந்தத் தமிழ்ச் சமூகமும் இழப்புகளுக்கு உள்ளாகாத வகையிலும், அவரவர் அனுபவித்து வரும் இட ஒதுக்கீட்டு உரிமை எவ்வகையிலும் இழப்புகளுக்கு உள்ளாகாத வகையிலும் தமிழ்த் தேசிய இன ஒற்றுமை நலனை முன்னிறுத்தி அனைத்து நிலைகளையும் **நாம் தமிழர் அரசு** சரியான முறையில் செயல்படும்.

## புதிய கட்டமைப்பு

- சாதி ஒழிப்பு, சமத்துவம், சம உரிமை, தன்மான உணர்வு என்ற நோக்கில் புதிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தமிழினம் கட்டியமைக்கப்படும்.

## பணி நீக்கம் செய்யப்படுவார்கள்

- சாதி, சமயச் சிந்தனையோடு செயல்படும் அரசு அலுவலர்கள், உயரதிகாரிகள் அவர்கள் எத்துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எந்தவிதச் சலுகையுமின்றி பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

## வழிபாட்டுத் தளங்களில் சம உரிமை

- தமிழரில் எல்லாரும் பிறப்பால் சமம் என்ற அடிப்படையில் **நாம் தமிழர் அரசு** புதிய சட்டடங்களை இயற்றும், பழைய சட்டங்களைக் களையும். வழிப்பாட்டு உரிமை என்ற வகையில் தமிழ் மக்கள் அனைவரும் சமத்துவத்துடன் அனைத்து வழிப்பாட்டுத் தலங்களிலும் சென்று வழிபடும் உரிமையை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.
- சாதித் தவிர்ப்பு, தமிழின ஒற்றுமைக்குத் தமிழர் மரபு பண்பாட்டுத் துறை எனத் தனித்துறை ஒன்றை ஏற்படுத்தி **நாம் தமிழர் அரசு** செயல்படுத்தும்.

தமிழின ஒருங்கிணைப்பு முன்னேற்றம்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

# நெகிழி, குழைமத்திற்கு நிரந்தரத் தடை

இந்த நாடு குப்பைமேடு ஆவதற்கும்,மண்ணின் வளம் கெடுவதற்கும் நெகிழி(பாலித்தின்), குழைமம்( ப்ளாஸ்டிக்) ஓர் முக்கிய பங்காற்றுகிறது. நெகிழி குழைமப் பொருட்களைப் பயன்படுத்துவதில் அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் முதல் மூன்று இடத்தில் இருக்கின்றது. இதில் அமெரிக்காவும், சீனாவும் விழிப்புணர்வோடு நெகிழிப் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கத் தொடங்கிவிட்டது. ஆனால் இந்தியா அதில் விழிப்புணர்வைப் பெறவில்லை. அந்த வகையில் தமிழக ஆட்சியாளர்களும் அக்கறையற்று இருக்கிறார்கள், **நாம் தமிழர் அரசு** இந்த நிலையை மாற்றும்.










## இயற்கைச் சுழற்சி இல்லை

- உணவகத்தில் வாழை இலையைச் சாப்பிடுவதற்குப் பயன்படுத்திவிட்டு பின் கீழே போடும் போது, அது மாடுகளுக்கு உணவாகவும், மண்ணோடு மண்ணாகி மக்கி உரமாகவும் மாறிவிடுகிறது. அப்படித்தான் இங்கிருந்த ஒவ்வொரு பொருட்களும் மறு சுழற்சி முறையில் பயன்பட்டு வருகிறது. ஆனால் நெகிழி(பாலித்தின்) குழைமம் (பிளாஸ்டிக்) பயன்பாட்டிற்கு வந்தபிறகு அந்த முறைகள் மாற்றப்பட்டு விட்டது. அந்த பொருட்களை கீழே போட்டு விட்டால், அது மக்கி மண்ணோடு மண்ணாகப் போக 5 இலட்சம் ஆண்டுகள் ஆகும் என்று ஆய்வில் சொல்கிறார்கள்.



> ஆடு, மாடு போன்ற கால்நடைகள் புற்களை, தழைகளை மேயும்போது நெகிழிப் பொருட்களும் வயிற்றுக்குள் சென்று உயிராபத்தை ஏற்படுத்துகிறது

## பாதிப்புகள்

- ஆற்றுநீர் பகுதிகள், நீரோடைகள். கழிவுநீர்க் கால்வாய்கள் உள்ளிட்ட பகுதிகளில் எல்லாம் நெகிழிக் கழிவுகள் அடைப்பை ஏற்படுத்துகிறது. ஆடு, மாடு போன்ற கால்நடைகள் புற்களை, தழைகளை மேயும்போது நெகிழிப் பொருட்களும் வயிற்றுக்குள் சென்று உயிராபத்தை ஏற்படுத்துகிறது. கடலில் கலக்கும் நெகிழிக் கழிவுகளால் மீன்வளங்கள் பாதிக்கின்றது, இதனால் மனித குலத்திற்கு எதிரான நெகிழிப் பொருட்களுக்குத் தமிழகத்தில் நிரந்தரத் தடை விதிக்கப்படும்.

## மக்களுக்கு விழிப்புணர்வு

- குப்பையைக் கூட சரியாகக் கொட்டத் தெரியாத நாடு குப்பை மேடாகத்தான் போகும். அதனால் மக்கும் மக்காத குப்பைகளை எப்படித் தரம் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்ற பயிற்சி கொடுக்கப்படும். குப்பையைக் குப்பைக் கூடைகளில் கொட்டாதவர்களைத் தெருக்களில் உள்ள கண்காணிப்புக் கருவிகள் காட்டிக்கொடுத்துவிடும். மூன்று தவறுகள் பொறுத்துக் கொள்ளப்படும், அவர்கள் எச்சரிக்கப்படுவார்கள், அதற்கு மேலும் பொறுப்பற்றுக் குப்பையை ஆங்காங்கே வீசுபவர்கள் மீது நடிவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கான அடிப்படை உரிமை,அரசின் சலுகைகள் நிறுத்தப்படும்.

## மாற்றுப் பொருட்களை வழங்கும்

- நெகிழிப் பொருட்களால் தயாரிக்கப்படும் அனைத்துப் பொருட்களையும் நாம் தமிழர் அரசு தடை செய்யும், அதே நேரத்தில் அதற்குப் பதிலாக இலை, சணல், காகிதப் பை, கண்ணாடி போன்றவற்றால் ஆன பொருட்களைப் பயன்படுத்த வழி செய்யும். கேரள மாநிலத்தில் மக்கக்கூடிய காகிதப் பைகளில்தான் பாலை அடைத்து விற்கிறார்கள். அது போன்று தமிழகத்திலும் கொண்டு வரப்படும். உலக நாடுகள் பலவும் நெகிழிப் பொருட்களுக்குப் பதிலாக இயற்கை வழியில் தயாரிக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டார்கள். அந்த வழியை **நாம் தமிழர் அரசு** செயல்படுத்தும்.



Clarity Version download at www.makkalarasu.com

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு - தமிழ்மறை (1025)



# வெளிநாடு வாழ் தமிழர்களின் வருவாயை ஈட்டிக்கொள்ளும் அரசு அவர்களுக்கான நெருக்கடிக் கால உதவிகள் பற்றி அக்கறை கொள்வதில்லை. நாம் தமிழர் அரசு அதற்கென்று தனிப் பிரிவை உருவாக்கும்



Clarity Version download at www.makkalarasu.com

# அயலகத் தமிழர்களுக்கான அமைச்சகம்

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற முதுமொழிக்கேற்ப உலகின் எல்லா நாடுகளுக்கும் சென்று பொருளீட்டி வருபவர்கள் தமிழர்கள். அவகளின் மீதான பெரும் அக்கறையோடு **நாம் தமிழர் அரசு** பல திட்டங்களை முன் வைக்கிறது

## அயலகத் தமிழர் நலம்

- பெரும்பாலான தமிழர்கள் அரபுமற்றும் கிழக்கு ஆசியநாடுகளில் தினக் கூலிகளாகக் கடுமையான பணிகளைச் செய்து வருகின்றனர். அவர்களின் சட்ட உரிமை மறுக்கப்படுவது மட்டுமல்லாமல், அடிப்படை மனித உரிமைகள்கூட வெளிநாட்டு அரசுகளால் மறுக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் வேடிக்கை பார்த்தபடி இருக்கிறது.
- 64வது தேசிய மாதிரிப் புள்ளி விவரத்தின்படி 2009லிருந்து 2015 வரை ஏறத்தாழ 61843 கோடி ரூபாய் இந்திய அரசுக்குத் தமிழகத் தொழிலாளர்கள் வருமானத்தை ஈட்டிக் கொடுத்துள்ளனர். ஆனால் அந்தத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் இந்திய, தமிழக அரசுகள் எந்த முயற்சியையும் எடுப்பதில்லை.
- நாம் தமிழர் ஆட்சியில் 1983 குடிபெயர்வுச் சட்டம்(விதிகள் வரையறைகள்) மத்தியச் சட்டத்தை மாற்றி அமைக்க ஆவன செய்வதுடன் தமிழர் நலம் சார்ந்து வெளிநாடு வாழ் தமிழர்களுக்கெனத் தனிச்சட்டம் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## தனி அமைச்சகம்

- MOTA (Ministry of Overseas Tamil Affairs) என்ற பெயரில் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு என நாம் தமிழர் அரசு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தும்.
- தமிழ்நாடு குடிப்பெயர்வுக் கணக்கெடுப்பு 2013இன் படி பெரும்பாலும் கூலித் தொழிலாளியாக உள்ள இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, பெரம்பலூர் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலானோர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். அவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

> **“கடந்த 5 ஆண்டில் சுமார் 61843 கோடி ரூபாய் இந்திய அரசுக்குத் தமிழக தொழிலாளர்கள் வருமானத்தை ஈட்டிக் கொடுத்துள்ளனர்”**

அயலகத் தமிழர்களுக்கான அமைச்சகம்



Clarity Version download at www.makkalarasu.com



## கணக்கெடுப்பு எடுக்கப்படும்

- தமிழகத்திற்குப் பல ஆயிரம் கோடிகளை வருவாயாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் வெளிநாடு வாழ் தமிழர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் எதையும் இதுவரையிலான அரசுகள் வைத்துக் கொள்ளாமல் இருப்பது வேதனையான ஒன்று. நாம் தமிழர் அரசு மாவட்டம் தோறும், மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பில் தனிப் பிரிவை ஏற்படுத்தும். இந்தத் தனிப்பிரிவு அந்த மாவட்டத்தில் இருந்து வெளிநாடு சென்று வேலைபார்ப்போரின் விவரங்களைத் திரட்டி, அவர்களின் தொடர்பு எண், வேலை செய்யும் வெளிநாடு, அவர்களுக்குள்ள சிக்கல் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் பதிவு செய்து பராமரித்து வைத்திருக்க வேண்டும்.
- மாதம் ஒரு முறை அவர்களை மாவட்ட நிர்வாகம் தொடர்பு கொண்டு அவர்களின் நிலையை விசாரித்துப் பதிவு செய்ய வேண்டும். மாவட்டம் முழுவதும் திரட்டப்படும் தகவல்களை மாநிலத் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மாநிலத் தலைமை, மத்திய அரசின் வெளியுறவுத்துறையைத் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

## நெருக்கடிக்கால அழைப்பு நடுவம்

- வெளிநாடு வாழ் தமிழர்களின் வருவாயை ஈட்டிக்கொள்ளும் அரசு அவர்களுக்கான அவசரகால உதவிகள் பற்றி அக்கறை கொள்வதில்லை. நமது அரசு அதற்கென்று தனிப் பிரிவை உருவாக்கும். 24 மணி நேரமும் இயங்கும் அந்த அவசர மையம், உலகின் எந்த மூலையில் இருந்தும் தொடர்பு கொள்ளும் தமிழர்களின் அவசரக் குரலுக்கு வேண்டிய நடவடிக்கையை உடனே எடுக்கும். மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று துரித நடவடிக்கையை எடுக்கச் செய்யும்.

## தனி வாரியம்

- வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனைக் காக்கவென்று தனி வாரியம் அமைக்கப்படும். அதில் அனைத்து நாடுகளிலும் வாழும் தமிழர்கள் உறுப்பினராகப் பதிவு செய்யப்படுவர். அவர்களுக்கான அடையாள அட்டை வழங்கப்படும். வாரியம் இவர்களுக்குத் தொழில் தொடங்க, வீடுகட்ட வட்டியில்லாக் கடன் வழங்கும். தவிர, திருமணம், மருத்துவ உதவி போன்ற உதவிகள் கிடைத்திட நடவடிக்கை எடுக்கும்.



Clarity Version download at www.makkalarasu.com

> தமிழகத்திற்குப் பல ஆயிரம் கோடிகளை வருவாயாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் வெளிநாடு வாழ் தமிழர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் எதையும் இதுவரையான அரசுகள் வைத்துக் கொள்ளாமல் இருப்பது வேதனை

## தொழில் முனைவோர் அமைப்பு

- வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தமிழகத்தில் ஒரு தொழிலைத் தொடங்கலாம். கூட்டுப்பண்ணை முறையில், எந்த மாவட்டத்தில் என்ன தொழில் சாத்தியமோ அந்தத் தொழிலில்பல தமிழர்கள் கூட்டாகச் சேர்ந்து முதலீடு செய்யலாம். அதன் மூலம் தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தொழில் வளமும் பெருகும். அவர்களின் சிறு முதலீடும் வளர்ந்தபடி இருக்கும்.

## முறையற்ற முகமைகளுக்குத் தடை (Private Agency)

- தமிழ்நாட்டில் இயங்குகிற முறையற்ற ஏஜென்சிகளால் தான் பெரும்பான்மையான இளைஞர்கள் ஏமாற்றப் படுகிறார்கள். பல இலட்சங்களை இழந்து, வெளிநாட்டிலும் சரியான வேலையின்றித் தவித்து வருகிறார்கள். இப்படியான மோசடிகள் அனைத்தும் தடுக்கப்படும். அதனால் இதற்கென்று அரசே முகமையை உருவாக்கும். எந்த நாட்டில் என்ன வேலைவாய்ப்பிருக்கிறது என்பதை அறிந்து முறையான கட்டணத்தோடு ஆட்களை அனுப்பி வைக்கும். இதில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட முகமையாளர்களும் இணைந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படும்.
- இதை மீறி இளைஞர்களை ஏமாற்றி வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கும் முகமையாளர்கள் மனிதக் கடத்தல் வழக்கில் கைதுசெய்யப் படுவார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## துணைத்தூதரகம்

- இராமநாதபுரம் மாவட்டத்தைத் தலைமையாகக் கொண்டு அரேபிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் சிறப்புத் துணைத் தூதரகத்தை மத்திய அரசு உதவியோடு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழர்கள் பெரும்பாலும் வாழுகிற வெளிநாடுகளில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் குடிப்பெயர்வு குறித்த சந்தேகங்களைச் சட்டத் திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கென்றும், புகார் மற்றும் உதவிக்கென்றும் தனிஅமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும்.

## வைப்பகம்

- வெளிநாடுகளில் வாழுகின்ற தொழிலாளர்கள் தங்களின் ஊதியத்தைத் தனியார் ஏஜென்சி மூலமாக அனுப்பி ஏமாறாமல் இருப்பதற்குச் சட்டத்திற்குட்பட்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கெனத் தனிவைப்பகம் ஏற்படுத்தப்படும். அந்த வைப்பகம் பணப் பரிமாற்றத்தை மட்டும் செய்யாமல், அவர்களுக்குக் கடன் உதவி, சேமிப்பு எனப் பிற வைப்பகங்கள் செய்கின்ற சேவைகளையும் செய்து கொடுக்கும்.





Clarity Version download at www.makkalarasu.com

> இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழுகிற தமிழர் நலம் காப்பதற்குத் தனி வாரியம் ஏற்படுத்தப்படும்

## வாக்குரிமை

- இந்திய உச்ச நீதிமன்றம் கூறியதுபோல், வெளிநாடுகளில் வாழுகிற தமிழர்களுக்கும் வாக்களிக்ககூடிய உரிமையும் வசதியும் ஏற்படுத்தித்தர நாம் தமிழர் அரசு மத்திய அரசுக்குத் தொடர் அழுத்தம் கொடுத்து, வாக்குரிமையைப் பெற்றுத்தரும். அப்போதுதான் வெளிநாடுகளில் இருக்கும் நம் உறவுகளைப் பற்றி மத்திய அரசும் அக்கறை எடுத்துக்கொள்ளும்..

## வெளிநாட்டில் வேலை செய்யும் மீனவர் நலன்

- பன்னாட்டுக் கடற்கரையில் 'ஒப்பந்த அடிப்படையில்' மீன்பிடிக்கச் செல்லும் மீனவத் தொழிலாளர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்படும். எத்தனை தொழிலாளர்கள், எந்தெந்த நாட்டில் வேலை செய்கிறார்கள் அவர்களுக்கான சிக்கல் ஏதும் உள்ளதா என அனைத்தும் கண்காணிப்பிலேயே வைக்கப்படும். அவர்களுக்கான உரிமைகள் அங்கே மறுக்கப்பட்டால் உடனடியாகப் பன்னாட்டு மனிதஉரிமை அமைப்புகளோடு தொடர்புகொண்டு தீர்த்து வைக்கப்படும். இதற்கென்று தனியாக ஒரு சட்ட உதவிமையம் அமைக்கப்படும்.

## முறையற்ற காவல்

- முறையற்ற நிறுவனங்களால் கூலி வேலைக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், எந்தவித அடிப்படை உரிமையும் இல்லாமல், அந்நாடுகளின் சிறைகளிலும், அடைப்புக் காவலிலும் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றனர். அவர்கள் பற்றிய தகவல்களை முழுதுமாகப் பெற்றுப் பன்னாட்டு நீதிமன்றம் மூலமாக அவர்களை மீட்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களின் விடுதலைக்காகத் தனிச்சட்டக் குழுமம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.
- வெளிநாடுகளில் சட்டவிரோதமாக இயங்கி வருகின்ற (Man Power Agency) முகமைகள் (ஏஜென்ஸிகள்) கணக்கெடுக்கப்பட்டு உரிய அரசுகளிடம் தகவலைச் சொல்லி மேற்கண்ட முகமைகளைத் தடை செய்வதற்குச் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்படுவது தடுக்கப்படும்.

## வெளி மாநிலத் தமிழர் நலம்

- வெளிநாடுகளைத் தவிர்த்து இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழுகிற தமிழர் நலம் காப்பதற்குத் தனி வாரியம் ஏற்படுத்தப்படும். அந்தந்த மாநிலங்களில் தமிழ் வழிக் கல்வி படிப்பதற்கும், தொழில் நடத்தவும் உதவிகளை வழங்கும். தவிர சட்டஉதவிகள் வேண்டும் என்றாலும் வழங்கப்படும். அவர்களின் கலை பண்பாடு,கல்வி, பொருளாதார வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து வகை உதவிகளையும் நாம் தமிழர் அரசு செய்யும்.

## வெளி மாநிலத்தவர் குடிபெயர்வு

- பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை செய்வதற்காக வேண்டி, பிற மாநிலங்களில் இருந்து பல்லாயிரம் இளைஞர்கள் தமிழகம் வந்திருக்கிறார்கள். இவர்களைப் பற்றிய சரியான பதிவுகள் ஏதும் இல்லை. குற்றச் செயல்களில் ஈடுபடும் சில வெளி மாநிலத்தவரால் மற்றவர்களும் பாதிக்கப் படுகிறார்கள். எனவே வெளி மாநிலத்தவர் பற்றிய முறையான கணக்கெடுப்பு நடத்தப்படும். முறையான பதிவு மேற்கொள்ளப்படும். 15 ஆண்டுகள் தமிழகத்தில் வாழும் பிற மாநிலத்தவர்களுக்கு மட்டுமே முறையான குடும்ப அட்டையும், வாக்காளர் உரிமையும் அளிக்கப்படும். அதன் பிறகுதான் அவர்கள் தமிழகத்திற்குள் சொத்துவாங்கும் உரிமை பெற்றவர்களாக அனுமதிக்கப்படுவார்கள்.



Clarity Version download at www.makkalarasu.com



Clarity Version download at www.makkalarasu.com


# எதையும் அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து உணர்வுப் பூர்வமாகச் செயலாற்று! எதையும் ஜனநாயகமாக முடிவெடுத்து சர்வாதிகாரமாகச் செயலாற்று!

– செந்தமிழன் சீமான்

Clarity Version download at www.makkalarasu.com



கரிகாலச்சோழனின்
கல்லணை



தீரன்
சின்னமலை



இராசேந்திர சோழன்



மாவீரன்
அழகுமுத்துக்கோன்



பண்டாரவன்னியன்



மருதுபாண்டி
சகோதரர்கள்

# தமிழர் இன வரலாறு

- **வரலாற்றில் தெளிவு பெறாத எந்த இனமும் எழுச்சி பெறமுடியாது**
  **- லெனின்**
- **வரலாற்றைப் படிக்காதவன் வரலாற்றைப் படைக்க முடியாது**
  **- அண்ணல் அம்பேத்கர்**
- **வரலாறு என்பது கடந்த காலச் செய்திகளைச் சேமித்து வைக்கும் ஏடல்ல**
- **அது நிகழ்காலத்திற்கான அடித்தளமும் எதிர்காலத்திற்கான உயிர்த்தொடர்பும்**
  **- ஹிட்லர்**
- **வரலாற்றைப் படி வரலாற்றைப் படை வரலாறாகவே வாழ்!**
  **- தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்**
- **வரலாற்றைக் கையில் எடுத்த எல்லா இனங்களும் பாதுகாப்பாக வாழ்கின்றன.**

## எம்மின வரலாறு

- வரலாற்றில் வாழ்ந்ததையும் வீழ்ந்ததையும் நாங்கள் வாசித்து நேசித்துத் தெரிந்து கொள்ளாமல் எழமுடியாது.
- வரலாறு இல்லாதவனுக்கு நிகழ்காலம் இல்லை!
- நிகழ்காலம் இல்லாதவனுக்கு எதிர்காலம் இல்லை!
- எம் இனவரலாற்றை எங்கள் பிள்ளைகள் தெரிந்துகொள்ள வேண்டும்.
- ஐம்பதாயிரம் ஆண்டுக்கு மூத்த நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் தேசிய இனம், திராவிடர் ஆட்சிகளால் ஐம்பது ஆண்டுக்குள் குறுக்கப்பட்டுள்ளதை மீட்டெடுக்க வேண்டும்.

## பாடங்களில் முன்னோர்கள்

- அதிலிருந்து மீள்வதற்கு எமது இனவரலாறு, எமது முன்னோர்களுடைய வீரம் செறிந்த போராட்டங்கள், ஆட்சிமுறை, அவர்களுடைய ஒழுக்கம், அவர்களுடைய செயலாண்மைத் திறன் போன்றவற்றை அறிந்து தெரிந்து கொள்வதற்காக எமது பிள்ளைகளுக்குப் பாடமாக வைக்கப்படும்.
- அதன்படி கரிகாற்சோழன், அருண்மொழிச்சோழன், இராசேந்திரச் சோழன், எல்லாளன், பண்டாரவன்னியன், பூலித்தேவன், வேலுநாச்சியார், தீரன் சின்னமலை, மருதபாண்டியர், அழகுமுத்துக்கோன், சுந்திரலிங்கம் போன்ற எம் இனமுன்னோர்களின் வரலாறுகள் எம் பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்து பயிற்றுவிக்கப்படும்.

> **“வேரை இழந்த மரமும்,**
> **வரலாற்றை மறந்த இனமும் வாழாது”**


தமிழர் இன வரலாறு



Clarity Version download at www.makkalarasu.com

## மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
## எல்லாப் புகழும் தரும்

- தமிழ்மறை (457)




## எங்கள் மண்ணின் வளத்தையும்
## மக்களின் நலத்தையும்
## யார் கெடுத்தாலும் நாங்கள் தடுப்போம்

– செந்தமிழன் சீமான்

Clarity Version download at www.makkalarasu.com

# தமிழ்த் தேசிய இனம் எதிர் கொள்ளும் சிக்கல்களும் - தீர்வும்

நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட தமிழத் தேசிய இனத்தின் உரிமைகள் அனைத்தும் பறிக்கப் பட்டிருக்கிறது. நம் மாநிலத்திற்கு ஏற்பட்ட சிக்கல்களும் அதற்கான தீர்வையும் முன் வைக்கிறது.

## கச்சத்தீவு சிக்கல்

- தமிழகத்தின் சொத்தாக இராமநாதபுர மன்னரின் கட்டுப்பாட்டில் இருந்த தீவு அது. இதற்கான வரியைச் சென்னை இராஜதானிக்கு முறைப்படி கட்டிவந்திருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் இலங்கை அரசுக்கு சொந்தமாக இருந்ததே இல்லை என்று வரலாற்று ஆவணங்களும் இருக்கின்றது. இந்த நிலையில் 1974ஆம் ஆண்டு இந்திராகாந்தி முதன்மை அமைச்சராக இருந்தபோது இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்காவிற்கு ஒப்பந்தம் போட்டுத் தாரை வார்த்துக் கொடுத்தார். 1912ம் அங்கே அந்தோனியார் கோவில் கட்டப்பட்டதில் இருந்து தமிழகத்தின் பாதிரியார்கள் தான் கச்சத்தீவுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். இப்போது முழு அதிகாரமும் இலங்கை அரசிடமே இருக்கின்றது.

## தீர்வு

- கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட நாளில் இருந்து இன்று வரை சுமார் 560 தமிழக மீனவர்கள், சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். நாம் தமிழர் அரசு அதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்கும். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுத் தரும்.
- 1974ஆம் ஆண்டு போட்டுக்கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கச்சத்தீவிற்கு இந்தியர்கள் செல்லத் தடையில்லை. எந்த நேரத்திலும் யாரும் சென்று வரலாம். தீவில் மீன் வலைகளை உலர்த்திக் கொள்ளலாம். சோழன் குடாக்கடல் (பாக் சலசந்தி) இரு நாட்டு மீனவர்களும் மீன் பிடிக்கலாம் என்ற ஒப்பந்தம் இருந்தது. பிறகு 1976ஆம் ஆண்டு போட்டுக்கொண்ட மறு ஒப்பந்தத்தில் மன்னார் வளைகுடாப் பகுதியல் மீன்பிடிக்கக் கட்டுப்பாடு என மாற்றியிருந்தார்கள். ஆனாலும், கச்சத்தீவிற்குப் பழையபடி சென்றுவரத் தடை இல்லை.
- 1983.ம் ஆண்டு, இந்தியாதான் எல்லை தாண்டிச் செல்வது தமிழக மீனவர்களுக்குப் பாதிப்பு என்று கூறி ஒரு ஆணையை வெளியிட்டது. அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக் கொண்டாலே 1974ஆம் ஆண்டு போட்டுக்கொண்ட ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துவிடும். எனவே இந்திய அரசு 83ம் ஆண்டு போட்டுக்கொண்ட ஒப்பந்தத்தைத் திரும்பப் பெற வேண்டும்.

தமிழ்த் தேசிய இனம் எதிர் கொள்ளும் சிக்கல்களும் தீர்வும்



Clarity Version download at www.makkalarasu.com


- வியன்னா ஒப்பந்தப்படி இரு நாடுகள் சேர்ந்து போட்டுக்கொண்ட ஒப்பந்தப்படி இரண்டில் ஒரு நாடு அதைக் கடைபிடிக்கத் தவறினால், மற்றொரு நாடு அந்த ஒப்பந்தத்தைத் தாராளமாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற விதிமுறைப்படி கச்சத்தீவில் விதிமுறைகளை மீறித் தமிழர்களை அனுமதிக்காததைக் கண்டித்து இந்திய அரசு தீவைத் தாரைவார்த்துக் கொடுத்ததைத் திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் தமிழர் அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கும்.

## மீத்தேன் எரிகாற்று திட்டம்

- வளம்கொழிக்கும் காவிரியாற்றுப் படுகையான தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய பகுதிகளில் அதிகமாக நிலத்தடியில் இருக்கும் எரிகாற்றை எடுக்கும் உரிமையை மத்திய காங்கிரஸ் அரசு கெயில் (GEECL) என்ற வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்றுவிட்டது. அதை இந்த மண்ணில் செயல்படுத்த தமிழகத்தின் துணை முதல்வராக இருந்த ஸ்டாலின் கையெழுத்திட்டார். இந்தத் திட்டத்தால் 3. 45 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்புப் பாதிக்கும். 1,64,819 ஏக்கர் உழவு நிலம் பாழடைந்து போகும். அப்பகுதியின் நிலம், நீர், காற்று எல்லாமும் பயனற்றுப் போகும். நிலத்தடி நீர் அனைத்தும் உப்பு நீராக மாறும். எந்த வேளாண்மைக்கும் பயனற்ற பூமியாக மாறும். சோறுடைத்த சோழ நாடு பிச்சை எடுக்கும் நாடாக மாறும். அத்திட்டத்தை எதிர்த்து மக்கள் பெரும் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். நம் பெரியத் தகப்பன் நம்மாழ்வார் தலைமையில் நடந்த போராட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பிறகுதான் தெரியாமல் கையெழுத்தைப் போட்டுவிட்டோம் என்று ஸ்டாலின் சொன்னதும் நடந்தது.

### தீர்வு

- மத்திய அரசு கெயில் நிறுவனத்திற்கு அளித்த விற்பனை உரிமையை விலக்கிக் கொள்ள வேண்டும். அந்த நிறுவனத்திற்கு தி.மு.க. ஆட்சியில் வழங்கிய அனுமதியையும் நாம் தமிழர் அரசு திரும்பப் பெற்றுக்கொள்ளும். ஷெல் (sheel) போன்ற வேறு நிறுவனங்கள் மட்டுமின்றி எந்த பெயரில் வந்தாலும் அதை எதிர்ப்போம். எதிர்காலத்தில் எந்த ஒரு திட்டத்தையும் மாநில அரசின் ஒப்புதலைப் பெறாமல் கொண்டு வரக்கூடாது. மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்ற உறுதியுடன் நாம் தமிழர் அரசு செயல்படும்.




மீத்தேன் எரிகாற்று எடுக்கும் முறை

**கெயில் நிறுவனத்திற்கு அளித்த விற்பனை உரிமையை விலக்கிக் கொள்வோம். தி.மு.க. ஆட்சியில் வழங்கிய அனுமதியையும் நாம் தமிழர் அரசு திரும்பப் பெற்றுக்கொள்ளும். தெரியாமல் கையெழுத்தைப் போட்டுவிட்டோம் என்று ஸ்டாலின் சொன்னதும் நடந்தது**



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com







ஆந்திர மாநிலம் கோதாவரி மாவட்டதிலுள்ள நகரம் கிராமத்தில் கெயில் எரிகாற்றுக் குழாய் வெடித்த இடம்

**99 ஆண்டுக்கால ஒப்பந்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதுடன் எரிகாற்றுக் குழாய் நிறுவனத்தை நிலையாகத் தடை செய்வோம்**

## கெயில் எரிகாற்றுத் திட்டம்

- 3400 கோடிச் செலவில் கேரள மாநிலத்தில் இருந்து கர்நாடக மாநில மங்களூருக்கு எரிகாற்றுக் குழாய் மூலம் கொண்டு செல்லும் திட்டத்தால் தமிழகம் பாதிக்கப் பட்டிருக்கிறது. கேரள மலையினைக் குடைந்து சென்றால் 380 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாக முடிந்து போகும். ஆனால் தன் மாநிலத்தின் மலைவளமும், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் எனக் கேரளா மறுத்து விட்டது. அதனால் தமிழக விளை நிலத்தின் வழியாகக் குழாய் பதித்து 884 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீடித்துச் செல்கிறார்கள். இதில் 504 கிலோ மீட்டர் தூரம் தமிழகத்தின் சேலம் கோவை, கிருட்டினகிரி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு, திருப்பூர் ஆகிய ஏழு மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. இப்பகுதி உழவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். நீதிமன்றம் தமிழகப் பகுதிகளில் தடையின்றி குழாய் பதித்துக் கொள்ளலாம் எனக் கெயில் எரிகாற்று நிறுவனத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்துள்ளது.

## தீர்வு

- இதனால் தமிழகத்தில் சுமார் 50,000 ஏக்கர் வேளாண்மை நிலம் பாதிக்கப்பட்டிருப்பதை நாம் தமிழர் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. கேரளாவிலும், ஆந்திராவிலும் இந்தவித எரிகுழாய் வெடித்துப் பல உயிர்களைப் பலியாகியிருக்கிறது. அதனால், மக்களைப் பாதிக்கும் எந்த ஒரு திட்டத்தையும் தமிழகத்தில் அனுமதிக்க முடியாது என்ற தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும். அதனடிப்படையில் இவர்களுடன் போட்டுக்கொண்ட 99 ஆண்டுக்கால ஒப்பந்தத்தைத் திரும்ப பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும். எரிகாற்று குழாய் நிறுவனத்தை நிலையாகத் தடை செய்வோம்.




# நியூட்ரினோ ஆய்வகம்

- அணுவைப் பிளந்து அதற்குள்ளாக இருக்கும் 60 வகையான துகள்களை ஆராய்ந்து, அதில் நியூட்ரினோ துகளை ஆய்வு செய்வதற்கான திட்டம் இது. தேனி மாவட்டம் பொட்டிபுரம் அம்பரப்பர் பகுதியில் செயல்படுத்தும் வேலையை தொடங்கியிருக்கிறார்கள். தொன்மை வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் இத்திட்டத்தை செயல்படுத்துவது பெருங்கேடாய் முடியும். 50,000 டன் எடை கொண்ட உலகின் பிரமாண்ட காந்தத்தை நிறுவி இந்த சோதனை செய்வதால் அப்பகுதியின் உயிர்ச்சூழல் உட்பட சுற்றுச்சூழல் அனைத்தும் பாதிக்கப்படும். தொடக்கத்தில் நீலகிரி மாவட்டம் சிங்காராப் பகுதியில் இந்தச் சோதனையை நடத்தத் திட்டமிட்டார்கள். கர்நாடக மாநிலக் கோலார் தங்கவயலில் மூடப்பட்ட ஏதாவது ஒரு சுரங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற போது, கர்நாடக அரசு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தது. அதன் பிறகுதான் எதற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்காதத் திராவிட ஆட்சியாளர்களால், தமிழகத்தின் தேனி மாவட்டத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.
- மலைகளைக் குடைய பல ஆயிரம் கிலோ வெடிமருந்துகளைப் பயன் படுத்துவதாலும், கற்களையும், மண்ணையும் அப்புறப்படுத்துவதாலும் ஆயிரங்கணக்கான வாகனங்கள் அந்தப் பகுதியில் இயங்கும். அது அந்தப் பகுதியின் சுற்றுச் சூழலையே பாதிக்கும். அப்பகுதியில் உள்ள வன உயிரினங்கள் முற்றாகப் பாதிக்கப்படும். இப்படிப் பல காரணங்களையும் முன் வைத்து மக்கள் போராடி வருகிறார்கள்.

## தீர்வு

- அருகில் இருக்கும் பரம்பிக்குளம் புலிகள் காப்பகம், மூணாறு வனப்பகுதி, வால்பாறை, பொள்ளாச்சி, மேகமலை, குமிழி, கொடைக்காணல், மற்றும் தமிழர் மெய்யியல் அடையாளமாக விளங்கும் பழனி என அனைத்துத் தமிழர் இயற்கை வளங்களும் பாதிக்கும். தொன்மை வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் சுற்றுச்சூழல் இயற்கை வளங்கள் அனைத்தும் பாதிக்கும். எனவே நாம் தமிழர் அரசு இத் திட்டத்தை முற்றாக எதிர்க்கும். தொடர்ந்து செயல்பட அனுமதிக்காது.






**மாநில நலனுக்காகத் தான் மத்திய அரசே ஒழிய மக்களை அழிப்பதற்காக அன்று என்பதை எடுத்துரைத்துத் தடுப்போம்**



Clarity Version download at www.makkalarasu.com





**அந்தந்த மாநிலத்தின் வளங்கள் அவர்களுக்கே சொந்தம் என்றால், எம் மாநிலத்தின் வளம் அனைத்தும் எம் மக்களுக்கே சொந்தம்**

## காவிரி ஆற்று நீர்ச் சிக்கல்

- 1807ஆம் ஆண்டில், ஆங்கிலேயரின் ஆட்சியில், அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும், மைசூர் அரசுக்கும் இடையே போட்டுக்கொண்ட ஒப்பந்தம் இது. சுதந்திர இந்தியாவிலும் சிக்கலாகவே நீடித்துக்கொண்டிருக்கிறது. மத்திய அரசின் ஆற்று ஆணையம், உச்ச நீதிமன்றம் எல்லாத் தீர்ப்பைச் சொல்லியும், நமக்குத் தரவேண்டிய 419 டி.எம்.சி தண்ணீரை முறையாக கொடுக்காமல் மறுத்து வருகிறது கர்நாடக அரசு.

## தீர்வு

- காவிரி ஆற்றுநீர் என்பது தமிழகத்தின் உரிமை. தமிழகம் வஞ்சிக்கப்படக் கூடாது என்பதில் நாம் தமிழர் அரசு உறுதியுடன் நிற்கும். அதனால் இந்தச் சிக்கலை நிலையாகத் தீர்த்து வைக்க வேண்டி சிக்கல்களின் தொடக்கத்திற்கே செல்கிறோம்.
- 1956ஆம் ஆண்டில் மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட்ட போது, காவிரி நீர் உருவாகும் இடமான குடகுமலை தமிழகத்தோடு தான் இருந்தது. அதைக் கர்நாடக மாநிலத்தோடு இணைக்கக்கூடாது என்று அப்போதே தமிழர்கள் பலப் போராட்டங்களை நடத்தினார்கள். ஆனாலும் மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை. எனவே 1956இல் நடைபெற்ற மொழிவழி மாநிலம் பிரிப்பு சரியானதன்று. முறையானதுமன்று. பண்டைய தமிழர்களின் பகுதியான பெங்களூரு, குடகுமலை அனைத்தும் தமிழ்நாட்டின் உரிமை, அவற்றை மறுசீரமைப்புச் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்காடுவோம்.
- மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி அரபிக் கடலில் கலக்கும் நீரைத் தடுத்து அணைகட்டி, அந்த நீரை மேட்டுர் அணைக்குத் திருப்பிவிடப் பாண்டியாறு பொன்னம்பல ஆறுகளின் குறுக்கே தடுப்பணை உருவாக்கப்படும். கர்நாடக மாநிலம் தண்ணீர் தர மறுக்கும்போது தமிழகத்தின் கனிம வளமான நிலக்கரி, மின்சாரம் அவர்களுக்கு மறுக்கப்படும். நிலக்கரி பொதுச் சொத்து, பகிர்ந்தளிக்க வேண்டும் என்றால் தண்ணீரும் பொதுச் சொத்துதான். அதையும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று முடிவெடுப்போம்.
- அந்தந்த மாநிலத்தின் வளங்கள் அவர்களுக்கே சொந்தம் என்றால், எம் மாநிலத்தின் வளம் அனைத்தும் எம் மக்களுக்கே சொந்தம்.





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதி முழுக்கத் தமிழர்கள் பெரும்பகுதியாக வாழும் பகுதி. தமிழர்களின் போராட்டங்களை மீறி வலுக் கட்டாயமாகக் கேரள அரசோடு இணைத்ததே தவறு

## முல்லைப் பேரியாற்று அணை

- இராமநாதபுர மாவட்டத்தில் பெரும் பஞ்சம் தலைவிரித்தாடியது. அதனையடுத்து மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகட்டி நீர்த் தேக்கி, வேளாண்மைக்கு பயன்படுத்த அன்றைய இராமநாதபுர அரசு முயற்சித்தது. ஆனால் பெரும் நிதி செலவாகும் என திட்டத்தை கைவிட்டார்கள். பிறகு ஆங்கிலேய அரசு அந்த முயற்சியைக் கையில் எடுத்தது. 62 இலட்சம் செலவில் அணை கட்ட முடிவானது. முறைப்படி மதுரை நிர்வாகம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு ஒப்பந்தம் போட்டுக்கொண்டது
- நீர்ப்பிடிப்புப் பகுதியான 8,000 ஏக்கர் நிலத்திற்கு ஆண்டிற்கு 4,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதைத் தாண்டி திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு வேறு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை.
- ஆனால் தண்ணீரை 145 அடிக்கு உயர்த்தினால் அணை உடையும். அதனால் கேரளப் பகுதி பாதிக்கும் என்று சிக்கலை ஏற்படுத்த அது மத்திய அரசு, ஆற்றுநீர் ஆணையம், உச்சநிதிமன்றம் என்றெல்லாம் வழக்காகி, இப்போது பழையபடி 145 டி.எம்.சி தண்ணீரைத் தேக்கிக்கொள்ளலாம் என உத்தரவு கிடைத்தும் கேரள அரசு மறுத்து வருகிறது.

## தீர்வு

- நாம் தமிழர் அரசு முல்லைப் பேரியாற்று ஆற்றுநீர்ச் சிக்கலையே ஏற்கவில்லை. அன்றைய மதுரை நிர்வாகம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு ஒப்பந்தம் போட்டுக்கொண்டதே தவறு. முல்லைப் பேரியாறு அணை அமைந்திருக்கும் தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதி முழுக்கத் தமிழர்கள் பெரும்பகுதியாக வாழும் பகுதி. அப்பகுதித் தமிழர்களின் போராட்டங்களை மீறி வலுக்கட்டாயமாக, கேரள அரசோடு இணைத்தது தவறு.
- அடுத்து அந்த அணை இருக்கும் இடம் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்குச் சொந்தமான இடமே அன்று. 12 ஆம் நூற்றாண்டு வரை பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் இருந்தப் பகுதி இது. அதன் பிறகு தமிழ் மூவேந்தர்களில் ஒருவரான சேரமன்னனின் பூனியாறு சமஸ்தானத்திற்குச் சொத்மான பகுதியாக இருந்தது. அந்த சமஸ்தானத்திற்கு சொந்தமான பூனியாற்று தம்பிரான் மன்னனுடன்தான், ஆங்கிலேய ஆட்சியின் மதுரை நிர்வாகம் ஒப்பந்தம் போட்டிருக்க வேண்டும். இவற்றைச் சுட்டிக்காட்டி தகுந்த ஆரதாரங்களுடன் சென்று மொழிவாரி மாநிலப் பிரிப்பை மறு சீராய்வு செய்ய வேண்டும் எனக் கோரி நடவடிக்கையை எடுப்போம். தமிழர்களுக்கான பகுதியை நிலையாக மீட்போம்.

# பாலாற்று நீர்ச் சிக்கல்

- கர்நாடக மாநிலக் கோலார் மாவட்ட நந்தி மலையில் உருவாகிறது பாலாறு. இந்த இடம் தமிழர்கள் வசம்தான் இருந்தது. அந்த ஆறு கர்நாடக மாநிலத்தில் 93 கிலோ மீட்டரும், ஆந்திர மாநிலத்தில் 33 கிலோ மீட்டரும், இறுதியாக தமிழகத்திற்குள் 222 கிலோ மீட்டரும் பயணித்து, வயலார் என்னுமிடத்தில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. 1892வாக்கிலேயே கர்நாடகாவுக்கும், தமிழகத்திற்கும் பாலாற்றுத் தண்ணீர் சிக்கல் எழுந்தது. அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கீழே(பகுதியில்) இருப்பவர்களின் ஒப்புதலைப் பெற்றுதான், மேலே (பகுதியில்) இருப்பவர்கள் அணையைக் கட்ட வேண்டும் என்ற வரையும் கொண்டு வந்திருந்தார்கள்.
- அதை மீறி ஆந்திர அரசு, குப்பத்திற்கு அருகில் உள்ள கணேசபுரத்தில் பாலாற்றைத் தடுத்து ஒரு அணையைக் கட்டத் திட்டமிட்டு வருகிறது. வழக்கம்போலவே தமிழக அரசும் மக்களும் எதிர்த்து வருகிறார்கள்.
- வேலூர், ஆம்பூர், வாணியம்பாடி, பள்ளிகொண்டா, ஆற்காடு, வாலாஜாபேட்டை காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய பகுதிகள் பெருமளவில் பாதிப்பைச் சந்திக்கும். மழைக் காலங்களில் மட்டுமே உபரிநீரைச் சுமந்துவரும் பாலாறு, மற்ற காலங்களில் தண்ணீரைக் கொண்டு வராது. ஆந்திரா அரசு குறுக்கே அணை கட்டிக்கொண்டால் அந்த மழைக்கால நீரும் தடைபட்டுப் போகும்.

## தீர்வு

- பாலாறு தமிழகத்தின் சொத்து, ஆறு இயற்கை மக்களுக்கு அளித்த கொடை. ஓர் ஆற்றின் வெள்ளப் பெருக்கால் எந்த நிலபரப்பு பேரிழப்புக்குள்ளாகிறதோ அந்நிலப்பரப்பிற்கே ஆற்று நீரின் பயன்பாட்டிற்கு முன்னுரிமை; இருமடங்கு நீர் உரிமையும் கூட என்ற பொது விதியின் அடிப்படையில் பாலாற்றுத் தண்ணீர் தமிழகத்திற்கே சொந்தமாகும். எனவே காவிரி ஆற்றுநீர்ச் சிக்கலில் என்ன தீர்வை முன் வைத்தோமோ, அதே தீர்வைத்தான் பாலாற்று நீர்ச் சிக்கலிலும் நாம் தமிழர் அரசு முன்னெடுக்கிறது. ஆற்று நீரைப் பொதுவாகக் கருதி நடுவண் அரசு பகிர்ந்தளிக்க வேண்டும். இல்லையேல் மாநில அரசின் மறுசீரமைப்புக் கோரிக்கையினை நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்துவோம்.

**ஓர் ஆற்றின் வெள்ளப் பெருக்கால் எந்த நிலபரப்பு பேரிழப்புக்குள்ளாகிறதோ அந்நிலப்பரப்பிற்கே ஆற்று நீரின் பயன்பாட்டிற்கு முன்னுரிமை; இருமடங்கு நீர் உரிமையும் கூட என்ற பொது விதியின் அடிப்படையில் பாலாற்றுத் தண்ணீர் தமிழகத்திற்கே சொந்தமாகும்**





தமிழ்த் தேசிய இனம் எதிர் கொள்ளும் சிக்கல்களும் தீர்வும்



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com


## கல்பாக்கம் – கூடங்குளம்

- 1986 ஆம் ஆண்டு இரஷ்ய நாட்டின் செர்னோபில்லில் அணுஉலை வெடிக்க உலகமே அதிர்ந்து பார்த்தது. அதன் பிறகு 1988ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தியும், இரஷ்யப் அதிபர் மிகைல் கோர்பசேவும் போட்டுக் கொண்டது தான் இந்தக் கூடங்குளம் அணுஉலை ஒப்பந்தம். அமெரிக்க எதிர்ப்பால் பத்தாண்டுகள் கிடப்பிலேயே இருந்தது. பிறகு 1998ஆம் ஆண்டு மறு ஆய்வு செய்யப்பட்டது. முதலில் இராஜஸ்தான் மாநிலம் தேர்வானது. அங்கிருந்த பழங்குடியின மக்கள் கடுமையாகப் போராட்டம் நடத்த, கேரள மாநிலத்திற்கு தாவியது. ‘எங்களுக்கு மின்சாரத் தேவையைவிட மக்களின் உயிர்தான் முக்கியம்’ என அந்த மாநில முதல்வர் எதிர்ப்பு தெரிவிக்க, பிறகு தமிழ் நாட்டிற்குள் திராவிடக் கட்சி ஆட்சியாளர்களால் எதிர்ப்பின்றி நுழைந்து கொண்டது.
- பலப் போராட்டங்கள், விதிமுறைகளை மீறி செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இத் திட்டத்தால் நீர், நிலம், காற்று மாசுபடும். உயிர்க் கொல்லி நோய்கள் பரவும். கடல்வாழ் உயிரினங்கள், அவற்றின் இயற்கைச் சுழற்சி முறை என எல்லாமும் பாதிக்கப்படும். 2011இல் நடந்த மார்ச் 16 அன்று, ஜப்பானின் புகுசிமாவில் நடந்த அணுஉலை வெடிப்பு நம் கண்முன்னே நடந்த பேரழிவாகப் பார்க்க முடிந்தது. சுருக்கமா மனிதகுலத்திற்குப் பேராபத்தாக முடியும். சமீபத்தில் திமிங்கிலங்கள் கூட்டம் கூட்டமாக இறந்து கரை ஒதுங்கியதும் இந்த அணுஉலைப் பாதிப்பில்தான் என்று சமூக ஆய்வாளர்களும் எச்சரித்தார்கள்.

## தீர்வு

- உலகத்தில் பாதுகாப்பான அணு என்ற ஒன்றே கிடையாது. அணு குண்டு மேலே அமர்ந்திருப்பதும், அணு உலை அருகே குடியிருப்பதும் ஒன்றுதான்.
- மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டது அணுஉலையால் அன்று. அணுஉலை கண்டுபிடிக்கப்பட்டது மின்சாரத்திற்காக அன்று.
- தமிழ்நாட்டில் மட்டும் அணுஉலை வேண்டாம் என்று கூறவில்லை. உலகத்தில் எந்த நாட்டிலும் வேண்டாம் என்பதுதான் நமது நிலைப்பாடு. நாம் தமிழர் அரசு அணுஉலைக் கொள்கைக்கு எதிரானது.
- மாற்றுவழி மின் உற்பத்தியைப் பெருக்கி அணு உலையை நிலையாக மூட நடவடிக்கையை எடுப்போம்.

## அணுக்கதிர்வீச்சால் பாதிப்பு






## கணினிக் கழிவுகள்

- கேரள மாநிலத்தில் இருந்து மாட்டிறைச்சிக் கழிவு, கோழியிறைச்சிக் கழிவுகள் மற்றும் மருத்துவப் பொருள் கழிவுகளைக் கொண்டு வந்து தமிழகத்தின் எல்லையில் கொட்டிவிட்டு செல்வதை கடுமையான நடவடிக்கையின் மூலம் தடுக்கப்படும். இதற்கென்று கேரள மாநில எல்லைகளில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும். இறைச்சிக் கழிவுகளைக் கொண்டு வரும் வாகனங்களை கண்டுபிடித்து பறிமுதல் செய்வோம். அந்த நிறுவனங்கள் மீது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- அதே போன்று பல்வேறு வெளிநாடுகளில் இருந்து மறுசுழற்சி செய்ய முடியாதக் கணினிக் கழிவுகளைக் கப்பல்கள் மூலம் கொண்டுவந்து தூத்துக்குடி உள்ளிட்ட தமிழகத் துறைமுகப் பகுதிகளில் இறக்கி வைத்துவிட்டுச் செல்கிறார்கள். இதனால் அதிகமான கணினிக் கழிவுகள் இங்கே தேங்கிக் கிடக்கிறது. மண்ணுக்கும் சுற்றுப்புற சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும். இதை தடுத்து நிறுத்துவதுடன், அப்படியான கழிவுகளைக் கொண்டு வரும் கப்பல்கள் மீதும், நிறுவனங்கள் மீதும் சட்டப்படிக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## போராடித் தீர்ப்போம்

- ஆந்திர மாநிலச் சிறைச்சாலைகளில் 3,000 மேற்றபட்ட தமிழர்கள் வாடி வருகிறார்கள். அவர்கள் அனைவர் மீது செம்மரக்கட்டைகள் வெட்டிக் கடத்தினார்கள் என்பது உள்ளிட்ட பல்வேறு பொய்வழக்குகள் போடப்பட்டிருக்கின்றது. நாம் தமிழர் அரசு அவர்கள் அனைவரையும் சட்டப்போராட்டத்தின் மூலம் மீட்கும். அவர்களுக்கு சொந்தமாக தொழில் தொடங்க கடன் வழங்கப்படும். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

## தேயிலை தோட்ட தொழிலாளர் நலன்

- தமிழ்நாடு முழுதும் உள்ள தேயிலைத்தோட்ட தொழிளார்களுக்கு சொந்தக் குடியிருப்புகள் கட்டித்தரப்படும். உயர்க் கல்வி பயின்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு நிர்வாகப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படும். தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதிகளில் மருத்துவம், தூயக் குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்துக் கொடுக்கப்படும். தொழிலாளர் பிள்ளைகளின் கல்விக்காகத் தரமான பள்ளிகள் அப்பகுதியில் ஏற்படுத்தப்படும்.
- கூட்டுறவு ஏல மையங்களில் 'கூட்டமைப்பு' (சிண்டிகேட்) முறை ஒழிக்கப்படும். இதனால் அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் வருவாய் கூடும். தேயிலைத்தூள் விற்பனையில் கலப்படங்கள் முழுதுமாக ஒழிக்கப்பட்டு, தரமான உற்பத்தி முறை கொண்டு வரப்படும்.

## ஓவேலிச் சிக்கல் தீர்க்கப்படும்

- நீலகிரி மாவட்டம் ஓவேலி மலைப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் எது வனப்பகுதி என்பது வரையறுக்கப்படும். அங்கு அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இந்த பகுதியில் உள்ள மக்கள் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள். இவர்களுக்கான நிலம் ஒதுக்கப்படும். அந்தப் பகுதி வனம் பாதுகாக்கப்பட்டு வன விலங்குகளுக்கான உயிர்வாழ் சூழலை உருவாக்குவதன் மூலம் மனித உயிரிழப்புகள் தடுக்கப்படும்.
- நலிந்துவரும் தனியார் தேயிலைத் தோட்டங்களை அரசு தோட்டங்களாக மாற்றப்படும், அதன்மூலம் மலைமக்களின் வேலைவாய்ப்புக்கு உறுதி அளிப்பதோடு, அப்பகுதியில் இருந்து வரும் பெரும் முதலாளிகளின் கூட்டுக்கொள்ளை முற்றிலும் ஒழிக்கப்படும்.

தமிழ்த் தேசிய இனம் எதிர் கொள்ளும்
சிக்கல்களும் தீர்வும்



Clarity Version download at www.makkalarasu.com

**என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்**
**எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!**
**ஒன்றேனும் தமிழர்நடை யுடைபா வனைகள்**
**உள்ளதுவாய் அமைக்கவில்லை உயிர் உள்ளதில்லை**
**ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லை!**

**- பாவேந்தர் பாரதிதாசன்**




Clarity Version download at www.makkalarasu.com

# திரைக்கலை மேம்பாடு

*"திரைக்கலையும், பேச்சும் இராணுவத்தின் இரண்டு வலிமையான படைப் பிரிவுகள்"*

**– தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்**

*திரைக்கலை அறிவியலின் ஓர் அழகான குழந்தை*

## கலைமுகமாக

- நாம் தமிழர் அரசு திரைக்கலையைத் தமிழ்த் தேசிய இனத்தின் அழகிய கலை முகமாகவும், தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வாழ்வியல் மரபு, அழகியல் போன்றவற்றை உலகம் அறியச் செய்வதற்கான வலிமை மிக்க ஊடகமாகவும் பார்க்கிறது.
- **கண் வழியே போதை ஊட்டும் விதமாக இல்லாமல் கண்வழி நூலகமாக திரைத்துறை மாற்றி அமைக்கப்படும்.** வெறும் பொழுதுபோக்குக் கலையாக இல்லாமல் நல்ல பொழுதை ஆக்குவதற்கான கலையாக மாற்றும்.

## திரையில் தேடுகிறோம்

- திரைத்துறையில் இருப்பவர்களுக்கு வாழ வீட்டைத்தராத எம்மக்கள் ஆள நாட்டைக் கொடுத்து விடுகிறார்கள். திரைக் கலையைத் தீண்டத்தகாத கலையாக முற்போக்குச் சக்திகள் பேசினார்கள். ஆனால் ஐயா பெருந்தலைவர் காமராசருக்குப் பிறகு திரைத்துறையைச் சார்ந்த முதலமைச்சராக ஐந்து பேரைத் தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்து உள்ளனர்.
- பிற மாநில மக்களை விட, எம் தமிழக மக்களிடம் திரைப்பட மோகம் மிகுதியாக மண்டிக் கிடக்கிறது. அதன் விளைவாகத்தான் எம் இன இளைஞர்கள், மக்களுக்காகத் தியாகம் செய்த தலைவர்கள் தரையில் இருந்தாலும் தனக்கான தலைவனைத் திரையில் தேடுகிறார்கள்.

## திரைக்கலை ஒரு பாடமாக

- மக்களுக்கான எந்த ஒரு கருத்தையும், சிக்கலையும் மிக எளிதில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடத் திரைக்கலையால் மட்டுமே முடியும். இரண்டாம் உலகப்போரின் கோர முகத்தை உலகத்திற்குக் காட்டியது திரைக்கலையே. பல இருண்ட பக்கங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தியதும் திரைக்கலையே. அதனால் திரைப்படக்கலை தொடக்கக் கல்வியில் ஒரு பாடமாக வைக்கப்படும்





Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



பகுத்தறிவுப் பாட்டன் அயோத்திதாசப் பண்டிதர்

இராமசாமி படையாச்சி

தாத்தா இரட்டைமலை சீனிவாசன்

தெய்வத்திருமகன் முத்துராமலிங்கத் தேவர்

பெருமகன் கக்கன்

தோழர் சிங்காரவேலர்

தோழர் பா.ஜீவானந்தம்

# பெருமைமிகு முன்னோர்கள், தலைவர்கள் பெயரில் திரைப்படங்கள்

- எம் பெரும் பாட்டனார்கள் பூலித்தேவன், பாட்டியார் வேலுநாச்சியார், தீரன்சின்னமலை, பண்டாரக வன்னியன், மருது பாண்டியர் போன்ற எம் இன முன்னோர்களின் வீர வரலாறுகளை அரசே திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டு ஆவணமாகப் பாதுகாப்பதோடு, சமூக மாற்றத்திற்கு தன் வாழ்வை அர்ப்பணித்த பெருந்தமிழர்கள் ஐயா அயோத்திதாசர் பண்டிதர், சிங்கார வேலர், இரட்டைமலை சீனிவாசன், கக்கன், ஐயா.முத்து இராமலிங்கத் தேவர், புரட்சிப்பாவலர் பாரதிதாசன் பா.ஜீவானந்தம், மா.பொ.சி, சி.பா.ஆதித்தனார் போன்ற பெருமைமிகு சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப் படமாகத் தயாரித்து வெளியிடும்.

- மொழிப்போரில் இறந்த மொழிப்போர் ஈகியர்களின் வரலாறும், இனத்திற்காக உயிர்விட்ட ஈகியர் அப்துல் ரவூப், முத்துக்குமார், முருகதாஸ், செங்கொடி, அமரேசன், சோதி, இளமணி, சீவானந்தம் இரவி, சிவப்பிரகாசம், மாரிமுத்து, சதாசிவம், சீனிவாசன் சுப்ரமணி, இராசசேகர் இராஜா, கிருஷ்ணமூர்த்தி, இரவிச்சந்திரன், கோகுல், ஆகியவர்களின் ஈகையும் ஆவணப்படமாக எடுத்து வெளியிடும்.

## குறைந்த வாடகை

- சேலம் மாவட்டம் ஏற்காட்டில் மாடர்ன் தியேட்டர்ஸ் நடத்தி வந்த ஐயா திரைக்கலை மேதை டி.ஆர் சுந்தரம் அவர்களின் பெயரிலும் மற்றும் தமிழகத்தில் உள்ள இயற்கை அழகு கொழிக்கும் இடங்களிலும், 'திரைப்பட நகர்' அமைத்தும், அரங்கங்கள் நிறுவியும் முறையான தொகைக்கு வாடகைக்கு விடப்படும்.

## முறையான கட்டணங்கள்

- திருட்டுக் குறுவட்டு(VCD) முற்றிலும் ஒழிக்கப்படும். தயாரிப்பாளரின் அனுமதி இன்றித் திருட்டுக் குறுவட்டு தயாரிப்பவர்களைக் குண்டர் சட்டத்தில் கைது செய்து உரிய தண்டனை வழங்கப்படும். அற்கேற்ப திரையரங்குகளில் கட்டணம், வாகன நிறுத்தக் கட்டணம், உணவுப் பொருட்களின் விலைகள் அனைத்தும் நியாயமான விலையில் இருக்க முறைப்படுத்தப்படும்.

## கலைத் தூதுவர்கள்

- உலகத் திரைப்படவிழாக்களுக்குத் தமிழர்களின் வாழ்வியலை மேம்படுத்தும் தகுதியான திரைப் படங்களைத் தேர்வு செய்து சிறந்த திரைப் படங்களைத் தயாரித்த, இயக்கிய கலைஞர்களைக் 'கலைத் தூதுவர்களாக' உலகத் திரைப்பட விழாக்களுக்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைப்பதோடு சிறந்த நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களை அரசே தத்தெடுத்துக்கொள்ளும்.

## தனிக் குழு அமைக்கப்படும்

- திரைப்படத்தின் தொலைக் காட்சி உரிமையை வாங்க ஒரு குழு அமைத்து இருதரப்பினரையும் சார்ந்த கலைஞர்கள், தயாரிப்பாளர்கள் பாதிக்கப்படாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்துத் திரைப்படங்களும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் அதற்கான வெகுமதி தயாரிப்பாளருக்கோ, ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள கலைஞர்களுக்கோ பெற்றுத் தரப்படும்.

## சின்னத்திரை

- சின்னத்திரைக்கு(தொலைக்காட்சி) வாரியம் எற்படுத்தபடும்
- பெண்கள், குழந்தைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகப் பார்ப்பதால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் அதில் வரும் விளம்பரங்களையும் அரசு முறையாகத் தணிக்கை செய்த பின்னரே ஒளிப்பரப்ப அனுமதிக்கப்படும்.
- திரைப்படத்தைப் போலவே தமிழ்மொழி, பண்பாடு, மெய்யியலை மேம்படுத்தும் தொலைக்காட்சித் தொடருக்கு அரசு பொருளாதார உதவி செய்யும்.
- சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெரும்காப்பியங்களை நெடுந்தொடராக அரசே தயாரித்து ஒளிபரப்புச் செய்யும்.
- சிறந்த சின்னத்திரைக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படும்.

> “என்னதான் துயரம் வந்தாலும் உழவுத் தொழில்தான் உயர்ந்ததாக இருக்கும் என்று உழவின் பெருமையை மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிச்சென்றார் திருவள்ளுவர்”





Clarity Version download at www.makkalarasu.com



மாடர்ன் தியேட்டர்ஸ், சேலம்


மனோரமா

> “திரைப்படக் காட்சிகளில், வில்லன் மற்றும் கெட்ட கதாப் பாத்திரங்கள் மட்டுமே மது புகைப் பிடிக்க அனுமதிக்கப்படுவார்கள்”

## குறும்படங்கள்

- குறும்படங்களைத் திரையில் வெளியிடும் நிலை உருவாக்கப்படும்.
- சிறந்த குறும்படங்களை அரசே வாங்கித் திரையிடச் செய்யும்.
- மாவட்டம் தோறும் குறும்பட விழாக்கள் நடத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஆண்டும் உலகத்திரைப்பட விழாவை அரசே நடத்தும்.

## மொழி மீதான வன்முறை

- பெண்களின் இடைகளையும், தொடைகளையும் காட்சிக்குத் தேவையில்லாமல் காட்டுவது மட்டும் ஆபாசமல்ல; காட்சிக்குத் அவசியமற்று ஒரு மனிதனை வெட்டித் ரத்த சகதியாக்குவது மட்டுமல்ல வன்முறை. ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எமது தமிழ்மொழியைத் தவறாக உச்சரிப்பதும், பிறமொழி கலந்து பேசுவதும்தான் மிகப் பெரிய வன்முறையாக **நாம் தமிழர் அரசு** கருதுகிறது. எனவே சின்னத்திரை, பெருந்திரை வானொலி ஆகியவற்றில் ‘மொழிக்கலப்பு‘ நடக்காமல் தடுக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்..

## மதுவுக்குத் தடை

- திரைப்படக் காட்சிகளில், வில்லன் மற்றும் கெட்ட கதாப் பாத்திரங்கள் மட்டுமே மது புகைப் பிடிக்க அனுமதிக்கப் படுவார்கள். அவர்களைத் தவிர மற்ற கதா பாத்திரங்கள் புகை, மது பயன்படுத்தும் காட்சிகளுக்குத் தடை விதிக்கப்படும். படத்தைப் பார்க்கும் இளம் தலைமுறையினரின் மனத்தில் கெட்டவர்கள் மட்டுமே மதுவையும் புகையிலையும் பயன்படுத்துவார்கள் என்ற மனநிலை உருவாக வேண்டும்.

## ஆபாச இணையத்தளங்கள் முடக்கப்படும்

- இணையங்களில் தற்போது ஆபாசப் படங்கள் (Porn) இலவசமாகவே பரப்பி வருகிறார்கள். இதனால் இளைஞர்களின் சிந்தனைகள் சிதைக்கப்படுகிறது. தவறான உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தப்படுகிறது. எனவே நாம் தமிழர் அரசு ஆபாச இணையத்தளங்கள் அனைத்தையும் முடக்கும். ஆபாசப் படங்களை விற்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுக்கும்.



Clarity Version download at www.makkalarasu.com

# தமிழ்த்தேசிய வைப்பகம்



ஒரு மாநிலம் சொந்தமாக வைப்பகம் தொடங்குவது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கானது. அந்த வகையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு **நாம் தமிழர் அரசு** புதிய வைப்பகத்தைத் தொடங்கும்.

## உயர்ந்த நோக்கம்

- இனத்தின் பெயராலும், மொழியின் பெயராலும் தனித்தன்மையைக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டில் உயர்ந்த நோக்கத்தோடு, 'தமிழ்த் தேசிய வைப்பகத்தை' நாம் தமிழர் அரசு தொடங்கும். ஓர் இனத்தின் அரசியல், அதிகாரம், பொருளாதாரம் அனைத்தும் தன்னகத்தே கொண்டிருப்பது பெருமைக்குரிய ஒன்று. உயர்ந்த நல்லிணக்கத்தைச் செயல்படுத்துவதே வைப்பகத்தின் அடிப்படை நோக்கம்.

## தன்னிறைவு

- இந்திய ரிசர்வ் வங்கியின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு இயங்கும் தமிழ்த் தேசிய வைப்பகம் அனைத்து மாநிலங்களிலும் தொடங்கப்படும். மேலும் உலக நாடுகள் அனைத்திலும் அதன் கிளைகள் தொடங்கப்படும். அனைத்திலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருக்கும் தமிழகம், வைப்பகத்திலும் தன்னிறைவு பெற்றிருக்கும்.
- வெளி மாநிலங்களில் இருக்கும் தமிழர்கள் மற்றும் தமிழகத்தில் உள்ள பிற இனத்தவர், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள், தமிழரல்லாதார் அனைவரும் இதில் கணக்கைத் தொடங்கலாம்.

## கந்துவட்டி ஒழிப்பு

- வைப்பகத்தின் முக்கிய நோக்கம் தொழில் முனைவோருக்கு உதவியாய் நிற்பதுதான். தனியாரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி நலிந்து போவதைத் தடுக்கும் நோக்கம்தான். அவர்கள் அனைவரையும் அதிலிருந்து மீட்டெடுத்து எளிதாகத் தொழிலில் ஈடுபடும் நடவடிக்கையை நாம் தமிழர் அரசு எடுக்கும்.

## வட்டியில்லாக் கடன்

- வேளாண் பெருங்குடிகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், விதவைகள், ஆகியோர்களுக்கு மட்டும் தொழில் தொடங்க வட்டியில்லாக் கடன் வழங்கப்படும். குறிப்பாக வேளாண் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எந்த வகையிலும் தொழில் நலிந்து போகாமல் இருக்க அவ்வப்போது ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் வழங்கப்படும்.

தமிழ்த்தேசிய வைப்பகம்



Clarity Version download at www.makkalarasu.com

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி - தமிழ்மறை (1033)




## தங்கள் நாட்டின் குடியரசுத் தலைவரை மக்களே தேர்தல் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வண்ணம் அரசியலமைப்பு மாற்றம் செய்ய நாம் தமிழர் அரசு பாடுபடும்

Clarity Version download at www.makkalarasu.com

# அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்

நாம் தமிழர் அரசு அடிப்படை மாற்றம், அமைப்பு மாற்றம், அரசியல் மாற்றம் ஆகிவற்றினை உயிர் மூச்சாகக் கொண்டு இலட்சிய அரசாகச் செயல்படும். நாங்கள் வீட்டினைப் புதுப்பித்து வெள்ளையடிக்க வந்த சீர்திருத்தவாதிகள் அல்லர், வீட்டையே இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டவந்த புரட்சியாளர்கள் என்பதை மக்களுக்கு **நாம் தமிழர் அரசு** பெருமிதத்தோடு பறை சாற்றுகிறது.

## பெண்களுக்குத் தனித்தொகுதி

- உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சட்டமன்ற நாடாளுமன்றத் தொகுதிகளில் அப்படி வழங்கப்படவில்லை. தேர்தலில் ஒரு அரசியல் கட்சி பெண் வேட்பாளரை நிறுத்தினால் மற்ற கட்சிகளும் பெண் வேட்பாளரை நிறுத்துவதில்லை. மூன்று ஆண் வேட்பாளர்கள் நடுவில் ஒரு பெண் வேட்பாளர் போட்டியிட்டு வெற்றி பெறுவது கடினமாகி விடுகிறது. இது பெண்களுக்கான உரிமையாக இல்லை. அதனால் பெண்களுக்கு சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் தனித்தொகுதி அதாவது ஆதித் தமிழ்க் குடிகளுக்கு இருப்பதைப் போன்று தனித் தொகுதியைப் போராடிப் பெறப்படும். இதனால் ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களுக்கான பிரதிநிதித்துவம் கூடும்.

## மூன்று சட்டமன்றத்திற்கு ஒரு பாராளுமன்றம்

- 30 கோடி மக்கள் தொகை இருந்த போது 543 பாராளுமன்றத் தொகுதியாக பிரிக்கப்பட்டது. இப்போது 120 கோடி மக்கள் தொகை இருக்கும் போதும் அதே 543 பாராளுமன்றத் தொகுதியாக இருப்பதை ஏற்க முடியாது. அதில் சரியான பிரதிநிதிதத்துவம் இருக்காது. அதனால் 6 சட்டமன்றத்திற்கு ஒரு பாராளுமன்றத் தொகுதி என்பதை மாற்றி 3 சட்டமன்றத்திற்கு ஒரு பாராளுமன்றத் தொகுதி கேட்டு, மாற்றம் கொண்டு வரப் போராடுவோம்.

## முதல் குடிமகன்

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவரே நாட்டின் தலைவராக இருக்கிறார். மக்களாட்சித் தத்துவத்தின்படி அரசு அமைக்கப்படுவதாகக் கூறப்படும் சனநாயக நாட்டில், மக்களால் நேரிடையாக தங்களது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாது. மக்களே தங்கள் நாட்டின் குடியரசுத் தலைவரைத் தேர்தல் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் வண்ணம் அரசியலமைப்பு மாற்றம் செய்ய **நாம் தமிழர் அரசு** பாடுபடும்.



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com

## மாநிலங்களவை

- மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படாத மாநிலங்களவை உறுப்பினர்கள், இந்நாட்டையே ஆளுகின்ற மத்திய மந்திரிகளாக வருவது மக்களாட்சி மாண்பிற்கு எதிரானது. மக்களால் தேர்ந்தெடுக்கப் படாத எவரும் மக்களை ஆட்சி செய்கிற, அதிகாரம் செலுத்துகிற பொறுப்புகளில் வர உரிமையில்லை. அதனால் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு 'அதிகாரம்' அளிக்கப்படுவதை **நாம் தமிழர் அரசு** எதிர்க்கிறது.

## மக்கள் ஒதுக்கும் தலைவர்கள்

- ஊழல் வழக்குகளில் சிக்கிக் கொள்ளும் மத்திய மந்திரிகள், தங்கள் சொந்த மாநிலத் தேர்தலில் தோற்று போவோமோ என மக்களைச் சந்திக்க முடியாமல் வேறு மாநிலத்தின் மூலம் மாநிலங்களவை, உறுப்பினர்களாக ஆகிவிடுகிறார்கள். இந்த நிலை மக்கள் சனநாயகத்திற்கு எதிரானது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத குடியரசுத் தலைவர், மக்களால் தேர்ந்தெடுக்கப் படாத பிரதமர் மன்மோகன் சிங் ஆகிய இருவதும் சேர்ந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசைக் கலைத்துவிட முடியும் என்ற அதிகாரத்தைப் பெற்றிருப்பது மக்களாட்சி தத்துவத்திற்கே எதிரானது.

## செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்


- "இந்தச் சபையானது நம்மில் அநேகர் விரும்பி வந்தது போல அமைந்தது அன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளின் காரணமாக இந்தச்சபை இவ்வாறு அமைந்து விட்டது. இந்தச்சபை உருவாக்கப்படுவதில் ஆங்கிலேருக்கும் ஒரு பங்கு இருந்தது. இந்தச் சபையை உருவாக்குவதற்கு அவர்கள் குறிப்பிட்ட சில நிபந்தனைகளை விதித்து விட்டார்கள்.. எனவே இந்த வரம்புக்குள் நின்று நாம் செயல்பட வேண்டி நேரிட்டுவிட்டது என்பதேயாகும்."ஜவர்கலால்நேரு. (13-12-1946 (Indian constitutional documents Vol II, Page 110)

## கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை

- இந்திய ஒன்றியத்தின் அரசியலமைப்புச் சட்டம் தன் முகப்புரையை "இந்திய மக்களாகிய நாம்" என்று தொடங்குகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்படுகிற காலத்தில் இந்நிலத்தில் வாழ்ந்த 30 கோடிமக்களின் கருத்துகளையும், இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் கருத்துகளையும், பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் கருத்துகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு சட்டம் தயாரிக்கப்படவில்லை.



> 30 கோடி மக்கள் தொகை இருந்தபோது 543 பாராளுமன்றத் தொகுதியாகப் பிரிக்கப்பட்டது. இப்போது 120 கோடி மக்கள் தொகை இருக்கும் போதும் அதே 543 பாராளுமன்றத் தொகுதியாக இருப்பதை ஏற்க முடியாது



> மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படாத மாநிலங்களவை உறுப்பினர்கள், இந்நாட்டையே ஆளுகின்ற மத்திய மந்திரிகளாக ஆகமுடிகிற நிலைமை மக்களாட்சி மாண்பிற்கு எதிரானது.

## மாற்றியமைக்க வேண்டும்

- எனவே தற்போது இருக்கிற தேசிய இனங்களின் உரிமைகளைக் கருத்தில் கொண்டு இந்திய அரசியலைப்புச் சட்டத்தைத் தற்கால அரசியல், சமூக, சூழல்களுக்கு உலக ஒழுங்கிற்கு ஏற்றாற் போல மாற்றி அமைக்க வேண்டியது தேவையாய் இருக்கிறது.

## மாநிலத்தில் தன்னாட்சி, மத்தியில் கூட்டாட்சி

- இப்போது நடைமுறையில் உள்ள இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவம் என்பது பெயரளவிலேயே உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 7 ஆவது பட்டியலில் உள்ள சட்டமியற்றுகிற முறையில் மத்திய அரசு 97 இனங்களில் (Division) சட்டமியற்றும் அதிகாரத்தினையும் மாநில அரசு 66 இனங்களில் சட்டமியற்றும் அதிகாரத்தினையும் பெற்றிருக்கிறது.

## மாநில அரசுக்கு அதிகாரம்

- பொதுப் பட்டியலில் மத்திய மாநில அரசுகள் சேர்ந்து 47 இனங்களில் சட்டம் இயற்றுகிற முறை இருக்கின்றது. இது மத்தியில் ஒற்றையாட்சி முறையையும், ஏதேச்சிகாரக் குவிப்பினையும் உறுதி செய்கிறது. எனவே நாம் தமிழர் ஆட்சியில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் தன்னாட்சி என்ற முழக்கத்தோடு அனைத்து வகையான இனங்களுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசிற்கு உண்டு என்கிற வகையில் இந்திய அரசியலைப்புச் சட்டத்தில் உரிய மாற்றம் கொண்டுவரப் பாடுபடும்.

## தொடர்வண்டி நிர்வாகம்

- மாநில எல்லைக்குள் பயணிக்கும் தொடர் வண்டி நிர்வாகத் துறையினை நாம் தமிழர் அரசு இந்திய அரசியலைப்புச் சட்டமாற்றம் மூலம் கையகப்படுத்தும். மத்திய அரசிற்கு இராணுவம், நாணயம், உள்ளூர்த் தொடர்வண்டி நீங்கலாக மாநிலங்களுக்கிடையேலான பயணிக்கிற தொடர்வண்டி, மாநில அரசின் ஒப்புதலோடு கூடிய வெளியுறவுத்துறை போன்ற துறைகளைத் தவிர மற்ற அனைத்து இனங்களிலும் சட்டமியற்றி, நடைமுறைப் படுத்துகிற உரிமை மாநில அரசிற்கே உண்டு என்கிற நிலையை உரிய சட்டமாற்றங்கள் மூலம் ஏற்படுத்த நாம் தமிழர் அரசு பாடுபடும்.

அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்



Clarity Version download at www.makkalarasu.com

# நீதி மேலாண்மை

- ஒரு சனநாயக நாட்டில் சட்டசபை இயற்றுகிற சட்டங்களையும், திட்டங்களையும் தடை செய்து நிறுத்தி வைக்கிற நீதிமன்ற மேலாண்மை நம் அரசியலைப்பு முறைமையில் அதிகமாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக மீத்தேன், கெயில், கூடங்குளம், 7 தமிழர் விடுதலை போன்ற பிரச்சனைகளில் உச்ச நீதிமன்றத்தின் செயல்பாடு மாநில அரசின் உணர்விற்கு எதிராக இருக்கிறது. இந்நிலையை மாற்ற நீதிமன்ற மேலாண்மையைக் குறைத்து மக்கள் சனநாயக உணர்வுகளுக்கு மதிப்பளிக்க உரிய சட்ட மாற்றங்களைக் கொண்டுவரத் தகுந்த முயற்சிகளை முன்னெடுப்போம்.

# மாநில நீதிமன்றத்தின் அதிகாரம்

- இன்று நடைமுறையில் உள்ள நீதிமன்றச் செயல்பாட்டு முறையில் உச்ச நீதிமன்றத்தின் மேலாண்மை அதிகமாக உள்ளது. இந்திய ஒன்றியத்திற்குள் இருக்கிற மாநில அரசுகளுக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்க்க மட்டுமே உச்ச நீதிமன்றத்தின் தலையீடு போதுமானது. மற்றபடி அந்தந்த மாநிலங்களுக்குட்பட்ட வழக்குகளை அந்தந்த மாநிலங்களின் தலைமை நீதிமன்றங்களே உச்ச அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களாகச் செயல்பட இந்திய அரசியலமைப்பில் உரியமாற்றத்தை ஏற்படுத்த நாம் தமிழர் அரசு வலியுறுத்தும்.
- பல்வேறு மாநிலங்களுக்குள் ஏற்படும் சிக்கலான பிரச்சனைகள் குறித்துப் பிற மாநிலங்களில் இருந்து வருகிற தலைமை நீதியரசர்களுக்குப் போதிய மண்மொழி குறித்த அனுபவம் இருக்க வாய்ப்பில்லை. இதனால் பலசிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தந்த மாநில அரசின் தலைமை நீதிபதியாக, அந்தந்த மண்ணின் மைந்தர்களையே நியமிக்கும் வகையிலான சட்ட மாற்றத்தை ஏற்படுத்த **நாம் தமிழர் அரசு** பாடுபடும்.

# தமிழர்களுக்கு முன்னுரிமை

- தற்போது நடைமுறையில் உள்ள கல்வி, சமூக, பொருளாதாரம் சார்ந்த இடஒதுக்கீட்டு முறையைப் புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் வழியில் நாம் தமிழர் அரசு சீராய்வு செய்யும். தற்போதுள்ள இடஒதுக்கீடு முறை என்பது, வகுப்புவாரி முன்னுரிமை(communal.G.O) வகையில் ஏற்படுத்தப்பட்ட முறையாகும். அம்முறையில் சமூகநீதி உரிமையான இடஒதுக்கீட்டு முறையை முன்நிறுத்தித் தன் சுயலாப நோக்கத்திற்காக பூர்வீகத் தமிழ்க்குடிகளுக்கிடையே சாதி வேறுபாட்டினை வளர்த்து முரண்களை உருவாக்கித் திராவிடக் கட்சிகள் இதுவரை அரசியல் இலாபம் அடைந்து வருகின்றன.
- நாம் தமிழர் அரசானது இம்முறையை அறவே ஒழித்துத் தமிழ்க் குடிகளுக்கு இட ஒதுக்கீட்டில் முன்னுரிமை வழங்கும். பிற மொழிவழி மாநிலங்களில் தமிழன மக்களுக்கு என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறதோ, அதே முன்னுரிமை பிறமொழி வழித்தேசிய இன மக்களுக்குத் தமிழ் நாட்டில் வழங்கப்படும்.



> சனநாயக நாட்டில் சட்டசபை இயற்றுகிற சட்டங்களையும், திட்டங்களையும் தடை செய்து நிறுத்தி வைக்கின்ற நீதிமன்ற மேலாண்மை நம் அரசியலைப்பு முறைமையில் அதிகமாக இருக்கிறது



Clarity Version download at www.makkalarasu.com



> பிற மொழிவழி மாநிலங்களில் தமிழின மக்களுக்கு என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறதோ, அதே முன்னுரிமை பிறமொழி வழித்தேசிய இன மக்களுக்குத் தமிழ் நாட்டில் வழங்கப்படும்

## வரி விதிப்பில் உரிய மாற்றங்கள்

- தற்போது அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 277 வது விதியின் கீழ்ச்சொல்லப்பட்டுள்ள வரிவிதிப்பு முறைகளில் மாற்றம் கொண்டுவர நாம் தமிழர் அரசு உரிய பணிகளை மேற்கொள்ளும். ஊராட்சி வரிகள், விற்பனைவரி சுங்கவரி, கலால்வரி, பருவவரி போன்ற பல்வகை வரிகளை மத்தியமாநிலஅரசுகள் 50-50 என்கிற வகையில் கையாளுகின்றன. இம் முறையினை மாநில அரசு 75 சதவீத வரையிலான வரிவருமானம் பெறத்தக்க மாற்றங்களை நாம் தமிழர் அரசு கொண்டுவரப் பிறமாநில அரசுகளின் துணையோடு முயற்சிகளை முன்னெடுக்கும்.
- இந்திய ஒன்றியத்திற்குள் இருக்கிற மாநில அரசு ஒவ்வொன்றும் அந்தந்தத் தேசிய இனங்களின் நலன் சார்ந்த தனி அரசியலமைப்பு ஆவணத்தை ஏற்படுத்தி, நடைமுறைப் படுத்திக்கொள்கிற உரிமையைப் பெற நாம் தமிழர் அரசு பாடுபடும்.

## தமிழே நீதிமன்ற மொழி – வழக்காடு மொழி

- நீதிமன்றங்கள், நீதிபதிகளுக்கோ, வழக்கறிஞர்களுக்கோ சொந்தமானவையல்ல. இவர்களுக்கும் மேலான கோடானகோடி மக்களுக்குரியவை. உலகின் எல்லா நாடுகளிலும் அவரவர் தாய்மொழியில் தான் நீதிமன்றங்கள் நடைபெறுகின்றன. அந்நிய மொழியில் எந்தநாட்டு நீதிமன்றங்களும் நடை பெறவில்லை. எனவே உயர்நீதிமன்றம் முதல் உள்ளூர் நீதிமன்றம் வரை மாநிலத்தின் அனைத்து நீதிமன்றங்களிலும் தாய் மொழியான தமிழை ஆட்சிமொழியாக அலுவல் மொழியாக ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை நாம் தமிழர் அரசு உடனடியாக எடுக்கும்.

## வாக்குச் செலுத்துதல் கட்டாயக் கடமை

- உலகின் மிகப் பெரிய சனநாயக நாட்டில் சராசரியாக 60 விழுக்காட்டிற்கு மேலாக வாக்குப்பதிவு நடப்பதில்லை என்பது சமூக அவலமாக கருதப்படுகிறது. ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குச் செலுத்துதல் என்பது உரிமையன்று. அது கட்டாயக் கடமை. தற்போது இருக்கும் மின்னணு வாக்கு இயந்திரங்கள் மூலம் நடைபெறும் தேர்தலை நமது அரசு எதிர்க்கின்றது. இந்த இயந்திர முறையைக் கண்டுப்பிடித்த அமெரிக்காவே கைவிட்டுவிட்டு மீண்டும் வாக்குச் சீட்டு முறைக்கே மாறிவிட்டது.

## வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாக்குரிமை

- வாழ்வாதாரத்திற்காக வெளிநாட்டில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ்க்குடி மக்களுக்கும் அஞ்சல் வழியில் வாக்களிக்கும் உரிமை பெற்றுத் தரப்படும்.





Clarity Version download at www.makkalarasu.com

> ஒருவன் கொலை செய்கிறான், அது சட்டப்படி குற்றம். சட்டமே ஒரு கொலை செய்கிறது அது எப்படிச் சரியாகும்?

## தமிழகத்தில் உச்சநீதிமன்றக் கிளை

- தமிழகத்தில் உச்சநீதிமன்றக் கிளையைச் சென்னையில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் மாவட்ட நீதிமன்ற அதிகாரம் கொண்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும். உரிய நீதிபதிகளின் எண்ணிக்கை கொண்டுவரப்படும். காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடம் சமூகநீதிக் கொள்கைகள் அடிப்படையில் நிரப்பப்படும்.

## வாக்கு பதிவிற்குச் சான்று

- கள்ள ஓட்டுப் பதிவினைத் தடுக்க, வாக்களித்த பிறகு வாக்காளருக்குச் சான்று வழங்க வேண்டும் என நமது அரசு தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தும். தற்போது வாக்காளர் அடையாள அட்டை என்பது முக்கிய அடையாள ஆவணமாகப் பயன்பட்டு வருகிறது. ஆனால் நாம் தமிழர் அரசு தேர்தல்களில் வாக்களித்த சான்றை மட்டுமே அடையாள ஆவணமாக எடுத்துக் கொள்ளும். இந்தச் சான்று வைத்திருக்கும் குடிமக்களுக்குத்தான் குடிநீர் இணைப்பு, மின்சார இணைப்பு போன்ற அனைத்து விதமான உரிமைகளும் சலுகைகளும் வழங்கும். இதன் மூலம் வாக்குச்செலுத்துதல் கட்டாயக் கடமையாக்கப்படும். இதற்கான உரிய அரசியலமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த நாம் தமிழர் அரசு பிறமாநில அரசுகளை இணைத்துக் கொண்டு போராடி மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

## தமிழில் படிவங்கள்

- கீழ் நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரையிலும் அனைத்துப் படிவங்களும் தமிழில் அமைய ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவரப்படும்.

## இளம் வழக்கறிஞர்கள்

- சிற்றூராட்சி முதல் மாநகராட்சி வரை உரிமையியல், குற்றவியல் வழக்குகள், காவல் நிலைய பிரச்சனைகள் உள்ளிட்ட அனைத்துச் சட்டம் தொடர்பான உதவிகள் செய்வதற்குச் சட்ட உதவி மையம் அமைக்கப்படும். இச்சேவைகளில் சட்டக்கல்வி முடித்த இளம் வழக்கறிஞர்கள் ஈடுபடுத்தப் படுவார்கள். இந்தச் சமூகச் சேவை சட்டக்கல்வி முடிக்கின்ற இளம்வழக்கறிஞர்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்படும்.

## ஐந்தாயிரம் ஊக்கத்தொகை

- சட்டக்கல்வி முடிக்கின்ற அனைத்து இளம் வழக்கறிஞர்களுக்கும் முதல் மூன்று வருடங்களுக்கு மாதம் ரூ.5000 ஊக்கத்தொகை அரசால் வழங்கப்படும்.
- நீண்ட காலமாக தேங்கிக்கிடக்கும் வழக்குகளை விரைவாக விசாரித்து முடிக்கத் தற்காலிக நீதிமன்றங்கள் மாநிலம் முழுக்க பரவலாக ஏற்படுத்தப்படும்.

## குறுஞ்செய்தியில் தகவல்

- மாநிலம் முழுக்க இருக்கின்ற நீதிமன்றங்களில் இணையதள வசதி உடனடியாக ஏற்படுத்தப்படும். ஒருங்கிணைந்த நீதிமன்றப் பணிகளை நிர்வகிக்கத் தகவல் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.
- வழக்கின் விசாரணைத் தேதிகள் வழக்கில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கைப்பேசிக் குறுஞ் செய்தி மூலமாகத் தெரிவிக்கப்படும்.



Clarity Version download at www.makkalarasu.com

# வானூர்தி

நாட்டின் சுற்றுலா, தொழில், பொருளாதார வளர்ச்சிக்கு வானூர்திப் போக்குவரவு மிகவும் முக்கியமானது. தமிழகத்தில் வானூர்திப் போக்குவரவை விரிவாக்கம் செய்யத் தேவையான வேண்டிய திட்டங்களை முன்வைக்கப்படுகிறது.

## சுற்றுலா வளர்ச்சி..

- சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் விதமாக மதுரை தூத்துக்குடி, சேலம் ஆகிய விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதோடு தமிழகத்தின் முக்கிய நகரங்கள், சுற்றுலாத் தலங்கள் ஆகிய பகுதிகளுக்கும் உள்நாட்டு விமானப் போக்குவரவைத் தொடங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் வலிறுத்திச் செய்து முடிக்கப்படும்.

## வான்வெளி ஆராய்ச்சி

- தமிழர்கள் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வானவியலில் மிக்கத் தேர்ச்சி பெற்றிருந்தனர். இன்று தமிழ்நாட்டில் வானவியல் அறிவியலில் தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்கள் அதிகமாக உள்ளனர். இதில் பலர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். இவர்களின் ஆற்றலைப் பயன்படுத்த மத்திய அரசின் துணையுடன் வான்வெளிப் பயிற்சி மையம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கோவில்பட்டி, நெய்வேலி, வேலூர், செட்டிநாடு, கயத்தாறு, உளுந்தூர்பேட்டை, சோழவரம் ஆகிய இடங்களில் உள்ள உபயோகத்தில் இல்லாத வானூர்தி ஓடுதளங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவும், வானூர்தி இயக்கப் பயிற்சி, மாணவர்கள் பயிற்சி, தேர்ச்சி ஆய்வுக் கூடம் உட்பட அனைத்து வசதிகளும் உருவாக்க வேண்டுமென கோரப்படும். இவை தனியார் வானூர்தி நிறுவனங்களின் பயன்பாட்டிற்கும் அளிக்கப்படும்.





வானூர்தி



Clarity Version download at www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com



சோழர் காலத்து கப்பலின் மாதிரி வடிவம்



மரக்கலம்



நியூசிலாந்தில் கண்டெடுக்கப்பட்ட மிகப் பழமையான மணி

**தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கப்பல் கட்டி வர்த்தகம் செய்தவர்கள். அந்த வகையில் தமிழகத்தில் புதியதாகப் பெரிய வர்த்தகக் கப்பல், சரக்குக் கப்பல்களைக் கட்டும் தொழிற்கூடம் நம் முப்பாட்டன் இராசேந்திர சோழன் பெயரில் ஏற்படுத்தப்படும்**

# துறைமுகக் கொள்கை

உலகிலேயே மிகப் பழமையான துறைமுக நகரங்களைக் கொண்டது தமிழகம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று கடல் அலைகளை எதிர்கொண்டு ஆண்ட இனம் தமிழினம். சோழர்கள் காலத்தில் வணிகம், போர் என்று கடலை ஆண்டிருக்கிறார்கள். அந்த வகையில் நாம் தமிழர் அரசு கடல் வணிகத்தை மேம்படுத்தத் துறைமுகங்களை மேம்படுத்தும். நாட்டில் 90 சதவீத வர்த்தகம் கடல் வழியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் தமிழகத்தில் இப்போது சென்னை, எண்ணூர், காட்டுப்பள்ளி, இராயபுரம், நாகப்பட்டினம். திருக்குவளை, தூத்துக்குடி, ஆகிய எட்டு இடங்களில் துறைமுகங்கள் இருக்கின்றன.

## விரிவாக்கம்

- தமிழகத்தில் உள்ள துறைமுகங்களை மையமாக வைத்து மேலும் கூடுதலாக வர்த்தகப் போக்கு வரவு, சுற்றுலாப் படகு, கப்பல் போக்குவரத்து, கேளிக்கை, மீன்பிடி அம்சங்கள் உள்ளிட்ட வளர்ச்சிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். துறைமுகப் பகுதிகளில் கழிவுகள் தேங்காமல் சிப்பிகள், மீன்கள் இயற்கையாக வளர்வதற்கான வழிகளைச் செய்ய வேண்டும். அந்தப் பகுதிகள் முழுவதும் காற்று மாசுபடாத நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இவைகளை நாம் தமிழர் அரசு மத்திய அரசிடம் வலியுறுத்திப் பெற்றுக் கொடுக்கும்.

## உரிமைகள்

- துறைமுகங்களின் வளர்ச்சி என்ற பெயரில் கரையோரம் வாழ்பவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படக்கூடாது. அதற்கான சட்டம் கொண்டு வரப்படும். கடலோரப் பகுதிகளில் அவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படாமல் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். நிலத்தடி நீர் நிலங்களில் பொதுமக்களுக்கான உரிமைகள் இருக்க வேண்டும். பசுமைப் பாதுகாப்பு முறைகள், துறைமுகத் தொழிலாளர்களுக்குக் காப்பீடு, உலகத் தரத்திலான பாதுகாப்பு ஏற்பாடு கணினிக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட அனைத்தும் செயல்படுத்தப்படும்.

> **“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று கடல் அலைகளை எதிர்கொண்டு ஆண்ட இனம் தமிழினம். சோழர்கள் காலத்தில் வணிகம், போர் என்று கடலை ஆண்டிருக்கிறார்கள்”**



Clarity Version download at www.makkalarasu.com

## புதிய துறைமுகங்கள்

- ஏற்கனவே துறைமுக நகரமாக இருந்த கடலூரில் புதிய துறைமுகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சிறந்த சரக்கு மற்றும் வர்த்தகப் போக்குவரவு நகரமாக மாற்றப்படும். அப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மேலும் கடலோரப் பகுதிகளில் வாய்ப்புள்ள இடங்களில் சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் கட்டவும், நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## கப்பல் கட்டும் துறைமுகம்

- நாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கப்பல்கட்டி வர்த்தகம் செய்தவர்கள். அந்த வகையில் தமிழகத்தில் புதியதாகப் பெரிய வர்த்தகக் கப்பல், சரக்குக் கப்பல்களைக் கட்டும் தொழிற்கூடம் நம் முப்பாட்டன் இராசேந்திர சோழன் பெயரில் ஏற்படுத்தப்படும். அனைத்துத் துறைமுகங்களிலும் சரக்கு மற்றும் வணிகக் கப்பல்களைப் பழுதுபார்க்கும் வசதிகளும் ஏற்படுத்தப் படும். இதற்கான உரிமைகளைத் தனியார்கள் பெற்றுக்கொள்வதைப் போல் மாநில அரசும் தனியாகப் பெற்றுச் செயல்படுத்தும். இதன் மூலம் வர்த்தகம் மேலும் பெருகும்.

## போக்குவரவு

- தமிழகத்தில் உள்ள அனைத்துத் துறைமுகங்களுக்கும் சரக்குப் பெட்டகங்களை எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் சாலைப் போக்குவரவு நவீன வசதிகளுடன் மாற்றப்படும். சாலைப் போக்குவரத்து, இரயில் போக்குவரவு அனைத்தும் எளிதில் துறைமுகங்களோடு இணைக்கும் படியான கட்டமைப்புகள் நவீன முறையில் மேலும் வலுப்படுத்தப்படும்.

## இயற்கை நீரோட்டம்

- நவீன தொழில் நுட்பங்கள் வளர்வதற்கு முன்பே பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர்கள் இயற்கை வழி நீர்ப் போக்குவரத்தில்தான் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். பர்மா ரங்கூன் துறைமுகத்தில் தேக்குமரங்களைக் கட்டிவிட்டால் நேராகத் தனுஷ்கோடித் துறைமுகப் பகுதிக்கு வந்து சேரும். இந்த இயற்கை நீர்வழிப்பாதை உலகம் முழுவதும் இருக்கின்றது. அவற்றை மீளாய்வு செய்து மீண்டும் இயக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த **நாம் தமிழர் அரசு** முயற்சிகளை மேற்கொள்ளும்.



Clarity Version download at www.makkalarasu.com




அனைத்துத்
துன்பப்
பூட்டுகளுக்குமான
சாவி
ஆட்சி
அதிகாரம்
மட்டுமே!

\- அண்ணல் அம்பேத்கர்

Clarity Version download at www.makkalarasu.com

## வென்றாக வேண்டும் தமிழ்! ஒன்றாக வேண்டும் தமிழர்!



- அதிகாரம் வலிமையானது
  எமது அதிகாரம் எம் மக்களுக்கானது
- அதிகாரம் மிக வலிமையானது
  அதை அடைந்துவிட்டால்
  அனைத்தும் எளிமையாது!
- புரட்சி எப்போதும் வெல்லும்
  இது மாற்றத்திற்கான
  எளிய மக்களின் புரட்சி!

www.naamtamilar.org

முகவரி: நாம் தமிழர் கட்சி, தலைமை அலுவலகம். இராவணன் குடில், எண்:8, மருத்துவமனைச் சாலை, செந்தில்நகர், சின்னப்போரூர், சென்னை - 600 116.

044 - 24769070 naamtamizhar@gmail.com naamtamilarorg naamtamilarkatche naamthamizharkatchi www.makkalarasu.com

Clarity Version download at www.makkalarasu.com